# பாரதியின் புதிய ஆத்திசூடி

ஒரு விளக்கவுரை

வையத்தலைமைகொள்



அ.சீனிவாசன்

# பாரதியின் புதிய ஆத்திசூடி

## ஒரு விளக்கவுரை

ஆசிரியர்

**அ. சீனிவாசன்**

**அ. சீனிவாசன்**

நூலாசிரியர் / பதிப்பாளர்

10/6, வேதாசலம் தெரு,
சாலிகிராமம், சென்னை – 600 093.
தொலைபேசி : (044) 376 0467

நூலின் பெயர்

**பாரதியின் புதிய ஆத்திசூடி ஒரு விளக்கவுரை**


| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | அ.சீனிவாசன் |
| மொழி | : | தமிழ் |
| வெளியீட்டு எண் | : | இரண்டாம் பதிப்பு |
| ஆண்டு | : | 2002 |
| தாள் | : | 16 kg மேப் லித்தோ |
| நூல் அளவு | : | 1/8 டெம்மி |
| விலை | : | ரூ. 75/- |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| வெளியீடு | : | அ.சீனிவாசன்<br>நூலாசிரியர் / பதிப்பாளர்<br>10/6, வேதாசலம் தெரு,<br>சாலிகிராமம், சென்னை - 93.<br>போன் : (044) 376 0467 |
| அச்சு - வடிவமைப்பு | : | **Seeds of Life**<br>**வாழ்வின் விதைகள்**<br>வேளச்சேரி, சென்னை-42. |

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:
ஃப்ரண்ட்லைன் பிரிண்டர்ஸ் லிமிடெட், சென்னை - 600 032.

* **தமிழக அரசு தமிழ் வளர்ச்சித்துறை சிறந்த நூலுக்கு உதவித் திட்டத்தின் உதவியுடன் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது.**

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

## பாரதியின் புதிய ஆத்திசூடி ஒரு விளக்கவுரை

— இரண்டாம் பதிப்பு கொண்டுவருவதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம். முதல்பதிப்பு பெரும்பாலும் சென்னை, கோவை, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், நெல்லை, குமரி மாவட்டங்களில் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நுலகங்களுக்கென விற்பனையாகி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

தமிழக அரசின் பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களும் இந்நூலை பள்ளிகளின் நூலகங்களிலும் வாங்கிவைக்கும்படி செயல்முறை ஆணை மூலம் பரிந்துரை செய்துள்ளார்கள். அதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நூலின் சிறப்பு பற்றியும், பயன்பாடு பற்றியும் பலரும் நூலாசிரியரிடம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்கள். சில பள்ளிகளில் காலையில் மாணவர்களின் தமிழ் வணக்கத்தின் போது பாரதியின் புதிய ஆத்திசூடியின் ஒருநாளுக்கு ஒரு ஆத்திசூடிவீதம் படித்து விளக்கம் கூறப்படுகிறது.

பாரதியின் புதிய ஆத்திசூடியை மேலும் பிரபலப்படுத்த வேண்டும். பாரதியின் இந்த அறிய பொக்கிஷத்தைப் பரப்புவதில் இந்த நூல் செய்து வரும் சிறிய தொண்டுக்கு ஆதரவும் ஆசியும் கேட்டு தமிழ் கூறும் நல்லுலகை வேண்டுகிறோம்.

இந்த இரண்டாம் பதிப்பை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய மஞ்சு பிரிண்டர்ஸ் நிருவனத்தினருக்கு எனது பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலின் முதல் பதிப்பிற்கு பெருமளவில் ஆதரவளித்தது போன்று இந்த இரண்டாம் பதிப்பிற்கும் பெரிதும் ஆதரவு அளிக்க தமிழ் கூறும் நல்லுலகத்தை வேண்டுகிறேன்.

**அ.சீனிவாசன்**

நூலாசிரியர் / பதிப்பாளர்

# பாரதியின் புதிய ஆத்திசூடி

## ஒரு விளக்கவுரை

### முதல் பதிப்பின் முன்னுரை:

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் புதிய ஆத்திசூடி ஒரு தனி இலக்கியமாகும். அந்தச் சிறப்புமிக்க இலக்கியத் தொகுதிக்கான காப்புச் செய்யுள் ''ஆத்திசூடி இளம்பிறை அணிந்து மோனத்திருக்கும் முழுவெண் மேனியான்'' என்று தொடங்கி ''கருநிறங் கொண்டு பாற்கடல் மிசை கிடக்கும்'' திருமாலையும், ''முகமது நபிக்கு மறையருள் புரிந்த'' எல்லாம் வல்ல அல்லாவையும், ஏசுவின் தந்தையையும் ஒருசேர பாவித்து நல்லிணக்கத்துடன் தொடங்குகிறது.

அமரகவி பாரதியின் புதிய ஆத்திசூடியில் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் கருத்துக்கள் கொண்ட ''அச்சம் தவிர்'', ''உடலினை உறுதி செய்'', ஐம்பொறி ஆசி கொள்'', ''ஏறுபோல் நட'', ''கூடித் தொழில் செய்'', ''கைத்தொழில் போற்று'', ''தெய்வம் நீ என்று உணர்'', ''தேசத்தைக் காத்தல் செய்'', ''தையலை உயர்வு செய்'', ''பணத்தினை பெருக்கு'', ''வேதம் புதுமை செய்'', ''வையத் தலைமை கொள்'', போன்ற சூத்திர வரிகள் நமது நாட்டின் ஒவ்வொரு இளைஞனின் உள்ளத்திலும் எப்போதும் எல்லாக் காலத்திற்கும் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டிய தனிச்சிறப்பு மிக்க வரிகளாகும்.

பாரதியின் கவிதைகளைப் படிக்கும் போதெல்லாம் அவரது புதிய ஆத்திசூடி வரிகளையும் படித்து எனக்கு ஒரு புதிய உணர்வும் புதிய எண்ணங்களும் ஏற்பட்டதுண்டு. இந்தப் புதிய ஆத்திசூடி வரிகள் நமது நாட்டிலுள்ள பள்ளிகள் அனைத்திலும் பாடமாகச் செல்ல வேண்டும், அவை நமது இளம் தலைமுறையினரின் உள்ளங்களில் பதிய வேண்டும் என்னும் எண்ணமும் எனக்கு ஏற்பட்டிருக்கிறது,

நான் சென்னையில் முத்தியாலுபேட்டை மண்ணடி அருகில் பவளக்காரத் தெருவில் குடியிருந்த போது பாரதி அன்று நடந்து

சென்ற அவருடைய காலடிகள் பட்ட தம்பு செட்டி தெருவில் நான் பல முறை நடந்தும் கடந்தும் செல்லும் போதெல்லாம் பாரதி தமிழ் ஆசிரியாராகப் பணிபுரிந்த முத்தியாலுபேட்டை மேல்நிலைப் பள்ளியையும் காளிகாம்பாள் கோவிலையும் காணும் போதெல்லாம், ஆலைகளைக் கடந்து செல்லும் போதெல்லாம் பாரதியின் நினைவு ஏற்படும். பாரதி சந்தித்த "இளமையில் கல்" பேரனும், "முதுமையில் மண்" தாத்தாவும் குடியிருந்த வீட்டு வழியாச் செல்லும் போதெல்லாம் பாரதியின் புதிய ஆத்திசூடியும் "அச்சம் தவிர்" என்னும் சொற்களும் எனது நினைவிற்கு வரும்,

நமக்கெல்லாம் குடும்ப விளக்காகி விட்ட மகாகவி பாரதியின் இந்தப் புதிய ஆத்திசூடி நமது மாணவர்களுக்கு எல்லாம் சென்றடை வதற்கான வகையில் ஒரு விளக்கநூல் எழுதலாம் என்னும் எண்ணமும் தோன்றியது,

ஏற்கனவே பாரதி நூற்றாண்டு விழாவின்போது பாரதியின் பாடல்கள் மேலும் அதிகமாகப் பிரபலம் அடைந்திருந்த சூழ்நிலையில் பாரதியைப் பற்றிய செய்திகள் மேலும் அதிகமாகக் கிடைத்தும் பரவியும் இருந்த சூழ்நிலையில் பாரதியின் புதிய ஆத்திசூடிக்கு விளக்கம் எழுத வேண்டும் என்னும் எண்ணம் மேலும் அதிகரித்தது, உறுதிப்பட்டது.

அத்துடன் பாரதி நூற்றாண்டு விழாவையொட்டி, ஜனசக்தி நாளிதழ் சார்பாக ஒரு சிறப்பு மலர் கொண்டு வரவும் தீர்மானித்து இருந்தோம். அக்காலத்தில் ஜனசக்தி நாளிதழின் தலைமை ஆசிரியர் என்னும் முறையில் நான் பாரதி நூல்களின் எழுத்துரைகளின் ஆய்வில் அதிகமாக ஈடுபட வேண்டியதிருந்தது.

நூற்றாண்டு விழவின்போது ஒரு ஆண்டு முழுவதிலும் பாரதியின் பல்வேறு பரிமாணங்களைப் பற்றிய பல கட்டுரைகளைக் கொண்டு வருவதென்று தீர்மானித்து சிறப்பு மலரோடு சேர்த்து நாளிதழில் நாள்தோறும் பாரதி பற்றிய கட்டுரைகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டோம். இந்தப் பணிகளில் அப்போது ஜனசக்தி நாளிதழின் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய சிறந்த அனுபவமும் பாரதி பற்றும்

கொண்ட தமிழறிஞரும் பத்திரிகையாளருமான ஆர். கே. கண்ணன் மு. பழனியப்பன் ஆகியோர் சிறப்பாக ஈடுபட்டிருந்தனர். ஜனசக்தி நாளிதழின் பாரதி நூற்றாண்டு விழா சிறப்பு மலர் மிகவும் சிறப்பாக வெளிவந்தது, பலராலும் பாராட்டப்பட்டது. அத்துடன் நாள்தோறும் ஜனசக்தியில் பாரதி பற்றிய பல கட்டுரைகளும் வெளிவந்தன, அந்தச் சமயங்களில் தான் பாரதியின் புதிய ஆத்திசூடிக்கு ஒரு தனியான விளக்கவுரை நூலும் எழுத எண்ணி இப்போது இந்த நூல் தயாராகியுள்ளது.

பல்வேறு வேலைகளுக்கும் இடையில் புதிய ஆத்திசூடிக்கான விளக்கவுரை நூல் வளரத் தொடங்கியது. அந்த நூல் முதலில் எழுதி முடிக்கப்பட்ட போது மிகவும் பெரியதாக அமைந்திருந்தது. அளவுக்கு மீறிய விளக்கம் அவசியமா என்று கருதி அதைச் சுருக்கிவிட முயன்றேன், அத்துடன் அந்த விளக்கமான விரிவுரை எனக்கே விளக்கம் அளிப்பதைப் போல் இருந்தது. இந்த விளக்கவுரை பிரபலமான கற்றறிவாளர்கள் எழுதும் விளக்கவுரை போன்றதல்ல. எனது அனுபவத்திலிருந்து எழுந்த விளக்க உரையாகும்.

ஒரு முறை ஒரு உலகப் புகழ்மிக்க சமூக, அறிவியல் பேரறிஞர் ஒரு தத்துவஞான நூலை எழுதினார். அது அவர் காலத்திய வேறு சில தத்துவஞானிகளுக்குப் பதில் கொடுக்கும் முறையில் அமைந்த நூலாகும். அந்த அறிஞர் தனது விளக்க நூலை எழுதி வெளியிட்டபோது அவருடைய நண்பர்கள் "இந்த நூலை நீங்கள் ஏன் எழுதியிருக்கிறீர்கள்" என்று கேட்டதற்கு "எனக்கு நானே தெளிவுப்படுத்திக் கொள்வதற்காக நான் இந்த நூலை எழுதியிருக்கிறேன்" என்று அந்தப் பேரறிஞர் பதில் கூறினாராம். அதைப்போல் எனது சொந்தத் தெளிவுக்காக இந்த விளக்க உரையை எழுதத் துணிந்தேன் எனக் கூறலாம்.

அந்த வகையில் பாரதியாரின் படைப்புகளுக்கும், பாடல்களுக்கும் அவருடைய கவிதைகளுக்கும், கட்டுரைகளுக்கும், கதைகளுக்கும், கருத்துகளுக்கும் பல வகையான விளக்கங்களும் விமர்சனங்களும் பல்வேறு வகைளிலும் எழுந்திருந்தன. சில அவதூறான கருத்துக்களும் கூட எழுந்திருந்தன.

கம்பனையும், வள்ளுவனையும், இளங்கோவையும் கூட விமர்சனம் செய்யலாம், அவர்களுடைய படைப்புகளுக்கும் விளக்கங்களும் கருத்துக்களும் கூறலாம், எனவே கம்பன், வள்ளுவன், இளங்கோ வழியில் வந்துள்ள பாரதியை, பாரதியின் படைப்புகளை விமர்சனம் செய்யலாம், எவரும் தங்களுடைய பக்குவத்திற்கு ஏற்ற வகையில் பாரதியின் படைப்புகளுக்கு விளக்கமும் விரிவுரையும் எழுதலாம்.

அதே சமயத்தில் தமிழகத்தில் கம்பனுக்கும், இளங்கோவுக்கும், பாரதிக்கும் எதிராக சில அவதூறுகளும் கூட கூறப்பட்டு இருக்கின்றன. அக்கூட்டத்தில் சில அறிஞர்களும் அப்பாவிகளும் கூட இருக்கின்றனர். சில சிறு பிள்ளைகளும், கீழோர்களும், பொய்யர்களும், போலிகளும், இருக்கிறார்கள், இருந்துள்ளார்கள்.

பாரதி, தான் வாழ்ந்த காலத்தில் அன்னிய ஆட்சியாளர்களின் அடக்கு முறைகளுக்கும் ஆதிக்கக் காரர்களின் அச்சுறுத்தல்களுக்கும், வைதீகர்களின் வெறுப்புக்கும் பழமைவாதிகளின் கசப்புக்கும், சில அரைகுறைகளின் அவதூறுகளுக்கும் ஆளானவர் என்பதை அனைவரும் அறிவர், அதே சமயத்தில் அவர் தேச பக்தர்களின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும், புரட்சிகர ஜனநாயகச் செயல்வீரர்களின் பெருமதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவராக இருந்தார் என்பதையும் நாம் அறிவோம்.

எண்ணற்ற பலவகைத் தடைகளையும் தாண்டி பாரதியின் படைப்புகளும் பாடல்களும், கவிதைகளும், கருத்துக்களும் மக்களுக்கு இடையில் பரவின. ஆயினும், பிற்காலத்தில் பாரதியின் புதிய பரிமாணங்கள் மேலும் அதிகமான அளவில் ஒளிவீசத் தொடங்கிய போது அவருடைய புரட்சிகர ஜனநாயகக் கருத்துக்களும், முற்றிலும் புதிய கருத்து வடிவங்களும் மக்களிடையில்பரவுவதிலும் வேரூன்றுவதிலும் பற்றாக்குறைகள் நீடிப்பதையும் நாம் காண்கிறோம்.

அண்மைக் காலமாக அடித்தட்டு மக்களிடத்திலும், பெண்களிடத்திலும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பின் தங்கிய மக்களிடத்திலும் ஏற்பட்டு வரும் புதிய எழுச்சிகளும்,

விடுதலைப் போராளிகளும் பாரதிக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கின்றனர்.

பாரதி காட்டிய விடுதலை முழுமையான விடுதலையாகும். அது நிறைவு பெறும் நிலையை நோக்கித் தான் மக்கள் சமுதாயத்தின் காலப்பயணம் சென்று கொண்டிருக்கிறது, அதை மேலும் செழுமைப்படுத்தவும் வழிப்படுத்தவும் பாரதியின் புரட்சிகர ஜனநாயகக் கருத்துக்களும் மேலும் அதிகமான அளவில் மக்களிடம் பரவ வேண்டும், வேரூன்ற வேண்டும்.

புதிய ஆத்திசூடியில் பாரதி காட்டும் வழியை எடுத்துரைக்கும் கட்டளைகளையும் ஆணைகளையும் நிறைவேற்றுவதற்கு நாம் இன்னும் வெகு தொலைவு செல்ல வேண்டியதிருக்கிறது, அன்னிய ஆட்சியாளர்கள் இந்நாட்டில் ஏற்படுத்திய சேதம் மிகவும் அதிகமானது. ஆழமானது. அந்தச் சேதங்களில் இருந்தும் காயங்களில் இருந்தும் அவர்கள் வடுக்களில் இருந்தும் முழுமையாக மீள்வதற்கும் சம நிலை வருவதற்கும் தொடர்ந்து வரும் சில தடைகளையும் இடையூறுகளையும் தகர்த்தெறிந்து முன்னேறுவதற்கும் இலட்சியங்களையும் கனவுகளையும் நோக்குவதற்கும் இன்னும் வெகு தொலைவு செல்ல வேண்டியதிருக்கிறது,

புதிய ஆத்திசூடி மூலம் பாரதி நாட்டின் நாட்டு மக்களின் எல்லாத் துறைகளையும் தொட்டிருக்கிறார், அச்சத்தைத் தவிர்த்து, உடலினை உறுதி செய்து ஐம்பொறிகளை ஆட்சி செய்யச் சொல்லுகிறார்,

கூடித்தொழில் செய்யும்படியும் கைத்தொழில் போற்றும்படியும், பணத்தினைப் பெருக்கும்படியும் மேழி போற்றும்படியும், யவனர்போல் முயற்சி கொள்ளும்படியும் விதையினைத் தெரிந்திடும் படியும் வீரியம் பெருக்கும் படியும் பாரதி கூறுகிறார்,

சரித்திரத் தேர்ச்சி கொள் என்றும், நீதிநூல் பயிலும்படியும் பாட்டினில் அன்பு செய்யுமாறு,ப் போர்த்தொழில் பழகும்படியும், ரசத்திலே தேர்ச்சி கொள்ளுபடியும் ராஜசம் பயிலும்படியும் உலோகநூல்

கற்றுணரும் படியும் வானநூல் பயிற்சி கொள்ளும்படியும் வேதம் புதுமை செய்யும் படியும் பாரதி கூறுகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக "வையத்தலைமை கொள்" என்று ஆணையிட்டுள்ளார், அது ஒரு மிகப் பெரிய பொறுப்பும் கடமையுமாகும், வருங்காலத்தில் பாரதநாடு அரசியல் பொருளாதாரத் துறைகளிலும் கல்வி, கலாச்சாரத் துறைகளிலும், அறிவுத் துறைகளிலும், அறிவியல் துறைகளிலும் மற்றும் மனித வாழ்க்கையின் உலக மக்களின் அமைதியான நல்வாழ்விலும் சமுதாய முன்னேற்றத்திலும் உலகிற்கு வழிகாட்டுவதாக தலைமை வகிப்பதாக அமைய வேண்டும் என்று பாரதி கட்டளையிட்டுள்ளார், "எல்லோரும் அமரநிலை எய்தும் நன்முறையை, இந்தியா உலகிற்கு அளிக்கும்" என்று பாரதி உறுதி கூறியுள்ளார்,

பாரதியின் இந்தக் கட்டளைகளை நிறைவேற்ற நமது நாட்டு மக்களைக் குறிப்பாக இளம் தலைமுறையினரைத் தயாரிக்க வேண்டும். பாரதியின் இந்தப் புதிய ஆத்திசூடி சூத்திரங்கள் பெரும்பாலும் அவருடைய ஆணைகளாகவும் கட்டளைகளாகவும் வேண்டுகோள்களாகவும் அறிவுரைகளாகவுமே உள்ளன, எனவே நமது சிறுவர், சிறுமியர்களும், இளைஞர்களும் இந்த இப்புதிய ஆத்திசூடி சூத்திர வரிகளைப் படித்துப் பயனடைய வேண்டும், அவைகளைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும் என்னும் நோக்கத்தில் இந்த விளக்கவுரை எழுத வேண்டும் என்னும் ஆவல் ஏற்பட்டது.

அனுபவத்திலிருந்து பல கருத்துக்களை விளக்கமாக எழுதி முடித்தபோது அது மிகவும் விரிவாகவும் அதிகமாகவும் இருந்தது என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன், எனவே எழுதி முடித்த பின்னர் அதைச் சரிபார்க்கு படி எனது அருமை நண்பர் பக்தவத்சலம் (பொன்னீலன்) அவர்களைக் கேட்டுக் கொண்டேன், நண்பர் பொன்னீலன் அவர்கள் சிறந்த எழுத்தாளரும், பாரதி பற்றும் அத்துடன் கல்வித்துறை அனுபவமும் உள்ளவர் என்பதை நாடறியும், அவரும் எனது வேண்டுகோளை ஏற்று நூலைச் சரிபார்த்து சில ஆலோசனைகளையும் கூறினார். வேலை மிகுதியால், காலம்

உருண்டோடிய போதிலும் அவர் கூறிய சில ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டு சில பகுதிகளைக் குறைத்தும், சரிப்படுத்தியும் இந்த நூல் இறுதி வடிவம் பெற்றது,

இந்த நூலைத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை "சிறந்த நூல்களுக்கு உதவித் திட்டத்தின்" கீழ் அங்கீகரித்து இருக்கிறது. அதற்கு தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறைக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நூலின் அச்சுப் படிவங்களைச் சரிபார்த்தும் அச்சடித்து முடிக்கவும் உதவிய அனைவருக்கும், அச்சகத்தாருக்கும் எனது அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலைத் தமிழ்நாட்டின் மாணவர் உலகமும், இளைஞர் உலகமும் படித்துப் பயனும், செயலூக்கமும் பெற வேண்டும் என வேண்டுகிறேன்.

பாரதி அன்பர்களும், தமிழ் அறிஞர்களும், கற்றறிவாளர்களும், இந்நூலின் குறைகளை, பிழைகளை மன்னிக்க வேண்டுகிறேன்.

**— அ. சீனிவாசன்**
நூலாசிரியர்



# பாரதியின் புதிய ஆத்திசூடி

## அறிமுகம் :

பாரதி கவிதைகளின் தனிச்சிறப்புகளில் அவர் இயற்றிய புதிய ஆத்திசூடியும் ஒன்றாகும். பாரதி பலவகையான பாடல்களைப் பாடியுள்ளார். கவிதைகளை மட்டுமல்லாது கட்டுரைகள் கதைகள் பலவற்றையும் எழுதியுள்ளார். பாரதி பத்திரிகையாளராகப் பணியாற்றி பல பத்திரிகைகள் மற்றும் இதழ்களில் எழுதியுள்ளார். பாரதியின் பாடல்களில் தேசபக்திப் பாடல்கள், ஞானப்பாடல்கள், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, தனிப்பாடல்கள் என்றெல்லாம் பிற்காலச் சான்றோர்களும், பாரதி அன்பர்களும் வகை செய்து வெளியிட்டிருக்கிறார்கள்,

பாரதி தனியொரு காவியம் எழுத வேண்டும் என்று கருதி பாஞ்சாலி சபதம் என்னும் சிறந்த புதிய கருத்துக்களைக் கொண்ட ஒரு அற்புதமான காவியத்தை எழுதினார். பாரதியின் பாடல்கள், கவிதைகள், கட்டுரைகள், கதைகள் அனைத்திலும் புதிய கருத்துக்கள் வெளிப்படுவதைக் காணலாம். அவருடைய பக்திப் பாடல்களை எடுத்துக் கொண்டால் கூட அதிலும் நாட்டையும், நாட்டுணர்வையும், நாட்டுயர்வையும், மனிதனையும், மனித உயர்வைப் பற்றியுமே அதிகமாகக் குறிப்பிட்டுப் பாடியுள்ளதையும், எழுதியுள்ளதையும் காண்கிறோம்.

பாரதியின் பாடல்களில் பெண் விடுதலை பற்றி எழுதியுள்ளதும் பாப்பா பாட்டுகளும் தனிச்சிறப்பு மிக்கதாகும். அவர் சிந்தித்த விடுதலை என்பது நாட்டின் அரசியல் விடுதலை மட்டுமல்ல.

நமது நாடு அன்னிய ஆட்சியிலிருந்து கட்டாயம் விடுதலை பெற வேண்டும். அத்துடன் பாரதியின் விடுதலைப் போராட்ட சிந்தனை நின்று விடவில்லை, அவர் உலக விடுதலையைப் பற்றி சிந்தித்தார், இந்திய சமுதாயத்தில் அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும், தாழ்த்தப்பட்டும், பிற்படுத்தப்பட்டும் உள்ள அனைத்துப்பகுதி மக்களும் முழுமையான விடுதலையும் சமத்துவமும், சமவாய்ப்புகளும் பெற வேண்டும் என்று சிந்தித்தார்,

பாரதி பெண் விடுதலையைப் பற்றி சிந்தித்தார். பெண் விடுதலை பற்றி தனியான பாடல்களிலும், சக்தி, பராசக்தி, முத்துமாரி, கண்ணம்மா, பாஞ்சாலி சபதம் முதலிய பல பாடல்களிலும் பெண் விடுதலைக் கருத்துக்கள் இழையோடி இருப்பதைக் காண்கிறோம்.

பாரதி தன்னுடைய விடுதலைக் கருத்துக்களில் அச்சத்திலிருந்து மனிதனும் மனிதனுடைய மனமும் அறிவும் விடுதலை பெற வேண்டும் என விரும்பினார், அவருடைய புதிய கருத்துக்களை புதிய விடுதலைக் கருத்துக்களை, மனித உயர்வு மனித மேன்மைக்கான கருத்துக்களை இளம் உள்ளங்களிலேயே பதியச் செய்ய வேண்டும் என்று கருதியே புதிய ஆத்திசூடியும், பாப்பா பாட்டும் எழுதியுள்ளார்.

ஆத்திசூடி என்பது தமிழில் ஏற்கனவே ஔவையார் எழுதிய பாடல்களாகும். ஔவையார் தனிச்சிறப்பு மிக்க பெண்பாற் புலவராவர். ஔவையாரைப் பற்றி பாரதி தமிழ் மகள் என்றே குறிப்பிடுகிறார், ஔவையார் சாதாரண மக்களின் புலவராவார், சாதி அமைப்புகளை எதிர்த்து “சாதி இரண்டொழிய வேறில்லை” என்று எழுதிய பெருமைக்குரிய தமிழ்ப் புலவராவார், அவர் குழந்தைகளுக்கான அறநூலாக ஆத்திசூடியை எழுதினார். ஔவையின் ஆத்திசூடி தமிழகத்தின் ஆரம்பப் பள்ளிகளில் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு பழைய ஆத்திசூடி போதாது. புதிய காலத்திற்கேற்ற முறையில் புதிய சிந்தனைகளை வளர்ப்பதற்குப் புதிய ஆத்திசூடி தேவை என்று

பாரதி கருதினார் போலும், அதனால் அவர் புதிய ஆத்திசூடி பாடினார்.

பாரதியின் புதிய ஆத்திசூடியை நமது நாட்டின் ஆரம்பப் பள்ளிகளின் பாடத்திட்டத்தில் சேர்த்து நமது குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க அரசு முன்வர வேண்டும். இப்பாடல்களைப் பள்ளிகளுக்கான பாடத் திட்டத்தில் சேர்ப்பதற்கு கல்வித்துறைச் சான்றோர்கள் முன்வர வேண்டும். அரசும் ஆவன செய்ய வேண்டும்.

பாரதியார் பல பாடல்களும் எழுதியதற்கு சில காரணங்களும் கதைகளும் சொல்லப்படுகின்றன, அவை பெரும்பாலும் வாய்வழிச் செய்திகளாகவே உள்ளன.

ஒரு சமயம் பாரதியார் கடயத்திலிருந்து ஆம்பூருக்கு வந்து கொண்டிருந்தார், ஆம்பூருக்கு (நெல்லை மாவட்ட ஆம்பூர்) வந்தபோது நண்பகல் 12.00 மணியாகி விட்டது. நடந்தே வந்த காரணத்தால் களைப்பும் பசியும் அதிகமாக இருந்தது. பிராமணர் தெரு வழியாக வந்து கொண்டிருந்த போது அங்கே ஒரு பிராமணர் வீட்டில் திருமண விருந்து நடந்து கொண்டிருந்ததைக் கண்டார், பசியோடு இருந்த பாரதியும் பந்தலுக்குள் சென்று பந்தியில் உட்கார்ந்து கொண்டார். பரிமாறப்பட்டன, அப்போது திருமண வீட்டுப் பெரியவர் பந்தியைச் சுற்றிப் பார்த்துக் கோண்டு வந்தாராம். அப்போது பாரதியும் பந்தியில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்திருக்கிறார், உடனே அவர் பதட்டத்துடன் பாரதியைப் பார்த்து, "இவனை யார் உள்ளே விட்டது. இவன் பள்ளு, பறை பல சாதிகளோடு திரிவபனாச்சே, தீட்டுப்பட்டு விட்டதே ஆச்சாரம் கெட்டுப் போச்சே" என்று கோபமாக பாரதியின் கையைப் பிடித்து இழுத்து பந்தியை விட்டும், பந்தலை விட்டும் வெளியேற்றி விட்டாராம், பாரதிக்குக் கடுங்கோபம். இருப்பினும் அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டார். அதையொட்டித் தான்,

*"சூத்திரனுக்கு ஒரு நீதி*
*தண்ட சோறுண்ணும்*
*பார்ப்புக்கு வேறொரு நீதி என*
*சாத்திரம் சொல்லிடுமாயின்*

*அது சாத்திரமன்று*
*சதி என்று கண்டோம்''*

என்றும் பாடலை பாரதி எழுதியதாக கூறப்படுகிறது, சாத்திரச் சதியென்றும் போலிச் சுவடிகள் என்று பாரதி வேறு பல பாடல்களிலும் கூறுவதைக் காணலாம்.

இப்படியாக பாரதியின் வாழ்க்கையில் ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளைப் பற்றிய பல செய்திகளும் கதைகளும் உள்ளன.

பாரதியார் சில காலம், மிகவும் குறுகிய காலம் தான் சென்னை தம்புசெட்டி தெருவில் உள்ள முத்தியாலுபேட்டை உயர்நிலைப் பள்ளியில் (இப்போது மேல்நிலைப் பள்ளி) தமிழாசிரியாராக வேலை பார்த்தார். அக்காலத்தில் ஒருநாள் மாலையில் பள்ளிப் பணிகள் முடிந்த பின்னர், அருகில் உள்ள காளிகாம்பாள் கோுவிலுக்குச் சென்று, காளிதரிசனம் செய்துவிட்டு தெருவில் நடந்து வந்து கொண்டிருந்தார், அப்போது தெருத்திண்ணை ஒன்றில் ஒரு வயதான பெரியவர் தனது பேரப்பிள்ளைக்கு ஔவையாரின் அத்திசூடி பாடல்களைச் சொல்லிக் கொடுத்துக் கோண்டிருந்தார். சிறுவன் படிக்க மறுத்துக் கொண்டிருந்தான். விளையாட்டில் கவனம் இருந்தது போலும். தாத்தா, பேரனை அடித்து பாடல்களைப் படிக்கும்படி வறுபுறுத்திக் கொண்டிருந்தார். பையன் அழுதுகொண்டே 'அறம் செய விரும்பு', ஆறுவது சினம் என்று சொல்லி நிறுத்திக் கொண்டான். மேலும் அந்தப் பெரியவர் பையனை அடித்துக் கொண்டே "சொல்லுடா, இளமையிற் கல்'' என்று சொல்லி கொடுத்துக் கொண்டிருந்தார். பையனும் அழுதுகொண்டே படிக்க முடியாது போ என்று குமுறி கொண்டிருந்தான். பெரியவர் அடிக்க, சிறுவன் அழ **"இளமையிற் கல்''** படிப்பு அப்படியே நின்று கொண்டிருந்தது.

வழியில் வந்து கொண்டிருந்த பாரதியார் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்தார், பெரியவர், பையனை அடித்ததைப் பார்த்து பாரதிக்குக் கோபம். குழந்தைகளை அடிப்பது பாரதிக்குப் பிடிக்காது. குழந்தைகள் குறும்பு செய்தால், அதை வேடிக்கை பார்த்து ரசிப்பாரே தவிர கோபப்பட மாட்டார். பாரதி அந்தப் பெரியவரைப் பார்த்து "ஏன் ஓய் குழந்தையை அடிக்கிறீர்''

இளமையில் கல் முதுமையில் மண் என்று திட்டிக் கொண்டே பெரியவர் தலையில் ஒரு குட்டு குட்டிவிட்டு, அதே சிந்தனையில் வீட்டிற்குச் சென்று "புதிய ஆத்திசூடி" பாடினார் என்று கூறப்படுகிறது.

கதை எப்படியிருந்தாலும் பாரதியின் புதிய ஆத்திசூடி புதுமையிக்கது; பயனுள்ளது தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு ஆரம்பப் பள்ளிகளில் இந்தப் புதிய ஆத்திசூடியை கட்டாயப் பாடமாக்கினால் கூட நல்லது. பாரத நாட்டின் இதர மொழிகளிலும் இந்தப் புதிய ஆத்திசூடியை மொழியாக்கம் செய்து நாட்டின் எல்லா மொழிக் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தால் இன்னும் நல்லது.

புதிய ஆத்திசூடிக்கு பாரதி எழுதியுள்ள காப்புப் பாடலில் பரம் பொருள் வாழத்தாக எல்லாக் கடவுள்களையும் குறிப்பிடுகிறார். சர்வமத சமரசமாக அனைத்து சமயங்களின் ஒற்றுமையாகப் பாடியுள்ளார்.

*"ஆத்திசூடி இளம்பிற யணிந்து*
*மோனத்திருக்கு முழு வெண்மேனியான்*
*கருநிறம் கொண்டு பாற்கடல் மிசை கிடப்போன்*
*மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்*
*ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்*
*பலவகையாகப் பரவிடும் பரம் பொருள்*
*ஒன்றே! அதனியல் ஒளியுறுமறிவோம்*
*அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்*
*அதனருள் வாழ்த்தி அமர வாழ்வெய்துவோம்"*

என்று தொடங்குகிறார். இதில் சைவம், வைணவம், இஸ்லாம், கிறித்துவம் ஆகிய சமயங்களைக் குறிப்பிட்டு அனைத்து மதங்களிலும் கூறப்படுவது ஒரே பரம்பொருளைப் பற்றித்தான். அந்தப் பரம் பொருளில் ஒளியுறுவது அறிவு. அந்த அறிவு நிலை கண்டாருக்கு அல்லல் இல்லை. எனவே அத்தகைய பரம் பொருளின் அருளை வாழ்த்தி அமர வாழ்வு எய்துவோம் என்று பாரதி பரம் பொருள் வாழ்த்தைத் தனது காப்புப் பாடலில் பாடுகிறார்.

# பாரதியின் புதிய ஆத்திசூடி

## காப்பு

## பரம்பொருள் வாழ்த்து

*"ஆத்திசூடி இளம்பிறை யணிந்து*
*மோனத்திருக்கு முழுவெண் மேனியான்*
*கருநிறம் கொண்டு பாற்கடல் மிசை கிடப்போன்*
*மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்*
*ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்*
*உருவகத்தாலே உணர்ந்து உணராது*
*பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்*
*ஒன்றே! அதனியல் ஒளியுறுமறிவோம்*
*அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்*
*அதனருள் வாழ்த்தி அமர வாழ்வெய்துவோம்"*

## நூல்

1. அச்சம் தவிர்
2. ஆண்மை தவறேல்
3. இளைத்தல் இகழ்ச்சி
4. ஈகைத்திறன்
5. உடலினை உறுதி செய்
6. ஊண் மிக விரும்பு
7. எண்ணுவது உயர்வு
8. ஏறுபோல் நட
9. ஐம்பொறி ஆட்சிகொள்
10. ஒற்றுமை வலிமையாம்
11. ஓய்தல் ஒழி
12. ஔடதம் குறை
13. கற்றதொழுகு
14. காலமழியேல்
15. கிளைபல தாங்கேல்
16. கீழோர்க்கஞ்சேல்
17. குன்றென நிமிர்ந்துநில்
18. கூடித் தொழில் செய்
19. கெடுப்பது சோர்வு
20. கேட்டிலும் துணிந்து நில்
21. கைத்தொழில் போற்று
22. கொடுமையை எதிர்த்து நில்
23. கோல் கை கொண்டு வாழ்
24. கவ்வியதை விடேல்
25. சரித்திரத் தேர்ச்சி கொள்
26. சாவதற்கஞ்சேல்
27. சிதையா நெஞ்சு கொள்
28. சீறுவோர்ச் சீறு
29. சுமையினுகிழைத்திடேல்
30. சூரரைப் போற்று
31. செய்வது துணிந்து செய்
32. சேர்க்கை அழியேல்

33. சைகையிற் பொருளுணர்
34. சொல்வது தெளிந்து சொல்
35. சோதிடம் தனையிகழ்
36. சௌரியந் தவறேல்
37. ஞமலி போல் வாழேல்
38. ஞாயிறு போற்று
39. ஞிமிரென இன்புறு
40. ஞெகிழ்வதருளின்
41. ஞேயங்காத்தல் செய்
42. தன்மையிழவேல்
43. தாழ்ந்து நடவேல்
44. திருவினை வென்று வாழ்
45. தீயோர்க்கஞ்சேல்
46. துன்பம் மறந்திடு
47. தூற்றுதலொழி
48. தெய்வம் நீ என்றுணர்
49. தேசத்தைக் காத்தல் செய்
50. தையலை உயர்வு செய்
51. தொன்மைக்கஞ்சேல்
52. தோல்வியிற் கலங்கேல்
53. தவத்தினை நிதம் புரி
54. நன்று கருது
55. நாளெலாம் வினை செய்
56. நினைப்பது முடியும்
57. நீதிநூல் பயில்
58. நுனியளவு செல்
59. நூலினைப் பகுத்துணர்
60. நெற்றி சுருக்கிடேல்
61. நேர்படப் பேசு
62. நையப்புடை
63. நொந்தது சாகும்
64. நோற்பது கைவிடேல்
65. பணத்தினைப் பெருக்கு
66. பாட்டினில் அன்பு செய்
67. பிணத்தினைப் போற்றேல்
68. பீழைக்கிடங் கொடேல்
69. புதியன விரும்பு
70. பூமியிழந்திடேல்
71. பெரிதினும் பெரிது கேள்
72. பேய்களுக்கஞ்சேல்
73. பொய்மை இகழ்
74. போர்த்தொழில் பழகு
75. மந்திரம் வலிமை
76. மானம் போற்று
77. மிடிமையில் அழிந்திடேல்
78. மீளுமாறுணர்ந்து கொள்
79. முனையிலே முகத்து நில்
80. மூப்பினுக்கிடங்கொடேல்
81. மெல்லத் தெரிந்து சொல்
82. மேழி போற்று
83. மொய்ம்பம் புறத்தவஞ்செய்
84. மோனம் போற்று
85. மௌட்டியம் தனைக்கொல்
86. யவனர் போல் முயற்சி செய்
87. யாரையும் மதித்து வாழ்
88. யௌவனம் காத்தல் செய்
89. ரஸத்திலே தேர்ச்சி கொள்
90. ராஜஸம் பயில்
91. ரீதி தவரேல்
92. ருசி பல வென்றுணர்
93. ரூபம் செம்மை செய்
94. ரேகையிற் கனி கொள்
95. ரோதனம் தவிர்
96. ரௌத்திரம் பழகு

97. லவம்பல வெள்ளமாம்
98. லாவகம் பயிற்சி செய்
99. லீலை இவ்வுலகு
100. (உ)லுத்தரை யிகழ்
101. (உ)லோக நூல் கற்றுணர்
102. லௌகீக மாற்று
103. வருவதை மகிழ்ந்துண்
104. வானநூல் பயிற்சி கொள்
105. விதையினைத் தெரிந்திடு
106. வீரியம் பெருக்கு
107. வெடிப்புறப் பேசு
108. வேதம் புதுமை செய்
109. வையத்தலைமை கொள்
110. வௌவுதல் நீக்கு

## 1. அச்சம் தவிர்

அச்சத்தைத் தவிர்க்க வேண்டும். பயத்தைப் போக்க வேண்டும். பயத்தைக் கொல்ல வேண்டும், எதற்கும் அஞ்ச மாட்டோம், எந்த நாளும் உலகமீதில் அச்சம் ஒழிகவே, அச்சம் தீரும், அமுதம் விளையும், அச்சம் வேண்டேன், அமைதி வேண்டினேன், அச்சமில்லை அமுங்குதலில்லை, அண்டம் சிதறினாலும் அஞ்சமாட்டோம், யார்க்கும் அஞ்சோம், எதற்கும் அஞ்சோம், எங்கும் அஞ்சோம், எப்போழுதும் அஞ்சோம், எதற்கும் இனி அஞ்சேல், ஐயமுண்டு பயமில்லை மனமே, அச்சத்தைச் சுட்டு அங்கு அதற்கு சாம்பலுமின்றி அழித்திடுவோம், உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே, பயம் என்றும் பேய்தனை அடித்தோம், பாதகம் செய்பவரைக் கண்டால் – நாம் பயம் கொள்ளலாகாது பாப்பா.

என்றெல்லாம் பாரதி தனது பாடல்களிலும் கவிதைகளிலும் பல இடங்களிலும் கூறுகிறார்.

அச்சம் தான் மனிதனுடைய எல்லா துன்பங்களுக்கும் துயரங்களுகும் இன்னல்களுக்கும் மூலகாரணம் அச்சம் நீங்கினால் அடிமைத்தனம் போகும். அச்சம் நீங்கும் போது மனிதன் முழு மனிதனாகி விடுகிறார்.

“எங்கு அச்சமில்லையோ அந்த இடத்திற்கு எனது நாடு விழிப்படையட்டும்” என்று வங்கக் கவிஞர் குருதேவரும் கூறினார்.

அச்சத்தைப் போக்குமாறு நமது முன்னோர்கள் பலரும் ஆன்றோர்களும் சான்றோர்களும் எடுத்துக் கூறி வந்துள்ளார்கள்.

புதிய ஆத்திசூடியின் தொடக்கமாகவே அச்சத்தைத் தவிர்க்கும் படி பாரதி நமக்கு அறிவுறுத்துகிறார். குழந்தை உள்ளங்களிலேயே அக்கருத்தைப் பதிய வைக்க விரும்புகிறார்,

## 2. ஆண்மை தவறேல்

ஆண்மை என்பது இங்கு வெறும் ஆண்பால்பட்டது மட்டுமல்ல. ஆண்மை என்பது வீரம், தீரம், துணிவு, கம்பீரம் வழிகாட்டும் திறன், அச்சமின்மை முதலிய சிறப்புகள் கொண்டதாகும்.

*"ஆரிய நாட்டினர் ஆண்மை யோடியற்றும்*
*சீரிய முயற்றிகள் சிறந்து மிக்கோங்குக"*
*என்று பாரதி குறிப்பிடுகிறார்.*
*"ஆவி தேய்ந்தழிந்திலர்*
*ஆண்மையின் குறைந்திலர்*
*வீரமும் சிரத்தையும் வீந்திலரென்று*
*புவியினோர் அறியப்*
*புரிந்தனன் முனிவன்"*



என்று கூறுகிறார்.

*"ஆண்மை என்னும் பொருளைக் காட்டும்*
*அறிகுறி அவன் பெயர்"*

என்று பாரதி திலகர் பெருமானைக் குறிப்பிடுகிறார்.

வேளாண்மை, தாளாண்மை, வாளாண்மை, பேராண்மை மேலாண்மை. நாட்டாண்மை என்றெல்லாம் ஆண்மையின் சிறப்பும் கூர்மையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.


*"அல்லல் ஒழியும் – நல்ல*
*ஆண்மை உண்டாகும்"*

என்று பாரதி மனிதர்களின் மேன்மைகளில் ஒன்றாக ஆண்மையைப் பற்றி குறிப்பிடுகிறார்.

பக்தி, சித்தத்தெளிவு, வித்தை, வீரம், செம்மை, சஞ்சலநீக்கம், ஆசை, அச்சம், பாசம் ஆகியவற்றை அறுத்தல், மோசம் செய்யாமை சோர்வு இல்லாமை, கல்வி, வீரியம் ஓங்கல் அறிவுத் தெளிவு, வல்லமை, சோம்பல் இன்மை, நிமிர்ந்த நிலை, வலிமை முதலிய மனித மேன்மைகளில் ஆண்மையும் ஒன்றாகும் என்று பாரதி ஒரு பாடலில் குறிப்பிடுவதைக் காணலாம்.

## 3. இளைத்தல் இகழ்ச்சி

நமது குழந்தைகள், இளம் ஆண்களும் பெண்களும் இளைத்துபோய் எலும்பும் தோலுமாய் நோஞ்சானாய் இருக்கக் கூடாது. உடல் இளைத்துப் போயிருந்தால் உடல் பலவீனமாக இருந்தால் எந்த நோயும் சுலபமாக தொத்திக் கொள்ளும், குழந்தைகள் இளைத்திருந்தால் எல்லோரும் கேலி பேசுவார்கள். அது இகழ்ச்சியாகும். எனவே இளைத்தல் கூடாது கிடைக்கும் வரை நன்றாக சாப்பிட வேண்டும். சத்துள்ள உணவைத் தேர்ந்து எடுத்து சாப்பிட வேண்டும். உடற்பயற்சி செய்ய வேண்டும். உடலை வலுவாக வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உள்ளமும் அறிவும் வலுவாகவும் தெளிவாகவும் அமையும்.



இங்கு பாரதி குறிப்பிடுவதில் இளைத்தல் என்பது ஒரு குழந்தை, ஒரு சிறுவன், சிறுமி ஒரு தனி மனிதன் இளைத்திருப்பது மட்டுமல்ல. ஒரு நாடு, ஒரு சமுதாயம், ஒரு குடும்பம் இளைத்திருப்பதும் சேரும். இளைத்தல் என்பது இங்கு நலிவாகும். ஏழ்மையும் வறுமையும் நிறைந்து செல்வமும் அறிவும் குன்றி நலிவடைவதாகும். ஒரு நலிவுற்ற நாடும், ஒரு நலிவுற்ற சமுதாயமும், ஒரு நலிவுற்ற குடும்பமும், ஒரு நலிவுற்ற தனி நபரும் பெருமைக்குரியதல்ல, இகழ்ச்சிக்குரியதாகும்.

அடிமைப்பட்டுள்ள நாடு, அதே போல் வறுமைப்பட்டுள்ள நாடு இளைத்த நாடாகும். மக்கள் உடல் நலமும், உடல் வலுவும் அறிவு வளர்ச்சியும் இல்லாமல் வறுமைப்பட்டு நலிந்துபோய் நின்றால் அது இகழ்ச்சியாகும்.

இகழ்ச்சியைப் பற்றி 'தொல்லை இகழ்ச்சிகள்' என்று பாரதி குறிப்பிடுகிறார். அந்தத் தொல்லை இகழ்ச்சிகளில், உடலிலும் உள்ளத்திலும், அறிவிலும் இளைத்தல் ஒன்றாகும். இளைத்த விதை முளைக்காது. இளைத்த செடி வளராது. காய்க்காது. இளைத்த கன்று உருப்படாது. இளைத்த பசு பால் கொடுக்காது. இளைத்த மாடு வேலைக்கு உதவாது. இளைத்த குழந்தை, இளைத்த மனிதன், இளைத்த குடும்பம் இளைத்த சமுதாயம், இளைத்த நாடு வலிவு குன்றி, செல்வம் குன்றி நகைப்பிற்கும் இகழ்ச்சிக்கும் இடமாகி அடிமைப்பட்டு விடும். வறுமைப்பட்டு விடும், வளர்ச்சி குன்றி விடும்.

இளைப்பது என்றால் வலிமையற்ற தோள்கள், ஒடுங்கிய மார்பு, பொலிவில்லாத முகம், பொறியிழந்த விழிகள், ஒலி குறைந்த குரல், ஒளியிழந்த மேனி, கிலி பிடித்த நெஞ்சு என்று பாரதி நினைவுபடுத்துகிறார். இந்தக் கீழ்நிலை தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நீங்க வேண்டும் உடலிலும் உள்ளத்திலும் அறிவிலும் ஆரோக்கியம் வளர வேண்டு. இதைக் குழந்தைகள் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும்.

## 4. ஈகைக்திறன்

ஈகை என்பதற்கு வேண்டுவோருக்குக் கொடுப்பது என்று பொருள் கூறப்படுகிறது. 'வறியார்க் கொன்றீவதே ஈகை' என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். ஈகை என்பது இல்லாதவர்களுக்கு கொடுத்தல், தன்னிடம் உள்ளவற்றை மற்றவர்களுக்கு கொடுத்தல் என்று பொருளாகும். மற்றவர்களுக்கு வேண்டுவதைக் கொடுப்பதற்கு ஈகைத்திறன் உள்ள உள்ளம் நமக்கு இருக்க வேண்டும். இல்லாதவர்களுக்குக் கொடுத்தல் என்பது பொருள் இல்லாதவர்க்கு உதவி செய்தல் என்பது மட்டுமல்ல கல்வி இல்லாதவர்களுக்கு கல்வி கொடுப்பதும் ஈகையின் பகுதிதான்.

ஈதல் என்பது கொடுத்தல், ஈகை என்பது கொடுக்கும் உள்ளம். அத்தகைய ஈதல் உள்ளம் உறுதியாக இருக்க வேண்டும் என்று பாரதி கூறுகிறார்.

ஈகை என்பது மனிதனுடைய நற்பண்புகளில் ஒன்று. வள்ளுவர் குடிமைப்பகுதியில்

*"நகை, ஈகை, இன்சொல், இகழாமை நான்கும்*
*வகையென்ப வாய்மைக் குடிக்கு"*

என்று கூறுகிறார். நாட்டின் நல்ல பிரஜையாக இருப்பதற்கு ஈகைத்திறன் ஒரு முக்கிய பண்பாகும்.

அதேபோல் இறைமாட்சி என்று அரசியல் அதிகாரத்தில்,

*"அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தற்கியல்பு"*

என்று கூறுகிறார். அதாவது அஞ்சாமை, ஈகை, அறிவுடமை, ஊக்கமுடைமை ஆகிய நற்பண்புகளும் குணங்களும் அரசனிடம் அதாவது ஆட்சிப் பொறுப்பில் அரசியல் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும், அதையே பாரதியும் ஈகைத் திறன் என்று குறிப்பிடுகிறார்.

மகாபாரதக் கதையில் கர்ணனுடைய காதாபாத்திரம் ஈகைத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். போர்க்களத்தில் சாகும் தருவாயில் இருந்த போதும் கூட தனது கவச குண்டலங்களையும் உயிர் போகும் தருவாயில் கூட வேதியன் வேடத்தில் வந்த கண்ணனுக்கு தனது புண்ணியம் அனைத்தையும் ஈந்தான் என்றும், அதைக் கண்டு கண்ணனே கர்ணனைக் கட்டித்தழுவி தனது தெய்வ வடிவம் காட்டி வேண்டிய வரம் கேட்கும்படி கூற கர்ணன், ஏழேழு பிறப்பு எடுப்பினும் இல்லையென்று கேட்போருக்கு இல்லையென்று கூறாத இதயம் வேண்டும் என்று கேட்க கண்ணன் மகிழ்ந்து "எத்தனை பிறப்பு எடுத்தாலும் ஈகையும் பொருளும் பெற்று இறுதியில் முக்தியும் பெறுவாயாக! என வாழ்த்தி வரம் கொடுத்ததாக பாரதக் கதை கூறுகிறது.

ஈகைத்திறனுக்குக் கருணை உள்ளம், இரக்ககுணம் இருக்க வேண்டும். உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதல் தேவையான உதவி செய்தல் ஆகிய நற்பண்புகளை வளர்க்க வேண்டும். ஈகை என்பது வேண்டுபவர்களுக்குக் கொடுக்கும் கொடைத்தன்மை மட்டுமல்ல. அது இன்னும் விரிவடைந்த பொருள் கொண்டதாகும், எனவே தான் பாரதி அதை "ஈகைத்திறன்" என்று குறிப்பிடுகிறார். அத்தகைய விரிவடைந்த பொருளில் நமது குழந்தைகளின் உள்ளங்களைப் பக்குவப்படுத்த வேண்டும். நமது குழந்தைகள் விசாலமான உள்ளங்களைக் கொண்டவர்களாக வளர்க்கப்பட வேண்டும். நமது குழந்தைகள் ஈகைத்திறம் கொண்ட சிறந்த குடிமக்களாக வளர்க்கப்பட வேண்டும் என்பது பாரதியின் விருப்பமாகும்.

## 5. உடலினை உறுதி செய்

மனித வாழ்க்கையில் உடல் நலம் மிக முக்கியமாகும். உடல் ஆரோக்கியம், நோயின்மை ஆகியவை உள்ளத்தின் வளர்ச்சிக்கும் அறிவின் வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமானதாகும். உடல் ஆரோக்கியத்திற்கு உடல் வலுவாக இருக்க வேண்டும். அதற்காக நல்ல உணவும் உடற்பயிற்சியும் அவசியமாகும்.

உடலினை உறுதி செய்வதற்காக எல்லா நாடுகளிலும் உடற்பயிற்சி. விளையாட்டு வித்தைகள் ஆகியவை கற்பிக்கப்படுகின்றன. பயிலுவிக்கப்படுகின்றன. விளையாட்டுப் போட்டிகள் முதலியவை நடத்தப்பட்டு உடலினை உறுதி செய்ய ஊக்குவிக்கப்படுகின்றன,

உடல் உறுதிக்கும் வலிமைக்கும் நமது நாட்டுக் கதைகளில் சிறந்த பாத்திரப் படைப்புகளும் நிகழ்ச்சிகளும் காட்டப்படுகின்றன. யானை, சிங்கம் போன்ற உடல் பலமும் உறுதியும் மிக்க ஜீவங்களும் நமக்குக் காட்டப்படுகின்றன.

இராமாயணக் கதையில் இராமன், அனுமன், இராவணன் ஆகியோர் உடல் பலமும் உறுதியும் உள்ளவர்கள். அனுமன் சிறந்த சாலியாகவும் செயற்கரிய செய்யும் திறனாளனாகவும் காட்டப்படுகிறான்.

அனுமன் வாயுபுத்திரன் பலத்திற்கு வாயுவை எடுத்துக்காட்டாகக் கூறுவதுண்டு. கதையில் அனுமனுடைய உடலுறுதியைப் பற்றிக் கூறும் போது கடலைத் தாண்டினான் சஞ்சீவி மலையைப் பெயர்த்து அதைத் தூக்கிக் கொண்டு வந்தான். இலங்கையை எரித்தான் என்றெல்லாம் கூறப்படுகிறது.

இராவணன் உடல் பலமும் உறுதியும் கொண்டவன் என்று இராமாயணக்கதை கூறுகிறது. இராவணன் இமயமலையில் உள்ள கைலாயத்தையே கட்டை விரலால் அசைத்தவன் என்றும், ஆயிரம் யானைகளை எதிர்த்துப் போரிடும் வல்லமை மிக்கவன் என்றெல்லாம் உடல் பலத்திற்கு உதாரணம் கூறப்படுகிறது.

பாரக்கதையில் பீமன் உடல் பலமும் உறுதியும் மிக்கவன், பீமனும் அனுமனைப் போல வாயு புத்திரன். பீமனும் வாயுவைப் போல் பலமும் உறுதியும் கொண்டவன். பீமன் நூற்றுவரையும் கொன்றவன்.

இவைகள் எல்லாம் கதாபாத்திரங்கள் என்ற முறையில் கதையில் விளக்கத்தில் மிகைபடக் கூறப்பட்டிருந்தாலும் அவை உடல் பலத்திற்கும் உறுதிக்கும் உதாரணங்களாகும்.

உடலினை உறுதி செய்ய உடற்பயிற்சி அவசியமாகும் என்பதை நாம் அறிவோம். நமது குழந்தைகளும் இளம் ஆண்களும், பெண்களும் கட்டாயம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். ஊர்தோறும், வீதிதோறும், பள்ளிதோறும், கல்விநிலையங்கள், தோழில் நிலையங்கங்களிலும் உடற்பயிற்சி நிலையங்களும் விளையாட்டுப் பிரிவுகளும் அமைய வேண்டும். நமது இளைஞர்கள் பல விளையாட்டுகளிலும் பயிற்சியும் தேர்ச்சியும் பெற வேண்டும்.

உலக விளையாட்டுப் போட்டிகளிலும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் பாரத நாடு இன்னும் பலவீனமாகவே இருக்கிறது. அந்நிய ஆட்சிகால அவலநிலை தொடர்கிறது. அந்த நிலை மாற வேண்டும்.

மனித வாழ்க்கைக்கு உணவு, உடை, உறைவிடம், கல்வி, கலை, இலக்கியம் ஆகியவை போலவே விளையாட்டும், உடற்பயிற்சியும் மிகவும் அவசியமானதாகும்.

எனவே உடலினை உறுதி செய்வதில் நாம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். அதற்காக இளமையிலிருந்தே நமது ஆண், பெண் குழந்தைகளை உடற்பயிற்சியிலும் விளையாட்டிலும் உழைப்பிலும் ஈடுபடுத்தி உடலினை உறுதி செய்ய வேண்டும், உடலினை உறுதி செய்ய நல்ல ஆரோக்கியமான உணவு வேண்டும். உடல் நலத்தையும் சீராகப் பேண வேண்டும். நாட்டின் சுகாதாரத்தையும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்க வேண்டும். நல்ல காற்று, தண்ணீரும் கிடைக்கச் செய்ய வேண்டும். இயற்கையைப் பாதுகாக்க வேண்டும். உடற்பயிற்சியில் நாமும், நாடும் கவனம் செலுத்த வேண்டும்.

## 6. ஊண் மிக விரும்பு

ஊண் மிக விரும்பு என்றால் அளவுக்கு மீறி சாப்பிட வேண்டும் என்று பொருளல்ல. நன்றாக நல்ல உணவாக சாப்பிட வேண்டும் என்று பொருளாகும். உடலினை உறுதி செய்ய முதலில் நன்றாக சாப்பிட வேண்டும். போதுமான அளவில் நல்ல சத்துள்ள உணவாக சாப்பிட வேண்டும்.



நமது நாட்டு உணவு வகைகள் மிகவும் சிறந்தவைகளும், சத்துள்ள வைகளுமாகும். நமது உணவுப் பொருள்களில் பலவகை தானியங்கள், காய்கறி, கனிவகைகள், பால், முட்டை, மீன் முதலியவை அதிகம் உள்ளன. அத்துடன் உணவு நல்ல முறையில் செரிப்பதற்காக நல்ல மருத்துவ குணமுள்ள பல பொருள்களும் நமது உணவில் சேர்ந்திருக்கின்றன.

மிளகு, வெள்ளைப்பூண்டு, இஞ்சி, இலவங்கம், கருவேப்பிலை, வெங்காயம், சீரகம் முதலியவைகள் எல்லாம்

உணவுப் பொருள்கள் மட்டுமல்ல நல்ல மருத்துவ குணம் உள்ள பொருள்களுமாகும். இவையெல்லாம் நமது உணவில் அன்றாடம் உபயோகத்தில் உள்ளவைகளாகும்.

உணவு வகையில் சுவைகளில் அறுசுவையாகப் பிரிதது அனுபவ பூர்வமாக ஆய்வு செய்து உணவுப் பொருள்களையும் நமது முன்னோர்கள் வகுத்திருக்கிறார்கள். இனிப்பு, கசப்பு, புளிப்பு, உப்பு, துவர்ப்பு, காரம் ஆகிய அறுசுவைகளும் நமது உணவில் உள்ளன. இவைகளைச் சீரான வகையில் நாம் உணவில் சேர்த்துக் கொண்டால் நல்ல சுவை மட்டும் அல்ல நமது உடல் நலனுக்கு உகந்ததுமாகும்.

நமது நாட்டு சமயங்களும் விரதங்களும் கூட உணவு வகைகளிலும் மருந்துகளிலும் அதிகம் கவனம் செலுத்தியுள்ளன. நமது கோவில்களிலும் சிறந்த உணவுப் பதார்த்தங்கள் வினியோகிக்கப்படுகின்றன, லட்டு முறுக்கு, வடை, தோசை, இட்லி, சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தயிர்ச்சாதம், கல்கண்டு மற்றும் வெண்பொங்கல், சுண்டல் பஞ்சாமிர்தம் மற்றும் பல வகை சித்திரான்னங்கள், உக்கரை, ஆப்பம், அதிரசம், இன்னும் பல உணவுப் பண்டங்கள் நமது கோவில்களில் வினியோகம் செய்யப்படுகின்றன, ஒவ்வொரு கோவிலும் தனித்தனியான உணவுப் பண்டத்தில் கவனம் செலுத்தியுள்ளதைக் காண்கிறோம்.

சில விசேஷ நாட்களில் பண்டிகைகளில் ஏகாதசி, அமாவாசை, ஆடி, தை என்றெல்லாம் பண்டிகைகளை வகுத்து அதற்குரிய உணவுப் பண்டங்களையும் நமது முன்னோர்கள் வகுத்திருக்கிறார்கள், தான்யங்கள், காய்கள், பழங்கள், கீரை வகைகள், பருப்பு வகைகள் கிழங்கு வகைகள், தண்டு வகைகள் முதலிய வகைகளாகப் பிரித்து அவைகளின் சிறப்புகள் பற்றியெல்லாம் ஆய்வு செய்து உணவில் நமது முன்னோர்கள் சேர்த்திருக்கிறார்கள்.

இத்தகைய பல வேறு உணவு வகைகளை நாம் போதுமான அளவில் உற்பத்தி செய்து கொள்வதற்கும் நமது நாட்டில் கிராமங்களிலும் சரி, நகர்புறங்களிலும் சரி போதுமான இடம்,

தட்ப வெப்பம் ஆகியவைகளும் தாராளமாக உள்ளன, அவைகளை வீணாக்காமல் சிக்கனமாகவும் சீராகவும் பயன்படுதினால் நமக்கு தேவையான பல பொருள்களையும் உற்பத்தி செய்து கொள்ளலாம். வீட்டுத் தோட்டங்கள், மாடித் தோட்டங்கள், சாலையோரங்கள் காலியிடங்கள் முதலிய பலவற்றையும் சீராகப் பயன்படுத்திக் கொள்ளவும் நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எனவே நல்ல உணவு வகைகளை நான்றாக சாப்பிட வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும், அதையே ஊண் மிக விரும்பு என்று போதிக்கிறார்.

## 7. எண்ணுவது உயர்வு

நாம் உயர்வான எண்ணங்களையே எண்ண வேண்டும். நல்லனவற்றையே எண்ண வேண்டும். நாம் எண்ணும் நல்லனவற்றை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். நமது எண்ணங்கள் உயர்வானதாக நல்லனவாக தூய்மை யானவைகளாக தெளிவான சிந்தனையுடன் கூடியதாக இருக்க வேண்டும்.

*"எண்ணிய வெண்ணியாங் கெய்துவ வெண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்"*

என்று வள்ளுவர் பெருமான் கூறுகிறார்.

எண்ணம், சிந்தனை என்பதெல்லாம் மனிதனுக்கென்றே சிறப்பாக அமைந்திருக்கும் ஒன்றாகும். இதர உயிரினங்களுக்கு மனிதனுக்கு உள்ளதைப் போன்ற சிந்தனை அமைப்பு இல்லை. மனிதன் ஆறறிவு படைந்தவன். ஆறாவது அறிவு என்பது பகுத்தறிவு என்று கூறப்படுகிறது. எதையும் பகுத்துப் பார்த்து ஆய்வு செய்து முடிவுக்கு வரும் திறன் மனிதனுக்கு உண்டு. அத்தகைய பகுத்தறிவுடன் சிந்தனை இணைக்கப்பட்டிருக்கிறது.

'சில விலங்குகளுக்கும் சில உயிரினங்களுக்கும் சில அறிவுகள் தொட்டறிவுகள், பட்டறிவுகள் கூர்மையாகக் கூட இருக்கும். அது மனிதனுடைய அறிவுணர்வுகளைக் காட்டிலும்

கூட கூர்மையானதாக இருக்கும். எடுத்துக்காட்டாக பார்க்கும் திறன், மனிதனைக் காட்டிலும் கழுகு, கருடன் ஆகியவைகளுக்கு அதிகமானது. கூர்மையானது, வெகு உயரத்தில் பறக்கும் போது கூட கீழே பூமியில் உள்ள ஒரு சிறு கோழிக்குஞ்சு, எலி ஆகியவற்றைத் துல்லியமாகப் பார்த்து விடும். மோப்பத்திறன் – மனிதர்களைக் காட்டிலும் நாய்களுக்கு அதிகம். கேட்கும் திறன் – மனிதர்களைக் காட்டிலும் பாம்புகளுக்கு செவித்திறன் அதிகம். தொட்டால் சுருங்கிவிடும் சில தாவரங்கள் இருக்கின்றன, அவைகளின் தொட்டுணர்வு மனிதனுடையதைக் காட்டிலும் அதிகம். அதனால் கருடனோ, பாம்போ, நாயோ, தொட்டால் சிணுங்கி செடியோ மனிதனைக் காட்டிலும் அறிவில் சிறந்தது என்று கூறமுடியுமா. முடியாது குருவி கூடு கட்டுகிறது. கரையான் புற்று கட்டுகிறது. தேனீ கூடு கட்டுகிறது. இவையெல்லாம் [illegible] கூடுகளைக் கட்டுகின்றன, அவைகளையெல்லாம் மனிதனைக் காட்டிலும் அறிவுத்திறன் அதிகம் கொண்டவை என்று கூறமுடியுமா, முடியாது காரணம் என்ன?

மனிதன் ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவைகள் மூலமாக உலகை அறிகிறான். அந்தப் புலனறிவை ஒனறு குவித்து இணைத்து பகுத்து ஆய்வு செய்து முடிவுகளுக்கு வருகிறான், அதாவது மனிதன் தனது பார்க்கும் திறனையும், கேட்கும் திறனையும், ருசிக்கும் திறனையும், மோப்பத் திறனையும், தொட்டுணர்வையும் ஒன்று குவித்து இணைத்து சிந்தித்து ஊகம் செய்து ஆராய்ந்து பகுத்துப் பார்த்து பல முடிவுகளுக்கும் வருகிறான், இது மனிதனால் மட்டுமே முடியும் வேறு எந்த உயிர்ப் பொருளாலும் முடியாது.

அது போல் மனிதன் ஒரு செயலைச் செய்ய வேண்டுமானால், அக்காரியத்தை நிறைவேற்ற வேண்டுமானால், விலங்குகளோ, பறவைகளோ இதர உயிர்ப் பொருள்களோ தங்களுடைய இயல்புணர்வில் செய்வதைப் போல அல்லாமல் முன்கூட்டியே சிந்தித்துத் திட்டமிட்டு அதற்கான இதர தயாரிப்புகளையும் செய்து கொண்டு அந்த வேலையைச் செய்து முடிக்கிறான்.

ஒரு தாய், இரவு எட்டு மணிக்குத் தனது குழந்தைகளுக்கு உணவு கொடுக்க வேண்டுமானால் மாலை ஐந்து மணி முதலே அரிசி, பருப்பு, காய்கறி மற்றும் தேவைப்படும் பொருட்களைச் சேகரித்து அடுப்பு பற்ற வைத்து சிந்தித்து உணவு தயாரிப்பில் கவனம் செலுத்தி சமையலை முடித்து எட்டு மணிக்கு உணவு தயாரித்து குழந்தைகளுக்கு உணவளிக்கிறார்.

எவ்வளவு எளிய சாதாரண மனிதராக இருந்தாலும் பாமர மனிதராக இருந்தாலும் முன்கூட்டி சிந்தித்துத்தான் சிறிய வேலையானாலும் செய்து முடிக்கிறார்.

"எண்ணித்துணிக கருமம்" என்பது வள்ளுவர் வாக்கு. எனவே எண்ணம், எண்ணுதல் என்பது மனிதனுக்குள்ள சிறப்பு - எதையும் எண்ணிப் பார்க்க வேண்டு. அதற்கான சிந்தனையை வளர்க்க வேண்டும். சிந்தனை வளரும் போது அறிவு வளருகிறது. அறிவு வளரும் போது சிந்தனை தெளிவடைகிறது. சிந்தனை தெளியும் போது எண்ணங்களும் உயர்வடைகின்றன. அறிவும் கூர்மையடைகிறது.

எண்ணங்களும், சிந்தனைகளும் உயரும் போது அறிவு செழுமையடைகிறது. மனிதனுக்கு இருவகைகளில் அறிவு வளர்ச்சி பெறுகிறது. ஒன்று அனுபவ அறிவு. இது முக்கியமானது, ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு வேலையை ஒரு தொழிலைச் செய்கிறான், செய்து கொண்டேயிருக்கிறான், நடக்கிறான், வண்டிகளில் போகிறான். வேலை செய்கிறான், சாப்பிடுகிறான். குளிக்கிறான். படிக்கிறான். எழுதுகிறான். பேசுகிறான். மற்றவர்களுடன் பழகுகிறான், கலந்துரையாடுகிறான் இவைகள் மூலம் மனிதனுக்கு அனுபவங்கள் கிடைக்கின்றன, இந்த அனுபவங்கள் மூலம் மனிதனுக்கு அறிவு அதிகமாகிறது, சிந்தனை விரிவடை கிறது. சில மனிதர்கள் தங்கள் அனுபவங்களை எழுதி வைக்கிறார்கள். அந்த அறிவுச் செல்வங்கள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு அறிவுக்களஞ்சியமாகிறது.

இரண்டாவது ஆராய்ச்சி அறிவாகும். சொந்த அனுபவத்தின் மூலம் கிடைக்கும் அறிவுடன் இந்த ஆராய்ச்சி அறிவு இணைகிறது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்த

எண்ணங்களை, சிந்தனைகளை, கருத்துக்களை, அனுபவ அறிவினை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கிறான், கலந்துரையாடுகிறான். அத்தகைய கலந்துரையாடல்கள் மற்றும் ஆய்வுகள் மூலம் புதிய கருத்துக்கள் தோன்றி அவை நிலைபெறுகின்றன. மனிதன் தனது சொந்த அறிவுச் செல்வத்தை வாய்மொழியாக தனது பரம்பரைக்குச் சொல்லி வைத்துப் போகிறான், எழுத்து மூலம் எழுதி அவை நூல்களாக வெளிவந்து நிலை பெறுகின்றன. சங்ககால மனிதனின் சிந்தனைகளை அறிவுச் செல்வங்களை இன்று நாம் படித்து அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு உலகெல்லாம் உள்ள அறிஞர்கள் பல ஆயிரம் ஆண்டுகளாக சேகரித்து வைத்துள்ள அறிவுச் செல்வங்கள் தலைமுறை தலைமுறையாக மனிதனுக்குக் கிடைக்கிறது. அவைகளைக் கல்வி மூலம் பல நூல்களைப் படிப்பதன் மூலம் மனிதனால் பெற முடிகிறது.

இவ்வாறு மனிதனின், மனித குலத்தின் அறிவு விரிவடைகிறது. அறிவு விரிவடையக் கல்வியும் படிப்பும் முக்கிய சாதனமாகும். கல்வியையும் படிப்பையும் வலியுறுத்தி பல தலைவர்களும் அறிஞர்களும் பெரியோர்களும் அறிவுரை கூறியுள்ளார்கள். கல்வி என்பது மனித சமுதாயத்தின் வாழ்க்கை முறையின் பகுதியாக அமைந்துள்ளது.

ஒருவருடைய இயற்கை அறிவை வளர்ப்பதற்கு அவனுடைய கல்வி அறிவு துணை செய்கிறது. எனவே எல்லா வகையிலும் அறிவை வளர்க்க வேண்டும். சிந்தனையை விசாலபபடுத்த வேண்டும். எண்ணுவதை உயர்த்த வேண்டும். நல்லனவற்றை உயர்வானவற்றைப் பற்றியே எண்ண வேண்டு. சிந்திக்க வேண்டும் என்பதற்காக எண்ணுவதை உயர்வு என்று பாரதி எடுத்துக்காட்டுகிறார்.

## 8. ஏறு போல் நட

மனிதன் ஆணானாலும், பெண்ணானாலும் நிமிர்ந்து நடக்க வேண்டும். மிடுக்குடன் நடக்க வேண்டும். நேராக நடக்க வேண்டும். நேர்மையாக நடக்க வேண்டும். ஏறு நிமிர்ந்து

சென்றால் தான் உழவு சரியாகச் செல்லும், வண்டிகள் சரியாக ஓடும். அதனால் தான் ஏறு போல் நட என்று பாரதி எடுத்துக் காட்டியுள்ளார்.

குனிந்து நடப்பது அடிமைத்தனம். நிமிர்ந்து நடப்பது சுதந்திரத்தனம்.



ஆதிமனிதன் நான்கு கால் நிலையிலிருந்து வளர்ச்சி பெற்று மாற்றம் அடைந்து முன்னிரண்டு கால்களும் சிறிது சிறிதாக பூமியிலிருந்து அதாவது தரையிலிருந்து உயர்ந்து, அக்கால்கள் கைகளாகி, படிப்படியாக உயர்ந்து தலையும் நிமிரத்தொடங்கியது என்பது விஞ்ஞானிகள் ஆராய்ந்து கூறும் கண்டுபிடிப்புகளாகும்.

பல காலம் மனிதன் தனது இருகைகளையும் முன்னால் தொங்கவிட்டுக் கொண்டு குனிந்தே நடந்து வந்தான். படிப்படியாக சிறிதாக நிமிரத் தொடங்கினான். பின்னர் தனது வேலைகளுக்கு கல், கம்பு, தடி, வேல், சூல், வில், கணை முதலிய கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கினான். கருவிகள் மூலம் மனிதனின் உழைப்பு தொடங்கியது.

உழைப்பின் மூலம் மனிதன் மனிதனாகிறான், அப்போது மனிதன் மிருக சம்ராஜ்யத்திலிருந்து வேறுபடத் தொடங்கி விட்டான். உழைப்புக் கருவிகளுடன் கூடிய மனிதனுடைய உழைப்பு மேலும் மேலும் மனிதனை உயர்த்திக்கொண்டே வந்திருக்கிறது. தலைநிமிரச் செய்திருக்கிறதும். குரங்கு மனித நிலையிலிருந்து மனித நிலைக்கும் மனிதன் மாறி வந்துள்ளதை பிரடெரிக் எங்கல்ஸ் என்னும் ஐரோப்பிய விஞ்ஞானி தனது கட்டுரை ஒன்றில் மிகவும் விரிவாக விளங்கியுள்ளார், அதில் உழைப்பே மனிதனை மனிதனாக்கி இருக்கிறது. மனிதனை மிருக சாம்ராஜ்யத்திலிருந்து விடுவித்து வேறுபடுத்தியிருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

எனவே தலைநிமிர்ந்து நடப்பது மனித இயல்பாக வளர்ந்து வருகிறது. அப்படியிருந்தும் இன்னும் சிலர் கூனிக்குறுகிக் குனிந்து நடப்பது அடிமைத்தனமாகும, இந்திய மக்களில் பலர் அன்று கூனிக்குறுகிக் குனிந்து நடப்பதை பாரதி வெறுத்தான், அதனால்தான் பாரதி ஏறுபோல் நட என்று கூறுகிறான், நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை வேண்டும் என்று கூறுகிறார்.

நாம் நடக்கும் போது மார்பு விசாலமடைகிறது. தோள்கள் திரளுகின்றன. உடல் வலிமையடைகிறது. உறுதிப்படுகிறது. நாம் நிமிர்ந்து நடக்கும் போது நமது பார்வை நேராகவும் சுற்றுமுற்றும் செல்கிறது. அப்போது அதிகமான உலகக் காட்சிகளை நாம் காண்கிறோம். அதனால் நமக்கு பார்வை அறிவு அதிகரிக்கிறது. பொது அறிவு விரிவடைகிறது. நெடிது நோக்குடன் நெடுந்தூரம் செல்கிறது.

நாம் நிமிர்ந்து நடப்பதன் மூலம் உடல் உறுதி பெறுகிறது. உள்ளம் விசாலமடைகிறது. அறிவு வளர்ச்சியடைகிறது. அடிமைத்தனம் போகிறது.

ராணுவத்தில் கவாத்து சொல்லிக் கொடுக்கிறார்கள். அப்போது தலைநிமிர்ந்து நெஞ்சை உயர்த்தி, கைகளை வீசி நடக்கக் கற்றுக் கொடுக்கிறார்கள். அதனால் ஒரு கம்பீரம் ஏற்படுகிறது. உடல் வனப்பு அதிகமாகிறது.

நமது இளைஞர்கள் அனைவருக்கும், பள்ளிக்குழந்தைகள் அனைவருக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டாயமாக கவாத்து பயிற்சி கொடுக்க வேண்டு. அதன்மூலம் வீரநடை ஏற்படும். ஒரு ஒழுக்கமும் கட்டுப்பாடும் ஏற்படும். அதனால் தான் பாரதி ஏறுபோல் நட என்று கூறியுள்ளார்.

## 9. ஐம்பொறி ஆட்சி கொள்

ஐம்பொறிகள் என்பது மெய் (உடம்பு) வாய், கண், மூக்கு. செவி ஆகிய ஐந்துமாகும். இந்த ஐந்து பொறிகள் மூலமே நாம் உலகை அறிகிறோம். உடம்பால் சுற்றிச்சூழலில் உள்ள தட்பவெப்ப

நிலைகளை உணர்கிறோம். தொட்டுணர்ச்சி மூலம் அறிகிறோம். வாய்மூலம் சுவையை அறிகிறோம். கண்கள் மூலம் காண்கிறோம். மூக்கின் மூலம் மணம் நாற்றங்களை அறிகிறோம். செவி (காதுகள்) மூலம் கேட்கிறோம். இந்த ஐம்பொறிகள் மூலம் அறிதல் மூளைக்குச் சென்று அப்பொருளைப் பற்றிய அறிவைப் பெறுகிறோம். ஐம்புலன் அறிவையெல்லாம் நமது மூளையும் பகுத்தறிவும் ஒழுங்குமுறைப்படுத்தி நம்மை செயல்படுத்துகிறது. செயலில் ஈடுபடுத்துகிறது. இவைகளையெல்லாம் வைத்தியர்கள் உடற்கூறு விஞ்ஞானிகள் விரிவுபடுத்திக் கூறுகிறார்கள். தத்துவஞானிகள் தத்துவார்த்த முறையில் ஐம்பொறிகளின் பல்வேறு செயல்களை விளக்கிக் கூறுகிறார்கள். அறிவின் தத்துவத்தைப் பற்றி நமது தத்துவஞானிகளும், விஞ்ஞானிகளும் மிகவும் விரிவான முறையில் ஆய்வு செய்து விளக்கி இருக்கிறார்கள்.

இந்த ஐம்பொறி உணர்வுகளை நமது பகுத்தறிவின் மூலம் நமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்ள வேண்டும். அதை ஒழுங்கு முறைப்படுத்தி செயல்படுத்த வேண்டும். நாம் ஐம்பொறிகளை ஆள வேண்டுமேயல்லாது ஐம்பொறிகள் நம்மை ஆளக்கூடாது. மனிதன் தனது ஐம்பொறிகள் மீது ஆட்சி கொண்டால் உலகில் நடைபெறும் பெரும்பாலான குற்றங்கள் மறைந்துவிடும், ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவையெல்லாம் ஐம்பொறிகள் சம்பந்தப்பட்ட வைகளேயாகும்.

மூன்று குரங்கு பொம்மைகள் மேஜை மீது வைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று கண்களைப் பொத்திக் கொண்டிருக்கிறது. ஒன்று காதுகளைப் பொத்திக் கொண்டிருக்கிறது. மூன்றாவது வாயைப் பொத்திக் கொண்டிருந்கிறது. நல்லனவற்றையே பார், நல்லனவற்றையே கேள், நல்லனவற்றையே பேசு, அல்லனவற்றைப் பார்க்காதே, கேட்காதே, பேசாதே என்று பொருள்பட அந்தப் பொம்மைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

மனம் ஒரு குரங்கு என்பார்கள். குரங்கு ஒரு நிலையில் நிற்காது. வெள்ளாடு ஒரு இடத்தில் நின்று மேயாது. துஷ்ட மிருகங்கள் கண்டதை அடித்துக் கொன்று தின்னும். மனிதன் அப்படி இருக்கக்கூடாது. ஒரு ஒழுங்கு கட்டுப்பாட்டிற்குள் செயல்பட வேண்டும். உரிய கட்டுப்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

அதிகம் பேசினால் வாய் அடக்கிப் பேசு என்று கூறுகிறார்கள். ஒட்டைவாயன் என்கிறார்கள். இவன் வளவளவென்று பேசுகிறான் என்று கூறுகிறார்கள். இவன் வாயில் விழுந்தால் கேடு என்கிறார்கள். வாய் அடக்கி அளவோடு பேசினால், நல்லதைப் பேசினால், உண்மை பேசினால் அதற்கு பாராட்டு கிடைக்கிறது, ஒருவன் சொன்ன சொல்லைக் காப்பற்றினால் அதற்குப் பாராட்டு கிடைக்கிறது. இவன் வாய் சுத்தம் உள்ளவன் என்று உண்மை பேசுபவனைப் பாராட்டுகிறார்கள். வாய்ஜாலம், வாய்ச்சவடால் இல்லாதவன் என்று கூறுகிறார்கள். நாகாக்க என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

வாய் பேசுவதற்காக மட்டுமில்லை. வாய் மூலம் உணவு சாப்பிடுகிறோம். இதர ஆகாரங்களைத் தண்ணீரை உட்கொள்கிறோம். கண்டதை சாப்பிட்டால் இவன் வாய் கட்டவில்லை என்று கூறுகிறார்கள். ருசியாக இருக்கிறது. அதிகம் பசிக்கிறது என்று எதையும் அளவுக்கு மீறி சாப்பிட்டு விட்டால் அது அஜீரணத்திலும் இதர வியாதிகளிலும் கொண்டு போய் விடுகிறது. உடல் நலமில்லாமல் இருக்கும் போது வாய் கட்டியிருக்க வேண்டும். அதனால் நமது வைத்திய முறையில் பத்தியம் என்று வைத்திருக்கிறார்கள். உபவாசம் உடம்புக்கு நல்லது.

இதேபோலத்தான் பார்த்தல், கேட்டல், தொடுதல், மோப்பம் முதலியனவற்றையும் கட்டுப்படுத்திக் கொண்டு முறைப்படுத்திக் கொண்டு போக வேண்டும்.

“சாதி மதங்களைப் பாரோம்” என்று பாரதி கூறுகிறார். அதில் பாரோம் என்பது பார்க்க மாட்டோம் என்று பொருளாகும். இங்கு பார்ப்பது என்பது கண்களால் பார்ப்பது மட்டுமல்லாமல் உள்ளத்தாலும் உணர்வாலும் அறிவாலும் பார்ப்பதாகும்.

“சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்” என்று பாரதி கூறுகிறார். இங்கு சந்திர மண்டலத்தியல் காண்போம் என்பது அதைப் புரிந்து கொண்டு தெளிவடைவோம் என்பதாகும். இங்கு காண்பது அதன் மூலம் அறிந்து கொள்வதும் தெரிந்து கொள்வதும் பார்க்கும் திறனில் உள்ள பண்பாகும்.

*“பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்*
*பார்மிசை நின்னொளி காணுதற்கு அலைந்தோம்”*

என்று காட்சியைப் பற்றி பாரதி கூறுகிறார். இவையெல்லாம் கண்ணின் செயல்களாகும்.

*“விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி*
*வேண்டியவாறுனைப் பாடுதும் காணாய்”*

என்பது வாயின் செயலாகும். வாய்வழி பாடினாலும் அந்த செயல் உள்ளத்திலிருந்து எழுவதாகும். பாடுவதற்கு வாய் மட்டுமல்ல, இதர பொறிகளும் செயல்பட வேண்டியதாகிறது.

*“வெற்றி கூறுமின் வெண்சங்கு ஊதுமின்”*

என்பது வாயின் செயலாகும். அதற்கு இதர பொறிகளும் அறிவும் செயல்படுகின்றன. துணை செய்கின்றன.

*“காந்தி சொற் கேட்டார், காண்பார் விடுதலை கணத்தினுள்ளே”*

என்பதில் செவியும், கண்களும் இணைந்து செயல்படுவதைக் காண்கிறோம்.

ஒளிபடைத்த கண், கனி படைத்த மொழி, நோய்களற்ற உடல் என்று பாரதி பொறிகளைப் பற்றிக் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம்.

பஞ்சபூதங்களின் சேர்மானமாகவே மனித உடம்மைப சித்தர்கள் காண்கிறார்கள். நமது உடம்பிலுள்ள ஐம்பொறிகளையும் அவைகளின் செயல்பாடுகளையும் பஞ்சபூத சக்திகளுடன் இணைத்தே நமது தத்துவஞானிகள் பேசியுள்ளார்கள்.

மனிதன் தனது அறிவின் ஆற்றலால் எவ்வாறு பஞ்சபூத சக்திகளையும் அதனுடன் இணைந்துள்ள, தொடர்புள்ள இயற்கை சக்திகளையும் ஓரளவு கட்டுப்படுத்தித் தனக்குச் சதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறானோ அது போலவே ஐம்பொறிகளின் செயல்பாடுகளையும் கட்டுப்படுத்தி நெறிமுறைப்படுத்தி அவைகளைச் சரியான வழியில் செலுத்த வேண்டும் என்பதையே பாரதி ஐம்பொறி ஆட்சி செய் எனக் கூறுகிறார்.

சித்தம் போக்கு சிவம் போக்கு என்னும் முறையில் அதனதன் இஷ்டத்திற்கு ஐம்பொறிகளின் செயல்பாடுகளை விட்டுவிடக் கூடாது. நமது மனமும் அறிவும் ஐம்பொறிகளையும் அதன் செயல்பாடுகளையும் கட்டுப்படுத்த வேண்டும். அதன் மூலம் நமது உடம்பின் இதர உடல் உறுப்புகளின் செயல்பாடுகளையும் நிர்வகிக்க வேண்டும். அதையே பாரதி ஐம்பொறி ஆட்சி செய் என்று கூறுகிறார். இதில் மனிதன் வெற்றி பெறும் அளவில் அவன் முழுமையான மனிதனாகிறான். அறிவும் ஆற்றலும் உறுதியும் தெளிவும் கொண்ட சிறந்த மனிதனாகிறான். அதன் மூலம் சமுதாயத்திற்கும் வழிகாட்டும் தலைமைப் பங்கினை ஆற்றுக்கூடிய சிறந்த மனிதனாகிறான். இதை நமது வருங்கால தலைமுறைகளுக்குப் பயிற்றுவிக்க வேண்டும் என்று நமது குழந்தைகளுக்கான ஆத்திசூடியாக பாரதி இதை எடுத்துக் கூறியுள்ளார்.

## 10. ஒற்றுமை வலிமையாம்

நமது நாட்டில் பல சாதிகள், பல மொழிகள், பல மதங்கள், பல இனங்கள் ஆகிய வற்றால் வேறுபட்ட மக்கள் வாழ்கிறார்கள். இத்தகைய வேற்றுமையில் ஒற்றுமை காண்பது நமது நாட்டின் உயர்ந்த பண்பாடாக அமைந்துள்ளது.

பாரதி தனது பல்வேறு பாடல்களிலும் இந்த ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளார்.

*"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்*
*ஒன்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு"*

என்றும்,

*"முப்பது கோடியும் வாழ்வோம் – வீழில்*
*முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்"*

என்றும், நாட்டுமக்களின் முழுமையான ஒற்றுமையை பாரதி வலியுறுத்திக் கூறியுள்ளார்.

*"முப்பது கோடி முகமுடையாள் – உயிர்*
*மொய்ம்புற வொன்றுடையாள் – இவள்*
*செப்பு மொழி பதினெட்டுடையாள் – எனிற்*
*சிந்தனை ஒன்றுடையாள்"*

என்று அன்றைய பாரதத்தின் மக்கள் தொகையான முப்பது கோடியைக் குறிப்பிட்டு, முகம் முப்பது கோடி என்று உயிர் ஒன்று என்றும், செப்பு மொழி பதினெட்டு ஆயினும் சிந்தனை ஒன்று என்றும், நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தி பாரதி பாடியுள்ளார்.

*"முப்பது கோடி ஜனங்களின் சங்கம்*
*முழுமைக்கும் பொதுவுடமை*
*ஒப்பிலாத சமுதாயம்*
*உலகத்திற் கொரு புதுமை"*

என்றும்,

*"எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்*
*எல்லாரும் இந்திய மக்கள்"*

என்றும், பாரதி மேலும் நாட்டின், நாட்டு மக்களின் ஒற்றுமைஙய எடுத்துக் கூறுகிறார்.

*"ஒற்றுமை வழி யொன்றே வழியென்பது*
*ஓர்ந்திட்டோம் – நன்கு – தேர்ந்திட்டோம்"*

என்று ஒற்றுமையை உறுதிப்படுத்தி அது ஒன்றே வழி என்று பாரதி வலுவாக எடுத்துக் கூறுகிறார்.

இவ்வாறு பல்வேறு துறைகளில் நாட்டு மக்களின், ஒற்றுமையை வலியுறுத்தி பாரதி ஒற்றுமையே வலிமையாம் என்று புதிய ஆத்திசூடியிலும் எடுத்துக் காட்டுகிறார்.

## 11. ஓய்தலொழி

ஓய்தல் இல்லை, ஒரு வேலையை எடுத்தால் அதைக் கண்ணும் கருத்துமாக இருந்து நிறைவேற்றி முடிக்க வேண்டும் அதுவே பாரதி வழி.

*"அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி*
*அகத்திலே அன்பின் வெள்ளம்*
*பொறிகளின் மீது தனியரசாணை*
*பொழுதெலாம் நினது பேரருளின்*
*நெறியிலே நாட்டம், கருமயோகத்தில்*
*நிலைத்திடல் என்றவை அருளால்"*

என்று பாரதி கூறும் கருமயோகமே 'ஓய்தலொழி' என்பதாகும். ஓய்தலை ஒழித்து இடைவிடாமல் வேலை செய். இடைவிடாது தொழில் செய் என்பதே பாரதியின் வழியாகும்.

நமக்குத் தொழில் கவிதை. நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்பது பாரதியின் வாக்கு. சோர்வு இல்லை, ஓய்தல் இல்லை என்று பல பாடல்களிலும் பாரதி வலியுறுத்திக் கூறுகிறார்.

பாரதி காலம் நாடு அடிமைப்பட்டிருந்த காலம். எனவே நாடு விடுதலை அடையும் வரை ஓயுதல் இல்லை என்று பாரதி கூறினார். நாடு விடுதலை பெற்ற பின்னர், நாடு சகல துறைகளிலும் முன்னேற்றம், வளர்ச்சி மேம்பாடு காண வேண்டும். அதற்காக இடைவிடாது ஓயுதல் இன்றி நாம் பணியாற்ற வேண்டும்.

பள்ளிப் பருவததில் நாம் இடைவிடாமல் படிக்க வேண்டும். அறிவைப் பெற வேண்டும் உடலைப் பேண வேண்டும். அதற்காக ஓயுதல் இன்றி நாம் பாடுபட வேண்டும்.

இயற்கை இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கிறது. இயற்கையில் காணும் அத்தனை பொருள்களும் இடைவிடாது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இடைவிடாது வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன.

மனிதனும் இடைவிமாமல் ஒய்வு ஒழிவின்றி வேலை செய்ய வேண்டும், தொழில் செய்ய வேண்டும், தொழில் செய்ய வேண்டும் என்பது பாரதி வழி.

*"ஓயுதல் செய்யோம்*
*தலை சாயுதல் செய்யோம்"*

என்று பாரதி கூறுகிறார். ஓயுதல் இல்லை, தலைசாயுதலும் இல்லை, எந்நேரமும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்கிறார்.

சோர்வைப் போக்க வேண்டும். சோம்பலைப் போக்க வேண்டும். எந்த நேரமும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். என்பதற்கே பாரதி ஒய்தலோழி என்று கூறியுள்ளார் என்பதை உணர்க. "ஓடிவிளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்பதை மறக்காதே.

## 12. ஔடதம் குறை

ஔடதம் என்றால் மருந்து. ஔடதம் குறை என்றால் மருந்துகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று பொருளாகும்.

மனித வாழ்க்கைக்கு உடல் ஆரோக்கியம் அவசியமாகும். உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க நல்ல உணவும், நல்ல தண்ணீரும், நல்ல காற்றும், உடற் பயிற்சியும், மனப்பயிற்சியும் தேவை. சிறு சிறு ஆரோக்கியக் குறைவுகளுக் கெல்லாம் கண்ட கண்ட மருந்துகளைச் சாப்பிடுவது நல்லதல்ல.

நமது ஆகாரத்திலேயே நாம் உட்கொள்ளும் காய்கறிகள், மிளகு, சீரகம், வெள்ளைப் பூண்டு, வெங்காயம், சுக்கு, இஞ்சி, மஞ்சள் முதலிய பொருள்களும் கீரை வகைகளும் சிறந்த

மருந்துவப் பொருள்களாகும். அவையே பெரும்பாலான சிறுநோய்களை சிறு உபாதைகளைத் தடுக்கும் சக்தி கொண்டவை. அதற்குமேல் அதிகமாக செயற்கை மருந்துளைத் தேடுவது நல்லதல்ல. கூடுமான அளவில் மருந்துகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்று ஒரு பழமொழியும் உண்டு.

*"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய*
*தற்றது போற்றி யுணின்"*

என்பது வள்ளுவர் வாக்கு.

நாம் முன்பு அருந்திய உணவு முழுமையாக செரித்த பின்னர், தக்க அளவில் மீண்டும் உணவு எடுத்துக் கொண்டால் மருந்தே தேவைப்படாது என்பது அக்குறளின் பொருளாகும்.

வயிற்றில் பாதி உணவு, மறுபாதியில் பாதி தண்ணீர், மீதம் காற்று என்று இருந்தால் நோயும் வராது, மருந்தும் வேண்டுவதில்லை என்று வள்ளலார் கூறுகிறார்.

அதனால் தான் நல்ல உணவு நல்ல தண்ணீர், போதுமான அளவு தேவையான அளவில் சாப்பிட வேண்டும் என்பது அவசியம். நாம் துறவிகள் அல்ல. செயலூக்கத்துடன் செயல்பட வேண்டியவர்கள். ஓயாமல் தொழில் செய்ய வேண்டியவர்கள். எந்த வேலை செய்தாலும் அந்தந்த வேலைகளைச் செய்வதற்கு போதுமான உடல்வலிமை வேண்டும். மனவலிமை வேண்டும். அதற்குத் தேவையான உணவும் பயிற்சியும் அவசியமாகும், அதே சமயத்தில் நமது உடல் ஆரேதக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும். நோய்கள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி நோய் வந்தாலும் அதை எதிர்த்து எதிர்ப்பு சக்தியை நமது உடலில் உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

நமது உடம்பு, இயற்கையின் பகுதி. அது பஞ்சபூத சக்திகளின் பல்வேறுபட்ட சேர்க்கையினால் ஆனது. அந்த சேர்க்கையின் சமநிலை வேறுபாட்டினால், மாற்றங்களினால்

நோய்கள் வருகின்றன. உபாதைகள் ஏற்படுகின்றன என்று நமது நாட்டு வைத்தியமுறை கூறுகிறது. அதற்கு மாற்றாக உடல் அமைப்பைச் சமப்படுத்திச் சீராக்க மருந்துகள் கொடுப்படுகின்றன. மருந்துகள் நமது நாட்டு தட்பவெப்பநிலை, நமது உடலமைப்புகள் ஆகியவைகளுக்கேற்ப, இயற்கையோடும் நமது உணவு முறைகளுடனும் இணைந்து மருந்துகள் நோய்களுக்கேற்ற வகையில் கொடுப்பது நல்ல.

நோய்களைக் கண்டறிவதற்கு அந்தந்த நோய்க்கான காரணங்களையும் மூலக்கூறுகளையும் ஆராய்ந்து அந்த நோயைக் களைவதற்கு மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

*"நோய்நாடி நோய் முதல் நாடி, அது தணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்ப செயல்"*

என்பது வள்ளுவர் வாக்காகும். நோய் இன்னது என்று அறிந்து அந்த நோய்க்கான மூல காரணத்தை அறிந்து அந்த நோயைத் தணிப்பதற்கான வழியை அறிந்து அதற்கேற்றபடி அந்த நோயைத் தீர்க்க வழிகாண வேண்டும் என்பது அதன் கருத்தாகும்.

நவீன மருத்துவ முறைகளில் பல சிறந்த ஆய்வுகள் மூலம் ஆய்வுக்கூடங்கள் மூலம், கருவிகள், உபகரணங்கள் மூலமும் நோய்களும், நோய் மூலங்களும் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கான மருந்துகளும் கொடுக்கப்படுகின்றன.

வந்த நோய்களை நிறுத்துவதற்கு, தீர்ப்பதற்கு மருந்துகள் கொடுப்பதும் அத்துடன் நோய்கள் வராமல் தடுப்பதும் அவசியமாகும். அதுவே மேலான வழியுமாகும். உடலையும், வீட்டையும், ஊரையும், தெருவையும் நாட்டையைம் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் உண்ணும் உணவும், பருகும் நீரும், காற்றும் சுத்தமாக இருக்கவும் நாம் இடைவிடாமல் முயற்சிக்க வேண்டும். பாரதியின் ஔடதம் குறை என்பது அவ்வாறான நோய்களைத் தடுக்கும் முறைகளை ஊக்குவிப்பதாகும். இயற்கையோடு

இணைந்து நமது வாழ்க்கை முறைகளைச் சீராக்கினால், சமப்படுத்தினால் நோய்கள் குறையும் மருந்தின் தேவைகள் குறையும்.

உடல் ஆரோக்கியத்தைப் பெருக்கி, நோய்களை வருமுன் தடுத்து, நோய்களைத் தாங்கி முறிக்கும் சக்தியை உடலில் வளர்த்து உடலைப் பாதுகாப்பது அவசியம். அதற்கு ஔடதம் குறை என்பது நல்ல மருந்தும் மந்திரமுமாகும்.

## 13. கற்றதொழுகு

நன்றாகக் கற்க வேண்டும். கற்றபின் கற்றபடி நடக்க வேண்டும். அதுவே கற்றதொழுகு என்பதன் பொருள்.

*"கற்க கசடற கற்பவை கற்றபின்*

*நிற்க அதற்குத் தக."*

என்பது வள்ளுவர் வாக்கு.

நன்றாகக் கற்க வேண்டும். கற்க வேண்டியவைகளை எல்லாம் நன்றாகக் கற்க வேண்டும். குறை நீங்கிக் கற்க வேண்டும். கற்க வேண்டியவைகளை எல்லாம் குறைவறக்கற்ற பின் அந்தக் கல்விக் கேற்றபடி நடந்து கொள்ள வேண்டும் என்பது குறள் வழி.

ஆயினும் கல்வி கற்பதற்கு காலமும் காலவரம்பும் இல்லை. கல்வி என்பது பெருங்கடல். அறிவு என்பது அனந்த வடிவானது. எனவே கல்வி கற்பது இடைவிடாத செயல்பாடும் இருப்பினும் குறிப்பிட்ட பருவத்தில் அடிப்படைக் கல்வியை முற்றாகப் படிக்க வேண்டும். மனித வாழ்க்கையை நான்கு பருவங்களாக நமது நாட்டு அறிஞர்கள் பிரித்திருக்கிறார்கள். அவை மாணவப்பருவம் (பிரம்மச்சர்யம்), இல்லறம்(கிரஹஸ்தம்), வானப்பிரஸ்தம் (ஒய்வு நிலை), துறவு நிலை (சந்நியாசம்), இதில் முதல் பருவமான மாணவப் பருவத்தில் (பிரம்மச்சர்யம்) அடிப்படைக் கல்வியைக் கற்க வேண்டும். கற்று முடிக்க வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை கல்வியையும் அந்தப் பருவத்தில் கற்று முடிக்க வேண்டும். கல்வியின் சிறப்பை கல்வியின் அவசியத்தை பாரதி பல முறை தனது நூல்களில் அழுத்தமாகக் குறிப்பிடுகிறார்.

*"பள்ளித்தல மனைத்தும் கோயில் செய்குவோம்"*

என்று பள்ளிகளை எல்லாம், கல்விக்கூடங்களை எல்லாம் புனிதமான கோயில்களைப் போல் பாராட்டிப் பாதுகாக்க வேண்டும் என்று பாரதி கூறும் போது கல்விக்கும், கல்வி கற்றலுக்கும், கல்வி நிலையங்களுக்கும், கல்விக் கூடங்களுக்கும் பாரதி அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பது தெளிவாகும்.

கல்வி சிறந்த தமிழ்நாடு என்று தமிழ்நாட்டைப் பாரதி பாராட்டுகிறார். ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம் என்றும் கூறியதும் தமிழ்த்தாயாகும்.

"தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வோம் இந்த நாட்டிலே" என்று, "வாழி கல்விச்செல்வம் எய்தி மனமகிழ்ந்து கூடியே" என்று அதில் கல்விஞானம், கல்விச் செல்வம் என்றெல்லாம் விடுதலைப்பாட்டில் பாரதி குறிப்பிடுகிறார்.

"கல்வியைப் போல அறிவும், அறிவினைப் போல கருணையும், அக்கருணையைப் போல பலவித ஊக்கங்களும், செய்யும் திறனும்" பெற வேண்டும் என்பது பாரதியின் நோக்கு. அது கற்றதொழுகினால் தான் நிறைவேறும்.

*"கல்வியென்னும் வலிமை கொண்ட*
*கோட்டை கட்டினான் – நல்ல*
*கருத்தினால் அதனைச் சூழ்ந்தோர்*
*அகழி வெட்டினான்"*

என்று திலகரைப் பற்றி பாரதி பாடுகிறார்.

கல்வி கற்பதோடு நிறுத்தி விடக்கூடாது. அதைக் கருத்தில் பதிய வைப்பது முக்கியம். அது கோட்டைக்கு அகழிபோல் அமையும் என்பது பாரதியின் எடுத்துக்காட்டு.

கல்வி கற்றதன் பயன் அதன் படி நடத்தலாகும். அதையே பாரதி பல முறை வற்புறுத்திக் கூறியுள்ளார். கற்றதொழுகு என்னும் சொல்லின் பொருளை மனதில் கொள்வோம்.

## 14. காலம் அழியேல்

காலத்தை வீணாக்காதே! காலத்தைப் போற்று என பாரதி வலியுறுத்திக் கூறுகிறார். ஒரு தனிமனிதனுடைய வாழ்வு மிகவும் குறுகிய காலமேயாகும். நூறாண்டுகள் என்று பொதுவாக அக்காலத்தில் மனித வாழ்க்கையைக் கணக்கிட்டார்கள். இருப்பினும், மிகப் பெரும்பாலும் யாரும் நூறாண்டுகள் இருப்பதில்லை. அறுபதுக்குமேல் போய்விட்டாலே கிழப்பருவம் எட்டிவிடுகிறது. வேலையிலிருந்து ஓய்வு கொடுத்து விடுகிறார்கள். முதியோர் என்று பிரிவில் சேர்க்கப்பட்டு விடுகிறார்கள். சற்று வசதியானவர்கள் கூட அறுபதாம் கல்யாணம் நடத்தி மரியாதையுடன் ஒதுக்கி விடுகிறார்கள். பிறந்தது முதல் சுமார் இருபது ஆண்டுகள் வரை இளமைப்பருவம், மாணவப்பருவம், வாழ்க்கையில் பாதி நேரம் தூக்கத்திலும் மற்ற பாதியில் சாப்பிடவும் நண்பர்கள், மனைவி, மக்களுடன் கலந்திருக்கவும், நேரம் கழிந்து விடுகிறது. பாக்கியுள்ள நேரத்திலும் பசி, பிணி, நோய் நொடியில்லாமல் இருந்தால் நல்லது. எனவே இத்தனைக்கும் இடையில் கிடைத்த நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவழிக்க வேண்டும்.

எடுத்த காரியம் எதையும் காலத்தில் தொடங்க வேண்டும். காலத்தில் முடிக்க வேண்டும். இமைப்பொழுதையும் வீணாக்கக்கூடாது. காலம் போனால் திரும்பி வராது. எனவே இருக்கும் காலத்தில் ஒவ்வொருவரும் தனது வீட்டிற்கும், நாட்டிற்கும், உலகத்திற்கும் நல்லது செய்ய வேண்டும். அதற்காகக் காலத்தைக் காக்க வேண்டும். காலத்தைப் பேண வேண்டும். போற்ற வேண்டும். காலத்தை வீணாக்கக் கூடாது. வீணாகக் கழிக்கச் கூடாது. உரிய காலத்தில் எதையும் செய்ய வேண்டும். செய்து முடிக்க வேண்டும். எனவே தான் காலத்தை அழியேல் என பாரதி கூறியுள்ளார். அதை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

## 15. கிளை பல தாங்கேல்

ஒரு மரத்தில் அளவுக்கு மீறி அதிகமான கிளைகள் இருந்தால் ஒரு பலமான காற்று அடித்தால் மரத்தின் கிளைகள் முறிந்து விடும். அல்லது மரமே சாய்ந்தாலும் சாய்ந்து விடும்.

சமுதாயச் சொல்லில் கிளை என்றால் உற்றார் உறவினர், தாயாதி, சுற்றம், குடும்பம் என்பதாகும். ஒரு தனிமனிதனோ அல்லது ஒரு குடும்பமோ எண்ணிக்கையில் பலரையும் பல குடும்பங்களையும் தாங்கி நிற்பது சுமந்து நிற்பது நல்லதல்ல. அளவுக்கு அதிகமாக குழந்தைகளைப் பெறுவதை பாரதி ஏற்கவில்லை.

“ஒருவர் கோட்டையில் அரசு அலுவலகத்தில் வேலை பார்த்தார். அந்தக் காலத்தில் மிகவும் குறைவான சம்பளம் தான். நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை அரை ரூபாய் சம்பள உயர்வும், வீட்டில் இரண்டு குழந்தைகளும் அதிகரித்து புரமோஷன் ஆகும்” என்று ஒரு கதையில் பாரதி கிண்டலாகக் குறிப்பிடுகிறார்.

அளவோடு பெற்று வளமோடு வாழ வேண்டும் என்பது இன்றைய புதுமொழியாகக் கூறப்படுகிறது.

சிலருக்கு சுற்றும் சூழ அவரைச் சுற்றிக் கொண்டு சுமையாக அளவுக்கு மீறிய சுமையாக அழுத்துவார்கள். அது தாங்காது நமது சொந்தக் குழந்தைகள் ஆனாலும் உரிய வயது வந்துவிட்டால், அவரவர் பொறுப்புகளை ஏற்க வேண்டும். இல்லவிட்டால் , குடும்பங்கள் நலிந்து போகும்.

இவைகளைக் கருத்தில் கொண்டே பாரதி கிளை பல தாங்கேல் என்று கூறியுள்ளார்.

## 16. கீழோர்க்கஞ்சேல்

கீழோர் என்றால் கீழ்த்தரமான, கேடு கெட்ட குணமுடையவர்கள், மோசமான நடத்தையுள்ளவர்கள் என்று பொருளாகும். வயதில் குறைந்தவர்கள் என்றோ, தனக்குக் கீழ் வேலை பார்ப்பவர்கள் என்றோ, ஏழை எளியவர் என்றோ ஏழ்மையும் வறுமை நிறைந்த கஷ்டமான வாழ்க்கை நிலையில் உள்ளவர் என்றோ பொருளல்ல, சமூகக் கொடுமைகள் மூலம் கீழே தள்ளப்பட்டவர்கள் என்றோ பொருளல்ல.

களவு, பொய், சூது, வஞ்சகம், நம்பிக்கைத் துரோகம், காமம், குடிவெறி முதலிய தீய குணங்கள் கொண்ட பாதகர்கள், சமுதாய விரோதிகள் ஆகியோர்களாகும். அவர்களைக் கண்டு பயப்படக்கூடாது என்பதையே பாரதி பல இடங்களிலும் தனது கவிதைகளில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

*"பாதகம் செய்வரைக் காண்டால் – நாம்*
*பயங் கொள்ளலாகாது பாப்பா,*
*மோதி மிதித்து விடு பாப்பா – அவர்*
*முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா."*

என்று பாப்பா பாட்டில் பாரதி பாடுகிறார்.

பாதகர்களை நாம் பார்க்கும் போது அவர்களைக் கண்டு பயம் கொள்ளக் கூடாது. அவர்களை எதிர்த்து மோதி விரட்ட வேண்டும். அவர்களுடைய முகத்தில் காரி உமிழ்ந்து விரட்டியடித்து விட வேண்டும் என்னும் வீரத்தை பாரதி குழந்தைகளுக்குப் போதிக்கிறார்.

அதையே தீயோர்க்கஞ்சேல் என்று புதிய ஆத்திசூடியில் குறிப்பிடுகிறார்.

ஏய்ப்போர், பொய்யர், ஏமாற்றுவோர், நயவஞ்சகர், கொடும்பாவிகள் முதலிய கூட்டத்தை விரட்டியடிக்க வேண்டும் என்று பாரதி பள்ளுப்பாட்டு பாடுகிறார்.

*"வஞ்சகர், தீயர், மனிதரை வருத்துவோர்*
*நெஞ்சகத்தருக்குடை நீசர்கள் இன்னோரை*
*வெம்மையோ டொருத்தல் வீரர்தம் செயலாம்"*

என்று பாரதி குறிப்பிடுகிறார்.

பொய், சூது, தீமைகளில் ஈடுபட்டு, சமயமுளபடிக்கெல்லாம் பொய்கூறி, அறம் கொன்று, சதிகள் செய்வோர் சரிந்திட வேண்டும் என்று வேகம் கொண்டு பாரதி பாடியுள்ளார்.

*"வில்லினை எடடா – கையில்*
*வில்லினை எடடா – அந்தப்*
*புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா"*

என்று பாரதி வில்லினை எடுத்து புல்லியர் (கீழோர்) கூட்டத்தை ஒழித்துக் கட்டுமாறு கண்ணன் பார்த்தனுக்குக் கூறுவதாக நமக்கு எடுத்துக் கூறுகிறார்.

பாஞ்சாலி சபதத்தில் பாரதி : சூதில் பணயமான பாஞ்சாலியை துச்சாதனன் அத்தினாபுரத்துக் தெரு வழியே இழுத்துக் கொண்டு வந்த போது அந்தக் கீழோன் செய்த செய்கையைக் கண்டு சீறி, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மக்களைப் பார்த்து சாடுகிறார்.

அன்னை பாஞ்சாலியை இழுத்துக் கொண்டு வரும் விலங்கைப் போன்ற இளவரசனைப் பிடித்து அவனை மிதித்து தராதலத்தில் போக்கி பாஞ்சாலியையும் விடுவித்து அவளை அந்தப்புறத்திலே சேர்க்காமல் நெட்டை மரங்கள் என நின்றார்கள். பெட்டைப் புலம்பல் புலம்பினர் என்று பாரதி கோபத்தோடு கூறுகிறார்.

இதை நினைத்தும், விடுதலைப் போராட்டத்தையும் மனதில் கொண்டும் பாரதி தனது புதிய ஆத்திசூடியில் "கீழோர்க்கஞ்சேல்" என்று வருங்காலத்தின் புதிய தலைமுறையைக் கேட்டுக் சொள்கிறார்.

## 17. குன்றென நிமிர்ந்து நில்

நிமிர்ந்து நில். குன்றென நிமிர்ந்து நில். உறுதி குலையாது நிமிர்ந்து நில். எதற்கும் அஞ்சாது நிமிர்ந்து நில். ஆண்மையுடன் நிமிர்ந்து நில். ஏறு போல் நிமிர்ந்து நட என்றெல்லாம் பாரதி கூறுகிறார். இவை பாரதிக்கே உரிய தனிச்சிறப்பான சொற்களாகும்.

குன்று எதற்கும் அஞ்சாது. அசையாது. இடி, மழை, பேய்க்காற்று முதலிய எதற்கும் அஞ்சாமல், அசையாமல் எத்தனை

தாக்குதல் வந்தாலும் நிமிர்ந்து நிற்கும். எதற்கும் அஞ்சாது துணிவுடன் நிமிர்ந்து நிற்பதற்கு குன்றுபோல் நின்றான் என்பது உவமையாகும்.

*"தொல்லை இகழ்ச்சிகள் தீர – இந்தத்*
*தொண்டு நிலைமையைத்*
*தூரவென்று தள்ளி"*

குன்றென நிமிர்ந்து நிற்கும்படி பாரதி நமக்குக் கட்டளையிடுகிறார்.

பயத்தைக் கொன்று, பகையை வென்று, குன்றென நிமிர்ந்து நிற்கக் கூறுகிறார் பாரதி.

நெஞ்சில் உறமின்றி, நேர்மைத் திறமின்றி, அச்சமும் பேடிமையும், அடிமைச் சிறுமதியும், கொண்டு கூனிக்குறுகி, குனிந்து நிற்பது அடிமைத்தனமாகும். இதை பாரதி வெறுத்தார். அத்தகைய இழிநிலையை நீக்கி குன்றென் நிமிந்து நிற்கும்படி கூறுகிறார் பாரதி.

அநீதிகளையும், கொடுமைகளையும் எதிர்த்து தருமம், சத்தியம், சுதந்திரம், அறிவு, என்பவைகளைப் போற்றிட குன்றென நிமிர்ந்து நிற்கக் கூறுகிறர் பாரதி.

## 18. கூடித் தொழில் செய்

பாரதியின் புதிய ஆத்திசூடி 'கூடித் தொழில் செய்' என்பது ஒரு சிறந்த செய்யுளாகும். சாதாரணமாக அதைப் படிக்கும் போது சேர்ந்து தொழில் செய்ய வேண்டும் என்று பொருள்படும். ஆனால் சற்று ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கும் போது அதனுடைய விரிவான தத்துவப் பொருள் தெளிவாக விளக்கும்.

மனிதன் பொதுவாக சேர்ந்தே தொழில் செய்கிறான். மனிதன் தனியாக இருக்கிறான். வேலை செய்கிறான்.

படிக்கிறான். எழுதுகிறான் என்று கூறினாலும் மற்றவர்களுடன் எந்தவிதமான தொடர்பும் இன்றி தனிமைப்பட்டு இருப்பதில்லை, இருக்கவும் முடியாது.

மனிதன் ஒரு சமுதாயப் பிராணி. மனிதகுலம் தோன்றிய காலம் தொட்டு கூட்டம் கூட்டமாகவே கூடி வாழ்ந்துள்ளான். காடுகளிலும், மலைகளிலும் மனிதன் காட்டுமிராண்டி நிலையில் வாழ்ந்த காலத்தில் இருந்து இன்று உலகம் முழுவதுமே மிகவும் நெருங்கிவிட்ட காலம் வரை மனித வாழ்க்கை கூட்டு வாழ்க்கையேயாகும். கூட்டு வாழ்க்கை நடைபெறக் கூட்டாகவே மனிதன் வேலை செய்து வந்திருக்கிறான். தொழில் செய்து வந்திருக்கிறான்.

குடும்பம், குழுக்கள், இனக்குழுக்கள், இனக்கூட்டங்கள், ஊர், நாடு, நகரம், தேசிய இனம், தேசம், உலகம் என்னும் வகையில் கூட்டுச் சமுதாயமாகவே மனித வாழ்க்கை அமைந்து வளர்ந்து வந்திருக்கிறது, சமுதாய உழைப்பு சமுதாய உற்பத்தி சமுதாய வாழ்க்கை இதுவே மனிதகுல அமைப்பாகும்.

இன்று மனித சமுதாய அமைப்பின் அடிப்படை அங்கக்கூறு குடும்பமாகும். அதிலிருந்து இனக்குழு, இனக்கூட்டம், ஊர், நாடு, நகரம், தேசிப இனம், மொழி வழி அமைப்பு, தேசம் உலகம் வரை சமுதாயப் பிரிவுகள் சேர்ந்தும் இணைந்தும், முரண்பட்டும் மோதியும் வளர்ந்து வந்துள்ளன.

தனிமனிதனுக்கும் சரி, குடும்பம் முதல் உலகம் வரையிலுமான மனித சமுதாயப் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாகவும் கூட்டாகவும், தனிநலன்களும் பொது நலன்களும், தனித்தமைகளும் பொதுத் தன்மைகளும் இருக்கின்றன. இவைகள் தங்கள் நலன்களில் இணைய வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும். ஒற்றுமையில் தனித்தன்மையும் பொதுத் தன்மையும் காண் வேண்டும்.

இயற்கையிலும் இந்த தனித்தன்மையும் பொதுத் தன்மையும் இணைந்து காணப்படுவதைப் பார்க்கலாம். மனித சமுதாய அமைப்பிலும் அதன் சாயலைக் காண்கிறோம். அத்தகைய இரு தன்மைகளும் இயற்கையிலும் சரி, சமுதாயத்திலும் சரி ஒன்றுபட்டும், முரண்பட்டும் அதே சமயத்தில் சேர்ந்தும் இணைந்தும் இருக்கின்றன. செயல்படுகின்றன, மனிதனும் சமுதாயத்தில் சேர்ந்தும் இணைந்தும் கூடித்தொழில் செய்கிறான். வேலை செய்கிறான். வாழ்க்கை நடத்துகிறான்.

பாரதியும் "காக்கை குருவி எங்கள் சாதி – நீள்கடலும் மலையும் எங்கள் கூட்டம்" என்றும், "முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுதுக்கும் பொதுவுடமை" என்றும் பாடுகிறார்.

எனவே மனிதன் ஒரு சமுதாயப் பிராணி என்னும் முறையில் இயற்கை சக்திகளுடன் மட்டுமல்லாமல் சமுதாயக் கூறுகளுடனும் இணைந்தும் இசைந்தும் வாழ்கிறான், வாழ வேண்டும், அதேபோல மனித சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவும் இதர பிரிவுகளுடன் ஒன்றுபட்டும் முரண்பட்டும் இருந்தாலும் இணைந்தும் இசைந்தும் வாழ்கின்றன. வாழவேண்டும். இல்லாவிட்டால் சேதங்கள் ஏற்படுகின்றன.

தனிமனிதன், குடும்பம், ஊர், தேசிய இனம், தேசம் மற்றும் இதர மனித சமுதாய அமைப்புகள் பிரிவுகள், ஆகியவை உள்ளும் புறமும் இணக்கமும் இசைவும் இல்லாமல் முரண்பாடுகள் மட்டும் முற்றும் போது சண்டைகளும், மோதல்களும், போர்களும், படுகொலைகளும் ஏற்பட்டு சேதங்கள் விளைகின்றன. அத்தகைய சேதங்களைத் தவிர்க்க அவைகளுக்கு இடையில் இணக்கமும் இசைவும் அவசியம். இதை பல அறிஞர்களும் ஆதிகாலம் முதல் கூறி வந்துள்ளார்கள்.

ஆதிமனிதன், தானும் தனது குழுவும் உயிர் வாழ்வதற்கு அவசியமான உணவுப் பொருள்களைச் சேகரிப்பதற்கும், விலங்குகள், பறவைகள் முதலியவற்றில் இருந்து வரும் அபாயங்களில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கும் கூட்டாகச் சேர்ந்தே தங்கள் பணிகளை ஆற்றி வந்திருக்கிறார்கள்.

பின்னர் மனிதக்குழுக்கள் கூட்டு முயற்சிகள் எடுத்தே உற்பத்திக் கருவிகளை உண்டாக்கியும் அவைகளைப் பயன்படுத்தியும் தங்களுக்குத் தேவையான பொருள்களை உண்டாக்கிக் கொண்டார்கள். நமது நாட்டில் குடும்ப அமைப்பே கூடித் தொழில் செய்யும் உற்பத்தியைப் பயன்படுத்தும் அமைப்பாக இருந்து வருகிறது.

மனிதன் தனது கூட்டு முயற்சியால் பல விலங்குகளைக் கட்டுப்படுத்தியும் பழக்கியும், அவைகளைத் தனக்கும் தனது உழைப்பிற்கும் உதவியாகப் பயன்படுத்திக் கொண்டான். ஆடு மாடுகளை மந்தை மந்தையாகப் பெருக்கி அவைகளிலிருந்து பால், இறைச்சி தோல், உரோமம் முதலியவைகளைப் பெற்று அவைகளைத் தங்கள் வாழ்க்கை வளர்ச்சிக்கு உட்படுத்திக் கொண்டார்கள். ஆடு மாடுகள் தவிர குதிரை, கழுதை, யானை, ஒட்டகம், பன்றி, நாய் முதலிய விலங்குகளையும் பழக்கி தனது உழைப்புக்குப் பயன்படுத்திக் கொண்டான்.

மனிதன் கூட்டாகவே முயற்சி செய்து ஏராளமான நிலப்பரப்புகளை சாகுபடிக்குக் கொண்டு வந்து விவசாயத் தொழிலை வளர்த்தான். விவசாயத்திற்கு அவசியமான பல நீர்ப்பாசன நிலைகளை உருவாக்கினான். பெரிய ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், கல்வாய்களை, கிணறுகளை, கூட்டுமுயற்சியால் வெட்டி சமுதாயத்திற்குப் பயன்படுத்திக் கொண்டான்.

மனிதன் தனது கூட்டு முயற்சியால் வீடுகளைக் கட்டினான், ஊர்களை, நகரங்களை உண்டாக்கினான். கோவில்களையும் கலைக்கூடங்களையும் நிர்மாணித்தான். சாலைகளை அமைத்தான். நீர்நிலைகளை நிர்மாணித்தான். கல்வி நிலையங்களை உண்டாக்கினான். பல தொழில்களை, எண்ணற்ற பல தொழிற் கூடங்களையும் உண்டாக்கினான்.

மனிதன் தனது கூட்டு முயற்சியால் தனக்குத் தேவையான உணவு, உடை, வீடு, கல்வி, பொழுது போக்குச் சாதனங்கள், விளையாட்டு வசதிகள் முதலியவைகளை உண்டாக்கிக் கொண்டான்.

மனிதன் தனது தேவைகளுகாக இயற்கை சக்திளையும் அவைகள் மூலம் கிடைக்கும் ஆற்றல்களையும் கூட்டு முயற்சியால் பயன்படுத்திக் கொண்டான், மனிதன் தனது கூட்டு முயற்சியால் நீராவி சக்தி, இயற்கை வாயு, எண்ணை எரிபொருள் சக்தி, வெப்பசக்தி, மின்சார சக்தி, காற்று சக்தி, கடல் அலை சக்தி, அணுசக்தி முதலியவைகளைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டான்.

மனிதன் தனது கூட்டு முயற்சியால் உலோகங்களை உருக்கி உழைப்பிற்கான கருவிகளையும் பலவகை எந்திரங்களையும் தொழிற்சாலைகளையும் உருவாக்கிக் கொண்டான். இன்று மனிதன் தனது கூட்டு உழைப்பால் பெருமளவில் வாழ்க்கையிலும், தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும், கல்வித் துறையிலும், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறையிலும் உற்பத்தித் திறனிலும் அறிவு ஆற்றலிலும் முன்னேற்றம் கண்டிருக்கிறான்.

இருப்பினும், மனிதன் உணர்வு பூர்வமாகக் கூடித் தொழில் செய்வதில் பல குறைகளும் பலவீனங்களும் ஏற்பட்டு பாதிப்புகள் வருகின்றன. முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்பட்டு சேதங்கள் உண்டாகின்றன. இவைகளைத் தவிர்த்து கூடித் தொழில் செய்து முன்னேற்றம் காண வேண்டும் என்பது பாரதியின் விருப்பமும், கனவுமாகும்.

நமது ஊர் மக்கள் கூடித் தொழில் செய்து ஊர் முன்னேற வேண்டும். கூடித் தொழில் செய்து நமது மாநிலத்தை முன்னேற்ற வேண்டும். நமது நாட்டை முன்னேற்ற வேண்டும். பல நாட்டு மக்களும் ஒத்துழைத்து கூடித்தொழில் செய்து மனிதகுலத்தை முன்னேற்ற வேண்டும்.

சிறிய பிரச்சனைகளில் இருந்து பெரிய பெரிய பிரச்சனைகள் வரை மனிதன் கூட்டு முயற்சி மூலம் தீர்வு காண வேண்டும். தனிமனிதத் தேவைகளில் இருந்து மனிதகுலம் முழுவதினுடைய தேவைகள் வரை அனைத்திற்கும் மனிதன் தனது கூட்டு முயற்சி மூலம் நிறைவேற்ற வேண்டும்.

நமது ஊரில் விவசாயம், தொழில் முதலியவைகளில் முன்னேற்றம் காண வேண்டும். நீர் நிலைகளைப் பராமரிக்க வேண்டும். மரங்ளை நட வேண்டும். இயற்கைச் சூழலை சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும். தெருக்களை சாலைகளைப் பராமரிக்க வேண்டும். கல்வி நிலையங்களைப் பராமரிக் வேண்டும். ஊரில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கிடைக்க வேண்டும். நமது ஊரில் சுகாதாரம், குடிநீர், வைத்திய வசதிகளைப் பராமரிக்க வேண்டும். இவ்வாறாக ஊர்மக்களின் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்குமாக கூட்டு முயற்சி மூலம் கூடித்தொழில் செய்து முன்னேற வேண்டும்.

நமது வட்டாரத்தில் நமது மாவட்டத்தில், நமது மாநிலத்தில், நமது நாட்டில் இவ்வாறு மனித தேவைகள் சமுதாய தேவைகள் நிறைவுபடக் கூட்டான முறையில் திட்டமிடவும் தொழில் செய்து முன்னேற்றம் காணவும் வேண்டும் என்பது பாரதியின் வழியாகும்.

நமது நாட்டில் இப்போதெல்லாம். மத்திய அரசு அமைப்புகள் மற்றும் மாநில அரசு அமைப்புகளுக்கு இடையில் ஒத்துழைப்பும் கூட்டு முயற்சிகளும் அதிகம் தேவைப்படுகின்றன. நமது நாட்டு வளங்களைச் சீராகப் பயன்படுத்துதல், திட்டமிடுதல், போக்குவரத்து சாதனங்களை அபிவிருத்தி செய்தல், நிலநீர்ப் பங்கீடு செய்தல், நீர்ப்பாசனம், மின் உற்பத்தியை அதிகரித்தல், ஏற்றுமதி இறக்குமதி வாணிபம், உள்நாட்டு வாணிபத்தைப் பெருக்குதல், உள்நாட்டு விவசாயம், தொழில், கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம், உயர்கல்வி ஆராய்ச்சி, கலை இலக்கியம் விளையாட்டு முதலிய பல்வேறு துறைகளிலும் கூட்டு முயற்சிகள் அதிகப்பட வேண்டும். அதற்கான வகையில் நாம் கூடித் தொழில் செய்வதை விரிவுப்படுத்த வேண்டும்.

இன்றைய காலத்தில் கூட்டு முயற்சிகளும் கூடித் தொழில் செயவதும் என்பது உள்நாட்டில் மட்டுமல்லாமல் நாடுகளுக்கு இடையிலும் உலக அளவிலும் ஒத்துழைப்புகளும் அதிகப்பட வேண்டும் என்று மேலும் மேலும் அதிகமான அளவில் உணரப்படுகிறது. அந்த முயற்சிகள் நடைமுறையில் அதிகப்பட்டும் விரிவுபட்டும் வருகின்றன.

மன்னராட்சி முறைகள் இருந்த காலத்தில் பல படையெடுப்புகளும், நாடுகளைப் பிடித்தலும் தங்கள் ஆட்சி எலலைகளை விரிவுப்படுத்திக் கொள்வதற்காக நடைபெற்ற பல சண்டைகளும் அதிகமாக இருந்தன. அக்காலத்தில் மக்களிடத்தில் கூடித் தொழில் செய்தல் ஒரு பக்கம் இருந்த போதிலுல், பல போர்களினாலும் ஆக்கிரமிப்புகள் படையெடுப்புகளினாலும் மதப்படுகொலைகளாலும் அரசர்களுடைய கூத்துக்களாலும் பலத்த சேதங்களும் நாசங்களும் அதிகம் ஏற்பட்டன.

மன்னராட்சி முறைகள் மாறி தொழில் புரட்சிகளும், எந்திர வளர்ச்சிகளும் ஏற்பட்ட காலத்தில் புதிய தொழில் வளர்ச்சிகளும் பொருள் உற்பத்திப் பெருக்கமும் சமுதாய வளர்ச்சியும் நாகரிக வளர்ச்சியும் அதிகரித்தது, இருப்பினும் தனியார் முதலாளித்துவ முறையில் சுதந்திரமான வியாபாரப் போட்டியில் வாய்ப்பு அதிகமும் வலுவும் இருந்த நாடுகள். தங்கள் செல்வத்தை மட்டுமல்லாமல் ஆயுத பலத்தையும் பெருக்கிக் கொண்டு மற்ற நாடுகளை அடிமைப்படுத்திய ஏகாதிபத்திய வல்லரசுகள் தோன்றின. இதன் காரணமாக சில ஐரோப்பிய மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெரிய ஏகாதிபத்திய வல்லரசுகளாயின. பெரும்பாலான ஆசிய ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகள் அந்த வல்லரசுகளுக்கு அடிமை நாடுகளாகவும் சார்பு நாடுகளாவும் ஆயின, வல்லரசு நாடுகளின் கொடுமையான சுரண்டல் காரணமாக காலனி, அரைக்காலனி நாடுகள் இந்தியா போன்ற வளமான நாடுகள் கூட ஏழை நாடுகளாகி வறுமை மிஞ்சி இல்லாமையும், கல்லாமையும் அதிகரித்து பின் தங்கி விட்டன.

ஏகாதிபத்திய வல்லரசு நாடுகளுக்கு இடையிலும் போட்டியும் போர்களும் வலுத்து இந்த நூற்றாண்டில் மட்டும் முதல் பாதியில் இரு பெரும் உலகப்போர்கள் ஏற்பட்டு இதன் விளைவாக மிகப் பெரும் அளவில் ஆட்சேதங்களும் பொருட்சேதங்களும், நாசங்களும் விளைந்து உலக வளர்ச்சியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஏகாதிபத்திய வல்லரசுகளின் சுரண்டல் காலனி ஆதிக்கம், போர் வெறி ஆகியவைகளுக்கு எதிராக பல நாடுகளும் புரட்சிகளும் தேச விடுதலைப் போராட்டங்களும் நடந்து படிப்படியாகப் பல நாடுகளும் சுதந்திரம் அடைந்தன. இப்போது அநேகமாக உலகில் உள்ள எல்லா நாடுகளும் சுதந்திர நாடுகளாகி விட்டன. அந்த நாடுகளில் சுதந்திரமாக முன்னேற்றம் கண்பதற்கான முயற்சிகளும் அதிகரித்து வருகின்றன. கூட்டு முயற்சிகளும் பெருகி வருகின்றன.

உலக அளவில் சில முக்கியமான பெரிய வல்லரசுகள் மற்றும் அந்நாடுகளில் உள்ள பெரிய பகாசுர பன்னாட்டு கூட்டு நிறுவனங்களின் பொருளாதார ஆதிக்கமும் அரசியல் சூழ்ச்சிகளும் ஆங்காங்கு நடைபெறும் சில குழப்பங்களும் போர்களும் பல பாதிப்புகளை உண்டாக்கிய போதிலும் உலக அளவில் நாடுகளுக்கு இடையில் கூட்டுறவு ஒத்துழைப்பு, சுதந்திரம், ஜனநாயகம், சமுதாய முன்னேற்றம், உலக சமாதானம், போர் இல்லாத அமைதியான உலகம், படை பலக்குறைப்பு அபாயகரமான ஆயுதங்கள் அழிப்பு, விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி, சமத்துவமான முறையில் பரஸ்பர நலன்களின் அடிப்படையில் நாடுகளுக்கு இடையில் கூட்டு முயற்சி வர்த்தகம் பொருளாதார வளர்ச்சிக்கான ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி நாடுகளுக்கு இடையில் உள்ள பொதுப் பிரச்சனைகளான இயற்கைச் சூழல் பாதுகாப்பு அனைத்து மக்களுக்கும் உணவு, கல்வி, சுகாதாரம், நலவாழ்வு ஆகியவற்றை உத்தரவாதப் படுத்துதல் முதலிய பல துறைகளிலும் கூட்டு முயற்சிகளும் கூடிப் பணியாற்றுவதும் அதிகரித்து வருகிறது, இதில் மேலும் அபிவிருத்தி காண முயற்சிக்க வேண்டும்.

அன்னிய ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்பட்டு சிறுமைப்பட்டு இருந்த பாரத நாடு பல துறைகளிலும் வாய்ப்புகள் இழந்து பின் தங்கி இருந்த காலத்தில் பாரதி கூடித் தொழில் செய் என நமது குழந்தைகளுக்குப் போதித்தார். இன்று அந்த போதனை இன்னும் அதிகமான அளவில் விரிவான அளவில், மிகவும் பொருத்தமாகவே உள்ளது.

ஊர் அளவிலிருந்து உலக அளவில் வரையிலும் கூடித் தொழில் செய்ய வேண்டிய அவசியம் அதற்கான வாய்ப்புகள் இப்போது அதிகரித்துள்ளன, மேலும் அதிகரித்து வருகின்றன.

நமது நாட்டின் வளர்ச்சிக்கும் மனிதகுல மேம்பாட்டிற்கும் இத்துறையில் பாரதியின் போதனை நம்மை மேலும் ஊக்குவிக்கட்டும். உலகுக்கு வழி காட்டட்டும்.

## 19. கெடுப்பது சோர்வு

சோர்வு நம்மைக் கெடுத்து விடும். எப்போதும் உற்சாகத்துடனும் செயல் ஊக்கத்துடனும் இருக்க வேண்டும். "நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்பது பாரதியின் புகழ்மிக்க வாசகங்களாகும். "துன்பம் நெருங்கிவந்த போதும் நாம் சோர்ந்து விடலாகாது பாப்பா" என்றும் "சோர்வுகள் போகும் – பொய்ச் சுகத்தினைத் தள்ளிச் சுகம் பெறலாகும்" என்றும் பாரதி பாடுகிறார்.

உலகம் சதா இயங்கிக் கொண்டிருக்கிறது. இயற்கை இடைவிடாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பேருலகில் உள்ள அனைத்துப் பொருட்களும் இடைவிடாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. வளர்ச்சியடைந்துக் கொண்டே இருக்கின்றன. அதற்கு சோர்வில்லை. அந்த இயற்கையின் பகுதியாக உள்ள மனிதனும் சதா இயங்கிக் கொண்டிருக்க வேண்டும் செயல்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

சோர்வு நமது செயல்பாட்டைக் கெடுத்துவிடும். நாம் செய்யும் வேலைகளில் வெற்றி கிடைத்தால் நாம் உற்சாகம் அடைகிறோம். தோல்விகள் ஏற்பட்டால் சோர்வுகள் அடைகிறோம், அந்தச் சோர்வுகளால் நமது தோல்விகள் அதிகரிக்கத்தான் செய்யும். ஆகையால் சோர்வு கூடாது தோல்விகளைக் கண்டும் நாம் துவண்டு விடக்கூடாது.

நமக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் எல்லாமே சுகமாகவே இருந்தால் மகிழ்ச்சி ஏற்படுகிறது. நமக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டால் சோர்வு ஏற்படுகிறது. அச்சோர்வு அதிகப்பட்டால்

கஷ்டங்கள் மேலும் அதிகரிக்குமே தவிர குறையாது. சோர்வுகள் ஏற்படாமல் கஷ்டங்களையும் தோல்விகளையும் சமாளித்தால்தான் மேலும் தோல்விகளும் கஷ்டங்களும் ஏற்படாமல் தவிர்க்கவும் தடுக்கவும் முடியும்.

*"வாடி நில்லாதே – மனமே, வாடி நில்லாதே"*

என்று பாரதி பாடுகிறார்.

"இந்த முட்டுதலில் இவ்வுள்ளச் சோர்வை நீ எங்கிருந்து பெற்றாய்? இஃது அர்ஜுனனுக்குத் தகாது. வானுலகைத் தடுப்பது. அபகீர்த்தி தருவது. பார்த்தா, பேடித்தன்மையை அடையாதே! இது உனக்குப் போருந்தாது, இழிபட்ட மனத்தளர்ச்சியை நீக்கி எழுந்து நில், என்று கிருஷ்ண பரமாத்மா தனது பகவத்கீதை உபதேசத்தைத் தொடங்குகிறார்.

வெற்றியிலும் தோல்வியிலும் சமநிலை கொள்ள வேண்டும் என்பது பெரியோர் வாக்கு.

*"இடுக்கண் வருங்கால் நகுக"*

கஷ்டங்கள் வந்தாலும் நாம் சிரித்த முகத்துடன் மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டும் என்பது வள்ளுவர் வாக்கு. எத்தனை துன்பங்கள் ஏற்பட்டாலும் நாம் கலங்காமல் சோர்வு அடையாமல் இருக்க வேண்டும், எந்த வகையிலும் நமக்கு சோர்வு ஏற்பட்டால் அது நம்மைக் கெடுத்து விடும். எனவே சோர்வு கொள்ளலாகாது.

## 20. கேட்டிலும் துணிந்து நில்

நமக்கு கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள், தோல்விகள், தொல்லைகள் ஏற்பட்டாலும் வாட்டம் அடையக்கூடாது. என்பது மட்டுமல்ல அத்தகைய கேடுகள் வந்தாலும் அவைகளை எதிர்த்து துணிவுடன் நிற்க வேண்டும். நமக்கு வெற்றிகள் கிடைக்கும்

போதும், நல்லது விளையும் போதும் உற்காசத்துடன் முன்னேறிச் செல்வது பெரிய காரியம் அல்ல. நமக்குத் தோல்விகள் ஏற்படும் போது கேடுகள் நேரிடும் போதும் அவைகளை எதிர்த்துத் துணிவுடன் நின்று சமாளிக்க வேண்டும். துணிவு என்பது நமக்கு எப்போதும் வேண்டும் நமக்குக் கேடுகள் ஏற்பட்டபோதும் துணிச்சலுடன் செயல்களை கடமைகளை ஆற்ற வேண்டும்.

*"விடத்தையும் நோவையும் வெம்பகையதனையும்*
*துச்சம் என்றெண்ணித் துயரிலாதிங்கு*
*நிச்சலும் வாழ்ந்து நிலை பெற்றோங்கலாம்"*

என்று பாரதி கூறியுள்ளதை நினைவில் கொண்டு கேட்டிலும் துணிந்து நிற்போம்.

## 21. கைத்தொழில் போற்று

தொழில்களையும் தொழிற் கருவிகளையும் கடவுளாகப் போற்றுவது நமது நாட்டு மக்களின் மரபாகும்.


*"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே*
*எந்திரங்கள் வகுத்திடுவீரே*
*கருபைச்சாறு பிழிச்திடுவீரே*
*கடலில் மூழ்கி நன்முத்தெடுப்பீரே*
*அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்*
*ஆயிரம் தொழில் செய்திடுவீரே*
*பெரும்புகழ் நுமக்கே யிசைக்கின்றேன்*
*பிரமதேவன் கலையிங்கு நீரே,"*

என்று பாரதி தொழிலையும் அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளரையும் போற்றிப் பாடுகிறான்.

கைத்தொழில் என்பது மனிதன் செய்யும் எல்லாத் தொழில்களையும் குறிக்கும். மனித சமுதாயத்தின் வளர்ச்சியை ஒட்டி தொழில்களும் அதறகான சாதனங்களும் கருவிகளும் விசை சக்திகளும் தொழில் நுட்பங்களும் வளர்ச்சியடைந்து கொண்டே வந்திருக்கின்றன.

உணவு சேகரித்தலும் வேட்டையாடுதலும் மனிதனின் ஆரம்ப காலத் தொழிலாக இருந்தது. பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து, கால்நடை பராமரித்தல், மீன்பிடித்தல், விவசாயத் தொழில், உலோகத் தொழில், நெசவுத் தொழில் முதலிய பல தொழில்களும் படிப்படியாக வளர்ச்சி அடைந்தன. இப்போது எந்திர சக்தியும் விசை சக்திகளும் வந்த பின்னர் எண்ணற்ற தொழில்கள் வந்துவிட்டன. அந்தத் தொழில்களை எல்லாம் நாம் போற்றி காக்க வேண்டும். போற்றி வளர்க்க வேண்டும்.

நமது நாடு பெரிய நாடு. மக்கள் தொகை அதிகமாக உள்ள நாடு. இங்கு ஏராளமான இயற்கை வளங்கள் அதிகம் உள்ளன. நமது மக்கள் அனைவரும் ஒருவர் தவறாமல் ஏதாவது ஒரு தொழிலைச் செய்தால் நமது நாடு வேகமாக முன்னேறுவதற்கு வாய்ப்புகள் ஏற்படும். அதனால் தான் நமது முன்னோர்கள் தாங்கள் செய்யும் தொழில்களைத் தெய்வமாகப் போற்றினார்கள்.



தொழில் கருவிகளையும், உபகரணங்களையும் வைத்து ஆயுத பூசை நடத்தி வழிபட்டுப் போற்றி வணங்கினார்கள். அதனால் தான் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதி பாடினார்.

நமது நாட்டு மக்கள் உழவுத் தொழிலோடு பலவகையான துணைத் தொழில்களையும் சிறு தொழில்களையும் கைவினைத் தொழில்களையும் வளர்த்துள்ளார்கள்.

தென்னை, பனைமரத் தொழில்கள், அதில் காய் பறித்தல் சாறு எடுத்தல், மட்டைகள் மூலம் நார் எடுத்தல் கயறு திரித்தல், ஓலை பின்னுதல், துடைப்பம் தயாரித்தல், பனையோலை மூலம் பெட்டி, முறம் முதலியவை செய்தல் கிடுகு பின்னுதல் முதலிய தொழில்கள் பாய் முடைதல் பருத்தியிலிருந்து பஞ்சு எடுத்தல், நூல் நூற்றல், நெசவு நெய்தல், ஆடைகள் தயாரித்தல், மீன் பிடித்தல், உப்பு எடுத்தல், கப்பல் தொழில்கள், தச்சு வேலை,

கொல்லு வேலை முதலிய ஐந்தொழில்கள், தங்கம், வெள்ளியினால் ஆன ஆபரணத் தொழில்கள் கட்டிடத் தொழில் சிற்பம் முதலிய பல்வேறு கலைத்தொழில்கள் இவை போன்ற எண்ணற்ற தொழில்களையும் நாம் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு பழைய தொழில்களையும் புதிய நவீனமான பலவகையான எந்திரத் தொழில்களையும் பாதுகாத்துப் போற்றி வளர்த்தால் தான் நாட்டுமக்கள் அனைவருக்கும் வேலை கொடுக்க முடியும். மக்களுடைய தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும். இத்தகைய கைத்தொழில்களை எல்லாம் சிரத்தையுடன் செய்ய வேண்டும். உணர்வு பூர்வமாக வளர்க்க வேண்டும். அதைத்தான் பாரதி கைத்தொழில் போற்று என்று கூறியுள்ளார்.

## 22. கொடுமையை எதிர்த்து நில்

கொடுமைகள் எங்கு நிகழ்ந்தாலும் எந்த வடிவத்தில் வந்தாலும் அதை எதிர்த்து நிற்க வேண்டும் என்று பாரதி கூறுகிறார். அதில் முக்கியமாக நாடடில் அன்னிய ஆட்சியின் கொடுமைகள் பாரதியின் கண்ணெதிரில் நின்றன. அன்னிய ஆட்சியின் கொடுமைகள் முதலிடத்தில் நின்றன. தடை உத்தரவுகள், ஊரடங்குச் சட்டங்கள். சிறைவாசம், சிறைக்கொடுமைகள், தடியடி, கண்ணீர் புகைக் கொடுமைகள் முதலியன சர்வ சாதாரணமான சட்டங்களாக அமுலாயிருந்தன. "வாழ்க திலகர் நாமம்! வாழ்க வாழ்கவே! வீழ்கக் கொடுங்கோன்மை வீழ்க வீழ்கவே!" என்று திலகர் நாமம் வாழ்கவென்றும் கொடுங்கோன்மை வீழ்கவென்றும், திலகர் மீது அடக்குமுறைச் சட்டங்கள் ஏவப்பட்ட போது பாரதி உணர்ச்சி பூர்வமாக அப்பாட்டை பாடினார்.

*"இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால்*
*வனவாசம்; இவ்வாறங்கே*
*செம்மையெல்லாம் பாழாகிக் கொடுமையே*
*அறமாகித் தீர்ந்த போதில்"*

என்று ஜார் ஆட்சியின் கொடுமையைப் பற்றி பாரதி கூறுகிறார்.

*"மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதும்*
*நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ?"*

என்று அன்னிய ஆட்சியின் கொடுமையில் நிலவியிருந்த நிலையைப் பாரதி கூறுகிறார்.

*"பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை*
*கொண்டு போகவோ"*

என்று அன்னிய ஆட்சியின் கொள்ளைக் கொடுமையைப் பற்றி பாரதி குறிப்பிட்டுக் கூறுகிறார்.

இன்னும் ஆதிக்கக்காரர்கள் சாதாரண மக்கள் மீது நடத்தும் கொடுமைகள், மேல்சாதிக்காரர் என்றும் பெயர் வைத்துக் கொண்டு மற்றவர்கள் மீது நடத்தும் சாதிக் கொடுமைகள் மற்றும் பெண்கள், குழந்தைகள், சாதாரண உழைக்கும் மக்கள் முதலிய சமுதாயத்தில் இன்று பலவீனமாக உள்ள மக்கள் மீது நடத்தப்படும் கொடுமைகள் முதலிய கொடுமைகளை எதிர்த்து நிற்க வேண்டியது நமது கடமையாகும்.

*"சாதிக் கொடுமைகள் வேண்டாம் – அன்பு*
*தன்னிற் செழித்திடும் வையம்"*

என்றும்

*"பொய்மைச் சாதி வகுப்பினை யெல்லாம், தகரென்று*
*கொட்டு முரசே"*
*என்றும் பாரதி முரசு கொட்டுகிறார்.*
*"பாதகம் செய்பவரைக் கண்டால் – நாம்*
*பயங்கொள்ளலாகாது பாப்பா,*
*மோதி மிதித்து விடு பாப்பா – அவர்*
*முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா"*

என்று பாப்பாவிடம் பாரதி கூறுகிறார்.

"கொடுமையை எதிர்த்து நில்" என்று பாரதி கூறும் போது வெறும் மனிதாபிமான முறையில் மட்டும் அவர் அதைக்

கூறவில்லை. ஒருவர் தனக்கு எதிராகத் தனிப்பட்ட முறையில் நடக்கும் கொடுமைகளை மட்டுமல்லாமல் மற்றவர்கள் மீதும், மக்கள் மீதும் நாடுகள் மீதும் நடத்தப்படும் கொடுமைகளையும் எதிர்த்து நிற்க வேண்டும் என்பதே பாரதியின் கருத்தாகும்.

கொடுங்கோல் அரசுகள் மக்களுக்கு எதிராக நடத்தும் கொடுமைகளை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராட வேண்டும். சுரண்டும் கூட்டம் நடத்தும் கொடுமைகளை எதிர்த்து சுரண்டப்படும் கூட்டம் உறுதியாக நின்று போராட வேண்டும். ஆதிக்கத்தில் உள்ளவர்கள் நடத்தும் கொடுமைகளை எதிர்த்து சாதாரண மக்கள் உறுதியாக நின்று போராட வேண்டும். பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிராக நடக்கும் கொடுமைகளுக்கும் சாதிக் கொடுமைகளுக்கும் எதிராக அனைத்து மக்களும் உறுதியாக நின்று போராட வேண்டும்.

ஜார் மன்னன் நடத்திய கொடுமைகளை எதிர்த்து ரஷ்ய மக்கள் நடத்திய போரட்டத்தை பாரதி பாராட்டினார். அதே போல கொடுமைகளை எதிர்த்துப் போராடிய பெல்ஜிய மக்களுக்கும் இத்தாலிய மக்களுக்கும் பாரதி பாராட்டுத் தெரிவித்தார்.

துரியோதனக் கூட்டத்தார், பஞ்சாலிக்கு எதிராக நடத்திய கொடுமைகளை எதிர்த்துப் பாரதி ஆவேசம் கொண்டு பாஞ்சாலி சபதத்தில் தனது பாத்திரங்களைப் பேச வைக்கிறார்.

கொடுமைகள் எங்கு நடந்தாலும் எந்த வடிவத்திலும் நடந்தாலும் அக்கொடுமைகளை எதிர்த்து நிற்க வேண்டும் என்பதே பாரதியின் வீரவாக்காகும்.

## 23. கோல் கை கொண்டு வாழ்

கையில் கோல் வைத்திருப்பது பல தொழில்களுக்கும் உகந்ததாகும். பாரதியார் கையில் ஒரு கோல் வைத்துக் கொண்டு கம்பீரமாக நிற்பதும் நடப்பதும் பழக்கம் என்று ஒரு செய்தி உண்டு.

மன்னர் ஆட்சிக்காலத்தில், மன்னர் கையில் கோல் வைத்திருப்பது நமது நாட்டில் மட்டுமல்ல, உலகளாவிய பழக்கமாக இருந்திருக்கிறது. கோல் என்பது ஆட்சி அதிகாரத்திற்குரிய

சின்னமாகக் கருதப்படுகிறது. பாரதி காலத்தில் அன்னியர் ஆட்சியின்கீழ் நாடு அடிமைபபட்டுக் கிடந்தது. எனவே ஆட்சி அதிகாரம் நமது கைக்கு வரவேண்டும் என்னும் பொருளில் கோல் கை கொண்டு வாழ் என்று பாரதி கூறியிருக்கலாம்.

மன்னனுக்குத் தமிழில் காவலன் என்று ஒரு பெயர் உண்டு. காவலன் கையில் கோல் இருப்பது மிகவும் அவசியமான தொன்றாகும். நல்லாட்சியை செங்கோல் ஆட்சி அதாவது செம்மையான கோல் என்றும், கொடுமையான ஆட்சியைக் கொடுங்கோல் என்றும் கூறுகிறோம். கோல் என்றால் ஆளுமைக்கும் குறிப்பிடலாம். ஆட்சிக்குரிய சின்னங்களில் ஒன்றாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக சக்கரம் என்றும் சொல் கூட பரந்த பொருளில் ஆணைச்சக்கரம் என்று ஆளுமைக்குரியதாக எடுத்துக் கொள்கிறோம். கண்ணன் கையில் சக்கரம் உள்ளது. சக்கரத்தைக் கொண்டு உலகை ஆளுமை செய்து பரிபாலிக்கிறான் என்று கூறலாம். கண்ணன் கையில் கோலும் இருந்தது. கோல் கையில் கொண்டு தேரை நடத்தி பாரதப் போரையும் நடத்தி முடித்தான்.

சக்கரம் காலச்சக்கரம், வண்டிச்சக்கரம், எந்திரச்சக்கரம் ஆட்சிச்சக்கரம், தர்மச்சக்கரம் என்றெல்லாம் கூறுகிறோம். அசோகன் தர்மசக்கரத்தைத் தனது ஆட்சியின் சின்னமாக வைத்திருந்தான். அது இப்போது நமது நாட்டின் ஆட்சிச சின்னமாக இருக்கிறது.

அது போல் கோலும் ஆளுமைச் சின்னமாகக் கருதப்படுகிறது. கோல் கை கொண்டிருப்பது அரசன் மட்டுமல்ல உழவர்கள் தங்கள் கையில் கோல் வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏர் ஓட்டுவதற்கும் வண்டி ஓட்டுவதற்கும் கையில் கோல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆடு, மாடு மேய்ப்பவர்கள் கையில் கோல் வைத்துக் கொள்கிறார்கள். தலையாரிகளின் கையில் கோல் கொடுத்து அவர்கள் ஆட்சியின் சின்னமாகக் கருதப்பட்டார்கள்.

காவலர்கள் வயதானவர்கள், மந்திரவாதிகள் (மந்திரக்கோல்) குறி சொல்பவர்கள் இப்படி பலரும் கையில் கோல் வைத்துக்

கோள்கிறார்கள் சில விளையாட்டுகளிலும் கோல் உண்டு முன்னாளில் கோல் பயிற்சி (சிலம்பம்) உடற்பயிற்சி மற்றும் போர்ப்பயிற்சியின் பகுதியாக இருந்தது. ஆட்டங்களில் கோலாட்டம் ஒரு முக்கியமான ஆட்டமாகும். கேரளாவில் அதை கோல் களி என்றும் பிரபலமாகக் குறிப்பிடுவார்கள். எனவே கோல் பயிற்சி பெறுவதும் கையில் கோல் வைத்திருப்பதும் ஆளுமையின் சின்னமாக வீரத்தின் சின்னமாக பாரதி குறிப்பிட்டுள்ளார்.

ஆதிமனிதனுக்குக் கல்லும் கம்பும் தான் முதல் கருவிகளாகப் பயன்படிருக்கின்றன. பின்னர் கோல்களை வைத்து வேறு பல கருவிகளையும் ஆயுதங்களையும் செய்து மனிதன் பயன்படுத்தி இருக்கிறான். இரு கைகளையும் தொங்கவிட்டுக் கொண்டு குனிந்து சென்று கொண்டிருந்த ஆதிமனிதன் நிமிர்ந்து நிற்பதற்கும், நடப்பதற்கும் காரணமாக அமைந்தது கோல்தான்.

மனிதனை நிமிரச் செய்ததும், மனிதனுக்குத் துணையாக இருப்பதும் மனிதனுக்கு ஒரு கம்பீரத்தைக் கொடுப்பதும், ஆளுமையின் சின்னமாக அமைந்திருப்பதும் கோலாகும். அதனால் கோல் கை கொண்டு வாழ் என்று பாரதி குறிப்பிடுகிறார்.

## 24. கௌவியதை விடேல்

ஒன்றைப் பிடித்தால் விட்டுவிடக் கூடாது என்னு பொருளில் கௌவியதை விடேல் என்று பாரதி கூறியுள்ளார். கையில் பிடிப்பதையும் வாயால் பிடித்துக் கொள்வதையும் கௌவுதல் என்று கூறலாம். மனதால் கொள்வதையும் கௌவுதல் என்று கூறுலாம்.

சிங்கம், புலி, பூனை, நாய் முதலியவை பிடிப்பதைக் கௌவுதல் என்று கூறுகிறார்கள். மனிதனுக்கும் கௌவுதல் இருக்கிறது.

ஒரு வேலையைச் செய்வதில் விடாப்பிடியாகச் செய்வதும், பிடிவாதமாக விடாமுயற்சியுடன் செய்வது என்பதெல்லாம், கௌவியதை விடேல் என்பதுடன் சேர்ந்ததாகும். குழந்தைகளுக்குப் பொதுவாக பிடிவாதம் இருக்கும். அதை பாரதி ஆதரிப்பதாகக் கூறலாம்.

குழந்தைகள், மாணவர்கள், இளைஞர்கள் நன்கு படிக்க வேண்டும். ஆசிரியர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள் சொல்வதைக் கவனமாகக் காது கொடுத்து கேட்க வேண்டும். படித்து, கேட்டு மனதில் கொண்டதை விட்டுவிடக் கூடாது. எடுத்த வேலையை விடாமல் செய்து முடிக்க வேண்டும்.

## 25. சரித்திரத் தேர்ச்சி கோள்

சரித்திரம் என்பது வரலாறு. வரலாறு மிகப்பெரியது, மிக விரிவானது. இங்கு வரலாறு என்பதை நமது நாட்டின், நமது தேசத்தின், உலகத்தின் மனிதகுலத்தின் வரலாற்றைக் குறிக்கிறோம். வரலாறு என்பது மனித சமுதாயத்தின் கடந்தகால அனுபவங்களாகும். அதைக் கற்றுத் தேர்ச்சி கொள்வது நமது எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக அமையும். நாம் எந்தப் பிரச்சசினையை எடுத்துக் கொண்டாலும், அதை வரலாறு பூர்வமாக அணுக வேண்டும். படிக்க வேண்டும். படித்துத் தேர்ச்சி கொள்ள வேண்டும்.

வரலாற்றை எழுதும் போது வரலாற்று ஆசிரியர்கள் அவரவர்கள் கருத்துப்படி அவரவர்களுக்கு சாதகமாக ஒரு சார்பில் வரலாறுகளை எழுதியுள்ளார்கள். ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்கள், மிகப் பெரும்பாலும் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு ஆதரவாக அவர்களின் ஆட்சியைப் பெருமைப்படுத்தியும், இந்திய நாட்டின் பல வரலாற்று உண்மைகளை மறைத்தும் சிறுமைப்படுத்தியும் எழுதினார்கள். அதையொட்டிய பல வரலாற்றுக் கருத்துக்களை இந்திய அறிஞர்கள் பலரும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

ஆங்கிலக்கல்வி பற்றி பாரதியார் தனது சுயசரிதைக் கவிதையில் கூறும் போது வரலாறு பற்றிய ஒரு கண்ணோட்டத்தைக் குறிப்பிடுகிறார்.

*“**கம்பன்** என்றொரு மானிடன் வாழ்ந்ததும்*
***காளிதாசன்** கவிதை புனைந்ததும்*
*உம்பர் வானத்துக் கோளையும் மீனையு*

*மோர்ந்தளந்ததொர் **பாஸ்கரன்** மாட்சியும்*
*நம்பரும் திறலோ டொரு **பாணினி***
*ஞானமீதில் இலக்கணம் கண்டதும்*
*இம்பர் வாழ்வின் இறுதி கண்டு உண்மையின்*
*இயல்புணர்த்திய **சங்கரன்** ஏற்றமும்*
***சேரன்தம்பி** சிலம்பை இசைத்ததும்*
*தெய்வ **வள்ளுவன்** வான்மறை செய்ததும்*
*பாரில் நல்லிசைப் **பாண்டிய சோழர்கள்***
*பாரளித்து தர்மம் வளர்த்ததும்*
*பேரருள் சுடர்வாள் கொண்ட **சோகனார்***
*பிழைபடாது புவித்தலம் காத்ததும்*
*வீரர் வாழ்த்த மிலேச்சர் தந்நீய கோல்*
*வீழ்த்தி வென்ற **சிவாஜியின்** வெற்றியும்*
*அன்னயாவும் அறிந்திலர் பாரதத்து*
*ஆங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர்*
*முன்னர்நாடு திகழ்ந்த பெருமையும்*
*மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்*
*பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலார்"*

என்று தனது கவிதைகளில் குறிப்பிடுகிறார்.

இந்திய நாட்டின் சரித்திரத்தில் தேர்ச்சி கொள்ள வேண்டுமென்றால் கம்பன், காளிதாசன், பாஸ்கரன், பாணினி, சங்கரன், சேரன்தம்பி, வள்ளுவன், பாண்டிய சோழர்கள், அசோகன், சிவாஜி மற்றும் பாரத நாட்டின் தலைச்சிறந்த அறிஞர்களும் வீரர்களும் இந்திய மக்களுடன் சேர்ந்து ஆற்றியுள்ள அருஞ்செயல்களை விரிவாகப் படிக்க வேண்டும் என்பது பாரதியின் கருத்து.

வரலாறு என்பது என்ன என்பது பற்றி பல கருத்துகள் நிலவி வருகின்றன. அந்தந்தக் கருதுக்களின் வழியில் வரலாற்று நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் வரலாறு என்றால் அந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தில் இருந்தவர்கள், அதாவது அரசர்கள், அந்த அரசர்களுக்குத் துணைபுரிந்தவர்கள், அமைச்சர்கள், தளபதிகள்

ஆகியோர்களின் சாதனைகள், அவர்கள் நடத்திய போர்கள், அப்போர்களின் வெற்றி தோல்விகள், அரசியல் சூழ்ச்சிகள், அரசர்கள் நாட்டிற்குச் செய்த நன்மை, தீமைகள் ஆகியவைகளைப் பற்றிய விவரங்களை விளக்கிச் கூறுவதாகும் என்பது ஒரு சாரார் கருத்தாகும்.

வரலாறு என்பது அரசர்களுடைய பரம்பரை பற்றிய வரலாறு மட்டுமல்லாமல், நாட்டு மக்களின் வாழ்க்கை வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய முக்கிய தலைவர்கள், வீரர்கள், மகான்கள், அறிஞர்கள், ஞானிகள் முதலியவர்களின் சாதனைகள் சாகசங்கள், வீரதீரச் செயல்கள், போதனைகள் பற்றி விவரங்களும் அவர்களுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த அரிய நிகழ்ச்சிகளின் தொகுப்பாகும் என்பது மற்றொரு சாரார் கருத்தாகும்.

நமது இலக்கியங்கள் பலவும் கூட மன்னர்கள் மற்றும் இதர வீரர்களின் வீரம், காதல் பற்றியும் அருஞ் செயல்களை பற்றியும் அதிகமாகக் கூறுவதைக் காண்கிறோம்.

வரலாறு பற்றிய இத்தகைய கருத்துக்கள் முழுமையான உண்மையைப் பிரதிபலிப்பதாகக் கூற முடியாது. வரலாற்றில் முக்கிய தலைவர்கள், அரசர்கள், ஆட்சியாளர்கள், வீரர்கள் முக்கிய தலைவர்கள், அறிஞர்கள், ஞானிகள் முதலியோர்களின் பங்கும், பாத்திரமும் முக்கியமானது தான். அதே சமயததில் சமுதாய நிகழ்ச்சிகளில் அரசியல் நிகழ்ச்சிகளில் மட்டுமல்லாமல் மக்களுடைய பொருளாதார வளர்ச்சி, சமுதாய, கலாசாரா பண்பாட்டு வளர்ச்சி முதலியவைகளில் பெரும்பாலான மக்களின் பங்கும் பாத்திரமும் முக்கியமானதாகும். அவைகளைப் பற்றியுள்ள விவரங்களும் விளக்கமாக அறியப்பட வேண்டும்.

உதாரணமாக, நமது நாட்டில் கைபர் கணவாய் மூலமாக வந்த பல படையெடுப்புகள், மௌரியப் பேரரசு, குப்த பேரரசு, சுல்தான்கள் ஆட்சி, மொகலாயர் ஆட்சி, மத்திய இந்தியாவில் தோன்றிய பல பேரரசுகள், சாளுக்கியர்கள், கலிங்கர்கள், தெற்கில் – சேர, சோழ, பாண்டிய, பல்லவப் பேரரசுகள், விஜயநகரப் பேரரசு,

மராட்டிய மன்னர்கள், முஸ்லிம் மன்னர்கள் முதலியோர்களின் ஆட்சிகள் அவர்களின் வம்சாவளி அரசர்கள், அவர்கள் நடத்திய போர்கள் முதலியவை பற்றி மட்டுமல்லாமல் நமது நாட்டில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார, கலாசார வளர்ச்சி பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பகுதிகள் சாகுபடியின் கீழ் கொண்டு வந்தது. கட்டப்பட்ட அணைகள், வெட்டப்பட்ட கால்வாய்கள் ஏரிகள், குளங்கள், நீர் நிலைகள், கட்டப்பட்ட பல்லாயிரக்கணக்கான கோவில்கள், அழகிய கோபுரங்கள் உருவாக்கப்பட்ட கலைச் செல்வங்கள், பல தொழில்கள், கைவினைத் தொழில்கள் வாணிபம், போக்குவரத்து, சிறப்பு மிக்க இலக்கியங்கள், பொருளியல் நூல்கள், வானசாத்திரம், கணிதம், இலக்கணம், தத்துவ சாத்திரங்கள் வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், சங்க நூல்கள், பக்தி இலக்கியம், அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய பல இலக்கியங்கள்.

இந்திய நாட்டின் பல்வேறு கால கட்டங்களில் நடைபெற்ற கருத்துப் போராட்டங்கள், கொடுங்கோல் மன்னர்களுக்கு எதிராக நடைபெற்ற எழுச்சிகள், இவைகளில் மக்களின் பங்கு பாத்திரம் பற்றிய படிப்பினைகள், இதர விவரங்கள் பற்றியும் விரிவாக அறியப்பட வேண்டும்.

பின்னர் ஏற்பட்ட ஆங்கிலேயர் வாணிகம், அவர்கள் நடத்திய படுகொலைப் போர்கள், ஆக்கிரமிப்புகள் அவர்களுடைய ஆட்சியில் நடந்த பல கொடுமைகள், அவைகளுக்கு எதிராக மக்கள் நடத்திய பல கிளர்ச்சிகள், பல்வேறு பகுதி மக்களும், பல்வேறு அரசியல் அமைப்புகள் இதர மக்கள் அமைப்புகளும் அன்னிய ஆட்சிக்கு எதிராக நடத்திய வீரமிக்க விடுதலைப் போராட்டங்கள் பற்றிய விவரங்கள் விரிவாக அறியப்பட வேண்டும்.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி, அதன் நிர்வாகிகள், பிரிட்டிஷ் கவர்னர்கள், கவர்னர் ஜெனரல்கள், பிரிட்டிஷ் பார்லிமென்ட் ஆட்சி, பின்னர் அவர்கள் நடத்திய வட்ட மேஜை மாநாடுகள் அரைகுறை அரசியல் சீர்திருத்தங்கள், அவர்கள் கொண்டு வந்த கல்விமுறை சட்டங்கள் நீதி முறை ஆகியவை மட்டுமே இந்தியாவின் வரலாறாகி விட முடியாது.

வரலாறு என்பது சென்ற கால நிகழ்ச்சிகளின் தொகுப்பேயாகும் என்னும் கருத்தும் நிலவுகிறது நிகழ்ச்சிகளின் தொகுப்பு என்பதில் உண்மை உள்ளது என்றால் அவை உயிரற்ற குப்பை குவியல்கள் அல்ல, அந்த நிகழ்ச்சிகளைத் தொகுப்பதிலும் வரிசைப்படுத்துவதிலும் பல குறைபாடுகளும், சார்புநிலை கொண்டு பல உண்மைகள் மறைக்கப்படுவதையும் அந்தக் கோர்வையில் நாம் காண்கிறோம்.

என்றாலும், இந்தத் தொகுப்புகள் மூலம் முந்திய காலத்தைப் பற்றிய பல விவரங்கள் நமக்குக் கிடைக்கின்றன.

அவ்விவரங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அத்துடன் கடந்த கால நிகழ்ச்சிகளை முழுமையாகச் சேகரித்து, அவைகளின் உயிரோட்டமான இணைப்பையும் தொடர்ச்சியையும், அதில் மக்களுடைய உரிய பங்கையும் பாத்திரத்தையும் அறிந்து கொள்ள வேண்டும்.

*"நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி*
*நயம் புரிவாள் எங்கள் தாய் – அவர்*
*அல்லவராயின் அவரை விழுங்கிப் பின்*
*ஆனந்தக் கூத்திடுவாள்"*

என்று பாரதி கூறும் வரிகளில் உயிரோட்டமாக உள்ள கருத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இதில் தாய் என்பது பாரத மக்களாகும். நல்ல ஆட்சியாளர்கள் என்றால், அவர்களை வாழ்த்துவது அல்லவராயின், அவர்களை விழுங்கிக் கூத்தாடுவதும் பாரத மக்களின் உயிரோட்டமான வரலாற்றுச் சாதனையாகும். மக்களின் அத்தகைய சாதனைகளை அடையாளம் கண்டு, அவைகளை நமது நீண்ட வரலாற்றின் விவரமாக அறிய வேண்டும்.

இன்றைய செய்திகளே நாளைய வரலாறு என்று ஒரு கருத்துகூறப்படுகிறது. இதுவும் நிகழ்ச்சிகளின் தொகுப்பைப் போன்றதேயாகும். இன்றைய செய்திகள் எவ்வாறு வெளியிடப்படுகின்றன என்பதைப் பொருத்து வரலாற்று

விவரங்கள் அமையும் அவைகள் ஒரு சார்பாக இருந்தாலும் சில நேரங்களில் பழங்குப்பையாக இருந்தாலும் அதிலுள்ள பகுதி உண்மையான விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டியதிருக்கிறது.

இதுவரையிலும் நிலையில் இருந்துள்ள சமுதாயங்களின் வரலாறு முழுவதும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறாகும் என்னும் ஒரு கருத்தும் இன்றைய வரலாற்றுத்துறை அறிஞர்களுக்கு இடையில் நிலவியுள்ளது, இந்தக் கருத்து இக்காலத்தில் பெருமளவில் ஏற்றும் மறுத்தும் விவாதிக்கப்படுகின்றன, அதர்மத்திற்கும் தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் இடையிலான போராட்டத்தின் வரலாறே சமுதாயத்தின் வரலாறாக இருந்திருக்கிறது என்னும் கருத்து பாரதிக்கு நெருக்கமாக இருக்கலாம். ஆயினும் இக்கருத்துக்கள் சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கின் விவரங்களில் இருந்து அறியப்பட வேண்டியதாகும்.

ஐரோப்பிய சமுதாயத்தின் வரலாறு, ஆண்டான் – அடிமை வர்க்கங்கள், நிலப்பிரபுக்கள் – குடியானவர்கள், முதலாளிகள் – தொழிலாளர்கள் என்று வர்க்கங்களாகவும் அவைகளின் துணை வர்க்கங்களாகவும் பிரிந்து நின்றிருந்து அவைகளுக்கு இடையில் நடைபெற்ற போராட்டங்களின் வரலாறாகவே இருந்து வந்திருக்கிறது. இந்தப் போராட்டங்கள் ஒவ்வொரு கட்டத்திலும் போராடும் வர்க்கங்களின் பொது நாசத்திலும், சமுதாய முழுவதினுடைய மாற்றங்களிலும் போய் முடிந்திருக்கின்றன.

பழைய வர்க்கங்கள் மறைந்து புதிய வர்க்கங்கள் தோன்றியிருக்கின்றன. இவ்வர்க்கங்கள், சமுதாய உற்பத்தி முறையிலும் சமுதாய வளர்ச்சியிலும் தேக்கத்திலும் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றன. இந்த வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டமானது அரசியல், பொருளாதாரம், கலாசாரம், சித்தாந்தம் ஆகிய சமுதாயத்தின் அனைத்துத் துறைகளிலும் நிகழ்ந்திருப்பதையும் காண முடிகிறது.

இந்தியாவிலும் புராதன சமுதாயத்திலிருந்து வளர்ச்சி பெற்றபோது, குலப்பிரிவுகளும் வர்ணப் பிரிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பிரிவுகள் பின்னர் சாதிப் பிரிவுகள என்றும் உறுதிப்பட்டு நிலை பெற்றிருக்கின்றன. அடுத்து தொடர்ச்சியான சமுதாய வளர்ச்சியில் வர்க்கப் பிரிவுகளும் சாதிப் பிரிவுகளும் இணைந்து ஒன்றையொன்று மேல்படுத்திக் தொடர்ந்து வந்துள்ளதைக் காண்கிறோம். சாதிகளுக்கு இடையிலும், வர்க்கங்களுக்கு இடையிலும் தொடர்ச்சியாக சமுதாயப் போராட்டங்களாக இந்திய சமுதாயத்தில் நிகழ்ந்துள்ளன. பரசுராமரின் கலகம், வசிஷ்டர்–விஸ்வாமித்திரர் மோதலும் உடன்பாடும், புத்த, சமண இயக்கங்களின் வெற்றியும் சாதனைகளும் மத்திய காலத்தில் அரசர்களுக்கும் வணிகர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் பக்தி இயக்கம், அதனால் ஏற்பட்ட சமுதாய மாற்றம் முதலியன நமது நாட்டின் வரலாற்றின் பகுதிகளாகும்.

நமது நாட்டின் மீது தொடர்ச்சியாக ஏற்பட்ட படையெடுப்புகளும் போர்களும் சேதங்களும் நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி இருக்கின்றன. கடைசியாக நிகழ்ந்த பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பும் ஆட்சியும் நாட்டின் வளர்ச்சியை பெரும் அளவில் தடுத்துக் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியின் ஆதிக்கத்தால் இந்திய நாட்டின் பழைய அமைப்பு முறைகளில் கடும் சேதங்களும் அதே சமயத்தில் புதிய பொருளாதார அரசியல் சட்டநீதி கல்வி, அமைப்பு முறைகளும் தோன்றின.

தேசிய விடுதலை இயக்கம் என்னும் புதிய ஆதர்சம் தோன்றி நாட்டு மக்களுடைய பொது ஜனநாயக இயக்கமாக அரசியல் பொருளாதார சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றி வளர்ந்து நாடு விடுதலை பெற்று சுதந்திர இந்தியா மலர்ந்தது.

"ஆதியில் அந்தணர்கள் ஆதிக்கம் செலுத்தினார்கள். அதாவது மேல்தட்டு படித்த கூட்டம் பிளாட்டோ கூறியுள்ளபடியான தத்துவஞானி – அரசன் ஆட்சி நடத்தினர். அதன்பின்னர்

சத்திரியர்கள், வல்லவர்கள், வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்னும் வகையில் பலசாலிகள் ஆட்சிக்கு வந்தனர். இப்போது வைசியர்கள் வணிகர்கள் (முதலாளிகள் எனவும் கூறலாம்) ஆட்சி நடத்துகிறார்கள். எதிர்காலத்தில் சூத்திரர்களின் ஆட்சி அமையும், அடித்தட்டு மக்களின் ஆட்சி அமையும் என்று விவேகானந்தர் குறிப்பிட்டதை நினைவு கொள்ளலாம்.

எனவே சாதி முறையினால் ஏற்பட்ட பாகுபாடுகள் வேறுபாடுகள், கொடுமைகள், இழிவுகள் ஆகியவைகளை எதிர்த்து இந்திய சமுதாயத்தில் நடந்துள்ள போராட்டங்களும் சமுதாயப் போராட்டங்களின் பகுதியேயாகும் என்பதை அனுபவத்தில் காண்கிறோம்.

மனிதகுல வரலாறு என்பது அதன் அடிநாதமாக உள்ளது என்பது மனிதன் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு அவன் நடத்தியுள்ள உற்பத்தி முறையின் வளர்ச்சியேயாகும்.

மனிதன் தனது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வீடு, கல்வி, பொழுதுபோக்கு, ஆடல், பாடல், விளையாட்டு, கோவில், குளம் முதலியவைகளுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளின் செயல்பாடுகளின் வரலாறு மனித வரலாற்றின் அடிப்படையாகும். அதுவே சமுதாயத்தின் அரசியல் பொருளாதார ஆன்மீக அடிப்படையாகும். அந்த சமுதாய அடிப்படையைப் பாதுகாத்துக் கொள்ளவும் வளர்த்துக் கொள்ளவும் மனிதன் உருவாக்கிக் கொண்ட அரசியல் கலை, இலக்கியம், தத்துவஞானம் சட்டம், நீதி, அரசியல் நிர்வாக அமைப்புகள், கருத்துக்கள், சாதி, மதம் முதலிய மேல் கட்டுமானங்களாகும்.

இந்த அடிப்படையும் மேல் கட்டுமானமும் வளர்ச்சியடைந்து கொண்டும், மாறிக் கொண்டும் வந்திருக்கின்றன. இந்த வளர்ச்சிக்கு இடையூறாக ஏற்படும் அனைத்துத் தடைகளையும், அந்தத் தடைகளை உண்டாக்கிய சக்திகளையும், நீக்கிவிட்டு மக்கள் புதிய நிலைக்கு மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அந்த முறையில் இந்திய சமுதாயம் பிரமாண்டமான அளவில் படிப்படியாக இந்திய மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள உற்பத்தி சக்திகளை வளர்த்துள்ளது. அந்த வளர்ச்சிக்கு ஏற்பட்ட தடைகளை எல்லாம் விழுங்கி, செரித்து அதை உரமாக்கி வளர்ந்துள்ளது. எத்தனையோ அரக்கர்களை வல்லமைமிக்க தடை பூதங்களையும் விழுங்கி முன்னுக்கு வந்திருக்கிறது. கடைசியில் வந்த பகாசூர பூதமான ஆங்கில அன்னிய ஆட்சியையும் விழுங்கி விடுதலையைப் பெற்றிருக்கிறது.

விடுதலை பெற்றபின், பொருளாதாரத் துறையில் அரசியல் துறையில், கல்வித் துறையில், விஞ்ஞானத் துறையில், உற்பத்தித் துறையில் பெருமுன்னேற்றத்தையும், வளர்ச்சியையும், பல மாற்றங்களையும் கண்டிருக்கிறது. இன்னும் பல வரலாற்றுக் கடமைகளும் பாக்கி உள்ளன.

இந்தத் திசை வழியில் பாரத நாட்டின் நீண்ட வரலாறு களையும் வரலாற்று விவரங்களையும் எல்லாம் கற்று அவைகளில் தேர்ச்சி கொள்ள வேண்டும். பாரதியின் சரித்திரத் தேர்ச்சி கொள் என்னும் ஆணையை நிறைவேற்ற வேண்டும்.

## 26. சாவதற்கு அஞ்சேல்

அச்சம் கூடாது: பயம் கூடாது: எத்தனை துன்பம் வந்தாலும் அஞ்சேல், அண்டம் சிதறினாலும் அஞ்சாதே.

*"யார்க்கும் அஞ்சோம், எதற்கும் அஞ்சோம்*
*எங்கும் அஞ்சோம், எதற்கும் அஞ்சோம்*
*துணிந்து நில்; தீயவைகளை எதிர்த்து நில்"*

என்று பாரதி சதா நம்மை ஊக்கப்படுத்திக் கொண்டே இருக்கிறார்.

மனிதன் பிறந்த போதே சாவது என்பது நிச்சயம், அதற்கு பயந்து கீழ்நிலைக்குப் போய்விடக் கூடாது. கோழையாகி விடக்கூடாது அச்சம் தவிர் என்பதே பாரதியின் புதிய ஆத்திசூடியின் தொடக்கமாகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு லட்சியம் ஒரு குறிக்கோள் வேண்டும். அந்த லட்சியமும், குறிக்கோளும் நல்லதாக, உயர்ந்ததாக, உன்னதமானதாக இருக்க வேண்டும், அத்தகைய உன்னதமான லட்சியத்திற்காக ஒருவன் தனது உயிரையும் கொடுப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும்.



பாரதி காலத்தில் நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது. நாட்டு விடுதலை என்பது ஒவ்வொரு இந்தியனுடைய உன்னதமான லட்சியமாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக எந்தத் தியாகத்திற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் நமது நாட்டு மக்களை ஊக்கமூட்டினார்.

நாட்டுக்குழைத்தலை லட்சியமாகக் கொள்ள வேண்டும் என்று பாரதி விரும்பினார். சமுதாய முன்னேற்றத்திற்காகவும் நாட்டு முன்னேற்றத்திற்காகவும் உழைப்பதை, பாடுபடுவதை நாம் நமது லட்சியமாகக் கொள்ள வேண்டும் என்பது பாரதியின் விருப்பமாகும்.

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் பலரும் தங்கள் உயிரையும் திரணமாக மதித்துப் பாடுபட்டார்கள் என்பதை பாரதி நமக்கு எடுத்துக் காட்டி சாவதற்கும் அஞ்சேல் என்று கூறுகிறார். "சதையைத் துண்டு துண்டாக்கினாலும் உன் எண்ணம் சாயுமோ" என்று ஆங்கிலேயனைப் பார்த்து ஒரு தேசபக்தன் கேட்பதாகப் பாரதி கூறுவதைக் காணலாம்.

அநீதியை எதிர்த்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காக போர்க்களத்தில் நின்று நீ உன் சத்திரியக் கடமையைச் செய்ய

வேண்டும் என்று கண்ணன் பார்த்தனுக்கு எடுத்துக் கூறும் போது. "நீ போர்க்களத்தில் வெற்றி பெற்றால் உலகை, இந்த பூமியை ஆள்வாய், நீ போர்க்களத்தில் இறந்து விட்டால் வீரசுவர்க்கம் அடை வாய், எனவே போர் செய்வாயாக" என்று கூறவதாக கீதை குறிப்பிடுகிறது.

விடுதலைப் போராட்ட காலத்தில் நாட்டு விடுதலைக்காக சாவுக்கும் அஞ்சாமல் துணிந்து நிற்கும்படி தேசத் தலைவர்கள் நமக்கு எடுத்துக் கூறினார்கள். இன்று சமுதாயத்தில் சுரண்டலையும் கொடுமைகளையும் ஒழித்து, மனித குலம் சுபிட்சம் அடைவதற்கான போராட்டத்தில் நாம் எதற்கும் அஞ்சாமல் நிற்க வேண்டும் என்பதை பாரதியின் சொற்கள் நினைவூட்டுகின்றன.

## 27. சிதையா நெஞ்சு கொள்

நாம் எந்த செயலில் ஈடுபட்டாலும் நமது உள்ளத்தில் சஞ்சலமும் ஊசலாட்டமும் ஏற்படக்கூடாது. நெஞ்சுறுதி வேண்டும். நமது உள்ளம் சிதையாமல் இருக்க வேண்டும். நாம் ஒரு வேலையைச் செய்யும் போது நமக்கு எத்தனை கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அதைக் கண்டு கலங்கக்கூடாது. உறுதி குலையக்கூடாது.

இன்னல் வந்திடும் போது அதற்கு அஞ்சாமல் இருக்க வேண்டும் என்று பாரதி கூறுகிறார்.

விடுதலைப் போராட்ட காலத்தில் தேச பக்தர்களுக்கு பல இன்னல்களும் தொல்லைகளும் ஏற்பட்டன. அதைக் கண்டு அவர்கள் மனம் உடையாமல் உறுதியாக இருந்தார்கள்.

நமது குடும்பத்தில் நமக்குப் பல தொல்லைகளும் கஷ்டங்களும் ஏற்படலாம். வாழ்க்கையிலும் பல தொல்லைகளும் தோல்விகளும் ஏற்படலாம். அவைகளைக் கண்டெல்லாம் நாம் மனம் உடைந்து போகக்கூடாது.

நாம் ஒரு தொழிலைக் தொடங்குகிறோம். வீடு கட்டுகிறோம். ஒரு கல்வி நிலையத்தைத் தொடங்குகிறோம். மக்கள் நலன்களுக்காக பல முயற்சிகளை எடுக்கிறோம். பல

அமைப்புகளை உருவாக்குகிறோம் அவைகளைச் செய்யும் போது நமக்குப் பல கஷ்டங்களும் இடையூறுகளும் தொல்லைகளும் ஏற்படலாம், அதைக் கண்டு மனம் கலங்கக் கூடாது, மனம் உடைந்துவிடக் கூடாது.

அதைத் தான் சிதையா நெஞ்சு கொள் என்று பாரதி கூறுகிறார்.

## 28. சீறுவோர் சீறு

சீறுவோர் சீறு என்று கூறும் போது மற்றவர்களைக் காரணமில்லாமல் சீறக்கூடாது.

சமுதாயத்தில் சில கொடுமைக்காரர்கள் இருக்கிறார்கள். ஆட்சியில் சில கொடுங்கோலர்கள் இருக்கிறார்கள். பொறுப்புகளிலும் அதிகாரத்திலும் உள்ளவர்கள் சிலர் அவர்கள் மற்றவர்கள் மீது வீண்கோபம் கொண்டு சீறுகிறார்கள். சிறுமைப்படுத்துகிறார்கள். அதைக் கண்டு நாம் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாது. அவர்கள் ஆணவத்துடன் சீறினால் அவர்களுக்கு பதிலடி கொடுக்கும் முறையில் நாம் பதிலுக்கு சீற வேண்டும் என்பது பாரதியின் கொள்கையாகும்.

## 29. சுமையினுக்கு இளைத்திடேல்

இங்கு சுமை என்பது பொறுப்புகளாகும். பொறுப்புகளைச் சுமப்பது சுமையாகாது. அது கடமையாகும். நாம் மனிதனாகப் பிறந்தவுடனேயே ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி நமக்கு சில பொறுப்புகள் கடமைகள் ஏற்படுகின்றன. அந்தப் பொறுப்புகளையும் கடமைகளையும் நாம் முழுமையாக நிறைவேற்றிட வேண்டும் அதில் அரைகுறை இருக்கக்கூடாது.

நமக்கு குடும்பப் பொறுப்புகள் சுமைகள் ஏற்படுகின்றன. நமக்கு சமுதாயத்தின்பால் சில பொறுப்புகளும் கடமைகளும் ஏற்படுகின்றன. நமக்கு நாட்டின் பால் சில பொறுப்புகளும், கடமைகளும் ஏற்படுகின்றன. அந்தச் சுமைகளை நாம் ஏற்க வேண்டும்.

குடும்பப் பொறுப்புகள் என்று கூறும்போது, நமது குழந்தைகள் நமது வயதான பெற்றோர்கள், உடன்பிறந்த இளையோர்கள் முதலியவர்கள் பால் நமக்கு சில பொறுப்புகளும் கடமைகளும் ஏற்படுகின்றன.

அதேபோல் நமது நாட்டின்பாலும் நமது சமுதாயத்தின்பாலும் நாம் செய்யும் தொழில் மூலம் பொறுப்புகளும் கடமைகளும் ஏற்படுகின்றன. உதாரணமாக ஒருவர் ஆசிரியராகப் பள்ளியில் பணியாற்றுகிறார் என்றால் அவருக்கு அவரிடம் பயிலும் மாணவர்களுக்கு கல்வியறிவு புகட்ட வேண்டியது மிகப்பெரிய முக்கியமான கடமையும் பொறுப்பும் சுமையுமாகும். அதைக் கண்டு அவர் பின்வாங்கவோ புறக்கணிக்கவோ பொறுப்புகளைக் குறைத்துக் கொள்ளவோ தட்டிக் கழிக்கவோ கூடாது.

அதேபோல ஒரு மாணவன் படிக்கும் போது அவருடைய பாடங்களையோ புத்தகங்களையோ ஆசிரியர்களின் போதனைகளையோ ஒரு தலைச்சுமையாக பாரமாகக் கருதக்கூடாது. மாணவப் பருவத்தில் அவன் கற்றுக் கொள்ள வேண்டிய அடிப்படைக் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும். அது அவருடைய கடமையும் பொறுப்புமாகும். அதில் குறை கூடாது.

ஒருவர் ஒரு நிறுவனத்திற்கு, ஒரு அமைப்பிற்கு, அல்லது அரசு நிர்வாகத்துறையில் அல்லது நாட்டைக் காக்கும் படைத்தொழிலில் பொறுப்பு வகித்தால் அவருக்கு முன்புள்ள சமுதாயக் கடமையும் நாட்டுக் கடமையும் முதலிடம் பெற வேண்டும். அந்தச் சுமைகளை ஏற்றுச் செயல்படுவதில் நாம் இளைத்துவிடக்கூடாது. குறைந்துவிடக்கூடாது எனபதை நமது குழந்தைகளுக்கு நினைவுகூர்ந்து பாரதி அறிவுறுத்துகிறார்.

## 30. சூரரைப் போற்று

எந்த ஒரு காரியத்தையும் வீரத்துடன், தீரத்துடன் திறம்பட செய்து முடிப்பவர்களைப் பாராட்ட வேண்டும் பலரும் செய்ய

முடியாத அருஞ்செயல்களைச் செய்து முடிக்கும் திறனுள்ளவர்களைப் பாராட்டுகிறோம்.

வீரம், தீரம், துணிவு, சூரத்தனம் ஆகியவை சிறந்த மனிதர்களின் அரிய குணங்களாகும். பன்முகமான வீரமும் தீரமும் அரும் செயல்களும் செய்து முடிக்கும் வீரர்களைச் சூரர் என்று போற்றுவர்.

*''சொல்லுக்கடங்காவே – பராசக்தி*
*சூரத்தனங்கள் எல்லாம்''*

என்று பராசக்தியின் சூரத்தனங்களைப் போற்றி பாரதி பாடுகிறார், நமது நாட்டில் எண்ணற்ற வீரர்களும் தீரர்களும் சூரர்களும் இருந்திருக்கிறார்கள்.

சூரத்தனம் என்றால் எதற்கும் அஞ்சாமல் எந்த எதிர்ப்பிற்கும் பயமின்றி வரும் விளைவுகளைப் பற்றி அஞ்சாமல் எந்தவிதமான கலக்கமும் இன்றி, ஒரு குறிக்கோளுக்காக ஒரு லட்சியத்திற்காக கொண்ட குறிக்கோளுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் அவைகளைத் திரணமாக மதித்து அசாதாரணமான துணிச்சலுடன் எடுத்த காரியத்தை நிறைவேற்றும் அருங்குணமாகும். இத்தகைய சூரத்தனம் மிக்கவர்களைச் சூரர்கள் என்று கூறுகிறோம்.

சொல்லுக்கடங்காத சூரத்தனங்களை நாம் நிறைவேற்றிட நமக்கு பராசக்தி வல்லமை தந்திடுவாள் என்று பாரதி கூறுகிறார்.

நமது கதைகளில் இதிகாசங்களில் புராணங்களில் சூரர்களைப் பற்றியும் அவர்களுடைய அருஞ்செயல்களைப் பற்றியெல்லாம் கூறப்பட்டிருக்கின்றன. அவர்கள் எல்லாம் நமது நாட்டின் நடமாடும் பாத்திரங்களேயாவர்.

நமது விடுதலைப் போராட்டக் காலத்தில் நாம் பல வீரர்களையும், தீரர்களையும், சூரர்களையும் நெஞ்சில் துணிவு கொண்ட பலரையும் கண்டிருக்கிறோம். அவர்களை எல்லாம் போற்றிப் பாராட்ட வேண்டியது நமது கடமையாகும்.

மகாபாரதக் கதையில் கர்ணன் தனது நண்பனுக்கு, போரில் துணையாக நின்று அதே சமயத்தில் தனக்கென தனிச்சிறப்புகளையும் கொண்டு போரில் சூரனாக விளங்குகிறான். கடோத்கஜனும் அபிமன்யுவும் பாரதப் போரில் தங்கள் சூரத்தனத்தைக் காட்டியுள்ளனர்.

இராமயணப் போர்க்கதையில் இந்திரஜித்தும் அதிகாயனும் தங்கள் தந்தைக்காக குலமானத்தைக் காக்க சூரத்தனத்தைக் காட்டுகிறார்கள். சூரத்தனத்திற்கு இலக்கணமாக அதிகாயசூரன் என்று அடைமொழியிட்டு குறிப்பிடுவது வழக்கம். அதிகாயனின் சூரத்தனத்தை இராமனே போற்றுகிறான்.

பல்வேறு சூழ்ச்சிகள் சாகசங்கள், ஜாலவித்தைகள் வீரதீரச் செயல்களை சூரபத்மன் முருகனுடன் நடத்திய போரில் காட்டுகிறான், முருகனே சூரபத்னை வென்ற பின்னர் அவனைப் போற்றி அவனை இரண்டாகப் பிளந்து ஒரு பாதியை தனது கொடியில் சேவலாகவும் மறுபாதியை தனது வாகனமான மயிலாகவும் வைத்துப் பாராட்டுகிறான்.

கண்ணன் ஆயர்பாடியில் செய்த அருஞ்செயல்கள் எல்லாம் சூரனுக்குரிய செயல்களாகும், சத்திரியர்களும், பிராமணர்களும் சமமானவர்கள் என்று காட்ட பலமான தவங்களையும் துணிச்சலான பல காரியங்களையும் சூரத்தனமாகச் செய்து விஸ்வாமித்திரன் 'பிரம்மரிஷி' என்னும் பட்டம் பெற்றான்.

ஒரு ஊரில், ஒரு நாட்டில், ஒரு கொடியவன், ஒரு கொடுங்கோலன், ஒரு அரக்கன், ஒரு காட்டில் கொடிய மிருகம், மக்களுக்குப் பல கொடுமைகளையும் தொல்லைகளையும் துன்பங்களையும் கொடுக்கும் போது அவர்களுக்கு எதிராகப் போரிட்டு வெற்றி காணும் வீரர்களை மக்கள் சூரர்கள் எனப் பாராட்டிப் போற்றுகிறார்கள்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அந்த ஆட்சியாளர்கள் நடத்திய கொடுமைகளுக்கு எதிராக தங்களை அர்ப்பணித்துக் கொண்டு போராடிய வீரர்களைப் பாராட்டுகிறோம்.

ஜாலியன்வாலாபாக் படுகொலையைக் கண்டித்து மத்திய சட்டமன்றத்தில் குண்டுவீசி தூக்கு மேடை ஏறிய பகத்சிங்கையும் அவரின் தோழர்களையும் தீரர்கள், சூரர்கள் எனப் போற்றுகிறோம்.

தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரமும், சுப்பிரமணிய சிவாவும் நடத்திய போராட்டத்திற்கு எதிராக கொடிய அடக்குமுறையை ஏவிவிட்ட ஆஷ் என்னும் ஆங்கிலேயனை மணியாச்சி ஜங்ஷனில் சுட்டுக் கொன்று தன் உயிரையும் மாய்த்துக் கொண்ட வாஞ்சிநாதனை தீரன் எனப் பாராட்டுகிறோம். இந்த வகையில் நமது நாட்டில் எத்தனையோ சூரர்கள் வாழ்ந்து காட்டி நமக்கு வழி காட்டியுள்ளார்கள்.

அத்தகைய சூரர்களை நாம் பாராட்டிப் போற்ற வேண்டும் என்பதை பாரதி நினைவுப்படுத்துகிறார்.

## 31. செய்வது துணிந்து செய்

ஒன்றைச் செய்வது என்பது அனைவருக்கும் உரிய செயலாகும். அச்செயல் நல்ல செயலாக இருக்க வேண்டும். பிறர்க்கு நன்மை பயக்கும் செயலாக இருக்க வேண்டும். நாம் செய்வதைத் துணிந்து செய்ய வேண்டும்.

'எண்ணித்துணிக கருமம்' என்பது வள்ளுவர் வாக்கு. துணிவு என்பது மனிதனுக்கு மிகவும் அவசியமானது. ஒரு செயலைச் செய்ய முனைந்துவிட்டால், அதில் எத்தனை இடையூறுகளும் கஷ்டங்களும் நேர்ந்தாலும் நாம் துணிவுடன் அக்காரியங்களைச் செய்து முடிக்க வேண்டும்.

*''துஞ்சு மட்டும் இப்பாரத நாட்டிற்கே*
*கொண்டிழைக்கத் துணிந்தவர் யாவரும்*
*திலகனுடைய நாமத்தைக் கூற வேண்டும்''*

என்று பாரதி கூறுகிறார்.

ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டு கொண்டிருந்த காலத்தில் தேசத்தொண்டு என்பது ஒரு துணிவுமிக்க செயலாகும், அன்னிய ஆட்சியார்களால் எல்லாவிதமான தொல்லைகளும் தேசபக்தர்களுக்கு இருந்தன.

போலீஸ் தொல்லை, சிறைவாசம், சித்திரவதை, தேசப்பிரஷ்டம் முதலிய பல கொடுமைகளையும் தாங்கி நிற்கும் துணிவைக் கொண்டிருந்தனர் நமது தேசபக்தர்கள்.

*''பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்*
*கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்...''*

என்று உலகில் உள்ள அனைவரும் அனைத்து உயிர்களும் மக்களும் பறவைகளும், விலங்குகளும், பூச்சி, புல், பூண்டு மரங்கள் யாவும் எனது செயலால் இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழவேண்டும் என்று தேவ தேவனை வேண்டுகிறார். பாரதியின் பரந்த உள்ளத்தை நாம் என்றும் மறக்க முடியாது.

*''சுருதிப் பொருளே வருக*
*துணிவே, கனலே வருக''''*

என்று பாடுகிறார்.

*''கடமை செய்வீர், நந்தேசத்து வீரக்*
*காரிகைக் கணத்தீர் துணிவுற்றே''*

என்று பெண் விடுதலைக்காக நமது நாட்டு மகளிர் எல்லாம் ஒன்று திரண்டு துணிவுடன் தங்கள் கடமைகளைச் செய்ய முன்வர வேண்டும்மென்று பாரதி கூறுகிறார்.

நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்வது நாட்டின் விடுதலை லட்சியங்களுக்காக மக்கள் நலன்களுக்காகப் பாடுபடுவது அதற்கு இடையூறாக உள்ள சக்திகளுக்கு எதிராகப் போராடுவது ஆகிய பணிகளில் நாம் துணிவுடன் பங்கு கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல, நாம் வேறு எந்த வேலை செய்தாலும் என்ஜினியர்கள், டாக்டர்கள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், தொழில்முனைவோர், தொழிலாளர்கள், விவசாயிகள், கவிஞர்கள், கலைஞர்கள் முதலிய உழைப்பாளர்கள் யாவரும் எந்தப்பணிகளில் ஈடுபட்டாலும் அவைகளை நிறைவேற்றுவதில் துணிவுடன் ஈடுபட வேண்டும். அதையே 'செய்வது துணிந்து செய்' என்று பாரதி கூறியுள்ளார்.

## 32. சேர்க்கை அழியேல்

சேர்க்கை என்பது சேர்ந்து வாழுதல், நட்புடன் இருந்தால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தும், சேர்ந்து நின்றும் கூட்டாகப் பணி ஆற்றலாகும். இந்த சேர்க்கைக்கு நாம் ஊறு விளைவிக்கக் கூடாது.

ஊருடன் கூடிவாழ் என்பது பழையசொல். இத்தகைய கூட்டு வாழ்க்கையை அழித்துவிடக் கூடாது. அத்துடன் மற்றவர்களுடைய நட்பையும் சேர்க்கையையும் உலை வைத்து அழித்து விடக் கூடாது.

மனிதனுக்கு நட்பு என்பது ஒரு நல்ல பண்பாகும். அத்தகைய நட்புகளை வளர்க்க வேண்டும். சிலர் நல்ல நண்பர்களுக்கிடையிலும் பகையை உண்டாக்கிக் கெடுத்து விடுகிறார்கள். குடும்பத்தில் உள்ள சேர்க்கையைப் பிரித்து சின்னபின்னமாக்கி விடுகிறார்கள். ஊரை இரண்டாக்கி விடுகிறார்கள். மத ஒற்றுமையை நல்லிணக்கத்தை, சாதி ஒற்றுமையை நல்லிணக்கத்தை குலைத்து சண்டைகளை உண்டாக்கி விடுகிறார்கள். சிலர் நாடுகளுக்கு இடையில் பகையை உண்டாக்கி விடுகிறார்கள். இவையெல்லாம் சுயநலமிகளின் சூழ்ச்சிகளும் விளையாட்டுகளுமாகும்.

இத்தகைய சூழ்ச்சிகளுக்கும், சூதாட்ட விளையாட்டுகளுக்கும் இடமளிக்காமல் மனிதர்களுக்கு இடையில் உள்ள சேர்க்கையை குடும்பத்தில் உள்ள சேர்க்கையை ஊரில், நாட்டில் உள்ள மக்களின் சேர்க்கையை உலக நாடுகளுக்கு இடையில் உள்ள நல்லெண்ணங்களின் சேர்க்கையை அழித்து விடாமல் பாதுகாக்க வேண்டும்.

## 33. சைகையிற் பொருளுணர்

நாம் பல நல்ல காரியங்களைச் செய்யும் போது அவைகளைச் சொல்லாமலேயே செய்ய வேண்டும். அச்செயல்களைச் செய்வதற்கு அடையாளம் காட்டினால் போதும் அதைச் செய்து முடிக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மக்கள் தங்கள் வீடுகளில் ஆடு, மாடுகள், நாய், கழுதை, குதிரை, ஒட்டகம், பன்றி முதலிய வீட்டு விலங்குளையும் கோழி, வாத்து, புறா முதலிய வீட்டுப் பறவைகளையும் வளர்க்கிறோம். அவை நமக்குச் சில அடையாளங்களைத் தெரிவிக்கின்றன. நாம் அவைகளின் பொருளுணர்ந்து அவைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.

அவைகளும் தங்கள் சைகைகளால் நமக்கு உதவி செய்கின்றன. கோழி (சேவல்) காலையில் கூவி நம்மை காலை வேலைகளுக்கு எழுப்பி விடுகிறது. நாய் குரைத்து நண்பர்களையும் பகைவர்களையும் அன்னியர்களையும் திருடர்களையும் அடையாளம் காட்டி விடுகிறது.

ஆடு, மாடுகள் தங்கள் சைகைக் குரலைக் காட்டும் போது உணவு அளிக்க வேண்டும் தண்ணீர் காட்ட வேண்டும் கறவை மாடுகளுக்குக் கன்றுகளை அவிழ்த்துவிட வேண்டும், கன்றுகளைப் பால் குடிக்க விட வேண்டும்.

மக்கள் தங்கள் கலை உணர்வுகள் மூலம் பல உண்மைகளைத் தெரிவிக்கிறார்கள். நாடகம் சினிமா, நாட்டியம், பாட்டுகள், இசை, சித்திரம், சிற்பம் முதலியவை மூலம் கிடைக்கும், மற்றும் வெளியிடப்படும் சாயல்கள் சைகைகளின் மூலம் பல பொருள்களை உணர்த்துகிறார்கள். அந்தக் கலைகள் மூலம் கிடைக்கும் மற்றும் வெளியிடப்படும் சாயல்கள் சைகைகளின் பொருள்களை உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்கான முயற்சிகளைச் செய்து பயிற்சி பெற வேண்டும்.

நாம் மாட்டு வண்டிகள் குதிரை வண்டிகளைப் பயன்படுத்தும் போது சில சைகைகள் சம்பவங்கள் மூலம் மாடுகளும் குதிரைகளும் செயல்படுகின்றன. நாய்கள் செயல்படுகின்றன. அந்த செயல்களையும் அதன் பயன்களையும் நாம் உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும்.

பஸ், லாரி, ரயில், கப்பல், விமானம் முதலியவைகளை புறப்பட வைக்கவும் நிறுத்தவும் திசை காட்டவும் நாம் சில

சைகைகளைப் பயன்படுத்துகிறோம். அவைகள் அந்தப் போக்குவரத்து சாதனங்களை இயக்குவதற்கு மிகவும் அவசியமானதாகும். அவைகளை நாம் நன்கு கற்று அவைகளின் பொருளை உணர்ந்து செயல்பட வேண்டும்.

## 34. சொல்வது தெளிந்து சொல்

நாம் பேசுவது தெளிவாகப் பேச வேண்டும். பொருள்பட பேச வேண்டும். நாம் என்ன பேசுகிறோம் எதைப் பேசுகிறோம் எப்படிப் பேசுகிறோம் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு, புரிந்து கொண்டு பேச வேண்டும், சொல்ல வேண்டும்.

கற்கக் கசடற என்பது வள்ளுவர் வாக்கு. எதையும் சந்தேகமின்றிக் கற்றுத் தெளிய வேண்டும். அப்போதுதான் வாக்கிலே தெளிவுண்டாகும். நாம் சொல்வதைத் தெளிவுபடச் சொல்ல முடியும்.

சொல்வன்மை பற்றி வள்ளுவர் மிக அழகாகக் கூறுகிறார்.

*''திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்*
*பொருளும் அதனினூ உங்கில்''*

என்பது குறள். ஒன்றை நாம் சொல்லும் போது அச்சொல்லின் திறன். கேட்போரின் திறன் அறிந்து சொல்ல வேண்டும். அச்சொல்லில் அறமும் பொருளும் விளங்க வேண்டும்.

ஒன்றை மற்றவர்களுக்கு நாம் சொல்ல விரும்பினால் அவைகளைத் தெளிவுபடச் சொல்ல வேண்டும். நாம் அச்சொல்லின் அறனையும் பொருளையும் தெரிந்து, தெளிந்து, சொல்ல வேண்டும். கேட்பவர்கள் அதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும்படி சொல்ல வேண்டும்.

## 35. சோதிடந்தனை யிகழ்

சோதிடம் வேதக்கணிதத்தின் பகுதியாக ஆராயப்பட்டிருக்கிறது. சூரியன், சந்திரன், பூமி, இதர கிரகங்கள் சுடர்கள் முதலியவற்றையும், அவைகளின் அசைவையும் செயல்பாடுகளையும் ஆதாரமாகக் கொண்டு பஞ்சாங்க சாஸ்திரம்

வேதகாலம் தொட்டு நமது நாட்டின் ஆராயப்பட்டு வந்திருக்கிறது. அதை வைத்து யுகம், ஆண்டு (அறுபது ஆண்டுகள்) மாதம், வாரம், நாள், நாழிகை, வினாடி, கணம் முதலிய காலக்கணிப்புகளும் செய்யப்பட்டு வந்திருக்கின்றன.

நமது நாட்டின் பஞ்சாகமும் காலக் கணிதமும் மிகவும் பிரபலமானதாகும். சோதிடக் கலை காலக்கணிதம் பற்றிய ஏராளமான நூல்களும் நமது நாட்டில் பண்டய காலத்தில் பெருகிவளர்ந்துள்ளன.

அவைகளின் ஆதார சாஸ்திரங்களை வைத்து அவைகளை படித்துஆய்வு செய்தும் வளர்க்கப்பட வேண்டும். அவைகள் இடைக்காலத்தில் பல்வாறு சேதப்பட்டு விட்டன.

பலவகையான போலிச்சுவடிகளும் புகுந்து விட்டன. அதனால் பல வகை ஊகங்களும் ஆரூடங்களும் புகுந்து பல வகை மூடநம்பிக்கைகளுக்கும் இடம் கொடுத்து விட்டன. அதையே பாரதி சோதிடந்தனை இகழ் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இன்று சோதிடம், காலக்கணிதம், வேதக் கணிதங்கள் சூரியன், சந்திரன், பூமி, கிரகங்களின் அசைவுகள் செயல்பாடுகள் பற்றிய வானவியல், இவைகளில் பண்டய இந்தியாவின் கண்டுபிடிப்புகள், சாதனைகள் பற்றிய பல பழைய நூல்களும் சாத்திரங்களும் ஆராயப்பட் வேண்டும். அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

சோதிடக் கணிப்புகளில் காணப்படும் பல பாதகமான விளைவுகளுக்குப் பல பரிகாரங்களும் கூறப்படுகின்றன.

மேலும் விதி, வினை முதலியவைகளினால் விளையும் தீய விளைவுகளுக்கு மதியாலும், வல்லமையாலும் பரிகாரம் காணப்படுகின்றன.

எனவே கிரக பலன்களை கணிப்பதோடு நிற்காமல், அவைகளில் சில வகை மூட நம்பிக்கைகளுக்கு இடம் கொடுக்காமல், அவைகளுக்கு பரிகாரம் கண்டு சமாளிக்கும் அறிவாற்றலையும் வல்லமையையும் பெற வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும்.

## 66. சௌரியந் தவறேல்

நாம் சாதாரணமாக நமது உறவினர்களையோ நண்பர்களையோ வேண்டியவர்களையோ சந்தித்தால் சௌகரியம் நலமா, சௌக்கியமாக இருக்கிறீர்களா என்று கேட்பது வழக்கம். இங்கு சௌரியம் என்பது பொதுவாக உடல் நலம் என்று பொருள்படுகிறது, ஆயினும் இதர எல்லா நலன்களும் ஓரளவு நன்றாக இருந்தால் தானே உடல் நலனும் நன்றாக இருக்க முடியும்.

எல்லா நலன்களும் என்றால், இன்றைய சமுதாய நாகரிக வளர்ச்சியில் உள்ள வசதிகள் அனைத்தும் அனைவருக்கும் கிடைக்கும் அளவில் உற்பத்தியும் வினியோகமும் சிறப்பாக சீராக இருக்க வேண்டும் என்பதாகும்.

இன்று மனிதனுடைய வாழ்க்கை நலனுக்காக தேவைகள் அதிகரித்து வருகின்றன. அத்தேவைகளை நிறைவேற்றும் அளவிற்கு விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியும் உற்பத்தி வளர்ச்சிக்கான வாய்ப்புகளும் அதிகரித்து வருகின்றன.

எண்ணற்ற வகையான நல்ல ருசியான சத்து நிறைந்த உணவுப்பண்டங்கள் விதவிதமான அழகிய நல்ல தேவையான ஆடைகள் எல்லா விதமான வசதிகளையும் கொண்ட வீடுகள் தொடக்கல்வி முதல் வளர்ச்சியடைந்த பல்கலைக்கல்வி தொழில் நுட்பக் கல்வி, விஞ்ஞானக் கல்வி, ஆய்வுக்கூடங்கள் எண்ணற்ற நூல்கள், அறிவியல் நூல்கள், இலக்கியங்கள், பொழுதுபோக்கு வசதிகள் அறிவியல் பூர்வமான பொழுதுபோக்கு வசதிகள், உயர்ந்த விளையாட்டு வசதிகள், மிக விரைவான போக்குவரத்து வசதிகள், தகவல் தொடர்பு சாதனங்கள், அறிவு வளர்ச்சிக்கான விரிவான சாதனங்கள், கணிப்பொறிகள் முதலிய பலவும் இன்று உற்பத்தி செய்யப்பட்டு மக்களின் அன்றாடப் பழக்கத்திற்கு வந்து விட்டன.

ஆயினும் இந்த சௌரியங்கள் எல்லாம் எல்லோருக்கும் இன்னும் கிடைக்கவில்லை. அந்த சௌரியங்கள் அனைத்தும்

அனைவருக்கும் தவறாமல் கிடைக்க வேண்டும். அதற்கான அரசியல், பொருளாதார வர்த்தக, வாணிப அமைப்புகளை உருவாக்க வேண்டும். உற்பத்திப் பெருக்கத்தையும் சீரான வின்யோக முறைகளையும் செயல்படுத்த வேண்டும். அத்தகைய சமுதாயக் குறிக்கோளை வைத்து நாம் முன்செல்ல வேண்டும். லோகாயத நலன்களோடு ஆன்மீக நலன்களையும் இணைத்துப் பேணவேண்டும்.

## 37. ஞமலி போல் வாழேல்

ஞமலி என்றால் நாய், மனிதன், நாய் போல வழக்கூடாது என்பது பாரதி வாக்கு. நாய்ப்பிறவியும், நாய்ப் பிழைப்பும் மிகவும் கீழானது எனக் கருதப்படுகிறது. நாய் எச்சிலைத் தின்று வாழ்கிறது. அது மிகவும் கீழ்த்தரமானது. மனிதன் எச்சிலைத் தின்று வாழும் நிலைமை கூடாது.

நாய்க்கு ஏதாவது எலும்புத் துண்டைப் போட்டால் வாலை ஆட்டிக் கொண்டு பின்னால் வரும். அப்படி மனிதன் எலும்புத் துண்டுக்காக அல்லது எச்சில் காசுக்காக யார் பின்னாலும் போகக்கூடாது அது மிகவும் கேவலமான பிழைப்பாகும், அது கூடாது.

நாயை யார் மீதாவது ஏவி விட்டால் பாயும், காரணமில்லாமல் பாயும், அது போல் மனிதன் காரணமின்றி உசுப்பிவிட்ட இடத்தில் பாயக்கூடாது. அது அறிவற்ற செயல்.

நாய் மற்றொரு நாயைக் கண்டு விட்டால் போதும் குரைக்கும், சண்டைபோடும், கடிக்கும் மனிதர்கள் யாராவது சண்டை போட்டுக் கோண்டால் என்ன இவர்கள் நாய்களைப் போல் அடித்துக் கொள்கிறார்கள்? என்று கூறுவார்கள். மனிதன் அப்படி வாழக்கூடாது அடித்துக் கொள்ளக்கூடாது.

***''இன்று பாரதத்திடை நாய் போல்***
***ஏற்றமின்றி வாழுவாய் போ, போ, போ''***

என்று நாய் போல் ஏற்றமின்றி கீழ்த்தரமான முறையில் வாழும் பாரதத்தை போ, போ, என்று பாரதி கூறுகிறார்.

***சத்திரபதி சிவாஜி என்னும் கவிதையில்.***
***''தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடும் மிலேச்சரை***
***மாய்த்திட விரும்பார் வாழ்வுமோர் வாழ்வுகொல்''***
***------------------------------***
***தாய்ப்பிறன் கைப்பட சகிப்பவனாகி***
***நாயென வாழ்வோன் நமரில் இங்குளனோ''***

என்று பாரதி குறிப்பிடுகிறார்.

எந்த விதமான மானமும் ரோசமும் இன்றி நாய்போல் கீழ்நிலையில் வாழ்வதைப் பாரதி பல இடங்களிலும் கண்டித்துப் பேசுகிறார்.

கோபம் வந்தால் ''போடா நாயே'' என்று திட்டுவார்கள் அவ்வாறு கேவலப்பட்டு மனிதன் வாழக்கூடாது.

நாய் கண்ட இடத்தில்வாய் வைக்கும் அம்மாதிரி நாய்களைக் கண்டவர்களும் விரட்டிபடிப்பார்கள். அப்படிப்பட்ட ஈனவாழ்வு மனிதனுக்கு ஏற்படக்கூடாது.

*''குப்பை விரும்பும் நாய்க்கே – அடிமை*
*கொள்ளத்தவிசு முண்டோ''*

என்று ஆங்கிலேயன் நம்மைப் பார்த்து ஏளனமாகப் பேசுவதாகவும்.


***''நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்***
***நாய்களோ – பன்றிச்சேய்களோ***
***நீங்கள்மட்டும் மனிதர்களோ – இது***
***நீதமோ, பிடிவாதமோ''***

என்ற அந்த ஆங்கிலேய அதிகாரிக்கு இந்திய தேசபக்தன் பதில் கூறுவதாகவும் பாரதி குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

எனவே நமது கவிக்குயில் பாரதி ''ஞமலியோல் வாழேல்'' என்று நமது குழந்தைகளுக்கு போதிக்கிறார்.

## 38. ஞாயிறு போற்று

இளங்கோவடிகள் தனது சிலப்பதிகாரக் காப்பியத்தின் வாழ்த்துப் பாடலில் முதல் பாடலாக ''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்'' என்று தொடங்குகிறார். கடவுள் வாழ்த்தாகவே 'ஞாயிறு போற்றுதும்' என்று பாடுவது தனிச்சிறப்பானதாகும். ஞாயிறு – சூரியன் கண்கண்ட தெய்வம். சூரியனை நாள்தோறும் நாம் நேரில் காண்கிறோம்.



ஞாயிறு நமக்கு வெளிச்சத்தைத் தருகிறது. வெயிலைக் கொடுக்கிறது. வெப்பத்தை அளிக்கிறது. சூரியன் தெரியும் போது பகல் சூரியனுடைய ஒளியைப் பெற்று சந்திரன் பிரதிபலித்து இரவில் நமக்கு நிலவைத் தருகிறது. அதற்கும் சூரியனே காரணம்.

சூரியனுடைய ஒளி மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் பூமண்டலத்தில் உள்ள ஜீவராசிகள் அனைத்திற்கும் புல், பூண்டு, செடி, கொடி, மரம் முதலிய தாவரங்கள் அனைத்திற்கும் சிறு புழுக்கள் முதல் பறவையினங்கள் விலங்கினங்கள் அனைத்திற்கும் மண்ணிலும் கடலிலும் காற்றிலும் உள்ள பல்வேறு உயிரினங்களுக்கும் உயிரைக் கொடுக்கிறது. சூரிய வெப்பம் இல்லாவிட்டால் உலகில் எந்த உயிரினமும் உயிர் வாழ முடியாது.

மனிதனும் மற்ற பல்வேறு விலங்குகள், பறவைகள் தாவர இனங்கள் உயிர் வாழ்வதற்கும் வளர்ச்சியடைவதற்கும் வாழ்வுச்சுற்று ஏற்படுவதற்கும் காரணமாக உள்ள ஞாயிறை மக்கள் தொன்று தொட்டு போற்றி வணங்கி வந்துள்ளனர். காலையிலும் மாலையிலும் சூரியன் உதிக்கும் போது மறையும் போதும் அதை 'சந்தி' என்று கூறி வணக்கம் செய்வது நம்மில் பலருக்கும் பழக்கமாகும்.

பூமியின் வடக்குக் கோளத்தில் தட்சணாயணம் முடிந்து உத்தராயணம் தொடங்கும் போது அதை விழாவாகக் கொண்டாடுகிறார்கள். அதை சங்கராந்தி என்றும் தைப் பொங்கல் என்றும் இந்திய மக்கள் கொண்டாடுகிறார்கள்.

உத்தராயணத் தொடக்கமான தை மாதம் முதல் தேதியையும், தட்சணாயணத் தொடக்க நாளாக ஆடி மாதம் முதல் தேதியையும் தமிழ் மக்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

சூரியனுடைய சின்னமாக பூமியில் நெருப்பு இருக்கிறது. நெருப்பு நமக்குப் பல வழிகளிலும் பயன்படுகிறது. அதனால் தான் மக்கள் நெருப்பையும் கடவுளாகப் பாவித்துக் கொண்டாடி வருகிறார்கள்.

*''ஞாயிறும் காற்றும் நல்ல நீரும் தீயும்*
*மண்ணும் திங்களும் மீன்களும்''*

என்றும்

*ஆதவா நினை வாழ்த்திட வந்தேன்*

*அணி கொள்வான்மும் காட்டுதி சற்றே*

எனவும்

*''செஞ்சுடர்த் தேவன் சேவடி நமக்கே''*

என்றும்

*''ஆதித்தாய் தந்தை நீவீர் உமக்கே*
*ஆயிரம்தரம் அஞ்சல் செய்வேன்''*

என்றும் பாரதி பலமுறை போற்றிப் பாடுகிறார். அதை நமது குழந்தைகளுக்கும் போதிக்கிறார்.

## 39. ஞிமிரென இன்புறு

ஞிமிர் என்றால் தேனீ அல்லது மலர் வண்டு என்று பொருளாகும். தேனீக்களும் மலர் வண்டுகளும் மலர்கள் தோறும் செல்கின்றன. மலர்களில் உள்ள தேனை எடுக்கின்றன.

அதிலுள்ள மகரந்தத்தை மற்ற மலர்களுக்கும் கொண்டு சென்று இனவிருத்திக்கு உதவுகிறது.

தேனீக்கள் மலர்களில் சென்று அமர்ந்து அதிலுள்ள தேனை எடுத்து சிறுகச் சிறுக தனது கூடுகளுக்குக் கொண்டு சென்று அக்கூடுகளில் தேனைச் சேமித்து வைக்கிறது. அந்தத் தேனை ராணி ஈயும், ஆண் ஈக்களும் உண்டு தங்கள் இனவிருத்தியைச் செய்கின்றன.

மலர் வண்டுகளோ, மலர்களில் அமர்ந்து மதுவை உண்டு மயக்கத்தில் ரீங்காரத்துடன் இசை பாடுகின்றன. இதைக் கவிஞர்கள் ரசித்து தங்கள் கவிதைகளில் அழகு ததும்ப எடுத்துக் கூறுகிறார்கள்.

தேனீக்களும் வண்டுகளும் தங்கள் வேலைகளை இயல்புணர்விலேயே செய்கின்றன. அவைகளின் இயல்பான தொழிலாக அவை அமைந்திருக்கின்றன. அந்த வேலையை அந்த இயல்பான தொழிலைச் செய்யும் போது அவை மகிழ்ச்சியுடன் செய்கின்றன. அப்பணியில் அவை ஆனந்தமடைகின்றன. அதாவது பெருமகிழ்ச்சியடைகின்றன. ஆட்டபாட்டத்துடன் அந்த வேலையைச் செய்கின்றன. பூக்களை வட்டமிட்டு சுற்றிச் சுற்றி வருகின்றன. ஒரு மலரில் தேனைத் தொட்டு மகிழ்ந்து மறு மலருக்குச் செல்கின்றன.

தேனீக்களும் மலர் வண்டுகளும் மலருக்குள் செல்லும் போது தேனை எடுக்க அதைத் தொடும் போது ஒரு நெகிழ்ச்சி ஏற்படுகிறது. மலர்களில் ஒரு புதிய வளர்ச்சி ஒரு புதிய திண்மை ஏற்படுகிறது. இவ்வாறு இயற்கையில் நிகழும் ஒரு மகத்தான வளர்ச்சிப் பணியில் தேனீக்களும் வண்டுகளும் தனது இயல்பான பணியாகப் பங்கு பெறுகின்றன. இப்பணிகளில் ஈடுபடும் போது அந்த தேனீக்களும் மலர் வண்டுகளும் மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்படுகின்றன.

நாமும் நமது இயல்பான உணர்வாக நமது இயல்பான செயலாகத் தொழில் செய்ய வேண்டும். எந்தத் தொழிலையும உவந்து செய்ய வேண்டும், மகிழ்ச்சியுடன் செய்ய வேண்டும். சுறுசுறுப்பாகச் செய்ய வேண்டும். அத்தொழில் செய்வதில் இன்பம் காண வேண்டும்.

இவ்வாறு நாம் தொழில் செய்யும் போது தேனீக்களைப் போல் மலர் வண்டுகளைப் போல் இன்புற்று மகிழ்ச்சியடைய வேண்டும் என்றும் பாரதி போதிக்கிறார்.

## 40. ஞெகிழ்வதருளின்

ஞெகிழ்வது என்பது மனம் இளகுதல் உருகுதல், மலர்தல் என்று பொருளாகும். இளகிய மனம் இருப்பது ஒரு சிறந்த பண்பாடாகும். அதை நமது குழந்தைகளிடமும் இளைய தலைமுறையினரிடமும் வளர்க்க வேண்டும்.

ஒருவர் துன்ப துயரத்தில் இன்னலுறும் போது அவர்கள் மீது இரக்கம் கொண்டு உதவி செய்ய வேண்டும். அதையே ''எளிமை கண்டு இரங்குவாய் வா வா'' என்று பாரதி அழைக்கிறார்.

பாரதி இளகிய மனம் கொண்டவர். ஒருநாள் அவரது வீட்டில் சாப்பாட்டுக்கு அரிசி இல்லை. அவருடைய துணைவியார் அடுத்த வீட்டில் கொஞ்சம் கடனாக அரிசி வாங்கிக் கொண்டு வந்து அதைத் தட்டில் வைத்திருந்தார். அந்த அரிசியை எடுத்து பாரதி குருவிகளுக்குப் போட்டு ஆனந்த மடைந்தார் என்று ஒரு நிகழ்ச்சி உண்டு.

அவருடைய மன நெகிழ்ச்சிக்கு அவருடைய சுதந்திரப்பயிர் என்னும் பாடல் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளது.

*''தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரைக்*
*கண்ணீரால் காத்தோம் கருகத்திருவுளமோ?*

என்றும்

*''ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்*
*வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?*

என்றும்

*''நின்பொருட்டு நின்னருளால்*
*நின்னுரிமையாம் கேட்டால்*
*என் பொருட்டு நீதான் இரங்காதிருப்பதுவோ?*

என்றும் நெஞ்சுருகப் பாடுகிறார்.

*''சொந்த சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும்*
*சிந்தை இரங்காரடி – கிளியே*
*சிறுமையடைவாரடி''*

என்றும் நெஞ்சு நெகிழ்ந்து மனமுருகிப் பாடுகிறார். புதிய ருஷ்யா என்னும் பாடலில் பாரதி.

*இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால்*
*வனவாசம், இவ்வாறங்கே*
*செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே*
*அறமாகித் தீர்ந்த போதில்*
*அம்மை மனம் கனிந்திட்டாள்''*

என்று அம்மையின் இரக்கத்தைப் பற்றி பாரதி கூறும் போது கவிஞரின் உள்ளத்தின் உருக்கத்தைக் காட்டுகிறது.

*''நாட்டை நினைப்பாரோ'' என்று,*
*''வீட்டை நினைப்பாரோ'' என்றும்*
*''அவர் விம்மி, விம்மி, விம்மி, விம்மி விம்மியழுங்குரல்,*
*கேட்டிருப்பாய் காற்றே''*

என்றும் அன்னிய கரும்புத் தோட்டங்களில் நமது நாட்டு மக்கள் படும் துன்ப துயரங்களைக் கேட்டு பாரதியின் நெஞ்சு நெகிழ்கிறது. எனவே நெஞ்சு நெகிழ்ச்சி இளகிய மனம் இரக்கக் குணம் நமக்கு அருள வேண்டும் என்று பாரதி கோருகிறார்.

## 41. ஞேயங் காத்தல் செய்

ஞேயம் என்றால் நேயம், நட்பு, தோழமை என்று பொருள்படும், நட்பைக் காக்க வேண்டும். நட்பு புனிதமானது, மனிதனுக்கு மனிதன் நட்பை வளர்க்க வேண்டும். ஒரு மனிதனுக்கு நட்பு என்பது மிகவும் அவசியமான பண்பாகும். ஒருவருடைய நல்ல பண்புகளையும் குணங்களையும் அறிந்து கொள்வதற்கு உன் நண்பர்கள் யார் என்று கேட்பார்கள். நல்ல நண்பர்கள் நற்பேறாகும், நண்பர்கள் என்றால் பரஸ்பரம் உதவி

செய்பவர்களாவும் பரஸ்பரம் மதிப்புக் கொடுப்பவர்களாகவும் விட்டுக் கொடுப்பவர்களாகவும் ஆருயிர் துணைவர்களாகவும் விளங்க வேண்டும். ஒருவர் பொறை இருவர் நட்பு, என்பதும் ஒரு இலக்கணமாகும்.

இராமாயணத்தில் இராமன் – குகனுடனும், சுக்ரீவனுடனும் வீடணனுடனும் கொண்ட நட்பு உலகில் அறத்தை நிலைநாட்ட உதவியது. மகாபாரத்தில் துரியோதனன் கர்ணன் நட்பு நட்புக்கு இலக்கணமானதாகும்.

கார்ல் மார்க்ஸ் – பிரடரிக் ஏங்கல்ஸ் ஆகிய இருவரின் நட்பும் மனிதாபிமானமும் பொதுவுடமை தத்துவமும் உருவாவதற்கு உதவியது. இவ்வாறு இலக்கியங்களிலும் வாழ்க்கையிலும் சிறந்த நட்பிற்கு பல உதாரணங்களைக் காணலாம்.

சமுதாய வளர்ச்சிக்கு மனித நேயம் மிக அவசியமானதாகும். வெறுப்பு பகைமை பொறாமை ஆகியவைகளுக்குப் பதிலாக அன்பு, நட்பு, நேசம், கருணை மனிதனுக்கு மனிதன் மரியாதை கொடுத்த திறமைகளை அங்கீகரித்தல் ஆகியவை வளர்க்கப்பட வேண்டும்.

பாரதி தனது கவிதைகளில் பாடல்களில் உயர்ந்த பட்ச மனிதாபிமானப் பண்பை வெளிப்படுத்தியுள்ளார்.

அன்பே சிவம், உலகத் துயர் யாவும் அன்பினில் போகும் என்று புத்தன் கூறிய மொழியை பாரதி எடுத்துக் காட்டுகிறார்.

புவிமிசை தருமமே அரசியலதனிலும் பிற இயல் அனைத்திலும் வெற்றி தரும் என்று வேதம் கூறுவதாக பாரதி எடுத்துக் காட்டுகிறார். உலகில் அறவழியே அரசியலிலும் இதர துறைகள் அனைத்திலும்வெற்றிதரும் என்று பாரதி கூறுவது இன்று மிகவும் நல்ல பொருத்தமுடையதாகும். திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும் தேர்ந்த கல்விஞானம் எய்தி இந்த நாட்டில் வாழ்வோம் என்று பாரதி விடுதலைப்பாட்டில் குறிப்பிடுவது உயர்ந்த மனித நேயத்தை வெளிப்படுத்துகிறது.

உயிரெலாம் இன்புற்றிருக்க வேண்டும் எனவும் யார்க்கும் அன்பனாய், யார்க்கும் இனியனாய் வாழ்ந்திட விரும்பினேன் எனவும் மண்ணினும் காற்றினும் வானினும் எனக்குப் பகைமையில்லை என்றும் மண் மீதுள்ள மக்கள் பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புல், பூண்டு, மரங்கள் யாவும் என் வினையால் இடும்பைத் தீர்ந்து இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடச் செய்தல் வேண்டும் என்றும், அனைத்து உயிரினங்களும் இன்பமுடன் இணைந்து நேயத்துடன் வாழ பாரதியின் கருத்துக்கள் உயர்ந்த நிலையிலான மனித நேயத்தை வெளிப்படுத்துவதாகும்.

பாரதி வழியில் ஞேயம் காத்தல் செய்து உலகில் அனைத்து உயிர்களும் இன்புற்றிருக்க ஆவன செய்ய நமது குழந்தைகளுக்கு வழிகாட்டுவோமாக.

## 42. தன்மையிழவேல்

தன்மையென்றால் மனிதத்தன்மை நல்ல இயல்பு நாம் மனிதத் தன்மைகளையும் நல்ல இயல்புகளையும் இழந்து விடக் கூடாது. மனிதத்தன்மையோடு இருப்பதற்கு முதல் நிபந்தனை மனிதன் சுதந்திரமாக இருக்க வேண்டும்.

சாதி, மதங்களைப் பாரோம், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்னும் மனித உணர்வு இருக்க வேண்டும்.

ஞானம், உயர்ந்த மானம், தீரம், படை வீரம், நெஞ்சில் ஈரம் நன்மை உடல் வன்மை, செல்வப்பன்மை மறத்தன்மை (வீரம்) முதலிய மனிதத்தன்மைகளை நல்ல இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

ஆக்கம், தொழில் ஊக்கம், புயவீக்கம், உயர்நோக்கம், வண்மை உளத்திண்மை, மனத்திண்மை மதிநுண்மை, உண்மை, யாகம், தவவேகம், தனியோகம், பல போகம், ஆகம், அருள் முதலிய மனிதத்தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

மனிதத் தன்மையிழவேல் என்று கூறும் பாரதி, இன்னல்கள் வரும் போது அதற்கு அஞ்சமாட்டோம், ஏழையராகி இனி இந்த

பூமியில் தூங்கிக் கொண்டிருக்க மாட்டோம். தன்னலம் கருதி இழிவான தொழில்களைச் செய்யமாட்டோம் தாய்த்திரு நாடு என்றால் இனி கையை விரிக்க மாட்டோம் என்று கூறுகிறார்.

சுடுதலும் குளிரும் உயிருக்கு இல்லை. சோர்வும் வீழ்ச் சியும் தொண்டருக்கில்லை என்னும் தன்மை இருக்க வேண்டும்.

தன்மையிழவேல் என்று கூறும் பாரதி, அஞ்சி அஞ்சிச் சாகாதே, சிப்பாயைக் கண்டு அஞ்சாதே, சேவகனைக் கண்டு மனம் பதைக்காதே, எப்போதும் கை கட்டி நிற்காதே, யாரிடத்திலும் பூனைகள் போல் ஏங்கி நடக்காதே, சூது செய்யும் நீசர்களுக்குப் பணிந்திடாதே, பாமரராய் விலங்குகளாய் உலகம் அனைத்தும் இகழ்ச்சி சொல்லும் நிலைமையில் 'இருக்காதே ஊமையராய் செவிடர்களாய், குருடர்களாய் இருக்காதீர் என்று பாரதி கூறுகிறார்.

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாக வேண்டும். எங்கும் சுதந்திரம் எல்லோரும் சமம், எல்லோரும் ஒன்று, நல்லோரே பெரியோர் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், யாருக்கும் அடிமையில்லை என்னும் தன்மைகளை நாம் இழந்துவிடக் கூடாது.

தொண்டு செய்யும் அடிமையாக இருக்காதே. சாதிச்சண்டை போடாதே. சமயச் சண்டை போடாதே. அச்சத்தை நீக்கு. ஆண்மையைத் தாங்கு. கப்பல் விமானம் ஏறக் கற்று கொள், கடலைத் தாண்டக் கற்றுக் கொள். ஒற்றுமை பயில், வேற்றுமை பேசாதே, சேர்ந்து வாழக் கற்றுக் கொள் சோர்ந்து விழாதே சோம்பலைத் துடைத்தெறி, சிறுமைக் குணங்களைப் போக்கு, நாட்டைக் காக்க சேனைகளை நடத்து என்றெல்லாம் பாரதி நமக்கு எப்படி மனிதத்தன்மை இழக்காமல் நாம் வாழ வேண்டும் என்பதைக் கூறியுள்ளார்.

ஊக்கமும், உள்வலியும் உண்மையில் பற்றும் கொண்டிருக்க வேண்டும், மனதில் சலனம் இல்லாமல் மதியில் இருளே தோன்றாமல் இருக்க வேண்டும். நம்முடைய கடமை என்பது

தன்னைக் கட்டுப்படுத்தி நடத்தல், பிறருடைய துயர்களைத் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல், உயிர்களெல்லாம் இன்புற்றிருக்க வேண்டுதல் ஆகிய தன்மைகளை வளர்க்க வேண்டும்.

தன்னைத்தான் ஆளும் தன்மையைப் பெற்றிடில் எல்லாப் பயன்களும் தாமே எய்தும் என்று பாரதி கூறியதை நாம் என்றும் நினைவில் கொள்ள வேண்டும்.

## 43. தாழ்ந்து நடவேல்

நம்மைத் தாழ்த்திக் கெண்டோ, கீழான முறையிலோ நாம் நடந்து கொள்ளக் கூடாது. தாழ்வு மனப்பான்மை கூடாது. பலவீனப்பட்டு விடக்கூடாது. உயர்ந்த எண்ணங்களும் நல்ல நடத்தையுமே கைக் கொள்ள வேண்டும்.

மடமை, சிறுமை, துன்பம், பொய், வருத்தம், நோவு, மற்றிவை போல் உள்ள தாழ்ந்த நிலை போக வேண்டும். அழுகுதல் சாதல், அஞ்சுதல் முதலிய இழிபொருள்களை விலக்க வேண்டும்.

அடிமை மனோபாவத்தை நீக்க வேண்டும். அதைப் புல்லடிமைத் தொழில் என்று பாரதி குறிப்பிடுகிறார். அந்த புல்லடிமைத் தொழிலை தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ள வேண்டும். நமக்கு இன்னல்கள் வரும் போது அதற்கு அஞ்சுதல் கூடாது. என்றும் ஏழையராகி இனி மண்ணில் துஞ்சோம் என்றும், தன்னலம் பேணி இழிதொழில் புரியோம் என்றும் பாரதி கூறுகிறார்.

எப்போதும் கைகட்டி நின்று யாரிடத்தும் பூனைகள் போல் தாழ்ந்து நடக்கக் கூடாது. நீதிநூறு சொல்லுவாய் காசொன்று நீட்டினால் வணங்குவாய் போ, போ, போ என்று அத்தகைய இழிகுணத்தைச் சாடுகிறார்.

நெஞ்சில் உரமும், நேர்மைத்திறனும் இல்லாமல் கண்கள் இரண்டிருந்தும் காணும் திறமையில்லாமல் அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்திற் கொண்டு மானம் சிறிதென்று எண்ணி, வாழ்வு பெரிதென்றெண்ணி தாழ்வுற்றுப் போகாதே என்று பாரதி தனது பாடல்கள் மூலம் இக்கருத்தை வெளிப்படுத்துகிறார்.

## 44. திருவினை வென்று வாழ்

திருவென்றால் செல்வம். செல்வம் என்பது பொருட்செல்வம், கல்விச்செல்வம் முதலிய எட்டு வகைச் செல்வங்களாகும். பதினாறும் பெற்றுப் பெறுவாழ்வு வாழ்க என்று புதுமணத் தம்பதிகளை வாழ்த்துவார்கள். பதினாறும் பெற்று என்றால் பதினாறு குழந்தைகளைப் பெறுவது என்பதல்ல, பதினாறு வகை நலன்கள் என்று பொருளாகும். இச்செல்வத்தை வென்றெடுக்க வேண்டும் என்பது பாரதி வாக்கு.

திருவே, மலரின் மேவு திருவே, கமலமேவும் திருவே செல்வம் எட்டும் எய்தி – நின்னால் செம்மையேறி வாழ்வேன், இல்லையென்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன் என்று பாரதியார் பாடுகிறார்.

திருவே. திருவே என்று திருமகளை அழைக்கிறார் பாரதி. திருமகள் எட்டு வகை செல்வங்களின் வடிவம். திருமகளின் அருளால் எட்டு வகை செல்வங்களையும் பெற்று இல்லையெனும் கொடுமை இவ்வுலகில் இல்லை என்று ஆக்குவேன் எனக் கூறுகிறார்.

பொன், மணி, மாளிகை, மணிக்குளம், சோலை, அன்னம், நறுமணம் உள்ள நெய், பால், ஆடு, மாடு, அழகுடைய பரிகள் வீடு, நெடுநிலம் ஆகியவை அடங்கிய திருவை வென்று வாழ வேண்டுமென பாரதி வழி காட்டுகிறார்.

வறுமை என்னும் சிறுமையில் புதைந்துள்ள நிலை மாற வேண்டும். அதனால் ஏற்படும் வேதனையும் சோர்வும் போக வேண்டும்.

கீழ்மக்களின் அவமதிப்பு தொழில் கெட்டவர்களின் இணக்கம், கிணற்றினுள் மூழ்கிய விளக்கு போலச் செய்யும் முயற்சியெல்லாம் கெட்டு முடிதல், ஏழ்கடல் ஓடியும்ஒரு பயனும் எய்திட வழியில்லாமல் இருப்பது ஆகிய கொடுமை நோய் அந்த வறுமை நோய் ஒழிய வேண்டும்.

பொன்னில், மணியில், பூவில் சாந்தில், விளக்கில், புன்சிரிப்பில், செழுமையான காட்டில், பொழில்களில் கழனியில், அதில் பாடுபடும் மக்களின் துணிவினில் மன்னன் முகத்தினில் வாழும் திருவினை வென்று வாழ வேண்டும்.

மண்ணுக்குள் உள்ள கனிவளங்களில் மலை வாய்ப்புகளில் கடல் ஆழத்தில் புண்ணிய வேள்விகளில், புகழில், மதியில், புதுமையில், பாவையில், நல்ல பாட்டில், கூத்தில், படத்தில், வெற்றி கொள் படையினில், பல விநயங்கள் அறிந்தவர் கடையில் நற்றவர் நடையினில் நல்ல நாவலர்களின் தேமொழியில் உள்ள திருவின், அந்த அன்னையின் அருளைப் பெற்று வென்று வாழ வேண்டுமென்ற பாரதி கூறுகிறார்.

பாரதி வறுமையின் கொடுமையை உணர்ந்தவர். நேரடியாக அனுபவித்தவர். அன்னிய ஆட்சியில் நாட்டு மக்கள் அனுபவித்த வறுமையின் கொடுமைகளைக் கண்டு மனம் நொந்தவர்.

பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ – நாங்கள் சாகவோ என்று மனம் நொந்து பாடினார்.

இந்த வையத்து நாட்டில் எல்லாம் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நிற்கும் பாரத நாடு என்று பாரதி மனம் வேதனைப்பட்டு குறிப்பிடுகிறார்.

இத்தகைய வறுமை, பஞ்சம், நோய் முதலிய கொடுமைகளை வெறுத்த பாரதி நாட்டு மக்கள் இந்தக் கொடுமைகளிலிருந்து விடுபட்டு எட்டு வகைத் திருவினை வென்று நல்வாழ்வு எய்திட வேண்டும் என்று நமது எதிர்காலத்தின் பிஞ்சுகளுக்கு பாரதி அறிவுரை கூறுகிறார்.

## 45. தீயோர்க்கு அஞ்சேல்

அஞ்சேல், அஞ்சேல் என்று அடிக்கடி குழந்தைகளுக்கு அறிவுரை கூறுகிறார் பாரதி. இந்தப் புதிய ஆத்தி சூடியிலேயே கீழோர்க்கஞ்சேல், பேய்களுக்கஞ்சேல், சாவதற்கஞ்சேல், தொன்மைக்கஞ்சேல் என்றெல்லாம் செய்யுள்களைக் கூறியுள்ளார்.

பயம் என்பது ஒரு பேய். அது ஒரு பொய். எனவே பயம் கூடாது. பயம் பீடித்தால் மனிதன் நாசமடைந்து போவான். பயம் ஏற்பட்டு விட்டால் மனிதன் அடிமைப்பட்டு விடுவான். பாரதி காலத்தில் நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது. மக்களின் பெரும்பாலோர் அஞ்சி அஞ்சி செத்தார்கள். எதற்கும் அஞ்சினார்கள். அதனால் மக்களுக்கு துணிவு உண்டாக்குவதற்காக அஞ்சேல் அஞ்சேல் என்று பாரதி அடிக்கடி கூறினார்.

அடிமைப்பட்டு கிடந்த பாரத மக்களின் பரிதாபகரமான நிலைமையைப் பற்றி பாரதி :

*''அஞ்சி அஞ்சிச் சாவார் – இவர்*
*அஞ்சாத பொருளில்லை அவனியிலே''*

என்று குறிப்பிடுகிறார்.

அரசு நடத்துவதற்கு நாம் வரி கொடுக்கிறோம். நாம் வாங்கி உபயோகிக்கும் பொருள்களின் விலைகளில் எல்லாம் வரியும் அடங்கியுள்ளது. இவ்வாறு நாம் கொடுக்கும் வரிப்பணத்தைக் கொண்டு அரசுகள் நாட்டை ஆள்கின்றன. அந்த அரசியலைக் கண்டு நாம் ஏன் பயப்பட வேண்டும். அதை பாரதி.

*''தந்த பொருளைக் கொண்டே – ஜனம்*
*தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்*
*அந்த அரசியலை – அவர்*
*அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம் அயர்வார்''*

என்று குறிப்பிடுகிறார்.

அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய மக்கள் நிலை.

*''சிப்பாயைக் கண்டு அஞ்சுவார்கள்*
*ஊர்ச்சேவகன் வருவதைக் கண்டு மனம்*
*பதைத்து பயந்து சாவர்கள்*
*துப்பாக்கி கொண்டு ஒருவர் வெகுதூரத்தில்*

*வருவதைக் கண்டு வீட்டிற்குள் ஓடி ஒளிவார்கள்*
*அப்பால் வேறு ஒருவன் வந்தால் அவனுடைய*
*ஆடைகளைக் கண்டு பயந்து எழுந்து நிற்பார்கள்*
*எப்போதும் கைகட்டி பயந்து நிற்பார்கள்''*

என்று கூறி மனம் நொந்தும் அதே சமயத்தில் உணர்ச்சி வேகத்துடன் அஞ்சேல் அஞ்சேல் என்று நம்மைத் தட்டி எழுப்புகிறார். குறிப்பாக தீயோர்க்கு அஞ்சேல் என்று இளைஞர்களுக்கு துணிவூட்டுகிறார்.

*''பாதகம் செய்பவரைக் கண்டால் – நாம்*
*பயங் கொள்ளலாகாது பாப்பா*
*மோதி மிதித்து விடு பாப்பா – அவர்*
*முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா''*

என்று பாரதி பாப்பாவுக்காகப் பாடுகிறார்.

நன்மை வந்தெய்துக, தீதெலாம் நலிக, அறம் வளர்த்திடுக, மறமடிவுறுக என்று தீதுகள் ஒழியவும் அதர்மம் அழியவும் பாரதி வாழ்த்துக் கூறுகிறார்.

*''நல்லோர் பெரியர் என்னும் காலம் வந்ததே – கெட்ட*
*நயவஞ்சகக் காரருக்கு நாசம் வந்ததே''*

என்று பாரதி குரல் கொடுக்கிறார்.

தீயவர்கள், கெட்டவர்கள், பாதகர்கள், சமூகத்திற்கு எதிரானவர்கள், கொடுங்கோலர்கள், கொடுமைக்காரர்கள், தேசவிரோதிகள். முதலியோருக்கு அஞ்சாமல் அவர்களை எதிர்த்துப் போராடி அத்தீய சக்திகளைப் மாய்க்க வேண்டும் என்பதை பாரதி வலியுறுத்திக் கூறுகிறார்.

## 46. துன்பம் மறந்திடு

நமக்கு அடிக்கடியும் அவ்வப்போதும் துன்பங்கள் துயரங்கள், இன்னல்கள் ஏற்படுகின்றன. அதைக் கண்டு நாம் கலங்கக்

கூடாது. அதை ஒரு கெட்டகனவு போல் அப்போதே மறந்து விட வேண்டும் என்று பாரதி கூறுகிறார்.

*"இன்று எமை வருத்தும் இன்னல்கள் மாய்க"*

என்றும்

*"என்று நமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகி மறையும்"*

என்றும் கூறுகிறார்.

பாரதிக்கு திலகர் மீது நல்ல பற்றுதல் உண்டு. உயர்வான மதிப்பும் மரியாதையும் உண்டு. திலகரைப் பற்றி பல கோணத்திலும் பாரதி பாடியுள்ளார். திலகர் தேசிய இயக்கத்தில் தீவிரவாதிகள் பிரிவின் தலைவர். திலகரைப் பற்றி.

*"துன்பம் என்னும்கடலைக் கடக்கும்*
*தோணி அவன் பெயர்" என்று குறிப்பிடுகிறார்.*

நமக்கு வரும் துன்பங்கள் கடலைப் போல் இருந்தாலும் அதனைத் திலகரைப் போன்ற தலைவர்களின் வழிகட்டுதலை அறிவுரைகளைத் தோணிகளாகக் கொண்டு அத்துன்பக் கடலைக் கடக்க வேண்டும் என்று பாரதி குறிப்பிடுகிறார்.

*"துயர்கள் தொலைந்திடுக*
*கவலைப்படுதலே கருநாகமாம்*
*கவலையற்றித்தலே முக்தி"*

என்று துன்பத்தை மறந்திட பாரதி வழிகாட்டுகிறார்.

"துன்பம் வேண்டேன் துடைப்பாய் போற்றி" என்று இறைவனை வேண்டி அகவல் பாடுகிறார்.

*"துன்பம் நீக்கிவிட்டாய் – காளி*
*தொல்லை போக்கிவிட்டாய்"*

என்று காளியிடம் கூறுகிறார்.

*"துன்பமே இயற்கையெனும்*
*சொல்லை மறந்திடுவோம்*
*இன்பமே வேண்டி நிற்போம்"*

என்றும் தேச முத்து மாரியிடம் கேட்கிறார்.

*''துன்பமும் இல்லை – கொடும்*
*துன்பமும் இல்லை.*

என்று பாரதி தனது தத்துவ தரிசனத்தில் பாடுகிறார்.

*''துன்ப நினைவுகளும் சோர்வும் பயமும் எல்லாம்*
*அன்பினில் அழியுமடி – கிளியே''*

என்று கிளிப்பாட்டில் கூறுகிறார்.

*''இன்பத்தை இனிதெனவும் – துன்பம்*
*இனிதில்லை என்றும் அவன்*
*எண்ணுவதில்லை''*

என்றும்,

*''துன்பத்தில் நொந்து வருவோம் – தன்னை*
*தூவென்று இகழ்ந்து சொல்லி*
*அன்பு கனிவாள்''*

என்றும்,

*''துன்பமும் நோயும் மிடிமையும் தீர்த்துச்*
*சுகமருளல் வேண்டும்''*

என்றும்,

*''துன்பம் இனியில்லை, சோர்வில்லை, தோற்பில்லை*
*அன்பு நெறியினில் அறங்கள் வளர்த்திட''*

என்றும் பாரதி கண்ணன் பாட்டுகளில் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

## 47. தூற்றுதல் ஒழி

தூற்றுதல் என்பது பிறரை அவதூறு செய்து தூற்றுதலாகும். ''கொடுத்தால் போற்றுவதும் கொடுக்காவிட்டால் தூற்றுவதும் வேண்டாம்''.

*''எண்ணம் கெடுதல் வேண்டாம்*
*நல்லவே எண்ணல் வேண்டும்''*

என்று பாரதி பாடுகிறார்.

கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது அரசியலிலும் பொது வாழ்விலும் இன்னும் நாம் சந்திக்கும் அத்தனை பேரிடையிலும் சகஜமாகும். கணவன் – மனைவி கருத்து வேறுபாடுகள் முதல் ஊரில், நாட்டில், உலகில் அத்தனை பிரச்சனைகளிலும் ஏற்படும். ஒவ்வொருவரும் சிந்திக்கும் போது, கருத்து மாறுபாடுகளும் வேறுபாடுகளும் தோன்றுவது இயல்பாகும். அவைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதுவே ஜனநாயக மரபாகும். தற்கால நாகரிக சிந்தனையாகும். கருத்தொற்றுமை உடன்பாடு. பொதுக்கருத்து இவ்வாறு முடிவுக்கு வருவது தான் முறையாகும். அதற்கு பதில் சில சுயநலக்காரர்கள் ஆணவமும், ஆதிக்கக்குணமும் கொண்டவர்கள் தாங்கள் சொல்வதற்கு இசையாதவர்களுக்கும் தனக்கு ஆகாதவர்களுக்கும் எதிராக அவதூறு செய்வதும், தூற்றுவதும் வசை பாடுவதும் இழிசெயலாகும்.

*''ஒரு நாயை அடிக்க வேண்டுமானால் அதற்கு வெறிபிடித்து விட்டது என்று சொல்லி அடி''*

என்று ஒரு ஆங்கிலச் சொல் உண்டு. ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்தியாவை ஆளும்போது அத்தகைய முறைகளைத்தான் கையாண்டார்கள். அதற்கு அவர்கள் ராஜதந்திரம் அரசியல் சூத்திரம் என்றார்கள். தேசபக்தர்களையும் தேசத்தலைவர்களையும் அவதூறு செய்து சதி வழக்குகள் வரை தொடுத்தார்கள். ஆங்கிலேய ஆட்சியின் பல நடைமுறைகளும் பல சட்ட முறைகளும் இன்னும் கூட நீடிக்கின்றன. குறிப்பாக அரசியலில் அவதூறும் ஒரு பகுதியாக உள்ளது.

அரசியல் என்பது ஆட்சியின் நீதிமுறை. அதை மக்களுக்கு எடுத்துக் கூறி அவர்களைப் படிப்பித்து அவர்களுடைய ஜனநாயக உணர்வு நிலையையும் பொறுப்பு மற்றும் கடமையுணர்வுகளையும்

உரிமைகள் மற்றும் விழிப்புணர்வுகளையும் உயர்த்துவதே அரசியல் கட்சிகளின் முதல் கடமையாகும். அதை விடுத்து இன்றைய அரசியல் கட்சிகளில் உள்ள பல அரசியல்வாதிகளும் எப்படியாவது பதவிக்கும் ஆட்சி அதிகாரத்திற்கும் வர வேண்டும் என்னும் நொக்குடன் மற்றவர்களை அவதூறு செய்வது அரசியலின் ஒரு பகுதியாக்கி ஜனநாயக அரசியலை மாசுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தற்கால அரசியலில் லஞ்சம் ஊழல் அவதூறு, மோசடி, கோஷ்டிப் போக்குகள், வேண்டியவர்களுக்கு சலுகை, ஏமாற்றுதல், பொதுச் சொத்துக்ளைக் கொள்ளையடித்தல், கையாடல் கருப்புப்பணம் சேர்த்தல் கடத்தல் முதலிய பல இழிசெயல்களையும் அரசியல்வாதிகளும் ஆட்சிப் பொறுப்புகளில் உள்ள நிர்வாகிகள் மற்றும் அதிகாரிகளும், இன்னும் கிரிமினல்களும் சேர்ந்து போது வாழ்வில் அவதூறுகளை அள்ளி வீச அரசியல் என்னும் அறநெறியைப் பெரிதும் மாசுபடுத்தி உள்ளார்கள்.

எனவே பாரதியின் தூற்றுதல் ஒழி என்பது இன்றைக்கும் பொருத்தமானதாகும்.

## 48. தெய்வம் நீ என்று உணர்

பாரதியின் புதிய ஆத்திசூடியில் இது ஒரு அருமையான செய்யுளாகும். குழந்தைகளைப் பார்த்து ''தெய்வம் நீ என்று உணர்'' என்று போதிப்பது பாரதிக்கே உள்ள தனிச்சிறப்பாகும். பாரதியே, நீ வாழ்க.

குழந்தையே தெய்வம் என்னும்கருத்திலும் கடவுள் எல்லா இடத்திலும் உள்ளான், உன்னிலும் என்னிலும் சகல பொருள்களிலும் உள்ளான் என்னும் கருத்திலும் 'தெய்வம் நீ என்று உணர்' என்று குழந்தையிடம் பாரதி கூறுகிறார்.

பாரதியின் தெய்வக் கொள்கை பொதுமைக் கொள்கையாகும். ஒரு சார்பு கொண்டதல்ல. பாரதி தேசத்தையே தாயாக பராசக்தியாக பாஞ்சாலியாக பாவித்துப் பாடுகிறார். 'பாரத மாதா' என்று பாடுகிறார். 'தமிழ் தாய்' என்று பாடுகிறார். பாரதி

மலைமகளையும் கலைமகளையும் திருமகளையும் பற்றி பாடுகிறார். பாரதி சிவனையும், பிரம்மாவையும், திருமாலையும் குறித்துப் பாடுகிறார். பாரதி கண்ணனையும், கணபதியையும், முருகனையும் பற்றிப் பாடுகிறார், பாரதி அனைத்து சமயங்களின் உட்கருத்துக்களையும் போற்றுகிறார். பாரதி கடைசியில் அறிவே தெய்வம் அன்பே தெய்வம் என்றும் 'தெய்வம் நீ என்று உணர்' என்று கூறுகிறார்.

பாரதி எந்தக் கடவுளைப் பற்றிப் பாடினாலும் அதில் மையமாக அவருடைய மனதில் உள்ள வேண்டுதல், நாடும், நாட்டு மக்களும் உலக மக்களும், மக்களின் நல்வாழ்வும் மனிதனின் முழு விடுதலையுமாகும்.

பாரதி, பாரத மாதாவைப் பற்றிப் பாடும் போது பாரத நாட்டின் சிறப்புகளைப் பற்றிக் கூறுகிறார். ''ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள் உலகின் பக்கேணி'' என்றும் இவ்வுலகை இன்பமயமாக்கலே அவருடைய சிந்தனையில் பெரிதும் நின்றது.

பாரதத்தாயைத் தெய்வமாகப் பாடிய பாரதி அக்கவிதைகளில் தேச ஒற்றுமை தேச ஒருமைப்பாடு, அறம், நாடு, ஆட்சி முறை, ஆகிய கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்.

யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே என்று பிரபஞ்சம் முழுவதையும் ஒன்றாக்கி அந்த இயற்கையின் வடிவமாகப் பாரதி கடவுளைக் கற்பிக்கும் போது அந்த இயற்கையின் பகுதியாக உன்னிடம் ''தெய்வம் நீ என்று உணர்'' என்று கூறுகிறார்.

பாரதி தனது சக்திப் பாடல்களில் சிவசக்தியை இயற்கையென்றும், பஞ்சப்பூத சக்தியென்றும், செயற்கையின் சக்தியென்றும், தீ என்றும், அறிவென்றும், ஈசனென்றும் பலவகையாகக் கூறுவதாகக் குறிப்பிட்டுப் பரந்த அவரது கடவுள் கொள்கை மூலம் 'தெய்வம் நீ என்று உணர்' என்று குழந்தையிடம் கூறுகிறார்.

மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம், கடவுளின் மக்கள் என்றுணர்தல் என்பது கடவுள் பறறிய பொதுக்கருத்தாகவே பாரதி குழந்தைகளிடம் 'தெய்வம் நீ' என்று கூறுகிறார்.

கடைசியில் அறிவே தெய்வம் என்னும் கருத்தையும் முன்வைத்து

*''ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி*
*அலையும் அறிவிலிகாள் – பல்*
*ஆயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம்*
*முண்டாம் எனல் கேளீரோ?*

என்றும்,

*''மெள்ளப் பல தெய்வம் கூட்டி வளர்த்து*
*வெறும் கதைகள் சேர்த்து – பல*
*கள்ள மதங்கள் பரப்பு தற்கோர் மறை*
*காட்டவும் வல்லீரோ''*

என்றும் முடிவுரை கூறி, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் புதிய திசை வழியில் செல்ல பாரதி புது நெறி காட்டுகிறார்.

அதை வைத்தே ''தெய்வம் நீ என்று உணர்'' என்று பாரதி நமது குழந்தைகளுக்குப் போதிக்கிறார்.

## 49. தேசத்தைக் காத்தல் செய்

பாரதியின் புதிய ஆத்திசூடியில் இந்த அரிய கருத்துள்ள தேசபக்தச் செய்யுளும் ஒரு நல்ல ஆணி முத்துமாகும்.

தேசம், தேசபக்தி தேசத்தைக் காத்தல், நாடு, நாட்டுயர்வு, நாட்டை வளர்த்தல், இவையெல்லாம் பாரதியின் கவிதா மண்டலத்தில் நடு நடுநாயகமாக அடிநாதமாக ஆதார சுருதியாக உள்ள லட்சியக் கருத்தாகும்.

நாடு விடுதலை பெற வேண்டும். இந்த நாடு நமது. இதைக் காத்தல் நமது தலையாய கடமை, ''பாருக்குள்ளே நல்ல நாடு – எங்கள் பாரத நாடு'' என்பது பாரதியின் வாக்காகும்.

*''இன்னல் வந்துற்றிடும் போது அதற்கஞ்சோம்*
*ஏழையராகி இனி மண்ணில் துஞ்சோம்*
*தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்*
*தாய்த்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்''*

என்று நாட்டைக் காப்பது பற்றி பாரதி கூறுகிறார்.

*''பாரத பூமி பழம்பெறும் பூமி*
*நீரதன் புதல்வர் இந்நினை வகற்றாதீர்*
*பாரதநாடு பாருக்கெல்லாம் திலகம்*
*நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்''*

என்று பாரதி நமது நாட்டைப் பற்றி நமக்கு நினைவூட்டுகிறார்.

ஒரு ஆங்கிலேய அதிகாரி இந்தியனை இழித்து உரைப்பதாகக் கற்பித்து பாரதி கூறும் கவிதையில் ஆங்கிலேய அதிகாரி கூறுவது.

*''நாடு காப்பதற்கே – உனக்கு*
*ஞானம் சிறிதும் உண்டோ*
*வீடு காக்கப் போடா – அடிமை*
*வேலை செய்யப் போடா''*

என்று இழிவாக ஆங்கில அதிகாரி பேசுகிறான். இதில் பாரதி காட்டும் கருத்து இப்படி அன்னியர் நம்மை இழிவுப்படுத்தும் நிலை கூடாது. மாற வேண்டும், நாம் நமது நாட்டைக் காக்கும் நிலை மாற வேண்டும் என்பதாகும். ஆங்கிலேயருடைய இந்த ஏளனப்பேச்சுக்கு மாறாக, முதலாவது உலகப்போரிலும் சரி, பின்னர் வந்த இரண்டாம் உலகப்போரிலும் சரி இந்திய தளபதிகளைக் கொண்ட இந்திய ராணுவம் இந்திய முப்படை தனது வீரத்தைக் காட்டி நிரூபித்து நமது பாதுகாப்புத் திறனை மற்றவர்கள் அங்கீகரிக்கும் நிலை ஏற்பட்டது.

நாடு விடுதலை பெற்ற பின்னர் நமது நாட்டின் முப்படைகளும் நமது நாட்டைக் காப்பதில் உறுதியாக உள்ளது மட்டுமல்ல நமக்கு வேண்டிய தளவாடங்கள், ஆயுதங்கள் போர்க்கப்பல்கள், போர் விமானங்கள் முதலியவைகளின் உற்பத்தியிலும் தன்னிறைவு பெற்றுள்ளோம். அதன் மூலம் பாரதியின் கனவை நாம் நிறைவேற்றி இருக்கிறோம் என்று கூறலாம்.

நாடு விடுதலை பெற வேண்டும் என்று பாரதி பாடுபட்டார். நாட்டு விடுதலைக்காக மக்களைத் திரட்டி ஆவேசமான கவிதைகளை எழுதினார். கட்டுரைகள், கவிதைகள் எழுதினார் பத்திரிகைகள் நடத்தினார், தேசிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களிலே பங்கு கொண்டார். அக்கூட்டங்களில் தீவிரவாதிகளை ஆதரித்தார். நாடு நிச்சயம் விடுதலை பெறும் என்று நம்பிக்கைக் கொண்டிருந்தார். விடுதலை பெற்றதாகவே பள்ளுப்பாட்டைப் பாடினார்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டும் என்பதையும் பாரதி வலியுறுத்தினார். அதனால் ''தேசத்தைக் காத்தல் செய்'' என்று நமது குழந்தைகளுக்குப் போதனை செய்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பிற்கு அபாயம் இருவழிகளில் வரக்கூடும். ஒன்று வெளியிலிருந்து வரும் அபாயம் மற்றொன்று உட்பகை. இரு அபாயங்களும் இன்று இருக்கின்றன என்பதை நாம் காண்கிறோம்.

அதற்கு நமது நாட்டின் தற்காப்பைப் பலப்படுத்த வேண்டும். ராணுவத்தை முப்படைகளைப் பலப்படுத்த வேண்டும். நமது படைகளுக்குத் தேவையான நவீன ஆயுதங்களில் நாம் முன்னேற வேண்டும். அதில் முழுமையான தன்னிறைவு பெற வேண்டும்.

நமது நாட்டின் ஒற்றுமையை ஒருமைப்பாட்டைப் பலப்படுத்த வேண்டும். நமது நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும். விஞ்ஞான தொழில் நுட்பத்தை, உற்பத்தித் திறனைப் பலப்படுத்தி வளர்க்க வேண்டும். நமது நாட்டு மக்களின் தேசிய உணர்வு நிலையை உயர்த்த வேண்டும். நாட்டு மக்களின் தோற்றத்தையும் ஏற்றத்தையும் உயர்த்த வேண்டும். இந்திய நாட்டின் அடையாளத்தை உலக நாடுகளுக்கு உணர்த்த வேண்டும்.

இதைப் பாரதி தமது பாடல்களில் பல இடங்களிலும் வற்புறுத்திக் கூறியுள்ளார். அதை நாம் மனதில் கொள்ள வெண்டும். தேசத்தைக் காப்பது நமது தலையாய கடமை என்பதை நமது குழந்தைகளை உணரச் செய்ய வேண்டும்.

## 60. தையலை உயர்வு செய்

தையல் என்றால் பெண். பெண்களை உயர்வு செய்ய வேண்டியதற்கு பாரதி எப்போதுமே முதலிடம் கொடுத்துள்ளார். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் பழைய கருத்துக்களை எல்லாம் தூக்கி வீசியெறிந்து குப்பையில் போட்டு விட்டு ''அச்சமும் நாணமும் நாய்களுக்கு வேண்டுமாம், கற்பு நிலையென்றால் இருசாராருக்கும் பொதுவாக்குவோம்'' என்று உறுதியாக முதலில் பேசியவன் பாரதியேயாகும். இன்றைய பெண்ணுரிமை இயக்கத்திற்கு பாரதி முன்னோடியாவார்.

பெண் என்றால் தாய், தமக்கை, தங்கை, மனைவி, மகள், மருமகள், பேத்தி எனவே சமுதாயத்தின் சரிபாதி, இதை பாரதி மிக வலுவாக வலியுறுத்திப் பாடியுள்ளார்.

இன்று பாரத நாட்டின் பல பகுதிகளிலும் பெண்கள் அடிமையிலும் அடிமைகளாக இருக்கிறார்கள். அதில் சில மாற்றங்கள் அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருந்த போதிலும் இன்னும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். பெண்கள் நிலையை உயர்த்த வேண்டும். பெண்கள் படிக்க வேண்டும். எல்லாத் துறைகளிலும் பெண்கள் ஈடுபட வேண்டும், ஆண்களுக்கு நிகராக அனைத்துப் பணிகளிலும் பெண்கள் உயர வேண்டும். ஆண்களும் பெண்களும் சமமாக நின்று நாடு முன்னேறப் பாடுபட வேண்டும். இது பாரதியின் கருத்தாகும்.

*''மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமையைக் கொளுத்துவோம்*
*வைய வாழ்வு தன்னில் எந்த*
*வகையினும் நமக்குள்ளே*
*தாதர் என்ற நிலைமை மாறி*
*ஆண்களோடு பெண்களும்*
*சரிநிகர் சமானமாக*
*வாழ்வம் இந்த நாட்டிலே''*



என்று விடுதலைப்பாட்டில் பெண்களின் விடுதலையைப் பற்றி பாடத் தொடங்குகிறார்.

தனது பக்திப் பாடல்களில் சக்தியை அதிகமாகப் போற்றிப் பாடுகிறார். சக்தி, பராசக்தி, வள்ளி தேசமுத்துமாரி, கலைமகள், திருமகள், கண்ணம்மா என்றும் பாடுகிறார். பாஞ்சாலி சபதத்தைக் காவியமாகவே பாடி பெண்ணை உயர்த்துகிறார்.

*''பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்*
*மண்ணுக்குள்ளே சில மூடர் – நல்ல*
*மாதர் அறிவைக் கெடுத்தார்*
*கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்திக்*
*காட்சி கொடுத்திடலாமோ*
*பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்*
*பேதமை யற்றிடும் காணீர்''*

என்று பாரதி முரசுப்பாட்டில் கூறுகிறார்.

பெண்களுக்கு இயற்கையில் பொது அறிவும், அனுபவ அறிவும் அதிகம் இருக்கிறது. கேள்விஞானம் அதிகம் இருக்கிறது. ஆயினும் சில மூடர் அவர்களை அடக்கி வைத்து சமுதாய வளர்ச்சியைக் கெடுக்கிறார்கள்.

மனிதனுக்கு இரண்டு கண்கள் இருப்பதைப் போல சமுதாயத்தின் இரு கண்கள் ஆண்களும் பெண்களுமாகும். இதில் ஒன்றைக் குத்தி எடுத்து காட்சிப் பொருளாக வைக்கலாமா என்று பாரதி கேட்கிறார். பெண்களுடைய அறிவை வளர்த்தால் உலகில் பேதமை போகும் என்பது உண்மை. எனவே பெண்கள் நிலையை உயர்த்த வேண்டும்.

புதுமைப் பெண், பெண்விடுதலை, பெண்மை என்னும் தலைப்புகளில் பாரதி அருமையான கவிதைகளைத் தந்துள்ளார். அதில் பாரதி பெண்கள் விடுதலை பற்றியும், புதுமைப் பெண்ணின் உயர்வான கருத்துக்களையும் கொள்கைகளையும் வகுத்துக் கொடுத்துள்ளார்.

பெண்களே மக்களைப் பெற்று அவர்களை வளர்க்கிறார்கள். பெண்கள் அறிவிலும் வீரத்திலும் குணத்திலும் சிறந்தவர்களாக இருந்தால் அவர்களுடைய மக்களும் அறிவிலும் வீரத்திலும்,

குணத்திலும் சீலத்திலும், சிறந்தவர்களாக இருப்பார்கள் என்று நிலத்தின் தன்மை பயிர்களுக்கு உளதாகும் என்னும் எடுத்துக்காட்டுடன் பாரதி சுடடிக் காட்டுகிறார்.

''நூலைப் போல் சேலை, தாயைப் போல் பிள்ளை'' என்று நாட்டுப் பழமொழி இங்கு கவனிக்கத்தக்கது. நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் கொண்டு புதுமைப் பெண்கள் இருக்க வேண்டும் என்பது பாரதியின் வாக்காகும்.

வேதகாலத்தில் பெண்களுக்கு சமநிலை இருந்தது. பின்னர் மாற்றப்பட்டு கேடு விளைந்தது என்பது பாரதியின் கருத்து.

*''புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்*
*பொய்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச்*
*சதுமறைப்படி மாந்தர் இருந்த நாள்*
*தன்னிலே பொதுவான வழக்கமாம்,*
------------------------
*முதுமைக்காலத்தில் வேதங்கள் பேசிய*
*முறமை மாறிடக் கேடு விளைந்ததாம்''*

என்பது பாரதியின் கவிதையாகும்.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் சூதாட்டத்தில் பொன்னையும் பொருளையும் நாட்டையும் தன்னையும் தம்பியரையும் கடைசியில் பாஞ்சாலியையும் இழந்த பின்னர் பாஞ்சாலி சபைக்கு இழுத்து வரப்படுகிறாள். அப்போது பாஞ்சாலி சபையிலிருந்த பெரியோர்களைப் பார்த்து நீதி கேட்கிறாள். அப்போது வீட்டுமன் கூறுகிறார்.

*''சூதாடி நின்னை யுதிட்டிரனே தோற்றுவிட்டான்*
*வாதாடி நீயவன்றன் செய்கை மறுக்கின்றாய்*
*சூதிலே வல்லான் சகுனி, தொழில் வலியால்*
*மாதரசே, நின்னுடைய மன்னவனை வீழ்த்தி விட்டான்*
*மற்றிதனில் உன்னையொரு பந்தையமா வைத்ததே*

*குற்றமென்று சொல்லுகிறாய் கோமகளே பண்டைய யுக*
*வேதமுனிவர் விதிப்படி நீ சொல்லுவது*
*நீதமெனக்கூடும், நெடுங்காலச் செய்தியது.*
*ஆணொடு பெண் முற்றும் நிகரெனவே அந்நாளில்*
*பேணி வந்தார், பின்னால் இஃது பெயர்ந்து போய்*
*இப்பொழுதை நூல்களினை எண்ணுங்கால் ஆடவருக்*
*கொப்பில்லை மாதர், ஒருவன் தன் தாரத்தை*
*விற்றிடலாம், தானமென வேற்றவர்க்குத் தந்திடலாம்''*

என்றிவ்வாறு பதில் கூறுகிறார்.

பழைய வேதமுறைப்படி பெண்கள் சமமாகக் கருதப்பட்டனர். பின்னாளில் இது மாறிவிட்டது. உபநிடதங்களில் வருண முறை வகுக்கப்பட்டது. பின்னர் மனுவானவர் நீதி முறையை வகுத்தார். அதன் படி பெண்களும் சூத்திரர்களுக்குச் சமமானவர்களே என வகுக்கப்பட்டது. அதன்படி பிராமணப் பெண்கள் கூட சூத்திரர்களே. தொண்டு செய்வது அவர்கள் தொழில்.

பெண்கள் தந்தைக்கும், சகோதரர்களுக்கு கணவனுக்கும் பின்னர் பிள்ளைகளுக்கும் அடிமைபோல் ஆக்கப்பட்டார்கள். இந்த இழி நிலையை எதிர்த்தும் தொடர்ந்து கிளர்ச்சி நடந்து வந்துள்ளது.

பாஞ்சாலி சபையிலே வாதடினாள். அவள் குரலை சபையோர் கேட்கவில்லை. விகர்ணன் ஒருவன் மட்டும் பாஞ்சாலிக்கு ஆதரவாகப் பேசினான். கடவுளான கண்ணன் தான் பாஞ்சாலியின் அபயக்குரலுக்கு செவிகொடுத்து அவளுடைய மானத்தைக் காப்பாற்றினான்.

உபநிடதம் மற்றும் மனு நீதி முறைகளுக்கு எதிராக புத்தமும் சமணமும் கருத்துப் போராட்டம் நடத்தியது. புத்த சங்கங்களிலும் சமண மடங்களிலும் ஆண்களுடன் பெண்களும் சமமாகத் துறவு பூண்டு சமயத் தொண்டு செய்தனர். அதனால் பெண் துறவிகளுக்கும் சமுதாயத்தில் மதிப்பு ஏற்பட்டது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி ஆர்த்தெழுந்து பாண்டியன் சபையில்

வழக்குரைத்து தனது நியாயத்தை நிலை நாட்டி, அரசியல் பிழைத்தோர்க்கு அறத்தைக் கூற்றாக்கி மதுரையை எரித்து இறுதியில் முக்தியும் அடைந்தாள் என்று அறிகிறோம்.

மணிமேகலை தன்னைக் கண்ணகியின் மகள் எனக் கூறி, தத்துவ ஞானத்தில் முதன்மை பெற்று சமயக்கணக்கர்களுடன் வாதாடி வெற்றி பெற்று தனது அட்சய பாத்திரத்தின் மூலம் உலகின் பசிப்பிணியைப் போக்க முற்படுகிறாள்.

பின்னர் வந்த பக்தி இயக்கம் மீராபாய், காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்ற பெண்பால் பக்தர்களைத் தோற்றுவித்து மரியாதை செலுத்திற்று. ஆண்டாள் பக்தியில் சிறந்து கடைசியில் முக்தியும் பெறுகிறாள்.

இவ்வாறு சமுதாய நிலைமையில் சிறிய மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் அடிப்படையில் சமுதாயத்தில் பெண்களின் பொது நிலையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. ஆன்னிய ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் பல பெண்களும் பங்கு பெற்று சிறப்படைந்தார்கள். அந்த நேரத்தில் பாரதி பெண் விடுதலைக்குக் குரல் கொடுக்கிறார். புதுமைப் பெண்ணை அழைக்கிறார்.

இன்று பெண்ணுரிமை இயக்கம் புதிய பரிமாணங்களை எட்டியிருக்கிறது. ஆட்சியில், அதிகாரத்தில் பெண்கள் உரிய இடத்தைப் பெற வேண்டும். ''தையலை உயர்வு செய்'' என்னும் பாரதியின் வாக்கு இன்று மிகவும் அதிகமான முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

## 51. தொன்மைக்கு அஞ்சேல்

தொன்மை என்றால் பழமையென்று கூறலாம். மிகவும் நீண்டகாலத்திற்கு முந்தியது என்று கூறலாம். பழைய பழக்க வழக்கங்களைத் தொன்மையானது எனக் கூறலாம். அதில் மூடப்பழக்க வழக்கங்களும் சேரும். அப்படிப்பட்ட காலத்திற்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களை நாம் நிராகரிக்க வேண்டும். அஞ்சாமல் அவைகளை நீக்க வேண்டும்.

பள்ளத்திலே உள்ள பாசி பழைமையானது. அதை நீக்குவதற்கு பெரு வெள்ளங்கள் தேவைப்படுவதைப் போல, தொன்மையான பல நாற்றங்களையும் நீக்குவதற்கு புதிய கருத்துக்களும் அவசியப்படுகின்றன.

நமது சாத்திரங்கள், சங்க இலக்கியங்கள் தொன்மையானவை அவைகளில் சிறந்தவற்றை எடுத்துக் கொள்கிறோம், அல்லனவாயின் அவற்றை மாற்றுகிறோம் அல்லது நீக்குகிறோம்.

*''சாத்திரம் கோடி வைத்தாள் – அவை*
*தம்மினும் உயர்ந்ததோர் ஞானம் வைத்தாள்*
*மீத்திடும் பொழுதினிலே – நான்*
*வேடிக்கை உறக்கண்டு நகைப்பதற்கே*
*கோத்த பொய் வேதங்களும் – மதக்*
*கொலைகளும், அரசர்தம் கூத்துக்ளும*
*மூத்தவர் பொய் நடையும் – இள*
*மூடர் தம் கவலையும் அவள் புனைந்தாள்''*

என்று பாரதி கண்ணன் பாட்டில் குறிப்பிடுகிறார்.

எனவே தொன்மையான பொய் வேதங்கள், மதக்கொலைகள், அரசர்களின் கூத்துக்கள் மூத்தவர் பொய்நடை ஆகியவற்றை நிராகரிக்க நாம் அஞ்சத் தேவையில்லை. அதேபொழுது தொன்மையானது அனைத்தும் பழைமையானது. காலம் கடந்து போனது. கவைக்கு உதவாதது. என்று கருதத் தேவையில்லை பழைமை என்றதும் பயப்படத் தேவையில்லை.

தொன்மையில் உள்ள நல்லனவற்றை ஏற்பதிலும் சரி, அல்லனவற்றை நீக்குவதிலும் சரி, இரண்டிலும் நாம் அஞ்சத் தேவையில்லை என்பதே தொன்மைக்கு அஞ்சேல் என்பதன் பொருளாகும்.

## 52. தோல்வியிற் கலங்கேல்

நாம் எந்த வேலையைச் செய்தாலும் எந்த முயற்சியை மேற்கொண்டாலும் அதில் வெற்றி பெற வேண்டும் என்பதே நமது

விருப்பமும் குறிக்கோளுமாகும். ஆயினும் நமது எல்லா முயற்சிகளிலும் வெற்றி ஏற்படுவதில்லை. சில நேரங்களில் தோல்விகளும் ஏற்படுகின்றன.

வெற்றியில் களிப்பும், தோல்வியில் கலக்கமும் கூடாது என்பது பொதுச் சொல்லாகும். நாம் நமது வாழ்க்கையில் பல முயற்சிகளும் செய்கிறோம். தொழில்களைத் தொடங்குகிறோம். சாகுபடி வேலைகளைச் செய்கிறோம். வியாபாரங்களைத் தொடங்குகிறோம். ஆராய்ச்சிகள் செய்கிறோம். புது முயற்சிகள் பல மேற்கொள்கிறோம். படித்துப் பரீட்சை எழுதுகிறோம். இத்தகைய பல முயற்சிகளிலும் பணிகளிலும் வெற்றியும் ஏற்படலாம். சில சமயங்களில் தோல்வியும் ஏற்படலாம் என்பது அனைவரின் அனுபவங்களாகும். அதில் தோல்வி ஏற்படும் போது நம்மில் கலக்கமோ சோர்வோ விரக்தியோ ஏற்படக்கூடாது.

*''செய்தல் உன் கடனே – அறம்*
*செய்தல் உன் கடனே – அதில்*
*எய்திடும் விளைவினில் எண்ணம் வைக்காதே''*

என்றும் பகவத்கீதையின் கருத்தை பாரதி முன் வைக்கிறார். பலனைப் பற்றிக் கருதாமல் கவலை கொள்ளாமல் பற்றுக் கொள்ளாமல் உனது கடமைகளைச் செய்து கொண்டேயிருக்க வேண்டும் என்பது கீதையின் சொல்லாகும். ''அழுது கொண்டே இருந்தாலும் உழுது கொண்டே இருக்க வேண்டும்'' என்பது கிராமத்துப் பழமொழி. சாகுபடித் தொழிலில் நாம் எதிர்பார்க்கும் பலன் ஏற்படும் என்று உறுதியாகக் கூற முடியாது. இயற்கையின் விளைவுகளால் சாதகமான பலன்களும் பாதகமான விளைவுகளும் ஏற்பட்டு விடலாம். அதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் நமது சாகுபடித் தொழிலைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பது அதன் பொருள்.

அதே போல் தொழில் மற்றும் வர்த்தகத்தில் மார்க்கெட் நிலவரங்கள் கரணமாக வெற்றி தோல்விகள் ஏற்படலாம். ஆராய்ச்சிப் பணிகளில் வெற்றி தோல்வி ஏற்படலாம். பரீட்சைகளில் வெற்றி தோல்வி ஏற்படலாம். அதைப் பற்றி கவலைப்படாமல் அப்பணிகளைத் தொடர வேண்டும் என்பதாகும்.

அதன்பொருள் நாம் செய்யும் வேலைகளுக்கு எந்தப் பலனையும் எதிர்ப்பார்க்கவில்லை என்பதல்ல: வெற்றி தோல்விகள் நமது முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கக் கூடாது என்தே அதன் கருத்தாகும்.

நாம் ஒரு காரியத்தைச் செய்யும் போது ஒரு குறிக்கோளுடன் ஒரு நல்ல நோக்கத்துடன் தான் செய்கிறோம், அந்தப் பணிகளில் வெற்றி பெற வேண்டும் என்று தான் விரும்புகிறோம். வெற்றியும் தொல்வியும் பெரும்பாலும் நம் கையில் தான் இருக்கின்றன. போதுமான கவனமில்லாமலும் அக்கறையில்லாமலும், ஊக்கமின்மை காரணமாகவும் கூட வெற்றி தோல்விகள் பாதிக்கப்படக் கூடும். ஆனால் பல்வேறு சந்தர்ப்பங்களில் சூழ்நிலை காரணமாகவும் நமது சக்திக்கு அப்பாற்பட்ட புற நிலைக் காரணங்களாலும் ஒரு நேரத்தில், ஒரு வேலையில், ஒரு முயற்சியில் தோல்வியும் ஏற்படலாம். அப்போது அந்தத் தோல்வியைக் கொண்டு கலங்காமல் தொடர்ந்து முயற்சி எடுத்து அப்பணிகளைச் செய்து முடிக்க வேண்டும். அதற்கு விடாமுயற்சி என்று கூறுகிறோம். அத்தகைய விடாமுயற்சியுடன் தோல்விகளில் கலங்காமல் நமது பணிகளை நமது முயற்சிகளை நமது கடமைகளைச் செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

## 53. தவத்தினை நிதம் புரி



தவம் என்றால் இங்கு வாழ்க்கையை முழுமையாகத் துறந்து விட்டு, காட்டிற்குப் போய் உடம்மை ஒடுக்கி கண்களை மூடிக்கொண்டு அமைதியாக அமர்ந்து கொண்டு வேறெந்த சிந்தனையும் இல்லாமல் தவம் செய்து கொண்டிருப்பது என்பது பொருளல்ல, தவம் என்றால் இங்கு முயற்சி, கடும் முயற்சி, விடாமுயற்சி அருஞ்செயல் என்று பொருளாகும். கைகேயி, இராமனைக் காட்டிற்குச் செல்லுமாற கூறும் போது, நீ போய் தாழ் இரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம் மேற்கொண்டு, பூழி வெம்கானம் நண்ணிப் புண்ணியத்துறைகள் ஆடி, ஏழிரண்டு ஆண்டில் வா'' என்று கூறியதாகக் கம்பன் தன் கவிதையில் குறிப்பிடுகிறார்.

இங்கு காட்டிற்குச் சென்று தவம் புரிவதையும் தவம் என்னும் சொல்லில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. சாதாரணமாக நாம் தவம் என்பதை அவ்வாறே புரிந்து கொள்கிறோம். இராமன் காட்டிற்குச் சென்றான் ஆனால் ஏதும் செய்யாமல் தவத்தில் அமர்ந்திருக்கவில்லை, அவன் தனது மகத்தான அவதாரக் கடமையை வரலாற்றுக் கடமையை இமயம் முதல் இலங்கை வரையிலுமான பாரத ஒற்றுமையை நிறுவும் அரசியல் கடமையை நிறைவேற்றுகிறான்.

தவத்தைப் பற்றி பாரதி தனது பாடல்களில் பல்வேறு இடங்களில் குறிப்பிடுகிறார்.

நாம் பல முயற்சிகளில் முனையும் போது, பல வேலைகளில் ஈடுபடும் போது நமக்கு பல இன்ப துன்பங்கள் ஏற்படலாம். அதற் கெல்லாம் கவலைப்படாமல் தொடர்ச்சியாக நமது பணிகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். விடாப்பிடியாக முயற்சி செய்து அப்பணிகளை வெற்றிகரமாக முடிக்க வேண்டும். அதுவே தவமாகும்.

*''செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே! தவம் செய்தால்*
*எய்த விரும்பியதை எய்தலாம் – வையகத்தில்*
*அன்பிற் சிறந்த தவமில்லை, அன்புடையார்*
*இன்புற்று வாழ்தல் இயல்பு''*

என்று பாரதி பாடுகிறார். அன்பே தவம் என்றும் அத்தவத்தைச் செய்தால் நமது முயற்சிகளில் வெற்றி பெறலாம் என்றும் பாரதி கூறுகிறார்.

*''யாகத்திலே, தவவேகத்திலே – தனி*
*யோகத்திலே பல போகத்திலே*
*ஆகத்திலே பல பக்தி கொண்டார் தம்*
*அருளினிலே உயர்நாடு''*

என்று பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு என்னும் கவிதையில் பாரதி குறிப்பிடுகிறார்.

யாகம், தவம், யோகம், முதலியவைகள் எல்லாம் பல்வேறு

முயற்சிகளாகும். தவம் என்பது ஒரு குறிப்பிட்ட செயலில் முனைப்புடன் எது நேரினும் இடர்ப்படாமல் ஒரே குறியாக நின்று செய்து முடிப்பதாகும்.

மழை, வெயில், புயல், தடைகள், இடையூறுகள் எது நேர்ந்தாலும் பொருட்படுத்தாமல் ஒரே குறியாக இருந்து ஒரு வேலையைச் செய்து முடித்தல் தவமாகும்.

*''பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்,*
*புன்மையிருட் கணம் போயின் யாவும்''*

என்று பாதி கூறுகிறார்.

பொழுது புலர்ந்து விட்டது. காலை புலர்ந்து விட்டது. வெளிச்சம் வந்து விட்டது. ஒளிபிறந்து விட்டது. இருள் கணங்களாக இருந்த புன்மைத் துன்பங்கள் இழிவுகள் கேடுகள் ஆகாதனவெல்லாம் போய் விட்டன. இவையெல்லாம் நமது கடும் முயற்சியால் கடும் தவத்தால் நிகழ்ந்து இருக்கின்றன என பாரதி குறிப்பிடுகிறார்.

*''நீலத்திரை கடல் ஓரத்திலே – நின்று*
*நித்தம் தவம் செய்யும் குமரி எல்லை''*

என்று பாரதி குறிப்பிடுகிறார்.

நமது நாட்டின் தெற்கு எல்லை குமரிமுனை. அங்கு முக்கடல்களும் வந்து மோதுகின்றன, முன்பு அதன் தெற்கே இருந்த தமிழ்ப் பகுதியைக் கடல் கொண்டு விட்டது என்று பழைய இலக்கியங்களும் புவியியல் வரலாறும் கூறுகின்றன. மீண்டும் ஒரு விபத்து ஏற்பட்டு விடாமல் குமரித்தெய்வம் தமிழ்த் தாய் தவம் இருப்பதாக நமது நாட்டுக் கவிஞர்களின் வழியில் பாரதியும் அதைக் குறிப்பிடுகிறார்.

கடல் அலைகளைக் கட்டுப்படுத்திக் கடல் அரிப்பைத் தடுக்க முயற்சிப்பது கடும் தவமாகும். அதே போல நமக்கும் நமது நாட்டிற்கும் ஆக வேண்டிய பணிகளை தொடர்ச்சியான முனைப்புடன் கடும் முயறசியுடன் நமது அன்றாடப்பணிகளைச் செய்து கொண்டேயிருக்க வேண்டும். அதனையே தவத்தினை நிதம் புரி என்று குறிப்பிட்டுக் கூறுகிறார்.

## 54. நன்று கருது

நல்லதையே நாம் நினைக்க வேண்டும். நல்லதையே நாம் செய்ய வேண்டும். நன்றே செய், அதை இன்றே செய், அதை இப்போதே செய் எனபதை நாம் மறந்து விடக் கூடாது.

*''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே – நம்மில்*
*ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே*
*நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த*
*ஞானம் வந்தால் பின்நமக்கேது வேண்டும்''*

என்று பாரதி கூறுகிறார்.

ஒற்றுமை அவசியம், இந்த நல்ல காரியத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்த அறிவு வந்தால் போதும் நாம் எல்லாவற்றையும் சாதித்து விட முடியும் என்று பாரதி கூறுகிறார்.

*''எண்ணிய முடிதல் வேண்டும்*
*நல்லவை எண்ணல் வேண்டும்*
*திண்ணிய நெஞ்சம் வேண்டும்*
*தெளிந்த நல்லறிவு வேண்டும்''*

என்பது பாரதி வாக்கு.

வெறும் நல்லெண்ணத்தினால் மட்டும், பாரதி இதைக் கூறவில்லை. நமது கடமையாக நல்லதையே கருத வேண்டும் என்று கூறுகிறார். அதை நாம் வழிகாட்டியாகக் கொண்டு நமது வாழ்க்கையிலும் கடைப்பிடிப்போமாக.

## 55. நாளெல்லாம் வினை செய்

வினையென்றால் வேலை, தொழில், செயல், என்று பொருளாகும் இடைவிடாமல் நாளெல்லாம் பொழுதெல்லாம் வேலை செய்து கொண்டிருக்க வேண்டும். தொழில் செய்து கொண்டிருக்க வேண்டும். செயல்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். விழிப்புடன் வேலை செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

வயல்களில், தோட்டங்களில், தொழிற்சாலைகளில், அலுவலகங்களில், வீட்டில் உள்ள வேலைகளைச் செய்கிறோம். அது மட்டும் வேலைகளல்ல, காலையில் எழுந்தவுடன் காலைக்கடன்களை முடித்தல், குளித்தல், உடுத்தல், உண்ணுதல் போதல் வருதல் நடத்தல், குழந்தைகள் மற்றும் உற்றாருடன் களித்தல், படித்தல், படம் பார்த்தல், உறங்குதல் அனைத்தும் தொழில்களேயாகும், படிக்கும் மாணவ மாணவிகள், படிப்பது பள்ளியில் கல்லூரியில் மட்டுமல்ல வீட்டில் நூலகங்களில் படித்தல் ஓய்வுநேரங்களில் உரையாடுதல் ஆகியவைகளும் படித்தலேயாகும். படிப்பதற்கு காலமும் வயது வரம்பு கிடையாது. இவ்வாறு மனிதன் நாளெல்லாம் ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

உலகம் இடைவிடாமல் இயங்கிக் கொண்டே இருக்கிறது. உலகில் உள்ள அத்தனை பொருள்களும் சதா இயங்கிக் கொண்டே இருக்கின்றன. பூமி இடைவிடாமல் சுற்றிக் கொண்டே இருக்கின்றது. ஆற்று நீர் ஓடிக் கொண்டே இருக்கிறது. நாம் இடைவிடாது செயல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். சோம்பல் கூடாது. நேரத்தை வீணாக்கலாகாது. வெட்டிப்பொழுது போக்கக்கூடாது. பயனுள்ள பணிகளைச் செய்து கொண்டிருக்க வேண்டும். எப்போதும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். கோடி வகைத் தொழில்கள் நாடும் படிக்கும் நாள்தோறும் வினை செய்து இந்த நாட்டோர் கீர்த்தி எங்கும் ஓங்கச் செய்ய வேண்டும் என்று பாரதி நம்மை வேண்டுகிறார்.

## 56. நினைப்பது முடியும்

நாம் நினைத்த காரியம் நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு நாம் திட்டமிட்டுத் தீர்மானித்துப் பணியாற்ற வேண்டும். நினைப்பது முடியும் என்பது ஆருடம் அல்ல. மூடநம்பிக்கையும் அல்ல. ஒரு செயலில் ஈடுபடும் போது அதைப்பற்றி முன்கூட்டி சிந்தித்து ஆலோசனை செய்து அந்த வேலையைத் தொடங்குகிறோம். அந்த வேலையை முடித்து விட வேண்டும் என்னும் நம்பிக்கையுடன் நாம் அதைச் செய்கிறோம். அந்த

முயற்சியில் வெற்றி பெறுகிறோம். நாம் எடுத்த காரியம் முடிகிறது. ''எண்ணிய முடிதல் வேண்டும்'' என்பது பாரதி வாக்காகும்.

## 57. நீதிநூல் பயில்

நமது நாட்டில் எண்ணற்ற நீதி நூல்கள் உள்ளன. அவை நமது நாட்டில் உள்ள எல்லா மொழிகளிலும் உள்ளன. நமது நாட்டில் தொன்மையாக உள்ள வேதங்கள் உபநிடதங்கள் புராணங்கள், இதிகாசங்கள், பல்வேறு நாட்டுப் பாடல்கள், முதலிய பலவும் நீதி கலந்து நூல்களேயாகும்.

நீதி என்பதில் பொது நீதி அரச நீதி, பொருள் நீதி, சமுதாய நீதி, முதலியவைகளும் அடங்கும், மனு நீதி நூல் சமண நீதி நூல்கள் முதலியனவும். தமிழில் சங்க நூல்கள், அக நூல்கள், புற நூல்கள், ஐம்பெரும் காப்பியங்கள், கீழ் கணக்கு மேல் கணக்கு நூல்கள், குறிப்பாக திருக்குறள் முதலிய நீதி நூல்கள் கம்பராமாயணம், வில்லிபாரதம், ஆழ்வார்கள், நாயன்மார்களின் பாடல்கள் திருமந்திரம், தாயுமானவர், அருணகிரியார் வள்ளலார், பாரதியார் போன்றோர்களின் நூல்கள் முதலியனவெல்லாம் நீதியும் நீதிகலந்த நூல்களுமாகும்.

இந்த நூல்களையெல்லாம் நாம் படிக்க வேண்டும். படித்துப் பயிற்சி பெற வேண்டும். அவைகளில் உள்ள நல்ல கருத்துக்ளை எல்லாம் கிரகித்துக் கொள்ள வேண்டும். அல்லனவற்றை ஒதுக்கிட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அந்த நூல்களில் உள்ள நல்ல கருத்துக்கள், தொன்மை, பொருள் மொழிச்சுவை காவியச்சுவை கருதியும் அவைகளை நன்கு பயில வேண்டும்.

## 58. நுனியளவு செல்

நாம் எந்த வேலையை எடுத்துக் கொண்டாலும் அதை முழுமையாகச் செய்து முடிக்க வேண்டும். அரைகுறையாக விட்டுவிடக்கூடாது. நுனியளவு செல் என்றால் கடைசி வரை சென்று பார்க்க வேண்டும் என்பதாகும். உச்சிவரை சென்று பார்க்க வேண்டும் என்பதாகும்.

நாம் ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினால் அதை முழுவதுமாகப் படித்து முடிக்க வேண்டும். ஒரு கவிதையோ, நூலோ கதையோ எழுதத் தொடங்கினால் அதை முழுவதுமாக எழுதி முடிக்க வேண்டும். ஒரு தொழிலைத் தொடங்கினால் ஒரு வீடு அல்லது ஒரு கட்டடத்தைத் கட்டத் தொடங்கினால் அதை அரைகுறையாக விட்டுவிடக் கூடாது.

ஒரு வேலையை எடுத்துக் கொண்டால் அதை முழுமையாக நிறைவேற்றி முடிக்க வேண்டும். ஒரு ஆராய்ச்சியில் ஈடுபட்டால் நமது சிந்தனையின் உச்சிக்குச் செல்ல வேண்டும். அதையே நுனியளவு செல் என்று கூறுகிறோம்.

ஒரு ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு பாடத்தைச் சொல்வதானால் கற்றுக் கொடுப்பதானால் குறிப்பிட்ட பாடத்தை முழுமையாக விவரித்துக் கற்பித்து முடிக்க வேண்டும்.

ஒரு கிணறு அல்லது குளம் வெட்டுகிறோம் என்றால் அதில் தண்ணீர் கண்டதா பாரை கண்டதா என்று பார்த்துவிட வேண்டும் என்று பழமொழி கூறுவார்கள். அந்த வகையில் அதை முற்றுப் பெற முடிக்க வேண்டும். எதையும் அரைகுறையாக விட்டு விட்டால் பலன் இல்லை. அதுவரை செய்த வேலை வீணாகிவிடும். அரைக்கிணறு தாண்டியதைப் போல் ஆகிவிடும் அதையே நுனியளவு செல் என்று பாரதி மிக அழகாகக் கூறுகிறார்.

## 59. நூலினைப் பகுத்துணர்

ஒரு நூலைப் படிப்பது என்பது அந்த நூலில் உள்ள விவரங்களையும் அதன் பொருளையும் தெரிந்து கொள்வதற்கும் புரிந்துகொள்வதற்குமாகும்.

நூல்கள் என்பது அறிவுக் களஞ்சியமாகும். நமக்கு முந்திய காலத்தவரும் இக்காலத்தவரும் எக்காலத்தவரும் தங்கள் அனுபவங்களைக் கருத்துக்களை ஆராய்ச்சிகளை அறிவுகூர்மையுடன் பகுத்தும் தொகுத்தும் ஆய்வு செய்தும் பல முடிவுகளைக் கண்டும் எழுதி வைத்துள்ள அறிவுக் களஞ்சியமாகும். இவ்வாறான நூல்கள் எல்லா நாடுகளிலும் எல்லா மொழிகளிலும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

அவைகளைக் கற்றும் தெளிந்து நாம் பல அரிய செய்திகளை அறிகிறோம், அதன் மூலம் நமது அறிவை வளப்படுத்திக் கொள்கிறோம். இது வேறெந்த உயிரினத்திற்கும் இல்லாத மனிதப்பிறவிக்கு மட்டுமே உள்ள தனிச்சிறப்பாகும்.

இந்த அறிவிற்கு மொழியும் கல்வியும் ஆதாரமாக அமைந்துள்ளது. பழங்காலத்தில் இருந்து பல மொழிகள் வாயிலாக எழுத்துக்கள் சொற்கள் மூலமாக அனைத்து அறிவுத்துறை பற்றிய நூல்களும் வெளிவந்துள்ளன. இந்த நூல்கள் இலக்கியம், கவிதைகள், காவியங்கள், அறிவியல் கருத்துக்கள், அரசியல், பொருளியல், சமூகவியல் மற்றும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியை ஒட்டி பல்வேறு துறைகளும் வளர்ச்சி பெற்று அவை பற்றிய சிறந்த கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன.

இத்தகைய பல நூல்களைப் படிக்கும் போது அவைகளின் உண்மைப் பொருளை உணர்ந்து புரிந்து கொள்வது மட்டுமல்லாமல் பகுத்துணர்ந்து கற்றுத் தெளிய வேண்டும்.

படிப்பிற்கு நூல்களை அறிந்து கொள்வதற்கு கல்வியும் மொழிப்பயிற்சியும் மிகவும் அவசியமாகும். கல்வி முறையும் சமுதாயத்தின் வளர்ச்சியை ஒட்டி வளர்ச்சி அடைந்து கொண்டு வந்திருக்கிறது. மொழிகளும் காலத்தால் வளர்ச்சி பெற்று வளமடைந்து வந்திருக்கின்றன. இந்தக் கல்விப் பயிற்சியும் மொழிப்பயிற்சியும் நூல்களைக் கற்று பகுத்துணர்வதற்கு மிகவும் துணையாக இருக்கின்றன.

தமிழ்மொழி இலக்கணம் ஐந்திலக்கணமாகும். அவைகள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்தாகும், இதில் பொருள் ஒரு இலக்கணப் பிரிவாக அமைந்திருப்பது தமிழ் மொழிக்குள்ள ஒரு தனிச்சிறப்பாகும். தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றாக நன்னூல் மாணாக்கர்களுக்கான இலக்கணத்தைப் பற்றிக் கூறுகிறது.

*''அன்னம் ஆவே, மண்ணொடு கிளியே*
*இல்லிக்குடம் ஆடு, எருமை, நெய்யரி*
*அன்னர்தலை இடைகடை மாணாக்கர்''*

என்று அந்த சூத்திரம் குறிப்பிடுகிறது.

அன்னமும், பசுவும் தலை மாணாக்கருக்கு உவமை. பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தால் அன்னம், அதிலுள்ள பாலை மட்டும் பிரித்து உட்கொள்ளும் தன்மை படைத்தது. அதைப் போல நாம் தலை மாணாக்கர் போல நூல்களைப் படித்து பகுத்துணர்ந்து நல்லனவற்றை கிரகித்துக் கொள்ளும் திறனைப் பெற வேண்டும். பாரதி நமக்கு அந்த அறிவுரைகளைக் கூறுகிறார்.

## 60. நெற்றி சுருக்கிடேல்

நெற்றி சுருக்கிடல் என்றால் முகம் சுழித்தல் ஆகும். நெற்றி சுருக்கிடேல் என்றால் முகம் சுழிக்காமல் முகமலர்ச்சியோடு இருத்தலாகும். நெற்றியைச் சுருக்குவது என்பது வறுமை, வெறுப்பு, ஒதுக்குதல் முதலிய கேடுகளால் ஏற்படுவதாகும். அடுத்தவர் மீது எந்த சூழ்நிலையிலும் வெறுப்படைதல் நல்லதல்ல. வறுமையும் தனிப்படுதலும் ஏற்பட்டாலும் முகம் சுருக்காமல் அடக்கமாக இருத்தல் சிறப்பாகும் எந்த சூழ்நிலையிலும் எல்லோரிடத்தும் அன்புடன் பழகுதல் நல்லது. சிரித்த முகத்துடன், எப்போதும் முகமலர்ச்சியுடன் இருப்பது சிறந்தது.

சிடுசிடுப்பாகவும் யாரிடமும் எரிந்து விழுதலும் பொரிந்து தள்ளுதலும் நெற்றி சுருக்குவதாகும். இவை நல்ல பண்புகளல்ல நல்ல பழக்கவழக்கமல்ல. தேவையில்லாமல் கோபப்படுவதும் ஆத்திரமடைவதும நெற்றி சுருக்குவதாகும். இது கூடாது என்று பாரதி குறிப்பிடுகிறார்.

அத்துடன் கொடுமையான வறுமை, கடுமையான கவலைகள், யாருடைய உதவியும் இல்லாமல் தனிமைப்பட்டு நிற்றல் முதலிய சில கடுமையான சூழ்நிலை காரணமாகவும் நெற்றி சுருக்கங்கள் ஏற்படும். எத்தகைய கவலைகளும் துன்ப துயரங்களும் சோதனைகளும் ஏற்பட்டாலும் முகத்தில் கவலையை வெளிக்காட்டாமல் முகமலர்ச்சியுடன் இருப்பது சிறப்பாகும். இடுக்கண் வருங்கால் நகுக என்பது வள்ளுவர் வாக்காகும்.

## 61. நேர் படப்பேசு

சூது, வாது, வஞ்சனை, கபடம் இல்லாமல் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசக்கூடாது. நேர்படப் பேச வேண்டும். எந்த விஷயத்தையும் சுற்றி வளைத்துப் பேசக்கூடாது. நேரிடையாகப் பேச வேண்டும். இலக்கணத்தில் குற்றம் பத்து எனக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அவைகளில் குன்றக்கூறல், மிகபடக்கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், மயக்கக்கூறல் முதலிய பத்து குற்றங்கள் கூறப்பட்டு இருக்கின்றன. அவை இலக்கியத்தில் எழுத்துரைகளில் நாம் கையாள வேண்டிய இலக்கணக் கூறுகளாகும். இருப்பினும் அவற்றில் சில வாழ்க்கைக்கும் பொருந்துவதாகும்.

நேர்படப் பேசுதல் என்பது கள்ளத்தனம், கபடம் இல்லாமல் நேர்மையாகவும் நேருக்கு நேராகவும் ஒளிவு மறைவில்லாமல் நல்ல வார்த்தைகளில் பேசுவதாகும். அதையே பாரதி இளைஞர்களுக்கு அறிவுரையாகக் கூறுகிறார்.

## 62. நையப்புடை

நையப்புடை என்றால் நன்றாக அடித்து நொறுக்க வேண்டும் என்று பொருள். ஒன்றைத் தாக்க வேண்டுமென்று முடிவு செய்தால் நன்றாகத் தாக்க வேண்டும் என்று பொருள்.

ஒரு வேலையைச் செய்ய முற்பட்டால் அதை முழுமையாகச் சீராகச் செய்து முடிக்க வேண்டும் என்று பொருளாகும்.

நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, கோதுமை முதலிய தானியக் கதிர்களை அடிக்கும் போது நன்றாக முழுமையாக அடிக்க வேண்டும். அப்போது தான் தானிய மணிகள் அதிகமாக வும் முழுமையாகவும் உதிரும்.

ஒருவன் தொடர்ந்து வேண்டுமென்றே தவறு செய்கிறான் பல தடவை சொல்லியும் திருந்தவில்லை என்றால் தண்டனை கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றால் நையப்புடைத்தலும் ஒரு வழியாகும்.

இங்கு நைப்புடை என்று பாரதி கூறும் போது யாரையாவது வேண்டுமென்றே வலுவாக வம்புக்காக அடித்தல் என்று பொருள் கொள்ளாமல் ஒரு வேலையைச் செய்யும் போது அதை முழுமையாக நிறைவாகச் செய்து முடித்தல் வேண்டும் என்று பொருள்படும்.

தானியங்களை உரலில் போட்டுக் குத்தும் போதோ சுத்தப்படுத்த முறத்தை வைத்துப் புடைக்கும் போதோ தறி, நெசவு, நெய்யும் போதோ முழுமையாக சீராக நிறைவாகச் செய்து முடிக்க வேண்டும் என்று பாரதி கூறுகிறார்.

ஒரு பாம்மை அடித்தால் அரைகுறையாக அடித்து விட்டுவிடக் கூடாது அது ஆபத்தானதாகும் ஒரு துஷ்டனை அடித்தால் புத்தி வரும்படி அடிக்க வேண்டும். அதையே நன்றாக அடி, முழுமையாக ஒரு வேலையைச் செய்து முடி, என்று பொருள் படும்படி நையப்புடை என்று நகைச்சுவை ததும்ப பாரதி குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுகிறார்.

## 63. நொந்தது சாகும்

சோறு நொந்து விட்டது என்றால், அது கெட்டுப் போய்விட்டது, சாப்பிட லாயக்கற்றது என்று பொருளாகும். ஒருவர் துன்ப துயரங்களால் மனவருத்தத்துடன் இருக்கும் போது அவரிடம் ஏதாவது கேட்டால் ''நானே நொந்து போயிருக்கிறேன் என்னைத் தொந்தரவு செய்யாதே'' என்று கூறுவதைக் கேட்டிருக்கிறோம்.

வாழ்க்கையில் நொந்து போயிக்கிறார்கள் என்றால் கடன்பட்டு நஷ்டப்பட்டு, கஷ்டங்களுக்கு ஆளாகி வாழ்வதற்கு வழியில்லாமல் வருந்தி பல தொல்லைகளுக்கு உள்ளாகி மீளா நெருக்கடியில் துன்ப துயரப்பட்டு வீழ்ந்திருக்கிறார்கள் என்று பொருள்படும். அல்லது மீளமுடியாத நோய் நொடியால் துன்பமடைந்து மனம் நொந்து போயிருக்கிறார்கள் என்று பொருளாகும்.

அதனால் அவ்வாறு நொந்து போனால் விரைவில் அழிவு ஏற்பட ஏதுவாகும் என்னும் பொருளில் நொந்தது சாகும் என்று பாரதி கூறுகிறார்.

*''நொந்தே போயினும் வெந்தேமாயினும்*
*நந்தேசத்தார் உவந்தே சொல்வது*
*வந்தே மாதரம் – ஜய வந்தே மாதரம்''*

என்று பாரதி கூறியிருப்பது நொந்து போனாலும் கூட, சாகும் நிலையில் கூட நம் தேசத்தார் நமது நாட்டை மறந்து விடாமல் அதற்கு வணக்கம் செய்வார்கள் என்று கூறியுள்ளார்.

நாம் நமது நாட்டையும் வீட்டையும் நொந்து போகாமல் காக்க வேண்டும்.

## 64. நோற்பது கைவிடேல்

நோற்பது என்பது நோன்பு மற்றும் விரதம் இருத்தல் என்பது பொருள். விரதம் எடுத்தலை உறுதி எடுத்தல் என்றும் கூறலாம். நாம் எல்லோருமே ஏதாவது ஒரு வகையில் நோன்பு இருந்து கோண்டு தான் இருக்கிறோம். பல விஷயங்களில் ஒன்றைச் செய்வதற்கு செய்து முடிப்பதற்கு உறுதி எடுத்துக் கொள்கிறோம்.

மதாபிமானிகள், மதச்சடங்குகளின் பகுதியாக நோன்புகளும் விரதங்களும் இருக்கிறார்கள். நமது நாட்டுப் பெண்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பல நோன்புகளும் விரதங்களும் இருக்கிறார்கள். உடல் நலத்திற்காக உண்ணா நோன்பு இருப்பதும் நமது நாட்டில் பழக்கமாகும்.

நாம் ஒரு வேலையைத் தொடங்கினால் அதை நன்றாகச் செய்து முடிக்க வேண்டும் என உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். கருமமே கண்ணாக ஒரு வேலையில் ஈடுபடும் போது அவ்வேலையில் மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார் என்று உறுதி கொண்டு அவ்வேலையை நிறைவேற்றி முடிக்கிறோம்.

நாட்டிற்காக நம்மை அர்ப்பணம் செய்து கொள்கிறோம். அது ஒருவகையில் உறுதி எடுத்துக் கொள்வதைப் போலாகும்.

ஒரு வேலையில் தனது முழு கவனத்தைச் செலுத்தி அக்காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்று உறுதி

எடுத்துக் கொண்டு கருமமே கண்ணாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு கடமை ஆற்றுவதற்கு நோற்பதைக் கைவிடாமல் அவ்வேலைகளைத் தொடர வேண்டும். இதையே நோற்பது கைவிடேல் என்று பாரதி குறிப்பிடுகிறார்.

## 65. பணத்தினைப் பெருக்கு

பணத்தினைப் பெருக்கு என்றால் ஒரு பேராசை பிடித்த தனிமனிதன் பல ஒவ்வாத முறைகளில் பணத்தைச் சேர்த்துப் பெட்டியில் போட்டுப் பூட்டுவதல்ல. நாட்டின் மொத்த உற்பத்திச் செல்வத்தை வீட்டின் மொத்த வருமானத்தை தனிநபர் வருமானத்தைப் பெருக்கி நாட்டு வளத்தைப் பெருக்குவதாகும்.

நாட்டின் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி முதல் நிலை உற்பத்தியை அதாவது ஆதார உற்பத்தியைப் பெருக்கி மனித உழைப்பின் மூலம் மறு உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் மொத்த செல்வத்தையும் வருமானத்தையும் அதிகப்படுத்த வேண்டும். இதன் மூலம் மக்களுக்குத் தேவையான உபயோகப் பண்டங்களும் அதிகமாகக் கிடைக்கும். அதுவே ஒரு நாட்டின் வளத்தைக் குறிப்பதாகும்.

நிலம். காடு. மலை, சுரங்கம், கடல் ஆகியவற்றிலிருந்து மனித முயற்சி மூலம் மனித உழைப்பின் மூலம் தேவையான ஏராளமான பொருள்கள் கிடைக்கின்றன. நிலத்தில் சாகுபடி செய்வதன் மூலம் சமுதாயத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களான பருத்தி, சணல், கரும்பு, நிலக்கடலை, தேங்காய் முதலிய பொருட்களும் காய்கறி, கனி, மலர் முதலிய உபயோகப் பொருட்களும் கிடைக்கின்றன. இதை நிலத்திலிருந்து கிடைக்கும் முதல் நிலை உற்பத்திப் பொருட்செல்வம் என்று கூறுகிறோம்.

இந்த முதல் நிலை உற்பத்திப் பொருட்களிலிருந்து மறு உற்பத்தி மூலம் நேரடியாகச் சமுதாயத்திற்கு உபயோகிக்கும் வகையில் அரிசி, மாவு முதலியனவும், பருத்தியிலிருந்து பஞ்சு, நூல், துணி ஆடைகளும் சணலிலிருந்து கோணி முதலியனவும்கரும்பிலிருந்து சர்க்கரை முதலியனவும் மற்றும்

மொலாஸஸ் என்ற பொருளிலிருந்து சாராயம் சக்கையிலிருந்து பேப்பர் முதலியனவும் நிலக்கடலை தேங்காய் ஆகியவைகளில் இருந்து எண்ணெய் பிண்ணாக்கு, [illegible] தேங்காய் நாரிலிருந்து பல உபயோகப் பொருட்களையும் உற்பத்தி செய்து நாட்டின் மொத்த உற்பத்தியைப் பெருக்கி உபயோகப் பண்ட செல்வத்தை அதிகரிக்கிறோம்.

சாகுபடி வெளாண்மையை ஒட்டி மேய்ச்சல் நிலங்களைப் பயன்படுத்தியும் தீவனங்கள் தயாரித்தும் ஆடு, மாடு, கோழி ஆகியவைகளைப் பராமரித்து வளர்த்தும் அவை மூலம் பால், தயிர், இறைச்சி, தோல் ரோமம், முட்டை முதலிய பொருட் செல்வம் கிடைக்கின்றன, அத்துடன் வேளாண்மைத் தொடர்பாகக் காய்கறி பழங்கள் மலர்கள் பட்டு நூல் முதலியவைகளும் உற்பத்தி செய்யப்பட்டு செல்வம் பெருக்கப்படுகிறது. இதேபோல,

காடுகளிலிருந்து கிடைக்கும் மரம் முதலியவைகளில் இருந்து மறு உற்பத்தி மூலம் வீட்டு உபயோகத்திற்கு தேவையான கதவு ஜன்னல், தூண்கள், சட்டங்கள் மேஜை நாற்காலிகள் கட்டில்கள் முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன.

கல், மண்ணிலிருந்து பலவிதமான கட்டடப் பொருட்களும் சாலைகளுக்குத் தேவையான கப்பி முதலியனவும் கல்லிலிருந்து கலைப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன.

சுரங்கங்களில் இருந்து நிலக்கரி இரும்பு முதலிய உலோகக் கனிப் பொருட்களும் நிலத்தடியில் இருந்து எண்ணெயும் இயற்கை வாயுவும் எடுக்கப்பட்டு அவைகளில் இருந்து மறு உற்பத்தி மூலம் உற்பத்திக் கருவிகள் எந்திரங்கள் ஆயுதங்கள் பெட்ரோல் பொருள்கள் மின்சாரம் முதலிய செல்வங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மரம், உலோகங்கள் மூலம் வண்டி மோட்டார் லாரி சைக்கிள், ரயில் வண்டி, கப்பல், விமானம் முதலிய பலவகை வாகனங்களைச் செய்கிறோம்.

கடலிலிருந்து மீன், உப்பு முதலியவை கிடைக்கின்றன. உப்பளங்களிலிருந்து ஜிப்சம் உப்பிலிருந்து பலவகை வேதியியல் பொருட்கள் அவைகள் மூலம் பிளாஸ்டிக் செயற்கை நூல் மற்றும் பல உபயோகப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவ்வாறு முதல் நிலை உற்பத்தி மறு உற்பத்தி மூலம் சமுதாயத்திற்குத் தேவையான ஏராளமான பொருட்களை உற்பத்தி செய்கிறோம். அந்த உற்பத்தி மனிதனுடைய உடல் உழைப்பு அறிவு உழைப்பின் மூலம் நிறைவேற்றப்படுகிறது. இவைகளே நாட்டின் மொத்தச் செல்வமாகும். அவைகளின் பண மதிப்பில் நாட்டின் மொத்த செல்வத்தையும் கணக்கிடலாம். இத்தகைய உற்பத்திப் பெருக்கத்தின் மூலம் நாட்டின் செல்வமும், வீட்டின் செல்வமும் தனிநபர் வருமானமும் அதிகரிக்கிறது. அத்துடன் உபரியாக உள்ள பொருள்களை வெளிநாடுகளுக்கும் இதர இடங்களுக்கும் ஏற்றுமதி செய்வதன் மூலம் உபரி வருமானமும் அதிகரிக்கிறது.

பணத்தைப் பெருக்கு என்றால் நோட்டுகளை அச்சடித்து பணத்தைப் பெருக்குவதல்ல. வட்டி மூலம்பணத்தைப் பெருக்குவதல்ல. முதலீடுகள் மூலப் பொருட்கள் உற்பத்தி ஆகியவற்றின் மூலம் நாட்டின் செல்வத்தைப் பெருக்கி வீட்டின் வருவாயையும் தனிநபர் வருமானத்தையும் அதிகரிக்கச் செய்வதாகும்.

இத்துடன் மனிதனுடைய உற்பத்தித் திறனை அறிவுச் செல்வத்தை விஞ்ஞானத் தொழில் நுட்பத்தை ஆராய்ச்சிச் செல்வத்தை மனித ஆற்றலைக் கலைச் செல்வங்களைப் பெருக்குவதன் மூலம் நாட்டின் மொத்த உற்பத்தியை அதிகரிக்க உதவியாக இருக்கிறது.

இவ்வாறாக சமுதாயத்திற்குத் தேவையான நாட்டிற்கும் வீட்டிற்கும் தேவையான பொருட்களைச் செய்து குவிப்பது மொத்தச் செல்வத்தைப் பெருக்குவதாகும். இதையே பாரதி பணத்தைப் பெருக்கு என்று குறிப்பிடுகிறார்.

பாரதியார் தனது கவிதைகளில் ''செல்வங்கள் வந்து மகிழ்ச்சி விளைந்திடும், கல்வி வளரும் செல்வம் எட்டு எய்தல் ஆடுகள் மாடுகள் வீடுகள், நெடுநிலம், தொழில் பண்ணைப் பெருநிதியம், அதில் பல்லோர் துணைபுரிதல் கூடும். திரவியத்தின் குவைகள் கோடி வகைத் தொழில்கள் நிலத்தின் கீழ் பல உலோகங்கள் நீரின் கீழ் எண்ணிலாத நிதி, மலை நதி காடுகள் உயிரினம், வெட்டுக்கனிகள், முத்துக்குளித்தல், கோதுமை, வெற்றிலை, பட்டினில் ஆடை, பஞ்சில் உடை, கட்டித் திரவியங்கள், ஆயுதம், காகிதம், ஆலைகள் கல்விச்சாலைகள் குடைகள் உழுபடைகள் கோணிகள் இரும்பாணிகள், வண்டிகள், கப்பல்கள், காவியம் செய்வோம், காடு வளர்ப்போம் கலை வளர்ப்போம், உலை வளர்ப்போம் ஓவியம் செய்வோம், ஊசிகள் செய்வோம் இரும்பைக் காய்ச்சுதல், யந்திரங்கள் வகுத்தல், கரும்பைச் சாறு பிழிதல் மண் எடுத்து குடங்கள் செய்தல் மரத்தை வெட்டி மனைகள் செய்தல் காய்கனி, நன்செய், பயிர், எண்ணெய், பால், நெய், இழையை நூற்று நல்லாடை செய்தல் முதலிய செல்வங்கள் செல்வ உற்பத்தி உழைப்பு ஆகியவை பற்றியெல்லாம் அவருடைய பல பாடல்களிலும் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

அந்த வழியில் ''பணத்தினைப் பெருக்கு'' என்று புதிய ஆத்திசூடியிலும் குறிப்பிடுகிறார்.

## 66. பாட்டினில் அன்பு செய்

இயற்கை சக்திகளின் அசைவிலிருந்து ஒலியும் தோன்றுகின்றன. அவைகளிலிருந்து இசையும் தோன்றியிருக்கிறது.

காற்றின் அசைவிலும் தண்ணீரின் சலசலப்பான ஓட்டத்திலும் நெருப்பின் சீற்றத்திலும், இடியின் ஓசைகளிலும் மரங்கள் செடி கொடிகளின் அசைவிலும், விலங்குகளின் குரலிலும் பறவைகளின் சத்தத்திலும் நாம் இசையின் வடிவங்களைக் காண்கிறோம். ஆதிமனிதன் இவ்வாறு இயற்கையின் இசை வடிவங்களில் இருந்து பாட்டுகளையும்,

தாளங்களையும் வளர்த்தான், குழலிசையும், யாழிசையும் தாளக்கருவிகளும் வளர்ந்தன. இன்று பல நூற்றுக்கணக்கான இசைக்கருவிகளும் தாளக்கருவிகளும் வந்துள்ளன. இவை மேலும் பெருகும். அவையெல்லாம் பாட்டுக்கும் இசைக்கும் ராகங்களுக்கும் தாளங்களுக்கும் ஆதாரமாகத் துணையாக வளர்ந்து வந்துள்ளன. அந்தப் பாட்டின் மீது அன்பு செய்து வளர்க்க வேண்டும்.

நமது பாரத நாடு இசை தாளங்களுக்குரிய தேவதைகளையும் தெய்வங்களையும் வளர்த்திருக்கிறது. நமது தெய்வங்களுடன் இசைக்கருவிகளையும் இணைத்துள்ளோம். கண்ணனின் குழலும் கலைமகளின் யாழும் இறைவனின் உடுக்கும், நந்தியின் மத்தளமும் நாம் போற்றும் இசைக்கருவிகளாகும். நாரதரும் தும்புருவும் இசையின் வடிவங்களாகப் போற்றுகிறோம்.

''நாரதகான நலந்திகழ்நாடு'' என்று பாரதி குறிப்பிடுகிறார். ''புள்ளினம் ஆர்த்தன, ஆர்த்தன முரசம், பொங்கிய தெங்கும் சுதந்திரம் நாதம், வெள்ளிய சங்கம் முழுங்கின கேளாய்'' என்று பாரதி பாடுவதைக் காணலாம்.

*''வீணையடி நீயெனக்கு, மேவு விரல் நானுனக்கு*
*பண்ணுசுதி நீயெனக்கு, பாட்டினிமை நானுனக்கு*
*நாதவடிவானவளே நல்லவுயிரே கண்ணம்மா''*

என்று பாரதி இனிமையாகப் பாடுகிறார்.

பிறந்த போது குழந்தைக்குத் தாலாட்டுப் பாட்டும் இறந்த போது ஒப்பாரிப் பாட்டுமாக பிறப்பிலிருந்து அத்தனை நிலைகளிலும் பாரதம் பாட்டில் வளர்ந்திருக்கிறது. கோலாட்டம், நலுங்குப்பாட்டு வண்டிப்பாட்டு, நடுகைப்பாட்டு, கோவில்களில் சங்கும் முரசும் பள்ளியெழுச்சிப் பாடல்களும், காலைப்பாட்டுகள், மாலைப்பாட்டுகள், பாட்டுக் கச்சேரிகள், இசைவிழாக்கள் பாராட்டுப் பாடல்கள் வாழ்த்துக் பாடல்கள், கூத்துப்பாடல்கள், காதல் பாடல்கள் இப்படி எண்ணற்ற பாட்டு வகைகளையும் வளர்த்து மகிழ்ந்திருக்கிறோம்.

''பண்டைச் சிறுமைகள் போக்கி என்னாவில் பழுத்த சுவைத் தெண்டமிழ்ப் பாடல் ஒரு கோடி மேவிடச் செய்குவையே'' என்று பாரதி விநாயகரை வேண்டுகிறார்.

நமது நாட்டின் தூய இசை மரபில் எல்லாவிதமான இசை முறைகளையும் பாட்டுக்களையும் வளர்க்க வேண்டும். நாட்டுப்பாடல் நாடோடிப்பாடல் முதல் செம்மைசால் இசைப்பாட்டுகள் வரை நமது பாட்டினில் அன்பு செய்து வளர்ப்போம்.

பாட்டுக்கள் இயற்றுபவர்களை பாட்டுகளுக்கு இசையமைப்பவர்களை பாட்டுகளைப் பாடுபவர்களையும் பாராட்ட வேண்டும். ஊக்கப்படுத்த வேண்டும் பாட்டுகள் மனிதனுக்கு நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தருகின்றன. உடலில் தெம்பையும் ஊக்கத்தையும் கொடுக்கின்றன. பாட்டுகளும் அதன் கருத்துக்களும் மனிதனுக்கு அறிவை ஊட்டுகின்றன. அறிவைப் பெருக்கி வளர்க்கின்றன.

மனிதன் தனது அன்றாட உழைப்பை முடித்தவுடன் அவனுக்கு ஓய்வும் நிம்மதியும் தேவைப்படுகிறது. அது அவனை மறுநாள் உழைப்பிற்குத் தயார்ப்படுத்துகிறது. அதற்கு இசையும் கலையும் இலக்கியமும் பாட்டும் அவசியமாகிறது.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாகத் தமிழை வளர்த்த இப்பூமியில் பாட்டினில் அன்பு செய்து போற்றி வளர்ப்போமாக.

## 67. பிணத்தினைப் போற்றேல்

பிணம் என்றால் காலம் முடிந்த மனிதன். காலம் முடிந்து விட்ட அத்தனைப் பொருளும் பிணத்தைப் போன்றதேயாகும்.

பிறந்த அத்தனை உயிர்ப் பொருட்களும் சாவது என்பது உறுதியானது. மனிதன் இறந்தவுடன் அது பிணமாகிறது. பிணத்தை வைத்துக் கொண்டு சிலர் ஆடுகிறார்கள், பாடுகிறார்கள், குதிக்கிறார்கள், கதறுகிறார்கள், கத்துகிறார்கள், அழுகிறார்கள், கொட்டு அடித்து கூக்குரல் போடுகிறார்கள்.

அறிவார்ந்த மனிதர்களோ வெனில் மனிதன் இறந்தவுடன் அமைதியாக அதற்குரிய மரியாதை செய்து நல்லடக்கம்செய்து விடுகிறார்கள், மனிதன் பிணமாகி விட்டால் அத்துடன் கதை முடிந்து விட்டது. மனிதன் இருக்கும் போது அவன் செய்த நல்ல காரியங்கள் அதன் செய்திகள் அவைகளின் தன்மைக்கேற்றவாறு சில காலம் நீடித்து நிற்கின்றன. அவைகளை நினைவு கொள்ளலாம், பிணம் சில மணி நேரம் சென்று விட்டால் அழுகிவிடும் அதன் மீது விழுந்து புரள வேண்டாம். காலத்தில் நல்லடக்கம் செய்து விட வேண்டும்.

அதே போல காலம் கடந்து போன, முடிந்து போன, பல அமைப்புகள், பல கருத்துக்கள், பழக்க வழக்கங்கள், நடைவுடை பாவனைகள், கலாச்சார வடிவங்கள் முதலியவற்றை தொல் பொருள் காட்சியகதத்தில் வைத்துக் கொள்வோம். வாழ்க்கையைப் போற்ற வேண்டும் என்பது பாரதி மரபாகும்.

## 68. பீழைக்கு இடங் கொடேல்

உடம்பிலுள்ள முக்கியமான உறுப்புகளில் கண்கள் முதலிடம் பெறுகின்றன. குழந்தைகளைப் பாராட்டும் போது என் கண்ணே, பொன்னே என்று பாராட்டுகிறோம். கண்ணைக் காப்பது போல் என்று உவமைக்குக் கூறுவது வழக்கமாகும். கண்கள் மிக முக்கியமான உறுப்பாகையால் அவைகளுக்குக் கேடு வந்துவிடாமல் அவைகளைக் காப்பதற்கென்றே இமைகள் அமைந்துள்ளன. கண்களை இமைகள் காப்பது போல இராமனும் இலக்குவனும் விசுவாமித்திரனுடைய தவத்தைக் காத்தனர் என்று கம்பன் மிக அழகாகக் கூறுகிறார்.



*''எண்ணுதற்கு ஆக்கரிது, இரண்டு மூன்று நாள்*
*விண்ணவர்க்கு ஆக்கிய முனிவன் வேள்வியை*
*மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்*
*கண்ணினைக் காக்கின்ற இமையின் காத்தனர்''*

என்று கம்பன் கவிதை குறிப்பிடுகிறது.

கண்களுக்கு வெளியிலிருந்து வரும் அபாயங்களையும் கேடுகளையும் இமைகள் காக்கின்றன. அதே சமயம் வெளித் தொடர்பும் உடம்பின் உள் நிலைமையும் இணைந்து கண்களுக்குக் கேடு அல்லது நோய் வரும் போது கண்ணீரும் அது முற்றியதன் அடையாளமாக பீழையும் வருகிறது. கண்ணுக்கு வரும் கேட்டை பீழை உணர்த்துவதைப் போல சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் வரும் கேட்டையும் பீழை என்றும் சிலர் குறிப்பிடுகிறார்கள். அத்தகைய கேடுகளுக்கு இடம் கொடுக்கக்கூடர்து.

கண்பார்வை புலன் உணர்வுகளில் மிக முக்கியமானது. கண்பார்வை மூலம் தெரிவதை அறிவதை இதர புலன் உணர்வுகளுடன் இணைத்து நாம் அறிவைப் பெருக்குகிறோம்.

அத்தகைய அறிவு மிக்க கண்களைக் கூர்மையான கண்கள் என்று கூறுகிறோம். புத்தி கூர்மையுடன் கண்களை இணைக்கிறோம். கோபம், சாந்தம் ஆகியவற்றைக் கண்கள் மூலம் தெரிவிக்கிறோம், வருத்தம் மகிழ்ச்சி, அழுகை ஆனந்தம் ஆகியவை கண்கள் மூலம் வெளிப்படுகின்றன. பெண்களுடைய கண்களைக் கூரிய வேலுக்கு ஒப்பமாகக் கூறப்படுகிறது.

கூரிய கண்களின் பார்வை ஊடுருவிச் சென்று காணும் தன்மை படைத்தது. அத்தகைய அன்புக் கண்களை அறிவுக்கண்களைக் கண்ணைப் போல் காக்க வேண்டும் கண்களை எந்த விதமான துன்பமும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் பாதுகாக்க வேண்டும்.

கண்களில் பீழை ஏற்படுவது கண் நோய்க்கு அறிகுறியாகும் அத்தகைய துன்பத்திற்கு இடம் கொடுக்காமல் அதற்குரிய சிகிச்சைகளைச் செய்து கண்களைப் பாதுகாக்க வேண்டும்.

பீழை என்றால் பெருந் துன்பம் என்று பொருளாகும். அதனால் தான் கண்ணுக்கு வரும் துன்பத்தைப் பீழை என்று குறிப்பிடுகிறார்கள். பீழைக்கு இடம் கொடேல் என்றால் பெருந்துன்பங்களுக்கு இடமளிக்கக் கூடாது என்று பொருளாகும்.

இயற்கையால் ஏற்படும் துன்பங்கள் பேரிடி பெருமழை பேய்க்காற்று, பொங்கும் கடல், பனி மழை, பெருவெள்ளம் வறட்சி

முதலியவற்றால் ஏற்படுகின்றன. இவைகளால் ஏற்படும் துன்ப துயரங்களைக் குறைப்பதற்கு தணிப்பதற்குக் கூட்டு முயற்சிகள் செய்யப்பட வேண்டும்.

இனிச் செயற்கையால் ஏற்படும் கொடும் துன்பங்கள் போர்கள் உள்நாட்டுச் சண்டைகள் அடிதடி சண்டைகள் சாதிச் சண்டைகள் மதச் சண்டைகள் இனச் சண்டைகள், மொழிச் சண்டைகள், பொய், களவு, சூது, போட்டி, பொறாமைகள் மூலம் ஏற்படும் சண்டைகள் முதலியவைகளைத் தவிர்ப்பதற்கு தடுப்பதற்கு, அறிவு வழியில், அன்பு வழியில், மனித நேயத்துடன் மனிதப் பண்பாட்டுடன் பேசி தீர்வு கண்டு இணக்கங்களைக் கொண்டு வர வேண்டும்.

அடுத்தபடி தனிமனித உறவுகளில் பொய், நட்பு, கூடா நட்பு சிறியோர் நட்பு, தீயோர் நட்பு முதலிய பலவகை உறவுகள் தொடர்புகளினால் ஏற்படும் துன்பங்கள் கொடும் துன்பங்களாகும். இவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானவையும் பொருந்தக் கூடியவையுமாகும். இத்தகைய துன்பங்களை அறிவால் நல்லொழுக்கத்தால் சீரிய கட்டுப்பாடுகள் மூலம் தவிர்க்க வேண்டும். அத்தகைய துன்பங்கள் வருவதைக் தடுக்க வேண்டும் அப்பீழைகளுக்கு இடமளிக்கக்கூடாது.

இன்னும் உடல் நோயினால், சுகாதாரக் கேடுகளினால், போதுமான உணவின்மையால், சுற்றுச் சூழல் கேடுகளால் தனிமனிதனுக்கு ஏற்படும் துன்பங்களுக்கு இடம் கொடுக்காமல் தடுக்க வேண்டும்.

இத்தகைய துன்பங்களுக்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும். வரும் துன்பங்களைத் தணிக்க வேண்டும். தவிர்க்க வேண்டும். தடுக்க வேண்டும். இதையே பாரதி பீழைக்கு இடம் கொடேல் என்று கூறுகிறார்.

## 69. புதியன விரும்பு

*''பழையன கழிதலும் புதியன புகுதலும்*
*வழுவல கால வகையினானே''*

என்பது நன்னூல் இலக்கணச் சூத்திரமாகும். கால

வேற்றுமை காரணமாக கால வளர்ச்சியின் காரணமாகவும் இலக்கண முறையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை இந்த சூத்திரம் இலக்கண விதி முறையைக் குறிப்பிட்டிருந்த போதிலும் இந்த விதி முறை எல்லாவற்றிற்கும் பொருந்தும்.

பழையன கழிதலும், புதியன புகுதலும் என்று கூறப்பட்டிருக்கிறதே தவிர பழையன அழிதலும் புதியன வருதலும் என்று கூறப்படவில்லை.

இந்தப் பேருலகில் உள்ள அத்தனை பொருள்களும் அசையும் பொருள்களும், அசையாப் பொருள்களும், உயிர்ப் பொருள்களும் ஜடப் பொருள்களும் அனைத்தும் இடை விடாத இயக்கத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த இடைவிடாத இயக்கம் வளர்ச்சியை நோக்கிப் போய்க் கொண்டே இருக்கின்றன. இந்த வளர்ச்சியினால் புதிய புதிய மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்தப் புதிய மாற்றங்கள் பழைய நிலைகளை மறுத்துப் புதிய நிலைகளை அடைந்து கொண்டே இருக்கின்றன. இவ்வாறு அத்தனை பொருள்களிலும் இயக்கமும், வளர்ச்சியும் மாற்றமும் புதிய நிலைகளும் வந்து கொண்டே இருக்கின்றன. இடத்தாலும் காலத்தாலும் இந்த மாற்றங்களும் புதிய நிலைகளும் வந்து கொண்டே இருக்கின்றன.

விதைகள் முளைத்துப் பயிராகிச் செடியாகிக் கொடியாகி மரமாகி வளர்ச்சி பெற்று மாற்றம் அடைந்து படிப்படியாக புதிய நிலைகளை அடைகின்றன. முட்டைகள் குஞ்சுகளாகி பறவைகளாகி புதிய நிலைகளை அடைந்து வளர்ச்சி பெற்றுக் கொண்டே இருக்கின்றன. விலங்குகள் குட்டி போட்டு அவை படிப்படியாக பல மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கின்றன.

மனிதன் குழந்தையிலிருந்து படிப்படியாக மாற்றங்கள் பெற்று பெரிய மனிதனாக வளர்ச்சி அடைகிறான். அதே போல் மனித சமுதாயமும் ஆரம்ப காலத்தில் இருந்து படிப்படியாக பல மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியடைந்து கொண்டே வந்திருக்கிறது. இன்று மிகப் பெரிய அளவில் இனங்களாக, நாடுகளாக தேசங்களாக உலக அமைப்பாக வளர்ந்திருக்கின்றன.

*''உலகம் யாவையும் தாமுளவாக்கலும்*
*நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா*
*அலகிலா விளையாட்டுடையார் அவர்*
*தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே''*

என்னும் கம்பருடைய கடவுள் வாழ்த்துப் பாடலும் உலகில் உள்ள சகலவிதமான பொருள்களும் ஆக்கல், நிலைபெறுத்தல், நீக்கல் என்னும் நிலையில் மாறி மாறி வருவதையும் வளர்ச்சி பெறுவதையும் குறிப்பதாகும்.

மனித சமுதாய அமைப்பிலும் உலகளாவிய வளர்ச்சியில் ஆதிகாலம் தொட்டு மனிதனுயை தேவைகளுக்கான உற்பத்தி முறைகளில் உற்பத்தி சக்திகளில், உழைப்பு சக்தியில், அரசியல் ஆட்சி முறை, அதிகாரம், நீதி முறைகளில் சட்டம், எண்ணங்கள், சிந்தனைகள், மனோபாவங்கள், நடை, உடை, பாவனைகள், பழக்க வழக்கங்கள், கலை இலக்கியம், கலாச்சாரம் முதலியவைகளில் எல்லாம் பல மாற்றங்கள் ஏற்பட்டு புதிய நிலைகளுக்கு எட்டிருக்கின்றன. காலப் பயணத்தில் பழையன கழிந்து புதியன வந்து கொண்டே இருக்கின்றன. இந்தப் புதிய நிலைகளை நாம் விரும்புகிறோம் வரவேற்கிறோம். இதற்கு எதிரான பழைய சக்திகள் வரலாற்றில் பின்னுக் தள்ளப்பட்டுப் படிப்படியாக மறைந்து விடுகின்றன. எனவே பாரதி புதியன விரும்பு என்று நமக்கு ஊக்கமூட்டுகிறார்.

## 70. பூமியிழந்திடேல்

பூமி என்றால் உலகம், பூமி என்றால் நாடு, நமது பூமி பாரத பூமி, பூமி என்றால் நிலம், இந்த பூமியை இழந்திடேல் என்றால் இந்த உலகத்தை இழந்து விடக்கூடாது, இந்த நாட்டை இழந்து விடக்கூடாது நமது நிலத்தை இழந்துவிடக் கூடாது என்று பொருள் கொள்ளலாம்.



நளன் என்னும் ஒரு அரசன் பேரரசனாக தனது நாடான நிடத நாடு என்னும் நாட்டை ஆண்டு வந்தான்.

நளனுடைய கதையை பாண்டிய நாட்டைச் சேர்ந்த புகழேந்தி என்னும் தமிழ்ப்புலவன் வெண்பா பாட்டில் பாடியுள்ளான். அந்த நூலுக்கு நளவெண்பா என்று பெயர். நளன் ஆண்ட நிடத நாட்டைப் பற்றிக் கூறும் போது புகழேந்தி அது இல்லாமையும் கல்லாமையும் இல்லாத நாடு என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

நளன் சூதாட்டத்தில் நாட்டை இழந்து விட்டான். தனது மனைவி மக்களுடன் கானகத்திற்குச் சென்றான். காட்டில் இரவு தூங்கிக் கொண்டிருந்த போது மனைவியையும் குழந்தைகளையும் காட்டில் தனியாக விட்டு விட்டு ஓடிவிட்டான்.

நளனுடைய மனைவி தமயந்தி காலையில் எழுந்து கணவனைக் காணாமல் தனது குழந்தைகளை வைத்துக் கொண்டு பல்வேறு ஆபத்துகளிலிருந்து தப்பி தனது தந்தை வீட்டிற்குச் சென்று அந்த நாட்டில் தங்கியிருந்தாள்.

நளன் மாறுவேடத்தில் வேறு நாட்டிற்கு சென்று அந்த நாட்டு அரசனிடம் சாரதியாக வேலை பார்த்து வந்தான். ஒரு நாள் அந்த அரசனுடன் நளன் தமயந்தியின் தந்தை நாட்டிற்குச் சென்றான். அங்கு நளன் தனது மக்களைச் சந்திக்கிறான். அவர்களுக்கு மாறுவேடத்தில் இருந்த தங்கள் தந்தையை அடையாளம் தெரியவில்லை. நளன் அக்குழந்தைகளை நீங்கள் யார் மக்கள், உங்கள் நாடு எது என்று கேட்க, அவர்கள் ''நாங்கள் நளராஜன் மக்கள், நாட்டை இழந்துவிட்டோம், எங்கள் நாட்டை வேற்றரசர் ஆள்கிறார்'' என்று பதில் கூறினார்கள், நளன் அவர்களிடம், ''உங்கள் நாட்டை வேற்றரசர் ஆள நீங்கள் சும்மா இருக்கலாமா? என்று உணர்ச்சி ததும்பக் கேட்டதாகப் புலவர் புகழேந்தி குறிப்பிடுகிறார்.

தருமன் சூதாட்டத்தில் நாட்டை இழக்கிறான். பாரதியின் கோபம் பொங்கி எழுகிறது. ஆயிரங்களான நீதி அவையுணர்ந்த தருமன் தேயம் வைத்திழந்தான். சீச்சீ சிறியர் செய்கை செய்தான் என்று கூறுகிறார்.

இந்திய மக்கள், ஆங்கிலேயர்களிடம் தங்கள் நாட்டை இழந்து விட்டார்கள். நமது நாடு பாரத நாடு. இது பழம் பெரும்

பூமி, நாம் அதன் மக்கள், இந்த பூமியை நாம் இழந்து விடக் கூடாது என்று பாரதி பேசினார்.

இப்போது நாம் விடுதலை பெற்றுவிட்டோம். அன்னியர்களிடம் இருந்து நமது நாட்டை மீட்டு விட்டோம். இதை நாம் காக்க வேண்டும்.

பூமி என்னும் போது இதை இப்போது உலக அளவில் நாம் காண வேண்டும். இன்றைய உலகிற்கு இந்த பூமிக்கு மிகப் பெரிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. பலவிதமான அபாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

உலகை முதலாவதாக அணுகுண்டுகள், அணு ஆயுத சோதனைகளிலிருந்து காப்பாற்ற வேண்டும். இரண்டாவதாக நமது பூமிக்கு ஏற்பட்டுள்ள அடுத்த அபாயம் சுற்றுச் சூழல்களுக்கு ஏற்பட்டுள்ள அபாயமாகும்.

நமது பூமி கடல், காற்று, ஆறுகள், மலை, காடுகள் ஆகியவைகளில் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. காடுகளும், மலைகளும், மரங்களும், தாவரங்களும் விலங்குகளும் இதர பலவகை உயிரினங்களும் பாதிக்கப்பட்டு அழிந்து கொண்டிருக்கின்றன. ஆகாயம் பாதிக்கப்பட்டு தட்ப வெப்ப நிலை பருவமழை ஆகியவை சிதைந்து கொண்டிருக்கின்றன. நகரங்களில் ஜனநெருக்கடி அதிகமாகி மக்களுடைய வாழ்க்கைக்கே அபாயத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது, உலகின் மொத்த உணவு உற்பத்தி குறைந்து கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் வறட்சி, மறுபக்கம் வெள்ளம், இத்தகைய இயற்கைச் சூழல் அபாயங்கள் அதிகரிக்குமானால் நமது பூமியை நாம் இழந்து அழியும் அபாயம் ஏற்படும். எனவே நாம் வாழும் இந்த பூமியை இயற்கை மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்பிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

நமது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் முக்கால் வாசிபேர் சிறிய அளவில் சொந்த நிலம் வைத்துள்ள சிறிய நடுத்தர விவசாயிகளேயாவர். அவர்கள் தங்கள் நிலத்தை இழந்து விடும் அபாயங்கள் அதிகரித்து வருகின்றன. அவர்களுக்கு இன்றைய

சூழ்நிலையில் நாட்டின் பொருளாதார உறவு நிலையில் ஏற்ற தாழ்வுகள் அதிகரித்து விவசாயிகள் கடன்பட்டும் அவர்கள் விளை விக்கும் விளை பொருள்களுக்கு போதிய விலையில்லாமலும், சாகுபடிச் செலவுகள் அதிகரித்தும், கடன் கட்ட முடியாமலும் தங்கள் சொந்த நிலத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு ஏழை விவசாயி தனக்குள்ள பூமியை மிகவும் கவனத்துடன் கருத்துடன் பாதுகாத்துப் பேணுகிறான். ஏனென்றால் அந்த பூமி அவனை வாழ வைக்கிறது.

தசரதனுடைய ஆட்சியைப் பற்றி கம்பன் மிகவும் அழகான ஒரு உவமையுடன் கூறுகிறார்.

*''வையகம் முழுவதும் வறிஞர் ஓம்பும் ஓர்*
*செய் எனக்காத்து இனிது அரசு செய்கின்றான்''*

என்று கூறுகிறார்

செய் என்றால் சிறிய அளவிலான பூமி, நிலம், நன்செய், புன்செய் என்று குறிப்பிடுகிறோமல்லவா? ஒரு அறிஞன் தனக்குள்ள செய் நிலத்தை மிகவும் கவனத்துடன் காப்பதைப் போலத் தசரதன் இந்த வையகத்தை காத்தான் என்று பொருளாகும்.

பூமியை இழந்திடேல் எனப் பாரதி கூறுவதை நாம் அதன் விரிவடைந்த பொருளில் புரிந்து கொள்ள வேண்டும்.

## 71. பெரிதினும் பெரிது கேள்

பாரதி புதுமையை விரும்பினார், பழைய, பல, காலம் கடந்து போன கருத்துக்களை நிராகரித்தார். அவர் புதிய ஆத்திசூடியை எழுதியதே அந்த நோக்கத்தில் தான். போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து என்பது பழைய வாக்கு. அதை மறுத்து பெரிதினும் பெரிது கேள் என்று கூறுகிறார். மீதூண் விரும்பேல் என்னும் பழைய வாக்கிற்கு மாறாக ஊண் மிக விரும்பு என்று பாரதி கூறினார். நன்றாக சாப்பிடு என்றார். அப்போது தான் உடல் வலுவாக இருக்கும்.

பெரிதினும் பெரிது என்று கூறும் போது எதையும் பெரிதாகவே நினைக்க வேண்டும். பெரிய லட்சியங்களையே நினைக்க வேண்டும். உயர்ந்த கோட்பாடுகளையே கருத வேண்டும். உயர்ந்த எண்ணங்களையே கொள்ள வேண்டும்.

நமது வாழ்க்கை வளமுடன் இருக்க வேண்டும். அதற்கு நமது தேவைகள் நிறை வேற வேண்டும். கோருவது குறைவாக ஏன் கோர வேண்டும். எல்லாம் வேண்டும், தேவைகள் எல்லாம் நிறைவேற வேண்டும்.

இவ்வாறு வேண்டும் போது ஒரு தனிமனிதனுக்கு மட்டுமல்ல, சமுதாயத்திலுள்ள எல்லா தனிமனிதர்களுக்கும் ஆகும். அத்தகைய சிந்தனை நமது குழந்தைகளுக்கு ஏற்பட வேண்டும்.

*''பண்டைச் சிறுமைகள் போக்கி*
*என்னாவில் பழுத்த சுவைத்*
*தெண்டமிழ்ப் பாடலொரு கோடி மேவிடச்*
*செய்குவையே''*

என்று ஒரு கோடி பாடல் பாட வரம் கேட்கிறார். பெரிதினும் பெரிது கேட்கிறார்.

*''பூமண்டலத்தில் அன்பும் பொறையும்*
*விளங்குக, துன்பமும் மிடிமையு நோவும்*
*சாவும் நீங்கிச் சார்ந்த பல்லுயிரெலாம்*
*இன்புற்று வாழ்க''*

என்று விநாயகரைப் பெரிதினும் பெரிது கேட்டு பாரதி பாடுகிறார்.

*''வேதங்கள் சொன்னபடிக்கு மனிதரை*
*மேன்மையுறச் செய்தல் வேண்டுமென்றே*
*நூறு வயது புகழுடன் வாழ்ந்துயர்*
*நோக்கங்கள் பெற்றிட வேண்டுமென்றே''*

என்று உயர்ந்த சிந்தனைகளும் பாடி, பாரதி நமக்கும் பெரிதினும் பெரிது கேட்க வழி காட்டுகிறார்.

## 72. பேய்களுக்கஞ்சேல்

பேய்கள் என்பது கிடையாது. அது வெறும் கற்பனை. அது வெறும் மிரட்சி நமது மக்கள் பேய், பேய், என்று மூடநம்பிக்கைகளை ஊட்டிவிட்டார்கள், பேய் என்று கூறி பயத்தை உண்டாக்கி விட்டார்கள். அந்த பொய்ப் பேய்களுக்கு நாம் பயப்படக்கூடாது.

பாரதியின் இந்த வழியில் கவிஞர் பட்டுக் கோட்டை கல்யணசுந்தரமும் பாடியுள்ள ஒரு பாட்டை இங்கு நினைவு கூறலாம்.

1952ஆம் ஆண்டில் ஒரு தடவை ஒரு நாடகம் நடத்துவதற்காக கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஒரு நாடகக் குழுவுடன் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்திருந்தார். மாலை நேரம். நானும் கவிஞரும் ரயில் நிலையத்திற்குச் செல்லும் சாலையில் நடந்து கொண்டிருந்தோம். அப்போது ஒரு தாயும் அவருடைய குழந்தையும் சாலையில் போய்க் கொண்டிருந்தார்கள். தாய் சற்று வேகமாக முன்னே சென்று விட்டார். குழந்தை மெதுவாக நடந்து பின் தங்கியிருந்தான். சாலையின் ஓரத்தில் ஒரு பழைய வேப்பமரம், தாய் தன் மகனைப் பார்த்து குரல் கொடுக்கிறாள். ''அடே சீக்கிரம் வாடா, அந்த வேப்ப மரத்திலே பேய் இருக்குடா, சீக்கிரம் வாடா'' என்று குரல் கொடுத்தார், வானம் மேக மூட்டமாக இருந்தது, மாலை வெளிச்சம் மங்கலாக இருந்தது, நாங்கள் இருவரும் காற்று வாங்கிக் கொண்டு, சாலையின் ஓரத்தில் இருந்த ஒரு பாலத்தின் சுவற்றில் உட்கார்ந்திருந்தோம். கவிஞர், அந்தத் தாயின் வர்த்தைகளைக் கேட்டுவிட்டு தனது தொடையில் தாளம் போட்டுக் கொண்டே சிந்தித்துக் கொண்டருந்தார். சற்று நேரத்தில் ஒரு பாட்டை முணுமுணுத்தார்.

*''வேப்ப மரத்தின் உச்சியின் மீது பேய் ஒண்ணு*
*இருக்குதுண்ணு சொல்லி வைப்பாங்க, உன்*
*வீரத்தை இளமையிலேயே கிள்ளி வைப்பாங்க*
*சின்னப்பயலே, சின்னப்பயலே சேதி கேளடா*

*மூளையற்ற இந்த வார்த்தைகளை*
*விளையாட்டாகக்கூட நம்பிவிடாதே''*

என்று பாடத் தொடங்கினார். அவ்வரிகளே பிற்காலத்தில் பிரபலமான சினிமா பாடலாயிற்று.

பாரதியின் புதிய ஆத்திசூடி 'பேய்களைக் கண்டு அஞ்சாதே' என்று தெரிவிக்கிறது. பேய் என்பது பொய். அந்தப் பொய்யை நம்பி அதைக் கேட்டு பயப்படக்கூடாது.

பொய்யான பேய்கள் மட்டுமல்ல சில மனிதப் பேய்களும் இருக்கின்றன. பேய்கள் என்பது கொடுமையானவைகளாகச் சித்தரிக்கப்பட்டு இருக்கின்றன. அவை கற்பனையானவை. பேய்களும் பேய்க்கதைகளும் கற்பனையானவை, அவை கட்டுக் கதைகள், அவைகளை நம்ப வேண்டாம், பொய்யான பேய்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். அவ்வாறே மனிதப் பேய்களைக் கண்டும் நமது குழந்தைகள் அஞ்சவேண்டாம்.

## 73. பொய்மை இகழ்

பொய் சொல்லக் கூடாது பாப்பா என்று பாரதி பாப்பாவுக்குக் கூறுகிறார். அத்துடன் பொய்யை இகழ் என்று வலியுறுத்துகிறார். பொய்மை எங்கிருந்தாலும் சரி, அதைக் காரி உமிழ வேணடும். அதை நம்பக்கூடாது என்பது மட்டுமல்ல. அதை இகழ்ந்து நிராகரிக்க வேண்டும்.

*''பயமெனும் பேய்தனை யடித்தோம் – பொய்மைப்*
*பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்''*

என்று பொய்மையைப் பாம்பிற்கு ஒப்பிட்டு அதன் உயிரைக் குடித்து கொன்று வீச வேண்டும் என்று பாரதி வலியுறுத்திக் கூறுகிறார்.

*''பொய்மை கூறலஞ்சுலாய் வா வா வா'' என்றும்*
*''பொய்மை நூல்கள் எற்றுவாய் வா வா வா''*

என்றும் பாரதி வருகின்ற பாரதத்தை அழைக்கிறார்.

மனிதர்களில் சில பொய்யர்கள் இருக்கிறார்கள். சிலர் பொய் சொல்லி பிறரை ஏமாற்றுகிறார்கள். போலியான சில மனிதர்கள் போலியான சில பொருள்களை நல்ல பொருள் என்று பொய் சொல்லி ஏமாற்றி விற்பனை செய்கிறார்கள். அவை எல்லாம் இகழ்ச்சியான செய்கைகளாகும்.

பொய்யான சில தோற்றங்கள் இருக்கின்றன. அவைகளைக் கண்டு நாம் ஏமாறக் கூடாது. சில நூல்கள் பொய்மை யானவைகளாக இருக்கின்றன. அவைகளைப் போற்றக் கூடாது. பாராட்டக் கூடாது. அவைகளை இகழ்ந்து ஒதுக்க வேண்டும்.

சில புராணக் கதைகளில் ஏராளமாக பொய்கள் இருக்கின்றன. அந்தப் பொய்களை நம்ப வேண்டாம். அவைகளில் உள்ள மொழியின் சுவை, இனிய நடை கருதி அவைகளைப் படிக்கலாம் என்று பாரதி கூறுகிறார்.

பொய்யான சில தத்துவங்களையும் பொய்யான பல கடவுள்களையும் உண்டாக்கி நம்மை மிரள வைக்கிறார்கள். மக்களிடம் மூட நம்பிக்கைகளை உண்டாக்குகிறார்கள். அவைகளை எல்லாம் இகழ்ச்சியாகக் கருதி ஒதுக்க வேண்டும்.

சில பத்திரிகைகளில் சில பொய்யான செய்திகளை வெளியிட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். அப்படிப்பட்ட பல செய்திகள் சில நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு பரப்பப்படுகின்றன. அவைகளை நாம் பகுத்துப் பார்த்து அடையாளம் கண்டு புரிந்து கொள்ள வேண்டும்.

சில அரசியல் வாதிகளும் அரசியல் கட்சிகளும் பொய்யான வாக்குறுதிகளையும் வாய்ச்சவடால் சொல்லாடல்களையும் அள்ளி வீசி விட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். அவற்றையெல்லாம் நன்கு அடையாளம் கண்டு இகழ்ந்து ஒதுக்க வேண்டும்.

## 74. போர்த்தொழில் பழகு

நமது நாட்டிலுள்ள ஆணும் பெண்ணும் குழந்தைப் பருவத்திலிருந்தே உடற்பயிற்சி செய்ய வேண்டும், குஸ்தி

குத்துச்சண்டை, கராத்தே கம்பு விளையாட்டு, கத்திச் சண்டை முதலிய பயிற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும் அத்துடன் கவாத்து பழக வேண்டும். துப்பாக்கி சுட பழக வேண்டும்.



பதினெட்டு வயது வரை எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டாயமாகக் கவாத்து பயிற்சி கொடுக்க வேண்டும். தொண்டர் படைப் பயிற்சி கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் கல்லூரியிலும் உடற்பயிற்சி, விளையாட்டு, கவாத்து ஆகியவைகளை மாணவ, மாணவியருக்கு கட்டாய பாடமாக்க வேண்டும். ஒவ்வொரு அரசியல் இயக்கமும் அவர்களுடைய இளைஞர் அணி மற்றும் உறுப்பினர்களுக்கு முப்பது வயது வரை உடற்பயிற்சி கொடுக்க வேண்டும். இந்தப் பயிற்சி உடலுக்கு வலிமையைக் கொடுக்கும் மனதில் ஒரு கட்டுப்பாடு மற்றும் ஒழுக்க உணர்வை ஏற்படுத்தும். துணிவையும் ஊக்கத்தையும் கொடுக்கும்.

ஐரோப்பாவில் பல நாடுகளிலும் இளைஞர்களுக்கு பதினெட்டு முதல் இருபது வயது காலத்தில் இரண்டு மூன்று ஆண்டுகள் கட்டாய ராணுவப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இதில் ராணுவ நோக்கம் மட்டுமில்லை. இளைஞர்களை உடலாலும் உள்ளத்தாலும் பக்குவப் படுத்துவதற்கு இது மிகவும் அவசியமாகும். நமது நாட்டிலும் முன்பு வீட்டிற்கு ஒரு பிள்ளை நாட்டிற்காக என்றிருந்தது. பின்னர் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் நாட்டின் ஒற்றுமையின்மை அந்நிய ஆட்சி இவையெல்லாம் நமது நாட்டை சீர் குலைத்து விட்டது.

பாரதியார் காலத்தில் நாடு அடிமைப்பட்டு கிடந்தது. நாட்டு மக்கள் அனைவரையும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்த

வேண்டியிருந்தது. பாரதி விடுதலை இயக்கத்தில் இந்திய தேசிய காங்கிரசின் தீவிரவாதப் பிரிவை ஆதரித்த போதிலும், எல்லா வகையான போராட்டங்களையும் பொதுவாக ஆதரித்தார். பாராட்டினார் என்றே கூற வேண்டும். கிருஷ்ணனும் அர்ஜுனனுமே அவருடைய முக்கியமான கதாபாத்திரங்களாகும்.

நமது நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ராணுவத்தின் பங்கு மிக முக்கியமானதாகும். 1757 ஆம் ஆண்டின் பிளாசி யுத்தம் முதல் 1857 ஆம் ஆண்டின் முதலாவது சுதந்திரப் போராட்டம் வரை அன்னிய ஆட்சிக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிரான போராட்டங்கள் அனைத்தும் ஆயுதம் தாங்கிய போராட்டங்களாகவே இருந்தன. 1857 ஆம் ஆண்டின் முதலாவது இந்திய சுதந்திரப் போராட்டமும் சிப்பாய்க் கலகம் என்னும் பெயரில் ராணுவ வீரர்களும் மக்களும் கலந்த போராட்ட மாகவே இருந்தது. அதன் பின்னரும் கார்வாலி ராணுவ வீரர்களின் பங்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் தலைமையில் இந்திய தேசிய ராணுவம் கடைசியாக 1946 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்திய விமானப்படை, கப்பல் படை வீரர்கள் நடத்திய போராட்டம் ஆகியவை இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கினை வகித்துள்ளது.

விடுதலைப் போராட்ட காலத்தில் பாரதி நமது இளைஞர்களுக்கு ''போர்த்தொழில் பழகு'' என்று அறிவுரை கூறியுள்ளது இப்போதும் பொருந்தும்.

நாட்டைக் காக்க நாட்டின் சுதந்திரத்தைப் பேணிக்காக்க நாட்டின் அமைதியைக் காக்க நாட்டின் எல்லைகளைக் காக்க உள் நாட்டுத் தொல்லைகளை நீக்க நமது குழந்தைகள் அனைவருக்கும் போர்ப்பயிற்சி கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## 75. மந்திரம் வலிமை

மந்திரம் கற்போம், வனத்தந்திரம் கற்போம் என்பது பாரதியின் வாசகம் அம்மந்திரம் வலிமையானது என்று கூறுகிறார். பாரத நாட்டுக் கொடியைப் பற்றிய பாடலில்.

*''மந்திரம் நடுவுறத் தோன்றும் – அதன்*
*மாண்பை வகுத்திட வல்லவன் யானோ''*

என்று குறிப்பிடுகிறார். தேசிய விடுதலை இயக்க காலத்தில் வந்தே மாதரம், ஜெய்ஹிந்த், சத்தியமேவ ஜயதே என்னும் சொற்கள் எல்லாம் மக்கள் ஒலிக்கும் மந்திரங்களாயின. சத்தியமேவ ஜயதே – வாய்மையே வெல்லும் என்னும் சொல் நமது நாட்டின் தாரக மந்திரமாகி உள்ளது. இந்தச் சொல் மிகவும் வலுவுள்ளதாகும் பொருள் நிறைந்ததாகும்.

மந்திரங்கள் எல்லாம் மாய மந்திரங்கள் அல்ல. மந்திரம் போலியாகக் கூறப்படும் பொய் மந்திரங்கள் அல்ல. மந்திரம் என்றால் அறியாமையில் உள்ள மக்கள் பகுதியில் அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டவோ அல்லது ஏமாற்றவோ முணு முணுக்கப்பட்ட மந்திரங்களல்ல.

*''மந்திரவாதியென்பார் – சொன்ன*
*மாத்திரத்திலே மனக்கிலி பிடிப்பார்''*

என்று பாரதி குறிப்பிடுகிறார். அதேபோல நடிப்பு சுதேசிகள் என்னும் பாடலில்.

*''யந்திரசாலைகள் என்பார்*
*எங்கள் துணிகள் என்பார்*
*மந்திரத்தாலே யெங்கும் – கிளியே*
*மாங்கனி வீழ்வதுண்டோ''*

என்று கூறுகிறார்.

சில மந்திரவாதிகள் மந்திரத்திலே மாங்கனியைக் காட்டுவார்கள். அது பொய்யானது அதனால் தான் நமது நாட்டில் அறிவார்ந்த மக்களிடத்தில் ''மந்திரத்தில் மாங்கனி விழுவதில்லை'' என்னும் பழமொழி வந்துள்ளது.

பாரதி இங்கு குறிப்பிடும் மந்திரம் வலிமை என்பது வலிமையான மந்திரமாகும்.

*''மந்திரம் கோடி இயக்குவோன் நான்*
*இயக்கு பொருளின இயல்பெலாம் நான்*
*தந்திரம் கோடி சமைத்துளோன் நான்*
*சாத்தி வேதங்கள் சாற்றினோன் நான்''*

என்று குறிப்பிடும் வல்லமை மிக்க கோடி மந்திரமாகும்.

திருமூலர் தமிழில் எழுதியுள்ள திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டதாகும் அவை சைவ சித்தாந்த வாழ்க்கை நெறிமுறையின் தத்துவங்களாகும். மிகவும் அருமையான தமிழ்நூல் அதை நாம் படிக்க வேண்டும்.

மந்திரம் என்பதில் இருந்து தான் மந்திரி என்னும் சொல் வந்திருக்கிறது. மந்திரி என்றால் அமைச்சர் என்று பொருள் மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் என்று ஒரு சொல் உண்டு. அரசும் அமைச்சரும் இணைந்த ஆட்சி. அமைச்சு நன்றாக திறமையாக நேர்மையாக அமைந்திருந்தால் தான் ஆட்சி வலுவாக இருக்கும்.

மந்திரம் என்பது வேதம், மந்திரம் என்பது தத்துவம் மந்திரம் என்பது அரசு இயல், மந்திரம் என்பது ஆட்சியியல் மந்திரம் என்பது அறிவியல், மந்திரம் என்பது வாழ்க்கை நெறியியல், மந்திரம் கோடி, எண்ணிலடங்காது அதை நாம் நன்கு கற்க வேண்டும். அது நமக்கும் நமது நாட்டிற்கும் வலிமையைக் கொடுக்கும்.

## 76. மானம் போற்று

*''ஞானத்திலே பரமோனத்திலே – உயர்*
*மானத்திலே அன்ன தானத்திலே*
*கானத்திலே அமுதாக நிறைந்த*
*கவிதையிலே உயர்நாடு . பாருக்குள்ளே நல்ல*
*நாடு, எங்கள் பாரத நாடு''*

என்று பாரதி பாடுகிறார்.

மானத்திலே உயர்ந்த நாடு பாரத நாடு என்று பாரதி குறிப்பிடுகிறார். மானம் என்பது மனித கவுரவம். மானம் மரியாதை என்று இணைத்துச் சொல்வதுண்டு. ஒருவர் நம்மை தரக்குறைவாகப் பேசிவிட்டால் நம்மை அவமானப்படுத்தி விட்டார் என்று கூறுகிறோம். மானத்திற்கு எதிர்பதம் அவமானம்.

மானம் என்னும் மனித கவுரவம் ஒருவருடைய கல்வி, பண்பாடு, நன்னடத்தை முதலியவைகளில் அடங்கியிருக்கிறது. தானம் , வேள்வி, தவம், கல்வி, வீரியம் ஆண்மை, நன்னேர்மை, வன்மை ஆகியவற்றுடன் சேர்த்து மானம் என்றும் பாரதி குறிப்பிடுகிறார்.

*''ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்*
*நல்ல பாரதத்திடை வந்தீர்*
*ஊனம் இன்று பெரியது இழைக்கின்றீர்*
*ஓங்கு கல்வி உழைப்பை மறந்தீர்*
*மானமற்று விலங்குகள் ஒப்ப*
*மண்ணில் வாழ்வதை வாழ்வெனலாமோ?*

என்று பாரதி அடிமை இந்தியாவில் வாழ்ந்த மக்களின் தன்மானத்தைத் தட்டி எழுப்புகிறார்.

*''மானம் சிறிதென்றெண்ணி*
*வாழ்வு பெரிதென்றெண்ணும்*
*ஈனர்க்குலகந்தன்னில் – கிளியே*
*இருக்க நிலைமையுண்டோ?*

என்று பாரதி நடிப்புச் சுதேசிகளைச் சாடுகிறார்.

நான்கு பேர் போற்றும்படியாக நாம் நடந்து கொள்ள வேண்டும். நாம் பொய், களவு சூது, காமம், வஞ்சகம், துரோகம் முதலிய பாதகங்களைச் செய்தால் அதன் மூலம் மற்றவர்களுக்கு கேடு விளைவிக்கிறோம். அது கூடாது. அவைகளைச் செய்தால் மற்றவர்கள் நம்மைத் தூற்றுவார்கள். அப்போது நமக்கு மற்றவர்களிடம் மதிப்பு குறைகிறது. அவமானம் ஏற்படுகிறது.

யாருக்கும் கெடுதல் இல்லாமல் கூடுமான வரையில் மற்றவர்களுக்கு நல்லது செய்து வாழ்வதே நல்ல வாழ்க்கையாகும். அதில் தான் மனிதனுக்குப் பெருமை இருக்கிறது. நாம் வாழ்க்கை நடத்துவதற்கு ஏதாவது தொழில் செய்ய வேண்டும். அவ்வாறு ஒரு தொழில் செய்யும் போது அது யாருக்கும் துன்பம் விளைவிக்காத தொழிலாக நாணயமான தொழிலாக மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் தொழிலாக இருக்க வேண்டும் என்று பாரதி கூறுகிறார்.

அவ்வாறு நல்ல தொழில் செய்து நாம் நமது கவுரவத்தையும் பண்பாட்டையும் பாதுகாத்து வாழ வேண்டும். அதுவே மானமுள்ள வாழ்க்கையாகும். நாம் நமது மானத்தைப் போற்றுவதுடன மற்றவர்களின் மானத்தையும் போற்ற வேண்டும்.

நாம் நமது கவுரவத்தையும் மானத்தையும் போற்றுவதுடன் நமது வீட்டு கவுரத்தையும் மானத்தையும் நாட்டு கவுரவத்தையும் மானத்தையும் போற்ற வேண்டும்.

நமது வீட்டில் நாம் ஒற்றுமையாக இல்லாமல் சண்டையடித்துக் கொண்டால் நமது கவுரவம் பாதிக்கப்படும். நமது வீட்டில் உள்ள ஒருவர் தவறு செய்தால் அது நமது வீட்டு கவுரவத்தைப் பாதிக்கும். அதேபோல நமது தெருவில் நமது ஊரில் ஒரு சிலர் தவறு செய்தால் அது நமது தெரு ஊர் ஆகியவற்றின் கவுரவத்தைப் பாதிக்கும்.

நமது நாட்டு மக்கள் ஒற்றுமையாக இருந்தால் நமது நாட்டு மக்கள் நன்றாக உழைத்து நாடு முன்னேற்றம் கண்டால் நமது நாட்டில் ஒரு நல்ல ஆட்சி ஏற்பட்டு மக்கள் சுபிட்சமாக இருந்தால் நமது நாட்டிற்கு இதர நாட்டு மக்களிடம் பெருமையும் புகழும் நன்மதிப்பும் ஏற்படும். இதில் குறைவுகள் ஏற்பட்டால் நமது கவுரவம் குறையும், மானம் குறையும் மதிப்பு குறையும்.

மானத்தைப் போற்று என்று பாரதி கூறும் போது நமது தனிநபர் மானத்தையும் நமது குடும்பத்தின் மானத்தையும், நமது தெரு, ஊர் மானத்தையும் நமது நாட்டு மானத்தையும் போற்றி

பெருமையடைய வேண்டும். அத்தகைய முறையில் நமது நல்ல பண்பாடுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று பொருளாகும்.

## 77. மிடிமையில் அழிந்திடேல்

*''பாரதத்திடை யன்பு செலுத்துதல்*
*பாபமோ – மனஸ் – தாபமோ*
*கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது*
*குற்றமோ – இதிற் – செற்றமோ''*

என்று பாரதி ஆங்கிலேயனிடம் தேசபக்தன் கூறுவதாகப் பாடுகிறார்.

பாரத நாட்டின் மீது அன்பு செலுத்துவோம், எங்கள் மிடிமையைப் போக்குவோம் என்று கூறுகிறார்.

மிடிமை என்றால் சோம்பேறித்தனம், மலையாள மொழியில் மடி என்று கூறுவார்கள். சோம்பல் மிகக் கெடுதி. ''சோம்பல் மிகக் கெடுதி பாப்பா – தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா'' என்று பாரதி பாப்பாவுக்குப் பாடுகிறார். எப்போதும் நாம் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். நாம் எப்போதும் ஏதாவது ஒரு வேலையைச் செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

உலகில் உள்ள சகல பொருள்களும் சகல உயிரினங்களும் சதா செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன. தண்ணீரில் உள்ள மீன்கள் இடைவிடாமல் அசைந்து கொண்டே இருக்கின்றன. பறவைகள் விலங்கினங்கள் எல்லாம் இடைவிடாமல் செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

குதிரை உட்காருவதே இல்லை. சதா நின்று கொண்டே இருக்கிறது மனிதன் இட்ட வேலைகளைச் செய்கிறது. கொம்பு இல்லாவிட்டாலும் போர்க்களத்தில் நிற்கிறது. யானை எப்போதும் அசைந்து கொண்டே இருக்கிறது. எறும்பு கூட எப்போதும் சுறுசுறுப்பாகவே வேலை செய்து கொண்டே இருக்கிறது.

அறிவார்ந்த மனிதன் சோம்பித் திரியக் கூடாது அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். எழுந்தவுடன் படிக்க

வேண்டும். உடற்பயிற்சி செய்ய வேண்டும். காலைக் கடன்களைச் செவ்வனே முடிக்க வேண்டும். குளிக்க வேண்டும். குழந்தைகள் பள்ளிக்கு செல்ல வேண்டும்.

பெரியவர்கள் வேலைக்குச் செல்ல வேண்டும். வீட்டு வேலைகளை அனைவரும் சேர்ந்து செய்ய வேண்டும். இரவில் புத்தகங்கள் மற்றும் இதர நூல்களைப் படிக்க வேண்டும். தினசரிப் பத்திரிகைகளைத் தவறாமல் படித்து நாட்டுச் செய்திகளையும் உலகச் செய்திகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை செய்யப் பொதுசேவை செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு நாட்டுப் பணியில் பொது சேவைகளில் ஈடுபட வேண்டும்.

நேரத்தை வீணாக்கக் கூடாது. காலத்தைப் போக்கிவிடக் கூடாது. வாழ்நாளில் பயனுள்ள பணிகளை ஆற்ற வேண்டும். மிடிமையில் நம்மை நாமே அழித்துக் கொள்ளக் கூடாது. இது பாரதியின் ஆணையாகும்.

## 78. மீளுமாறு உணர்ந்து கொள்

போர்களில் வியூகம் வகுத்தல் என்பது போர்முறைகளில் ஒன்று எதிரிகளை வெல்லுவதற்கு சரியான வியூகம் வகுக்க வேண்டும். எதிரிகள் நமக்கு எதிராக வியூகம் வகுத்தால் அதிலிருந்து மீள்வதற்கும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். போர்களில் மட்டுமல்ல நாம் எந்த பெரிய வேலையை மேற்கொண்டாலும் அந்த வேலையைச் சரியாகத் தொடங்கவும் அதை நடத்தவும் அதை வெற்றிகரமாக முடிக்கவும் வியூகம் வகுத்துக் கொள்வது ஒரு நல்ல வேலை முறையாகும்.

பழங்காலத்துப் போர் வியூகங்களில் சக்கரவாள வியூகம் என்பது ஒன்று. அது ஒரு வலுவான வியூகமாகும். எதிரிகளைச் சுற்றி வளைத்து நாசம் செய்யும் ஒரு வழி முறையாகும். மகாபாரதப் போரில் துரோணர் சக்கரவாள வியூகம் வகுத்து பாண்டவர் படையை நாசம் செய்துகொண்டிருந்தான். சக்கரவாள வியூகத்தை

உடைத்து அதிலிருந்து மீள்வதற்கு பாண்டவரில் பார்த்தன் மட்டுமே அறிந்தவன். பார்த்தனோ அப்போது போர்க்களத்தில் இருந்து வெகு தூரத்தில் இருந்தான். சக்கரவாள வியூகத்தினால் சேதம் அதிகரித்துக் கொண்டிருந்தது. வேறு வழியின்றி பார்த்தனின் மகன் அபிமன்யு துணிந்தான். சக்கரவாள வியூகத்தைப் பிளந்து உள்ளே சென்றான். அபிமன்யுவை அனைவரும் சுற்றி வளைத்துக் கொண்டனர். அபிமன்யூவிற்கு வியூத்திலிருந்து மீள்வதற்குத் தெரியவில்லை. மீளமுடியாமல் போர்க்களத்தில் அபிமன்யூ வீரமரணம் அடைந்து வரலாற்றில் இடம் பெற்றான். ஆனால், வெற்றி பெறாமல் மரணமடைந்தான்.

நமது வீட்டிற்கும் நாட்டிற்கும் நாம் செய்ய வேண்டிய எத்தனையோ நல்ல பணிகள் உள்ளன. அதே சமயத்தில் நமக்கு பல கஷ்டங்களும் துன்ப துயரங்களும் ஏற்படுகின்றன. நமது குடும்பத்திற்கும் நாட்டிற்கும் துன்பங்களும் துயரங்களும் ஏற்படுகின்றன. அவைகளையெல்லாம் சமாளித்து நாம் மீள வேண்டும்.

இயற்கையால், மழை, வெள்ளங்களால், வறட்சியால், பசி பட்டினி வறுமையால், கல்லாமையால் ஏற்படும் கஷ்டங்களிலிருந்து நாடும் நாட்டு மக்கள் எல்லாம் மீளவதற்கான வியூகங்களை வகுத்து அதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்த வேண்டும்.

அடிமைத் தனத்திலிருந்து ஆட்சிக் கொடுமைகள் அதிகாரக் கொடுமைகளில் இருந்தும், சமுதாயக் கொடுமைகளில் இருந்தும், ஆதிக்க கொடுமைகளில் இருந்தும் நாட்டையும் நாட்டு மக்களையும் விடுவிப்பதற்கு பாரதி கனவு கண்டார். அதற்கான வியூகங்கள் வகுக்கப்பட்டு மக்களுடைய உணர்வு உயர்த்தப்பட்டு நாடு விடுதலை பெற்றது.

இதையே பாரதி மீளுமாறு உணர்ந்து கொள் என்று கூறினார். அதேபோல் இன்று நாம் நமக்கு முன்புள்ள பல பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வியூகமும் திட்டமும் வகுத்து வெற்றி பெற வேண்டும்.

## 79. முனையிலே முகத்து நில்

நாம் எந்த வேலையை எடுத்தாலும் அதில் முனைப்பாக முன்னணியில் நிற்க வேண்டும். நாம் பள்ளிக்குச செல்கிறோம். படிப்பில் அதிக அக்கரையும் முனைப்பும் காட்ட வேண்டும். படிப்பில் முன்னணியில் இருக்க வேண்டும்.

நாம் பல வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்கிறோம். அதில் அதிகமான அளவில் முனைப்புக் காட்டி முன்னணியில் நின்று போட்டிகளில் வெற்றி பெற வேண்டும்.

நாம் ஒரு தொழில் செய்கிறோம். ஒரு வேலையில் ஈடுபடுகிறோம். நாம் ஈடுபடும் தொழிலிலும், வேலையிலும் அதிகமான அளவில் முனைப்புக் காட்டி முன்னணியில் இருக்க வேண்டும். எந்தத் தொழிலிலும் வேலையிலும் நாம் முதன்மையாகவும் மற்றவர்களுக்கு முன் உதாரணமாகவும் இருக்க வேண்டும்.

நமது நாட்டைக் காக்கவும், நாட்டை பல துறைகளிலும் மேம்பாடு அடையச் செய்யவும் நாம் அதிகமான அளவில் முனைப்புக் காட்டி ஒவ்வொரு துறையிலும் முன்னணியில் இருக்க வேண்டும்.

நாம் சிறந்த மாணவர்களாக, சிறந்த விளையாட்டு வீரர்களாக பல துறைகளிலும் சிறந்த நிபுணர்களாக சிறந்த விஞ்ஞானிகளாகவும் சிறந்த தொழில் முனைவோர்களாக சிறந்த சாகுபடியாளர்களாக சிறந்த தொழிலாளர்களாக உலகிலேயே நமது நாடு சிறந்த நாடாக தோற்றமும் ஏற்றமும் பெற வேண்டும்.

இதையே பாரதி 'முனையிலே முகத்து நில்' என்று நமது குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுகிறார்.

## 80. மூப்பினுக்கிடங் கொடேல்

மூப்பு என்றால் வயது ஆவதினால் ஏற்படுவது. மற்றொன்று மூப்பு என்றல் தளர்ச்சி என்று சொல்லலாம். குறைந்த வயதிலேயே

மூப்பும் தளர்ச்சியும் பல நாடுகளில் ஏற்படுகிறது. வயது அதிகமானலும் உடல் ஆரோக்கியமாக இருந்தால் மூப்பின் தளர்ச்சியைக் குறைக்கலாம்.

இளம் வயதினர், போதுமான உடற்பயிற்சி இல்லாமலும் உடல் நலனில் அதிக கவனம் இல்லாமலும் புகை பிடித்தல், மது அருந்துதல் முதலிய தவறான பழக்க வழக்கங்கள் ஏற்பட்டு அதனால் உடல் நலம் குன்றி தளர்ச்சி ஏற்பட்டு விரைவில் மூப்படையலாம். இத்தகைய விளைவுகளுக்கு நாம் இடமளிக்கக் கூடாது என்று பாரதி கருதினார்.

நாடு அன்னிய ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டிருந்த காலத்தில் நமது செல்வங்கள் எல்லாம் கொள்ளை போனதாலும், வளர்ச்சி குன்றியதாலும் வறுமையும் ஏழ்மையும் கல்லாமையும் இல்லாமையும் அதிகப்பட்டு மக்கள் நீண்ட ஆயுள் இல்லாமல் தளர்ச்சியும் மூப்பும் அதிகரித்து மரண விகிதம் அதிகமாக இருந்தது.

நாடு விடுதலை அடைந்த பின்னர் பல மாற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன. தொழில் விவசாயம், கல்வி, சுகாதாரம், வைத்திய வசதி முதலிய பல துறைகளிலும் வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஏற்பட்டிருக்கிறது. ஆனபோதிலும் மக்களிடையில் ஏற்றத்தாழ்வு நீடித்துக் கொண்டிருக்கிறது. நாட்டில் குறிப்பாக கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளிலும் ஏழ்மை வறுமை வேலையின்மை எழுத்தறிவின்மை, சுகாதாரக்கேடுகள் சுற்றுச்சூழல் பாதிப்புகள் நீடிக்கின்றன. அதனால் மக்களுடைய வாழ்க்கைத் தரம் பாதிக்கப்பட்டு மக்கள் விரைவில் மூப்படைந்து பல வியாதிகளுக்கும் ஆளாகி தளர்ச்சியடைந்து விடுகிறார்கள். இத்தகைய கேடுகளை நீடிக்க விடக்கூடாது.

நமது நாட்டின் பின்தங்கிய நிலையைப் போக்க வேண்டும். தொழில் விவசாயம், கல்வி தொழில் நுட்பம் விஞ்ஞானம், சுகாதாரம், நல்ல உணவு, உடற்பயிற்சி, விளையாட்டு முதலிய

பல துறைளிலும் உள்ள பின் தங்கிய நிலையைப் போக்கி வாழ்க்கையை நவீனப்படுத்த வேண்டும். சமூக ஏற்றத்தாழ்வைப் போக்கி நாட்டு மக்களைக் கலாச்சாரத் துறையில் உயர்த்த வேண்டும். இளைஞர்களிடம் தவறான பழக்க வழக்கங்கள் ஏற்படாமல் விழிப்புணர்வு உண்டாக்க வேண்டும். உடல் ஆரோக்கியத்தை வளர்க்க வேண்டும்.

அதன் மூலம் தான் 'மூப்பினுக்கு இடம் கொடேல்' என்னும் பாரதி வாக்கை நிறைவேற்ற முடியும்.

## 81. மெல்லத் தெரிந்து சொல்

எதையும் முழுமையாகத் தெரிந்து கொண்டு தான் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். அரைகுறையாகத் தெரிந்து கொண்டு உளறக்கூடாது. வாய்க்கு வந்தது வச்சித்தள்ளு என்று பேசக்கூடாது எதையும் நிதானித்துப் பேசு, மெதுவாகப் பேசு, நயமாகப் பேசு, இனிமையாகப் பேசு, நன்கு புரிந்து கொண்டு பேசு, மற்றவர்களுக்கும் புரியும் படி பேசு, மற்றவர்கள் மகிழும்படி பேசு, யாரையும் புண்படுத்தாமல் பேசு என்பது பாரதியின் விருபபமாகும்.

உன் படிப்பை உயர்த்திக் கொள்ளவேண்டும். அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அறிவை விசாலப்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றவர்களுடன் நட்பையும் அன்பையும் நல்லுறவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போது நம்மிடம் மெல்லத் தெரிந்து சொல்லும் பழக்கம் ஏற்படும்.

## 82. மேழி போற்று

மேழி என்பது உழவுக் கருவி. மேழி போற்று என்றால் விவசாயத்தைப் போற்றி வளர்க்க வேண்டும் என்பதாகும்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பது பாரதி வாக்கு, அத்துடன் உழவுத் தொழில் தொடர்பான பல கருத்துக் களையும் பாரதி குறிப்பிட்டுள்ளார்.

*''வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு*
*வாழும் மாந்தர் குலதெய்வமாவான்''*

என்று கூறுகிறார். சாகுபடித் தொழில் தீமையற்ற வஞ்சமற்ற தொழிலாகும்.

*''ஆடுகளும் மாடுகளும் அழகுடைய பரியும்*
*வீடுகளும் நெடுநிலமும் விரைவினிலே தருவாய்''*

என்று ஆடு, மாடு நெடு நிலம் தரும்படி வேண்டிகிறார்.

*''தோட்டத்திலே மரக்கூட்டத்திலே – கனி*
*யீட்டத்திலே பயிரூட்டத்திலே*
*தேட்டத்திலே யடங்காத நிதியின்*
*சிறப்பினிலே உயர்நாடு''*

என்று விவசாய வளத்தைப் பற்றி பாரதி குறிப்பிடுகிறார். மேலும்

*''இனிய பொழில்கள், நெடிய வயல்கள்*
*எண்ணரும் பெரும் நாடு*
*கனியும் கிழங்கும் தானியங்களும்*
*கணக்கின்றித் தரு நாடு''*

என்றுநாட்டின் வளத்தைப் பற்றி பெருமையுடள் பாரதி பேசுகிறார்.

*''வயிற்றுக்கு சோறுண்டு கண்டீர் . இங்கு*
*வாழும் மனிதர் எல்லோருக்கும்*
*பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் – பிறர்*
*பங்கைத்திருடுதல் வேண்டாம்''*

என்றும்

*''உண்ணக்காய்கனி தந்திடுவீரே,*
*உழுது நன்செய் பயிரிடுவீரே*
*எண்ணெய், பால், நெய், கொணர்ந்திகுவீரே''*

என்றும் உழவுத் தொழிலைப் போற்றிப் பாடுகிறார்.

நமது நாடு பெரும்பாலும் விவசாயத்தை சார்ந்துள்ள நாடாக உள்ளது. நாட்டின் பெரும்பாலான மக்கள் விவசாயத் தொழிலை

அபிவிருத்தி செய்வதன் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் விவசாயத்தைச் சார்ந்த கிராமப்புறத் தொழில்கள் கால் நடை பராமரிப்பு பால் உற்பத்தி, பட்டு உற்பத்தி விவசாய உற்பத்திப் பொருள்கள் சார்ந்த சிறு தொழில் குறுந் தொழில்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் தான் நாட்டின் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்.

விவசாயத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டது நீர்ப்பாசனமாகும். நமது நாட்டின் நீர்வளம் அதிகம். நமது நாட்டின் பாரம்பரியமான நீர்ப்பாசன முறை கால்வாய்கள். ஏரி கண்மாய்கள், கிணறுகள் முதலியனவாகும் அத்துடன் அணைக்கட்டுகள் நீர்த் தேக்கங்களையும் கட்டியிருக்கிறோம். ஆயினும் நமது நீர்ப்பாசன வசதி, பழைய நீர்ப்பாசனங்களைப் பராமரிப்பதும் போதாது. ஏரி கண்மாய் கால்வாய்களைச் சீரமைத்து தொடர்ந்து பராமரிக்க வேண்டும். நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டும். நமது நாட்டு நதிகளையும் படிப்படியாக இணைக்க வேண்டும்.

*''வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்*
*மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்''*

என்று பாரதி நெடிது நோக்குடன் பாடியுள்ளார்.

நமது நாட்டு நீர்வளத்தை முழுமையாகப் பயன்படுத்துவதில் நாம் வெற்றி கண்டால் நமது நாட்டின் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை உறுதிப்படுத்த முடியும். அத்துடன் உணவு தானியம் பருத்தி கரும்பு நிலக்கடலை, கடுகு முதலிய எண்ணெய் வித்துக்கள் தேங்காய் முதலிய பிரதானமான சாகுபடி பொருள்கள் காய்கறிகள், மா, பலா, வாழை மற்றும் கனிவகைகள், மலர்கள் முதலியவற்றையும் அவைகளின் உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டும்.

நமது விவசாயத் தொழிலை சகல துறைகளிலும் நவீனப்படுத்த வேண்டும். குறைவான வட்டி விகிதத்தில் போதுமான அளவில் சுலபமான முறையில் கடன் வசதிகளும

விளைபொருள்களுக்கு நியாயமான விலையும் கிடைப்பதன் மூலம் கிராமப்புற மக்களின் வருவாயையும் வாழ்க்கை நிலையையும் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

இது மேழி போற்று என்னும் செய்யுள் பற்றிய புதிய சிந்தனையாகும்.

## 83. மொய்ம்புறத் தவம் செய்

தவத்தினை நிதம்புரி என்று ஏற்கனவே முந்திய ஒரு செய்யுளில் பாரதி கூறியுள்ளார். அத்துடன் அத்தவத்தை மொய்ம் புறச் செய்ய வேண்டும் செம்மையாக முழு மனதுடன் செய்ய வேண்டும் என்று பாரதி கூறுகிறார்.

தவம் செய்தல் என்பது வீட்டைத் துறந்து நாட்டைத் துறந்து உற்றார்உறவினரைத் துறந்து காவி தரித்து முடி வளர்த்து முற்றும் துறந்த சந்நியாசியாகி காட்டில் போய் அமர்ந்து மூக்கைப் பிடித்து தவம் செய்தலையோ, பலவகை போலி தவங்களையோ பொய் வேடங்களையோ பாரதி குறிப்பிடவில்லை. பாரதியை சந்நியாசி விரும்பியாகத் தள்ளிவிடக் கூடாது. பாரதி மூடபக்தியையும் போலி சந்நியாசங்களையும் பொய் வேடங்களையும் வெறுத்தார்.

தவம் செய்தல் என்றால் ஒரு குறிப்பிட்ட வேலையை தொழிலை செய்வதற்கு கல்வி கற்பதற்கு அறிவை வளர்ப்பதற்கு ஆற்றலை வளர்ப்பதற்கு திறமையைப் பெருக்குவதற்கு, ஆழ்ந்த முயற்சியில் ஈடுபட்டு முழுகவனம் செலுத்தி நமது எண்ணங்களையும் செயல்கலையும் ஒருமுகப்படுத்தித் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டு ஈடுபடுவதாகும். இத்தகைய தவத்தைச் சீராக, செம்மையாக நின்று செய்து முடிக்க வேண்டும். அதையே பாரதி மொய்ம்புற தவம் செய் என்று குறிப்பிடுகிறார்.

எந்த வேலையை எடுத்துக் கொண்டாலும் அதை சீராகவும் செம்மையாகவும் அதில் முழு கவனம் செலுத்தி அதில் முழு ஈடுபாடு கொண்டு செய்து முடிக்க வேண்டும். அதுவே மொய்ம்புறத்தவம் செய்வதாகும்.

## 84. மோனம் போற்று

மோனம். மோனநிலை என்பது தவத்தின் ஒரு பகுதி. ஆழ்ந்த தியானம், ஆழ்ந்த சிந்தனை, ஆழ்ந்த யோக நிலை ஆகியவைகளாகும்.

நாம் ஒரு வேலையைச் செய்வதற்கு செய்து முடிப்பதற்கு ஆழ்ந்த சிந்தித்து செய்ல்பட வேண்டும். அப்போது அந்த வேலை சீராக அமையும், சீராக முடியும்.

மோனம் என்பது கண்ணால் பார்த்தல், காதுகளால் கேட்டல், வாயால் சுவைத்தல், பேசுதல் உடம்பால் உணர்தல், மூக்கால் நுகர்தல், மனதால் சிந்தித்தல் அறிவால் அறிதல் முதலிய புலனறிவுகளையும் பகுத்தறிவையும் அனைத்தையும் ஒன்று குவித்து ஒருமுகப்படுத்தி ஒரு நிலைப்படுத்தி சிந்தித்தலாகும்.

அறிவாளிகளின் அற்புதப்படைப்புகள் புலவர்களின் அறிய கவிதைகள் இலக்கியங்கள் விஞ்ஞானிகளின் புதிய பல கண்டுபிடிப்புகள் முதலியவை ஆழ்ந்த சிந்தனைகளின் மூலம் கிடைக்கும் அதிசயக் கருவூலங்களாகும். இவைகளைப் போற்றி வளர்க்க வேண்டும்.

மோனம் என்றால் மௌனம் அமைதியாக தனியிடத்தில் அமர்ந்து கொண்டு ஒன்றும் செய்யாமல் பேசாமல் ஒதுங்கி விடுவதல்ல. அது ஒருவர் தனது பொறுப்புகளைத் தட்டிக் கழித்தலாகும் தனது கடமைகளிலிருந்து தப்பித்து ஓடுவதாகும் என்பதால் அதை பாரதி வெறுத்தார்.

கடமையைச் செய், தொழில் செய் தொழில் செய், எப்போதும் தொழில் செய்து கொண்டேயிரு என்று பாரதி வற்புறுத்துகிறார்.

கடமைகளைச் செய்து முடிக்க குறிப்பிட்ட தொழில்களைச் செய்து முடிக்க அதில் முழு கவனமும் ஈடுபாடும் செலுத்த ஆழ்ந்து சிந்தித்து செயல்பட வேண்டும். அப்போது தான் அந்த செய்கையில் முழுமையான வெற்றியைக் காண முடியும்.

அத்தகைய ஆழ்ந்த சிந்தனையை மோன நிலை என்கிறோம். அதைப் போற்றி வளர்க்க வேண்டும்.

## 85. மௌட்டியம்தனைக் கொல்

மௌட்டிகம் என்றால் மண்டைக்கனம், கர்வம், யாரையும் சட்டை செய்யாமல் இருத்தல் தான் தான் எல்லாவற்றிற்கும் மேலானவன் என்று மற்றவர்களை அசட்டை செய்தல் உதாசீனம் செய்தல் ஆகியவைகளாகும். மௌட்டிகமாக உள்ளவர்களும் அதிகமாகப் பேச மாட்டார்கள். மோனம் போல ஆனால் மோனத்திற்கு எதிரான குணம் படைத்தவர்கள்.

மௌட்டிகர்கள் தானும் உருப்படாமல் மற்றவர்களையும் உருப்படியாக விடமாட்டார்கள். மௌட்டியம் தனிமனிதனை அழித்துவிடும். அவன் எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும் அது எட்டாக்கனிபோல் யாருக்கும் பயனில்லாமல் போய்விடும்.

அதனால் தான் பாரதி மௌட்டியத்தைக் கொல், அதைக் கொன்று அழித்து விடு அதைத் தோன்ற விடாதே உன் உள்ளத்தில் அதை முளைக்க விடாதே.

தன்னகங்காரத்தையும் தலைக்கனத்தையும் கர்வத்தையும் மற்றவர்களை உதாசீனம் செய்யும் போக்குகளையும் கைவிட்டு அவைகளைத் துடைத்தெரிந்து எல்லோருடனும் நன்கு பழக வேண்டும். கலந்துரையாட வேண்டும். கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

## 86. யவனர் போல் முயற்சி செய்

யவனர்கள் என்றால் கிரேக்கர்கள் என்று பொருள் உண்டு. பண்டைய காலத்தில் தமிழகத்திற்கும் கிரீஸ், ரோம் எகிப்து முதலிய நாடுகளுக்கும் வாணிபத் தொடர்பு இருந்து வந்தது. கிரேக்கர்கள் நமது பழைய இலக்கியங்களில் யவனர் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறார்கள்.

கிரேக்க நாடு பண்டைய நாகரிகத்தில் சிறந்த நாடு. கைத் தொழில் கல்வி முதலிய துறைகளில் சிறந்து விளங்கிய நாடு,

கிரேக்க நாட்டில் தான் ஐரோப்பாவின் பழைய தத்துவங்களும் இதிகாசங்களும் எழுந்தன. கிரேக்க தத்துவஞானிகளான பிளாட்டோ, அரிஸ்டாடில், டெமாக்ரடிஸ், சாக்ரட்டீஸ் முதலிய பெரிய தத்துவஞானிகள் தோன்றினார்கள். கிரேக்கர்கள் பல புதிய விஞ்ஞானங்களைக் கண்டு பிடித்தார்கள். அறிவியல் துறையில் சிறந்து விளங்கினார்கள். கணிதம் புவியியல் முதலிய பல துறைகளில் சிறந்து விளங்கினார்கள். நகர நாகரிகங்களைத் தோற்றுவித்து வளர்த்தார்கள். ஜனநாயகக் கருத்துக்கள் அங்கிருந்து தான் தோன்றி வளர்ந்தன. சிறந்த அரசியல் கருத்துக்களும் அங்கு தோன்றி வளர்ந்தன. இந்தியாவில் வட மேற்குப் பகுதியில் கிரேக்க மாமன்னன் படையெடுத்து வந்ததை நாம் வரலாற்றில் அறிந்துள்ளோம்.

அத்தகைய யவனர்களைப் போல் நாமும் நல்ல முயற்சிகள் செய்து பாடுபட்டு தத்துவஞானத் துறையில் அறிவியல் துறையில் அரசியல் துறையில், சிந்தனைத் துறையில், சிறந்த கதைகள், காப்பியங்கள் இலக்கியங்கள், இசைகள்முதலியவற்றில் சிறந்து விளங்க வேண்டும் என்பது பாரதி கருத்தாகும்.

பாரத நாடு, கிரேக்கர்களைப் போல் சிறந்து நாகரிகத்தையும் தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், கணிதம் வானசாஸ்திரம் முதலிய அறிவியல் கருத்துக்களையும் இலக்கியங்களையும் இதிகாசங்களையும் படைத்திருக்கிறோம். ஆயினும் அவை பற்றி மற்றவர்கள் மதிக்கும் படி வணங்கும் படி நாம் கொண்டு செல்லவில்லை. அதற்கு கடுமையான முயற்சிகள் தேவை. அத்தகைய முயற்சிகள் செய்து நமது சிறப்புகளைப் பற்றி மற்றவர்களையும் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும்.

யவனர் என்பதற்கு நமது நிகண்டு முதலிய நூல்களில் சோனகர், கம்மாளர், சித்திரக்காரர் என்று பல்வேறு கைத்தொழில்களை கொண்டுள்ள கடும் முயற்சியுடைய மக்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

நமது நாட்டிலும் கைத் தொழில்களும் கைவினைகளும் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருக்கின்றன. தச்சுவேலை, கொல்லு வேலை, பொற்கொல்லர் செய்யும் ஆபரணத் தொழில் சிற்பம், உலோகத் தொழில், பாண்டத் தொழில், நெசவுத் தொழில், அதில் நூல் பட்டு கம்பளி நெய்தல், பாய் பின்னுதல் பனை ஒலையிலிருந்து பல அரிய பொருள்களைச் செய்தல் நேர்த்தியான பல ஆடைகள் உடைகள் போர்வைகள், மேலங்கிகள் தயாரித்தல் சிற்பம், சித்திரம், கட்டிட வேலைகள் இசைக்கருவிகள், செய்தல் முதலிய பல அரிய கைவினைத் தொழில்களும் சேரும்.

இத்தகைய தொழில்களை ஊக்கப்படுத்த வேண்டும். அதற்கு தேவையான உதவிகள் செய்ய வேண்டும். அதில் லாபநோக்கம் மட்டும் கூடாது. அந்த அரிய கலைப் படைப்புகளை நாம் பாதுகாத்து வளர்க்க வேண்டும்.

இத்தகைய கைத் தொழில்களுக்கு கடுமையான முயற்சி தேவைப்படுகிறது. கூர்மையான கவனம், ஆழ்ந்த அனுபவம், கடுமையான உழைப்பு கடும் முயற்சிகள் தேவைப்படுகின்றன. அதையே பாரதி யவனர்போல் முயற்சி கொள் என்று குறிப்பிடுகிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

## 87. யாவரையும் மதித்து வாழ்

சிறியவர்களானாலும் பெரியவர்களானாலும் மற்றவர்களை மதிக்க வேண்டும். நாம் மற்றவர்களை மதிக்கும் போது நமது மதிப்பு தானாக உயரும்.

மனிதனாகப் பிறந்த எவரும் பிறப்பிலே நல்லவர்கள் தான் அரிய சிறந்த குணங்களைக் கொண்டவர்கள் தான் சிலர் சந்தர்ப்ப சூழ்நிலை காரணங்களால் மாறுபட்டுப் போகலாம். ஆனால் தனிமனிதன் என்னும் முறையில் அவர்களுக்கு உரிய மதிப்புகள் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

அவ்வாறு பரஸ்பரம் மனிதனுக்கு மனிதன் மதிப்புக் கொடுத்தால் நல்லுறவு நட்புறவு வளரும். சுமூகமான சூழ்நிலை எற்படும். அது தனிமனித வளர்ச்சிக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

யாவரையும் மதித்து வாழ் என்று கூறும் போது தனிமனிதனுக்கு மட்டுமல்லாமல் பல்வேறு சமுதாயக் கூட்டமைப்புகளுக்கும் பொருந்தும் நாடுகளுக்கும் பொருந்தும்.

நாம் குடியிருக்கும் பகுதிகளில் தெருக்களில் ஊரில் அண்டை வீடுகளில் உள்ள மற்றவர்களையும் பரஸ்பரம் மதிக்க வேண்டும். அப்போது நமது வாழ்க்கை சுமூகமாக அமையும்.

வேறுபட்ட மொழிகள் பேசும் மக்கள் வேறுபட்ட இனம், மதநம்பிக்கை கொண்டவர்கள், சாதிகள், குலங்களை, நிறங்களைச் சேர்ந்த மக்கள் நம்மைச் சுற்றிலும் உலகிலும் வாழ்கிறார்கள். அவர்களுக்கு இடையில் வேறுபாடுகள் பாகுபாடுகள் பகைமை காட்டாமல் பரஸ்பரம் மதித்து இணக்கமாக வாழ நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

நமக்கு நமது மொழிமீதோ, நமது இனத்தின் மீதோ, நமது நாட்டின் மீதோ அதிகமான பற்று இருக்கலாம் அவ்வாறு பற்று இருப்பது இயல்பு. இன்னும் மொழிப்பற்று தேசப்பற்று ஆகியவைகளை வளர்க்கவும் வேண்டும். அதே சமயத்தில் மற்ற மொழிகளையும் அம் மொழி பேசும் மக்களையும் இன மக்களையம் நாடுகளையும் நாட்டு மக்களையும் மதிக்க வேண்டும். பரஸ்பரம் நல்லிணக்கத்தையும் வளர்க்க வேண்டும்.

நமது நாட்டில் பல்வேறு மத நம்பிக்கைகளும் வழிபாடுகளும் இருக்கின்றன. அதிலுள்ள வேறுபாடுகள் காரணமாக நட் து வரலாற்றில் பல மதக்கலவரங்களும் மதக் கொலைகளும் நடந்திருக்கின்றன. அவையெல்லாம் நமது வளர்ச்சியையும் ஒற்றுமையையும் பாதித்து இருக்கின்றன. இத்தகைய முரண்பாடுகளையும் சகோதர மோதல்களையும் தவிர்த்து பரஸ்பரம் மதிப்பு கொடுத்து நல்லிணக்கத்தைக் கொண்டு வர வேண்டும்.

நமது நாட்டில் வேறு எங்கும் இல்லாத சாதி அமைப்பு முறை இருக்கிறது. இந்த சாதி அமைப்பு முறை காலம் கடந்த ஒன்றாகும். சாதிகள் ஒழிய வேண்டும் என்று பல நல்லவர்களும் சொல்லி வந்திருக்கிறார்கள். ஆயினும் அவை நீடிக்கிறது. சண்டைகளும் ஏற்பட்டு நமதுபொது வாழ்வைச் சீரழித்திருக்கிறது. இந்த

மோதல்களைத் தவிர்த்து மனிதனுக்கு மனிதன் மதிப்பு கொடுத்து நல்லிணக்கத்தை சமத்துவத்தைக் கொண்டு வர வேண்டும்.

நமது நாட்டிலும் வேறு பல நாடுகளிலும் சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கு உரிய மதிப்பும் மரியாதையும் கொடுப்பதில்லை. அது ஒரு ஆணாதிக்கக் கொடுமையாகும். அக்கொடுமை களையப்பட வேண்டும். நமது பெண்களை தாயை, தாரத்தை, உடன்பிறந்த சகோதரிகளை, குழந்தைகளை மதிக்க வேண்டும், அப்போதுதான் நமது சமுதாயம் நமது நாடு உயரும்.

மனிதனுக்கு மனிதன் பரஸ்பரம் அனைவரையும் மதிப்பதன் மூலம் தான் தனிநபர்களுக்கு இடையில் ஏற்படும் சண்டை சச்சரவுகளையும் மொழிச் சண்டைகளையும் இனச் சண்டைகளையும் சாதிமதச் சண்டைகளையும் நாடுகளுக்கு இடையில் ஏற்படும் போர்களையும் தவிர்க்க முடியும், தடுக்க முடியும். மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்த முடியும் அதன் மூலம் தான் தனிமனித முன்னேற்றமும் நாட்டின் முன்னேற்றமும், சமுதாய முன்னேற்றமும் வளர்ச்சியும் காண முடியும்.

## 88. யெளவனம் காத்தல் செய்

மூப்பினுக்கிடம் கொடேல் என்று கூறிய பாரதி யெளவனம் காத்தல் செய் என்றும் கூறுகிறார். யெளவனம் என்றால் இளமை, அழகு, வனப்பு, கம்பீரம், பொலிவு கவர்ச்சி என்றெல்லாம் பொருள்படும் என்றும் இளமையோடு இருக்க வேண்டும் என்று நமது முன்னோர்கள் விரும்பி இருக்கிறார்கள் என்றும் பதினாறாக, இளமையாக இருப்பதற்கு மார்க்கண்டேயன் வரம் வாங்கியதாக நமது கதைகள் கூறுகின்றன. இப்படியாக கற்பனையிலும் கனவிலும் கூட இளமை வேண்டும் என மனிதன் சிந்தித்து இருக்கிறான். அப்படியிருக்க இருக்கும் இளமையைக் கெடுத்து விடலாமா? கூடாது. அதனால் தான் யெளவனம் காத்தல் செய் என்று பாரதி மிக நன்றாகக் கூறுகிறார்.

வயதானாலும் நாம் நமது இளமையை யெளவனத்தைக் காத்தல் வேண்டும். உடல் அமைப்பிலும் தோற்றத்திலும் மட்டுமல்ல உள்ளத்திலும் சிந்தனையிலும் செயலிலும் நாம் இளமையைக்

காத்தல் செய்தல் வேண்டும். முதலில் நாம் நமது உடல் ஆரோக்கியத்தை காத்தல் அவசியம், அதற்கு நல்ல ஆரோக்கியமான உணவு தண்ணீர் சுற்றுச்சூழல், உடற்பயிற்சி நல்ல பழக்கவழக்கங்கள் முதலியன மிகவும் அவசியமாகும்.

நல்ல பழக்க வழக்கங்கள் மிகவும் முக்கியமானதாகும். காலையில் எழுந்திருத்தல் காலைக்கடன்களை முடித்தல், உடற்பயிற்சி செய்தல் படித்தல், வேலை செய்தல், விளையாட்டு, நல்ல உறக்கம் முதலிய பழக்கங்கள் நல்லது.

புகை பிடித்தல், போதை பொருள் உபயோகித்தல் முதலியவை உடல் நலத்தைக் கெடுத்து விடும். சுவாசக் கருவிகளையும் ஜீரண உறுப்புகளையும் கெடுத்து விடும். அதனால் இளமை பாழாகி விடும். பல நோய்களுக்கு காரணமாகி விடும். கண்கள் குழி விழுந்து முதுகு வளைந்து உடல் அமைப்பைக் கெடுத்து விடும். உடல் சோர்வும் உள்ளச் சோர்வும் ஏற்பட்டு விடும். அதற்கு இடமளித்து விடக்கூடாது.

இரண்டாவதாக நல்ல மனப்பயிற்சி வேண்டும். நன்கு படிக்க வேண்டும். நல்ல கவனம் நல்ல சிந்தனை ஆராய்ச்சி ஆகியவைகளை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நல்லவைகளையே எண்ண வேண்டும். எதற்கும் கவலைப்படக் கூடாது. எத்தகைய கஷ்டங்கள் தொல்லைகள், தொந்தரவுகள் ஏற்பட்டாலும் மனவேதனையோ கவலையோ படாமல் மகிழ்ச்சியுடன் எப்போதும் முகமலர்ச்சியுடன் இருந்தால் உடல் நிலை நன்றாக் இருக்கும். எப்போதும் கலகலப்பாக இருக்க வேண்டும். கவலைகளை மறந்து மனநிம்மதியுடன் இருக்க வேண்டும். அதற்கான தியானங்களையும் செய்து கொள்ளலாம்.

மூன்றாவதாக நமது உள்ளத்தை எப்போதும் இளமையாக வைத்திருக்க வேண்டும். அதற்கு இடைவிடாது சுறுசுறுப்பாக எப்போதும் வேலைசெய்து கொண்டே இருக்க வேண்டும். நல்ல லட்சியங்கள் மீது பற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஏதாவது ஒரு வகையில் மக்களுக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தொண்டு செய்ய வேண்டும். இவைகள் மூலம் இளமையை யௌவனத்தைக் காத்தல் செய்யலாம்.

## 89. ரஸத்திலே தேர்ச்சி கொள்

ரஸம் என்பது ரஸவாதம் என்று இங்கு எடுத்துக் கொள்ளலாம். ரசம் என்பதற்கு சுவையானது என்றுஒரு பொருள் உண்டு. ரஸவாதம் என்பது வேதியியல் சம்பந்தப்பட்டதாகும். ஆங்கிலத்தில் கெமிஸ்ட்ரி என்னும் வட மொழியில் ரஸாயன சாஸ்திரம் என்று கூறுகிறோம்.

வேதியியல் இப்போது ஒரு வளர்ச்சியடைந்த விஞ்ஞானப் பிரிவாக அறிவியல் பிரிவாக மனித வாழ்க்கையில் இடம் பெற்று விட்டது. மேலும் அந்தத் துறை வளர்ந்து கொண்டே இருக்கிறது.

ஆதியில் வேதியியல் என்பது உலோகத் தொழில் தாவரவியல் வைத்தியம், மருத்துவம் முதலியவைகளுடன் தொடர்பு கொண்டதாக இருந்தது. இப்போது வேதியியல் தோடர்பு இல்லாத அறிவியல் பிரிவே இல்லை என்று கூறும அளவிற்கு வேதியியல் வளர்ந்துள்ளது.

செயற்கை நூல் ஆடைகள், பட்டு ஆடைகள் முதல் பிளாஸ்டிக் பொருட்கள் மருந்துகள், ரசாயன உரங்கள் வரை எண்ணற்ற பொருள்கள் வேதியியல் முறையில் செய்யப்படுகின்றன. அன்றாட வாழ்க்கையில் அவைகள் அதிகமான அளவில் பயன்பாடு உள்ளவைகளாக வளர்ச்சி பெற்றுள்ளன.

அத்தகைய ஒரு முக்கியமான அறிவியல் பிரிவில் நாம் அதிகம் கவனம் செலுத்த அந்தத் துறையில் அதிகம் படித்து தேர்ச்சியடைய வேண்டும். நமது குழந்தைகள் சிறந்த வேதியியல் விஞ்ஞானிகளாக வளர வேண்டும்.

ரஸம் என்றால் நவரசத்தையும் குறிக்கும்: அவை வீரம், கோபம், வியப்பு, நடுநிலை, அச்சம், வெறுப்பு, நகை (ஹாஸ்யம்) துயரம் (அவலம்) காமம் ஆகியவைகளாகும். ரஸ உணர்ச்சியில் உள்ளதை முழுவதும் ஈடுபடுத்தக்கூடிய சிலர் பாட்டு, சித்திரம் முதலிய தெய்வக்கலைகளிலே சிறப்படைகிறார்கள். ரஸ உணர்ச்சி

இல்லாவிடில் இக்கலைகள் நசித்துப் போகும். எனவே ரஸத்திலே தேர்ச்சி கொள்ளும்படி பாரதி கூறுகிறார்.

## 90. ராஜசம் பயில்

இயற்கையின் முக்குணங்கள் சாங்கிய தத்துவத்தில் விளக்கப்பட்டு இருக்கின்றன. அந்த முக்குணங்களாவன: சத்வம், ராஜசம் தாமசம் அகியவைகளாகும் இவைகளில் சத்வம் என்பது அறிவு ஒளி, ராஜசம் என்பது ஆற்றல் சக்தி, தாமசம் என்பது தேக்கமும் மயக்கமுமாகும், இந்த முக்குணங்களும் இப்பேருலகில் எல்லா பொருள்களிலும் தென்படுவதைக் காணலாம்.

இந்த முக்குணங்களைப் பற்றி பகவத் கீதையில் விரிவாக விளக்கிக் கூறுப்பட்டிருக்கிறது. பகவத் கீதையை பாரதி மொழி பெயர்த்துள்ளார். அதில் கூறப்பட்டிருப்பதாவது.

சத்வம், ரஜஸ், தமஸ் இந்த குணங்கள் பிரகிருதியில் எழுவன, அவற்றுள்ளே சத்வம் நிர்மலத் தன்மையால் ஒளி கொண்டது. நோவற்றது, இது இன்பச் சேர்க்கையாலும் ஞானச் சேர்க்கையாம் கட்டுப்படுத்துவது.

ரஜோகுணம் விருப்ப இயல்புடையது அவாவின் சேர்க்கையால் பிறப்பது. அது ஆத்மாவைத் தொழில் சேர்க்கையால் கட்டுப்படுத்துகிறது.

தமோகுணம் அஞ்ஞானத்தில் பிறக்கிறது. அது எல்லா உயிர்ப் பொருள்களையும் மயக்கச் செய்கிறது. தவறுதலாலும் சோம்பலாலும் உறக்கத்தாலும் அது ஆத்மாவைக் கட்டுப்படுத்துகிறது.

இந்த முக்குணங்களும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேளையிலும் மற்ற இரண்டையும் அடக்கி ஒன்று மட்டும் முன்னுக்கு வருகிறது.

சத்வ குணம் மிஞ்சி நிற்கும் போது எல்லா வாயில்களிலும் ஞான ஒளி பிறக்கிறது. ரஜோகுணம் மிகுதிப்படும் போது அவா,

ஆகியவை எழுகின்றன. தமோ குணம் ஓங்குமிடத்து ஒளியின்மை முயற்சியின்மை தவறுதல் மயக்கம் ஆகியவை மிஞ்சி நிற்கின்றன.

ஒளி, தொழில், மயக்கம் – இவை முக்குணத்தின் இயல்பு, உயிர்கள் அனைத்திலும் வெவ்வேறு வகைப்பட்ட பல இயல்புகள் இருப்பதாகப் பிரித்துக் காணும் ஞானம், பற்றுதல் உடையோனாய்ப் பயன்களை விரும்புவோன் அறம், பொருள், இன்பங்களைப் பேணுவதில் செலுத்தும் உறுதி ஆகியவை ராஜஸ குணமாகும்.

இம்முக்குணங்களும் மனிதனிடத்தில் அவ்வப்போது மாறி மாறித் தோன்றி இடம் பெறுகின்றன. ஒரு நேரத்தில் ஒன்று முன்னணியில் நிற்கிறது. இவைகளைக் கட்டுப்பத்தி மனிதன் மேலும் உயர்ந்த நிலையை அடையலாம் என்பது இந்திய தத்துவங்களின் குறிப்பாக சாங்கியம் வேதாந்தம், கீதை ஆகிய தத்துவங்களின் வழிகாட்டுதலாகும்.

சத்வகுணம் மேலானது என்றாலும், ராஜஸம் பயில் என்று கூறுகிறார் பாரதி. காரணம் ராஜசம் நம்மை செயலில் தூண்டுகிறது. தொழிலில் ஈடுபடுத்துகிறது. ஆற்றலைத் தருகிறது. முயற்சிகளில் ஈடுபடுத்துகிறது. அறம், பொருள், இன்பங்களைப் பேணுவதில் நமது கவனத்தைத் திரும்புகிறது. இந்த குணச்சிறப்புகளில் அன்றும் (பாரதி காலத்திலும்) இன்றும் மிகுதியாகத் தேவைப்படுகிறது. அதனால் பாரதி நமது குழந்தைகளிடம் அவர்களை செயலிலும், தொழிலிலும் முயற்சிகளிலும் ஈடுபடச் செய்வதற்காக ''ராஜசம் பயில்'' என்று போதிக்கிறார்.

## 91. ரீதி தவறேல்

ரீதி என்பது ஒரு ஒழுங்கு முறை. நமது வாழ்க்கையில் நாம் சில ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதில் தவறக் கூடாது தவறினால் வாழ்க்கை முறை கெட்டு விடும். சிதைந்து விடும்.

மனித சமுதாய வளர்ச்சியின் அனுபவத்தில் படிப்படியாக பல சமுதாய ஒழுங்கு முறைகள நடைமுறைக்கு வந்துள்ளன.

நல்லவை கெட்டவை என்று பகுத்துக் கூறப்பட்டு இருக்கின்றன. உணரப்பட்டு இருக்கின்றன. செயல்படுத்தப்பட்டு இருக்கின்றன.

தண்ணீர், காற்று, நெருப்பு, பூமி, ஆகாயம், சூரியசந்திரர்கள், கோள்கள், சுடர்கள் முதலிய இயற்கை சக்திகள் எல்லாம் புல், பூண்டு செடி, கொடி மரங்கள் முதலிய தாவர இனங்கள் பறவை இனங்கள் மற்றும் விலங்கினங்கள் முதலியன எல்லாம் இயல்பாகவே சில ஒழுங்கு முறைகளின் படியே செயல்படுகின்றன. மாற்றங்களும் வளர்ச்சியும் அடைகின்றன. அவற்றின் விதி முறைகளை அனுபவத்திலும் ஆய்வு செய்து அறிந்து கொண்டு அவைகளை மனிதன் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறான். உதாரணமாக ஆற்றில் ஓடும் தண்ணீர் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கிப் போவது அதன் இயல்பு. அதை வைத்து ஆற்றில் குறுக்கில் அணை கட்டி தண்ணீரை தேக்கி அதைக் கால்வாய் மூலம் நமக்குத் தேவையான இடத்திற்குக் கொண்டு செல்ல முடிகிறது.

இயற்கை மற்றும் இயற்கை சக்திகளின் செயல்பாடுகளைப் போலவே மனிதனுடைய பிறப்பும் வளர்ச்சியும் மனித சமுதாயத்தினுடைய செயல்பாடுகளும் வளர்ச்சியும் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளின் படியே தான் பொதுவாக நிகழ்சின்றன என்பதை மனிதவியல் சமூகவியல் மூலம் அறிகிறோம். ஆயினும் இயற்கையின் இயக்கத்திற்கும் மனித சமுதாய செயல்பாட்டிற்கும் இடையில் ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது. மனிதன் தனது சிந்தனையின் மூலம் தலையிடுகிறான். அதனால் மனிதனுடைய வளர்ச்சியிலும் சமுதாய வளர்ச்சியிலும் பல பாதிப்புகளும் ஏற்படுகின்றன.

இதில் நாம் ரீதியுடன் அதாவது சில ஒழுங்கு முறையுடன் கொண்டு சென்றால் சேதங்களைத் தடுக்கவோ குறைக்கவோ செய்யலாம்.

மனித வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமான பொருள் உற்பத்தி, மறு உற்பத்தி, வாணிபம், அரசியல், பொருளாதாரச் செயல்பாடுகள் முதலியன மனிதன் சமுதாய பூர்வமாக நடத்தும்

செயல்பாடுகளாகும். இவைகளை முறைப்படுத்துவதற்கு சட்டம், நீதி நெறிமுறைகள் ஒழுக்க நெறிமுறைகள் அவைகளைச் சரியாக செயல்படுத்துவதற்கான · நிர்வாக முறை முதலியன வகுக்கப்பட்டுள்ளன. இந்த முறைகளை ரீதி தவறாமல் சீராகச் செயல்படுத்த வேண்டும்.

சட்ட திட்டங்கள் நீதி நெறிமுறைகள் ஒழுக்க முறைகள் மனிதனுடைய தனிப்பட்ட சில நடவடிக்கைகள் முதலியவை காலத்தால் சில மாற்றங்கள் அடைகின்றன. சில நெறிமுறைகள் தொடர்ந்து நீடிக்கின்றன.

இவ்வாறு சமுதாய நெறிமுறைகளைத் தனிமனித நெறிமுறைகளை வழுவாது கடைப்பிடித்தல் மிகவும் அவசியமானதாகும். அதையே பாரதி ரீதி தவறேல் என்று குறிப்பிடுகிறார்.

## 92. ருசி பல வென்றுணர்.

ருசி என்பது சுவை. ருசி என்பது ரசனைக்குப்பட்டது. சுவைகளையும் ரசனையும் இன்பத்தின் பாற்பட்டது. இன்பமும் துன்பமும் அளவோடு இருந்தால் தாங்கலாம். அளவுக்கு மீறினால் தாங்க முடியாமல் கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

ருசி, சுவை, ரசனை இவற்றின் மீது மனிதனுக்கு ஆசை ஏற்படுகிறது. அந்த ஆசை அளவோடு இருக்க வேண்டும். ஆசைகளை நம்மை மீறவிடாமல் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு நமக்கு சுயகட்டுப்பாடு இருக்க வேண்டும்.

உணவுச்சுவையில் அறுசுவை என நமது முன்னோர்கள் பகுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்போது சுவைகள் அந்த அறுசுவையோடு நிற்கவில்லை. பல்சுவைகளாகவும் பெருகியுள்ளன. அந்த சுவைகளைக் கட்டுக்கடக்கி மட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டும்.

உப்பு, புளிப்பு, காரம், துவர்ப்பு இனிப்பு கசப்பு, ஆகியவை அறுசுவை. இதில் ஒன்று கூடிவிட்டாலும் குறைந்து விட்டாலும் சுவை மாறிவிடும் உப்பு அதிகமாகி விட்டால் சுவை கெட்டுவிடும்.

சாப்பிட முடியாது. அதேபோல் தான் மற்ற சுவைகளிலும் ஒன்று கூடிவிட்டாலும் சாப்பிட முடியாமலும் திகட்டியும் உடம்புக்கு கெடுதலாகி விடும்.

வாய்க்குச் சுவையாக இருந்தால் அது இனிமை பயக்கும். அதுபோலவே இதர புலன்களுக்கும் இன்பம் தரும் சுவைகள் இருக்கின்றன. அவை புலனுணர்வுகளின் பாற்பட்டது.

சுவைகளில் முக்கியமானது உணவுச்சுவை அழகுச்சுவை. இலக்கியச்சுவை, கவிதைச் சுவை முதலியவைகளாகும். பார்ப்பதற்கும்கேட்பதற்கும் கண்குளிர செவி குளிர என்று கூறுகிறோம். அவ்வாறு ருசிகள் பல இவைகளை நாம் சுவைக்கும் போது ரசிக்கும் போதும் சுவைகளை ஒரு அளவுக்குள் வைத்து அனுபவிக்க வேண்டும்.

## 93. ரூபம் செம்மை செய்

ரூபம் என்பது உருவம், வடிவம் என்பதாகும் வடிவத்தை செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். சீராக வைத்துக் கொள்ள வேண்டும் என்று பாரதி கூறுகிறார். ரூபம் செம்மைசெய் என்றால் எதையும் அழகாக வைத்திருப்பது என்று பொருளாகும்.

அழகு என்பது உடலுறுப்புகளின் அழகாகும். முகம், கண், நெற்றி, உடலமைப்பு முதலியவற்றின் அழகு குறிப்பிடத்தக்கது. உடல் உறுப்புகள் பலவற்றை உடற்பயிற்சி மூலம் செம்மைப்படுத்தலாம்.

உடல் உறுப்புகளின் அழகுடன் மனிதனுக்கு ஆடை அழகு முக்கியமானதாகும். குறிப்பாக பெண்களுக்கு கூந்தல் முகம், கண், புருவம், நெற்றி, மூக்கு, இடை, மார்பு, முதலிய பல்வேறு உறுப்புகளைப் பற்றி எல்லாம் கவிஞர்கள் வர்ணனை செய்திருக்கிறார்கள். வாசனைப் பொருள்கள் மஞ்சள், சந்தனம், எண்ணெய் சாந்து முதலியவை மூலம் உடலை அழகுப்படுத்துவதும் வழக்கமாகும். அத்துடன் அழகான ஆடைகளும் இயற்கை அழகை உயர்த்திக் கொடுக்கும்.

உடல் கட்டிற்கு உடல் ஆரோக்கியமும் கல்விப்பயிற்சியும் உடற்பயிற்சியும் கூட முக்கியமானதாகும். கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல. எல்லவற்றிற்கும் மேலானது கல்வியழகேயாகும் என்பது தமிழ்ச் சான்றோர்களின் வாக்காகும். அதாவது கூந்தல் அழகும் ஆடையழகும் மஞ்சள் பூச்சழகும் அழகல்ல, கல்வியழகே அழகாகும் என்பதுஅதன் பொருளாகும்.

இவ்வாறாக ரூபத்தை செம்மையாக வைத்துக் கொள்ள வேண்டுவது நமது முக்கியமான கடமைகளில் ஒன்றாகும்.

## 94. ரேகையில் கனி கொள்

ரேகையென்றால் கைரேகை, பூமத்திய ரேகை என்று கூறுவார்கள். சங்கு ரேகை என்றால் வரைகோடுகள். முன்வரைவு என்று பொருள்படும். கனிகொள் என்றால் பயனடைதல் பலனடைதல் என்று பொருள்படும்.

வரைகோடுகள் மூலம் சித்திரம் வரைதல். தேசப்படம் படித்தல் தட்வெப்ப நிலைகள் மற்றும் அதன் மாற்றங்களைக் கண்டறிதல் ஆகியவற்றிற்கு பயன்படத் தக்கவைகளாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, எந்த வேலையையும் முன் கூட்டி ஆலோசித்து திட்டமிட்டு நிறைவேற்றுவது மனித செயல்பாடாகும்.

திட்டவரைகளைப் பயன்படுத்திக் கட்டிடங்கள் கட்டுகிறோம். தொழிற் சாலைகளை நிறுவுகிறோம். சாலைகளை அமைக்கிறோம். கல்வி நிலையங்களை நிறுவுகிறோம். பல்வேறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்கிறோம். ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கிறோம்.

இவ்வாறு முன் கூட்டி திட்ட மிட்டு எந்தக் காரியத்தையும் நிறைவேற்றுவது மனிதனுக்குள்ள சிறப்புத் திறனாகும். மனிதன் சாகுபடிப் பணிகளுக்குத் திட்ட மிடுகிறான். நீர்பபாசனத்திற்கு சாகுபடி நிலங்களைத் தயாரித்து உழுது உரமிட்டுப் பண்படுத்துகிறான்.

கடலுக்குச் செல்ல கட்டுமரங்களையும் தோணிகளையும் விசைப்படகுகளையும் கப்பல்களையும் கட்டுகிறான். கடலுக்கு சென்று மீன் பிடித்து உணவுக்குப் பயன்படுத்திக் கொள்கிறான்.

மனிதன் தனக்கு வேண்டிய உணவுக்கு மட்டுமின்றி துணி. வீடு. கல்வி நிலையம் கலை அரங்குகள் விளையாட்டு அரங்குகள், மருத்துவமனைகள் முதலிய பல தேவைகளுக்கும் திட்ட மிட்டு உற்பத்தி செய்து குவித்து பயன்படுத்திக் கொள்கிறான்.

திட்டக் குழுக்களை அமைத்து திட்டவரைவுகளை வகுத்துக் கொண்டு அவைகளை வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொண்டு தனது வேலைகளைச் செய்து முடிக்கிறான்.

இதையே பாரதி ''ரேகையில் கனி கொள்'' என்று கூறியுள்ளார்.

## 95. ரோதனம் தவிர்

ரோதனம் என்றால் எந்த நேரமும் எதையாவது சொல்லி புலம்பிக் கொண்டே இருப்பதாகும். எதிலும் திருப்தியடையாமல் எதாவது ஒரு குறையை சொல்லிக் கொண்டே புலம்பிக் கொண்டே இருப்பதாகும்.

சின்னச் சின்ன தொல்லைகள் இருந்தாலும் அதைப் பெரிதுப்படுத்திக் கொண்டு மற்றவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டே இருப்பது ரோதனையாகும்.

ரோதனத்தைக் கொண்டிருப்பவர்கள் தாங்களும் நிம்தியாக இருக்க மாட்டார்கள், வீட்டில் உள்ள மற்றவர்களையும் நிம்மதியாக இருக்க விட மாட்டார்கள். அலுவலகங்களிலோ வேலை செய்யும் இடஙகளிலோ இருந்தால் அவர்களும் நிம்மதியாக வேலை செய்ய மாட்டார்கள், மற்றவர்களையும் சரியாக நிம்மதியாக வேலை செய்ய விட மாட்டர்ர்கள்.


ரோதனம் என்பது பெரும் அறுவையாகும். அறுவை மற்றவர்களுக்கு இடையூறானதாகும். எனவே நாம் எப்போதும்

மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கக்கூடாது. மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்க கூடாது. அத்தகைய நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும்.

அதையே 'ரோதனம் தவிர்' என்று மிகவும் அழகாக பாரதியார் கூறியுள்ளார்.

## 96. ரௌத்திரம் பழகு

ரௌத்திரம் என்றால் மகாகோபம் ஆங்காரத்தோடு கம்பீரமாகக் கொடுமைகளை எதிர்த்து நிற்கும் ஆ வே ச ம. சிவதாண்டவத்தைத் ரௌத்திரம் என்று கூறுகிறார்கள். காளியின் திரிசூலம் பிடித்த கம்பீரமான வடிவத்தை ரௌத்ராகாரமான வடிவம் என்று கூறலாம். சூரபத்மனை வெல்வதற்கு முருகன் எடுத்த கோப வடிவத்தையும் காளிங்க நர்த்தனம் செய்த கண்ணன் தோற்றத்தையும் ரௌத்திரத் தோடு ஒப்பிட்டுக் கூறலாம்.



ரௌத்திரம் என்றால் சாதாரணமான கோபமோ அல்லது கடுங்கோபமோ கூட அல்ல. கொடுமைகளை எதிர்த்த தீமைகளை எதிர்த்து தீயவைகளை எதிர்த்து மக்களையும் உலகையும் காப்பதற்கு நாம் எடுககும் வீரவடிவமாகும்.

பாஞ்சாலி தனக்கு ஏற்பட்ட கொடுமையை எதிர்த்து கடைசியில் சபதம் எடுக்கும் காட்சியை, கண்ணகி கையில் சிலம்புடன் பாண்டிய மன்னன் முன் நின்ற காட்சியை நாம் மனதில் கொள்ளலாம்.

கொடுமைகளை எதிர்த்து நிற்க வேண்டியது நமதுகடமை. அப்போது நமக்கு வரும் கோபத்தை நமது உள்ளத்தில் எழும் கோபத்தை சரியான திசையில் செலுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.

அரசர்கள் அல்லது அரசுகள் நல்லாட்சி செய்தால் அதைக்கண்டு பாரதத் தாய் மகிழ்ச்சி கொள்வாள் இல்லையானால், கொடுங்கோல் ஆட்சியாளராயின் அவர்களை விழுங்கி ஆனந்தக் கூத்திடுவாள் எங்கள் தாய் என்று பாரதி கூறுகிறார். அந்த ஆனந்தக் கூத்து ரௌத்திரம் கூத்தாகும்.

ரௌத்திராகாரம் என்பது ஒரு வடிவம். அது ஒரு பயங்கர வடிவம். ஆயினும் அது ஒரு ஆனந்த வடிவம். கொடுமைகளை எதிர்க்கும் கோர வடிவம அந்த ஆனந்த வடிவம் தான். அந்த வடிவத்தில் கண்கள் சிவந்து கூர்மையான பார்வையைச் செலுத்தும். மூக்கும் காதுகளும் விடைத்து வேகம் கொள்ளும், சுவாசக்காற்று வெப்பமாகச் செல்லும், நெஞ்சு உணர்ந்து நிமிர்ந்து நிற்கும், கை கால்கள் உறுதியாக தயார் நிலையில் இருக்கும். வேகம் துணிவு, அஞ்சாமை, நேர்மை, நியாய உயர்வு நிறைந்த கோபமும் ஆவேசமும் இருக்கும். இது சாதாரணமாக எல்லோருக்கும் வராது. அதற்குப் பயிற்சியும் பழக்கமும் தேவைப்படுகிறது. ஏனென்றால் அது உணர்ச்சி பூர்வமானது மட்டுமல்ல உணர்வு பூர்வமானதும் ஆகும்.

எனவே தான் கொடுமைகளையும் தீமைகளையும் கொடுங்கோன்மை ஆட்சிகளையும் எதிர்த்து நிற்பதற்கு நாம் பழகிக் கொள்ள வேண்டும். அதையே ரௌத்திரம் பழகு என்று பாரதி கூறுகிறார்.

## 97. லவம் பல வெள்ளமாம்

லவம் என்றால் சிறு துளி மிகச்சிறிய பொருள் என்பதாகும். ஆங்கிலத்தில் மாலிக்யூல் என்று கூறலாம். சிறுதுளி பெருவெள்ளம் என்பது பொருத்தமான சொல்லாகும். எந்த வேலையை நாம் எடுத்துக் கொண்டாலும் அது சிறிய வேலை. அற்பமான வேலை என்று புறக்கணித்து விடக்கூடாது.

மார்கழி – தை மாதங்களில் அதிகாலையில் ஒரு அருகம்புல்லின் நுனியில் சிறு பனித்துளி இருக்கிறது. அந்தச் சிறிய பனித்துளியில் பிரம்மாண்டமான சூரியனின் வடிவம் வட்டமாகத் தெரிகிறது. எனவே எதையும் சிறு துளி என்று

புறக்கணித்து விடவும் கூடாது. பெரிய பொருள் என்று மகிழ்ந்து விடவோ பேராசைப்படவே கூடாது.

சாகுபடியான தானியத்தில் ஒவ்வொரு மணியாகச் சேர்த்து தான் பெரும் குவியலாக அம்பாரமாக ஆகியது. காய்கள், கனிகள், ஒவ்வொன்றாகச் சேர்த்து தான் குவியலாகிறது. ஒவ்வொரு எழுத்தாக சொல்லாக வாக்கியமாகச் சேர்த்து தான் பெரிய அளவிலான நூலாகிறது.

ஒவ்வொரு இலையாகச் சேர்ந்து கிளைகளாகவும் மரமாகவும் பல மரங்கள் சேர்ந்து தோப்பும் ஆகிறது. ஒவ்வொரு கல்லாக செங்கலாச் சேர்ந்து வீடாகிறது.

ஒவ்வொரு விநாடியாகச் சேர்ந்து நிமிடம், பல நிமிடங்கள் சேர்ந்து மணிக்கணக்கும் நாள் வாரம் மாதம் ஆகியன சேர்ந்து ஆண்டாகவும் ஆகின்றன.

சிறுகத் தொடங்கி பெருக வாழ்வது சிறப்பாகும். அதைப் பல பெரியோர்களுடைய வாழ்க்கை அனுபவங்களில் கண்டிருக்கிறோம். அதை நாம் படிப்பினையாகக் கொள்ள வேண்டும்.

அணு அணுவாகச் சேர்ந்து அண்டம் பேரண்டமாகிறது என்பதை நாம் தெளிவாக மனதில் கொண்டு தான் செயல்பட வேண்டும். அதுவே லவம் பல வெள்ளமாம் என்பதன் நோக்கமாகும்.

## 98. லாவகம் பயிற்சி செய்

லாவகம் என்றால் ஒரு வேலையைச் செய்யும் போது ஒரு காரியத்தை நிறைவேற்றும் போது மிகவும் உஷாராக ஜாக்கிரதையாக மிக்க கவனத்துடன் கஷ்டமானதைக் கூட சுலபப்படுத்தி நெளிவு சுளிவுடன் செய்ய வேண்டும் என்பது பொருளாகும்.

முள் வேலியில் நமது துணி விழுந்து விட்டால் அத்துணியை மிகவும் ஜாக்கிரதையுடன் எடுக்க வேண்டும். இல்லாவிட்டால்

துணிக்கு சேதம் ஏற்பட்டு விடும். அதுபோல நாம் செய்யும் வேலைகளில் சிக்கல்கள் இருந்தால் மிகவும் உஷாராக இருந்து. அந்த வேலையைச் சேதமில்லாமல் முடிக்க வேண்டும்.

வண்டிகளில் பாரம் ஏற்றும் போதும் இறக்கும் போதும் அந்த வேலையை லாவகமாகச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் சேதமோ ஆபத்தோ ஏற்பட்டு விடக்கூடும்.

ஒரு எந்திரத்தை ஒரு கார், லாரி, பஸ், ரயில் விமானம் ஆகியவற்றை ஓட்டும் போதோ அதை குறிப்பிட்ட இடங்களில் திருப்பும் போதோ, அவைகளைக் கையாளும் போதோ அவைகளை ஓட்டுவதற்கென்று சில பொது விதிமுறைகள் இருக்கின்றன. அவைகளை அனுசரிக்க வேண்டும். அதற்கு பயிற்சிகள் தேவை. அத்துடன் அப்பணிகளைச் செய்யும் போது சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அல்லது சில எதிர்பாராத பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அப்போது அப்பணியை அதற்குரிய லாவகத்துடன் செய்து முடிக்க வேண்டும்.

அலைகடலில் படகுகள், தோணிகள், கப்பல்களைக் கொண்டு செல்கிறோம் சாதாரணமான நேரங்களில் பிரச்சினை எதுவுமில்லை. ஆனால் காற்று அதிகமாக அடிக்கும் போது அலைகள் உயரமாக எழும் போதும் புயல் அடிக்கும் போது அந்த நேரங்களில் அந்த நாவாய்களை மிகவும் லாவகமாகச் செலுத்த வேண்டும்.

அதேபோல் மற்றவர்களிடம் பழகும் போது செயற்கரிய பல காரியங்கள் செய்யும் போது லாவகம் தேவைப்படுகிறது. அத்தகைய லாவகம் தானாகவே வந்து விடாது. பல்வேறு விளையாட்டுகளிலும் கூட லாவகம் தேவைப்படுகிறது. அதற்குரிய பழக்கமும் பயிற்சியும் தேவைப்படுகிறது.

பயிற்சி என்றால் இருவகைப் பயிற்சி வேண்டியதாகிறது ஒன்று தத்துவார்த்தப் பயிற்சி. மற்றொன்று நடைமுறைப் பயிற்சி. அத்துடன் அனுபவப் பயிற்சியும் பழக்கமும் தேவைப்படுகிறது. அதனால் தான் லாவகம் பயிற்சி செய் என்று பாரதி கூறியுள்ளார்.

## 99. லீலை இவ்வுலகு

இவ்வலகு லீலைகள் நிறைந்தது என்று பாரதி கூறுகிறார். இவ்வுலகில் நடைபெறும் எண்ணற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் கடவுளுடன் இணைத்து எல்லாம் ஆண்டவன் லீலைகள் என்று கூறுகிறோம். பாகவதத்தில் கிருஷ்ண லீலைகள் பிரசித்தமானது. மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றுள்ளது. ஆனால் பாரதி இவ்வுலகோடு இணைத்து லீலை இவ்வுலகு எனறு கூறியுள்ளார்.

இப்பேருலகில் இயற்கையில் எண்ணற்ற நிகழ்ச்சிகளைக் காண்கிறோம். காற்று அடிக்கிறது. தென்றலாக இளங்காற்றாக வீசுகிறது. பருவக்காற்றாக வீசுகிறது. புயல் காற்றாக அடிக்கிறது. பேய்க்காற்றாக அடிக்கிறது. தென்றல் காற்று நமக்கு இன்பத்தைத் தருகிறது. பருவக் காற்று மேகங்களைத் தள்ளிக் கொண்டு வந்து மழை பெய்ய உதவியாக இருக்கிறது. புயல்காற்று பேய்க்காற்று சூறாவளிக்காற்று முதலியவை சேதங்களை உண்டாக்குகின்றன. இவையெல்லாம் காற்றின் லீலைகள் அதாவது அதன் செயல்பாடுகளாகும்.

தண்ணீர் கடலில் நிறைந்திருக்கிறது. அது மேகங்களாய் மாறி மழையாய் பெய்கிறது. மழை சாரல் மழை, தூரல் மழை சுமாரான மழை, சாதாரண மழை, துணி நனைய மழை, தண்ணீர் புரள மழை, நல்ல ஈரத்திற்கான மழை, பலமான மழை, பெருமழை, பேய் மழை, பெய்கிறது. மழையினால் நமக்கு நல்ல பலன் கிடைக்கிறது. பல நன்மைகளும் உண்டாகின்றன.

ஆறுகளில் தண்ணீர் வருகிறது. ஆற்றுநீரை அணைகளில் எரி குளங்களில் தேக்கி வைக்கிறோம். அவை பாசனத்திற்கு குடிதண்ணீருக்கு, நிலத்தடி நீரைப் பாதுகாக்க ஆகாயத்தின் வெப்பத்தைத் தணித்து சமநிலை உண்டாக்க உதவுகிறது.

தண்ணீர் நமக்கு குடிக்கவும் உணவு சமைக்கவும் குளிக்கவும், சூட்டைத் தணிக்கவும் இன்னும் பல வழிகளிலும் பயன்படுகிறது. தண்ணீர் பெருவெள்ளமாக வந்தால் கடல் பொங்கினால் சேதங்கள் விளைகின்றன. இவ்வாறு நீரின் லீலைகள் பலவிதமாகும்.

இவ்வாறு கடல், காற்று, நீர்,நெருப்பு, பூமி, இடி, மின்னல், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலியவற்றின் லீலைகள் அதிசய செயல்பாடுகள் எண்ணற்றவை விநோதமானவை. அவைகள் நமக்கு பல நன்மைகளைத் தருகின்றன. சில தீமைகளையும் தருகின்றன.

பழங்காலத்தில் இயற்கையின் இந்த லீலைகளைக் கண்டு ஆதிமனிதன் ஆனந்தப்பட்டான். அதிசயப்பட்டான். ஆச்சரியப்பட்டான் அத்துடன் பயந்தான் மிரண்டான், அந்த இயற்கை சக்திகளை எல்லாம் கடவுளின் தன்மைக்கு உயர்த்தினான் சூரிய பகவான் வாயு பகவான் அக்கினி பகவான் பூமி தேவி என்றெல்லாம் கற்பித்துக் கடவுளாக்கி வழிபட்டான்.

பாரதி இந்தப் பேருலகில் இயற்கை மூலம் கிடைக்கும் இன்ப துன்பங்களை எண்ணியெண்ணி எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய் இறைவா என்று மகிழ்ச்சி அடைந்து குதூகலித்துப் பாடினார். இந்த உலகின் லீலைகள் எண்ணற்றவை. ஆனந்தமானவை. அவைகளை அவைகளின் இயல்புகளையும் செயல்பாடுகளையும், பயன்பாடுகளையும் நன்கு அறிந்து புரிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இயற்கையின் செயல்களை அதன் லீலா விநோதங்களைக் கண்டும் பயந்தும் வியந்தும் அனுபவித்த ஆதிமனிதன் படிப்படியாக அதன் நல்ல பலன்களை பயன்பாடுகளை உணரத் தொடங்கினான்.

இன்று மனிதன் பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளான். தனது அறிவின் ஆற்றலால் உழைப்பின் திறத்தால் இயற்கை சக்திகளின் மீது தனது செல்வாக்கைச் செலுத்தி அதைப் பல்வேறு வகையில் மாற்றியும் திருத்தியும் எண்ணற்ற வகைகளில் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான்.

மனித வாழ்க்கை இயற்கையுடன் இந்த உலக லீலைகளுடன் இணைந்திருக்கிறது. மனிதனே இந்த இயற்கையின் ஒரு பகுதியேயாகும். எனவே மனிதன் இயற்கையின் லீலைகளுடன்

இணைந்து அசைவாகவும் அதை அனுசரித்தும் நின்று மேலும் பல புதிய உண்மை நிலைகளைக் கண்டும், அவைகளை மனித வாழ்க்கைக்கு சீராகவும் செம்மையாகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மனிதன் மட்டுமல்லாமல் உலகில் உள்ள இதர உயிரினங்களும் பொருள்களும் இயற்கையோடு இணைந்தவை. அவைகளையும் நாம் காப்பாற்ற நமது அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்த வேண்டும். அவைகளை நமக்குத் துணையாகக் கொள்ள வேண்டும். சக்திகளையும் அதனால் உண்டாக்கப் பட்டவைகளையும் பாதுகாத்து அவைகளின் பகுதிகளுக்கு அழிவோ சேதமோ ஏற்பட்டு விடாமல் அவைகளை நாம் உலக நலனுக்காக மனித நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். லீலை உலகம் நீடுழி வாழ்க.

## 100. (உ) லுத்தரை இகழ்

உலுத்தர்கள் என்றால் அற்பர்கள் அயோக்கியர்கள், தீயவர்கள், கெட்டவர்கள், சுயநலமிகள், நேர்மையற்றவர்கள் என்றெல்லாம் கூறலாம் இவர்கள் தங்கள் சொந்த நலன்கள் தங்கள் சொந்த வாழ்க்கைச் சுகங்களே கருதி மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்கிறார்கள். மோசடி செய்கிறார்கள். எளியோரைத் தாக்குகிறார்கள், பலபேருடைய உழைப்பை அபகரித்து சுகவாழ்வு வாழ நினைக்கிறார்கள்.

உலுத்தார்கள் மனிதரில் கீழ்ப்பட்டவர்கள். மனிதரில் கடையர்கள் அவர்களால் அடுத்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும், சமுதாயத்திற்கும் நன்மை இல்லை. தீமையே ஏற்படுகிறது. அத்தகைய உலுத்தர்களைக் காரி உமிழ்ந்து இகழ்ந்து ஒதுக்கித் தள்ள வேண்டும் என்பது பாரதியின் ஆணையாகும்.

## 101. (உ)லோக நூல் கற்றுணர்

மனித சமுதாயத்தின் தொடக்கக் கால வரலாற்றில் நெருப்பின் பயன்பாட்டை மனிதன் கண்டுபிடித்தது ஒரு மிகப் பெரிய திருப்பு முனையாகும்.

நெருப்பைக் கண்டுபிடித்த மனிதன் அதை வைத்து குளிர்காயவும் உணவுப் பொருள்களை வேகவைக்கவும் கற்றுக் கொண்டான். அதன் பின்னர் மனிதன் உலோகக் கனிகளை உருக்கி உலோகங்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தான். இந்தக் கண்டுபிடிப்புகள் ஆதிமனிதனின் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றங்களை உண்டாக்கி விட்டது. புதிய நாகரிகத்திற்கு வழிவகுத்தது.

வெண்கலம், செப்பு, தங்கம், வெள்ளி, இரும்பு, பித்தளை முதலிய பலவகை உலோகக் கனிவகைகளையும் கண்டுபிடித்து அவைகளை உருக்கி பலவகையான கருவிகளையும் ஆயுதங்களையும் பாத்திரங்களையும் சிலைகளையும் பொறிகளையும் செய்து அவைகளைப் பயன்படுத்திக் கொண்டான்.

ஆதி மனிதன் தொடக்கத்தில் இதர உயிரினங்களைப் போல விலங்கினங்கள், பறவையினங்களைப் போலவே உணவைச் சேகரித்து உண்டான். இயற்கையில் கிடைத்த உணவைச் சேகரித்து உண்டான். இயற்கையில் கிடைத்த உணவைச் சேகரித்து உண்பதிலிருந்து படிப்படியாக உயர்ந்து மனிதன் உணவை உற்பத்தி செய்யக் கற்றுக் கொண்டான். இந்த வளர்ச்சி தான் மனித சமுதாய வளர்ச்சியில் ஏற்பட்ட மிகப் பெரிய அடிப்படையான மாற்றமாகும் என்பதை அறிவோம்.

உணவையும் இதர தேவைப் பொருள்களையும் உற்பத்தி செய்து கொள்வதற்கு மனிதன் தனது உழைப்பைச் செலுத்தினான் உழைப்பிற்குக் கருவிகளைப் பயன்படுத்தினான். முதலில் கல்லும் கம்பும் பின்னர் உலோகங்களால் ஆன கருவிகளைச் செய்து அவைகளை தனது உழைப்பிற்குப் பயன்படுத்திக் கொண்டான்.

இந்த உழைப்பு தான் மனிதனை மனிதனாக்கியது. மிருக சாம்ராஜ்யத்திலிருந்து மனிதனை வேறுபடுத்தி உயர்த்தியது. மனிதன் தனது உற்பத்திக் கருவிகளைச் செய்து கொள்வதற்கும் அவைகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கும் உலோகங்கள் மிகப் பெரிய அளவில் பயன்பட்டது. இப்போதும் பயன்படுகிறது.

உலோகங்களைப் பற்றிய அறிவு அறிவியல் தனிப்பிரிவாக தனிக்கலையாக உலோகவியல் என்றுபெயரில் விரிவுப்பட்டிருக்கிறது.

உலோகங்களில் இருந்து இன்று எண்ணற்ற பொருள்களையும் கருவிகளையும் செய்கிறோம். எந்திரங்கள் எந்திரக் கருவிகள், கைக்கருவிகள். மிக நுட்பமான அறுவை சிகிச்சைக் கருவிகள் கடிகாரங்கள், மீட்டர்கள், பெரிய எந்திரங்கள் கொதிகலன்கள் ஊர்திகள், பெட்டிகள், கப்பல்கள், விமானங்கள் வீட்டுப் பொருள்கள் முதலிய பலவற்றிற்கும் உலோகங்களைப் பயன்படுத்துகிறோம்.

வெட்டுக்கனிகளை உருக்கி உலோகங்களைப் பிரித்து எடுத்தல் அதைப் பாளங்கள் தகடுகள், கம்பிகள் செய்தல், அதை உருக்கிக் கலவைகளைச் செய்தல் உலோகப் பொருள்களைப் பற்றவைத்து இணைத்தல் உலோகங்கள் உலோகக் கலவைகள் ஆகியவற்றின் தரம் உறுதி பயன்பாடு முதலியவைகளைக் கண்டறிதல் அதன் மூலம் பல பொருள்களைச் செய்தல் உலோகங்களின் பலவகைப் பயன்பாடுதலகளைக் கண்டறிதல் முதலியவைகளை உலோக நூல்கள் விவரிக்கின்றன.

உலோகங்களைப் பற்றி பாரதி தனது பல பாடல்களிலும் குறிப்பிடுகிறார். ''மண்ணினுட் கனிகளிலும்'' என்றும் கல்லை வயிர பணியாக்கல் – செம்பைக் கட்டித் தங்கமெனச் செய்தல்'' என்று ''நிலத்தின் கீழ் பல்லு லோகங்களாயினை'' என்று, ''வெட்டுக்கனிகள் செய்து தங்க முதலான வேறுபல பொருளும் கடைந்தெடுப்போம்'' என்று ஆயுயங்கள் ஆலைகள், குடைகள், ஊழுபடைகள் இரும்பாணிகள் வண்டிகள், கப்பல்கள் முதலியன செய்வோம் என்று, ''கொல்லர் உலை வளர்ப்போம்'' எனவும் ''இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே யந்திரங்கள் வகுத்திடுவீரே'' என்றெல்லாம் பாரதி பாடுகிறார்.

உலோக நூல் வளர்ச்சி ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும் எனவே நமது நாட்டு இளைஞர்கள் உலோக நூல்களை நன்கு கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும்.

பொறியியல் துறைக்கு உலோக நூல் அடிப்படையாகும். எனவே அத்தகைய சிறப்புமிக்க முக்கியத்துவம் நிறைந்த உலோக நூலைக் கற்ற உணருமாறு பாரதி நம்மை வேண்டுகிறார்.

## 102. லௌகீகம் ஆற்று

லௌகீகம் என்பது உலகியல், லௌகீகம் மனித வாழ்க்கையின் அடிப்படையாகும். நமது நாட்டின் சாத்திரங்கள், தத்துவங்கள் பெரும்பாலும் லௌகீகத்தை மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. நமது நாட்டில் சிலர் லௌகீகம் முக்கியமா, ஆன்மீகம் முக்கியமா என்னும் வாதத்தைக் கிளப்புகிறார்கள். அது தேவையில்லாத அவசியமில்லாத வாதமாகும். ஆன்மீகத்திற்கும் கூட உலக வாழ்க்கையே அடிப்படையாகும்.

மனித வாழ்க்கையின் அடிப்படையாக அறம் (தர்மம்), பொருள் (அர்த்தம்), இன்பம் (காமம்), வீடு (மோட்சம்) ஆகிய நான்கு புருஷார்த்தங்கள் என்று நமது சாத்திரங்கள் கூறுகின்றன.

மனித வாழ்க்கையின் கடமையாக பாரதி,

*''கடமையாவன தன்னைக் கட்டுதல்*
*பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல்*
------------------------------
*உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல்*
*இந்நான்கே இப்பூமியில் எவர்க்கும்*
*கடமையெனப்படும், பயனிதில் நான்காம்*
*அறம், பொருள், இன்பம், வீடெனுமுறையே*
*தன்னையாளும் சமர்த்தெனக்கருள்வாய்''*

என்று விநாயகப் பெருமானை வேண்டுகிறார்.

நான்கு பயன்களில் அறம் என்பது இல்லறமும் துறவறமும் ஆகும். இங்கு இல்லறம் என்பது வாழ்க்கை நெறிமுறையாகும். துறவறம் என்பது உடல் துறவைக் குறிப்பிட வில்லை. உள்ளத்துறவு பற்றியே கூறப்படுகிறது. சிலர் தவறான முறையில் துறவு என்பதை வாழ்க்கைத்துறவு என்று கூறி நாட்டையும் நமது நாட்டு மக்களின் வாழ்க்கை முறையைக் கெடுத்து விட்டார்கள்,

அறநெறியில் நமது வாழ்க்கை அமைய வேண்டும் என்பது தான் இல்லறம், துறவறம் ஆகிய இரு நெறிகளின் நோக்கமாகும்.

இரண்டாவதாக பொருள் என்பது நாட்டை வளமாக்க ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையையும் வளமாக்க பொருள் தேடுதல் பொருள் குவித்தல், அரசியல் அமைச்சு, நாடு முதலியன பற்றிய நெறிமுறைகளைச் சீரமைத்து நிர்வகித்தலாகும். இவை அனைத்தும் உலகியல் மனித வாழ்க்கை பற்றியதாகும்.

மூன்றாவதாக இன்பம் (காமம்) என்பது ஆண் பெண் நல்லுறவும் கூட்டு வாழ்க்கையும் குடும்ப வாழ்க்கையுமாகும். உலகில் வாழ்க்கை இன்பங்கள் அனைத்தும் இந்த கருத்தில் இணையும். நான்காவதாக வீடு என்பது மோட்சம் என்பது எங்கே உள்ளது? இந்த உலக வாழ்க்கையை முழுமையான இன்பங்கள் நிறைந்த வாழ்க்கையாக மனிதன் முழு விடுதலை பெற்றவனாக ஆக்குதலாகும்.

எனவே மனிதனுடைய வாழ்க்கை இன்பங்களை லௌகீகம் என்றும் அறிவுத் துறை வளர்ச்சியை மனிதனின் உயர்ந்த பக்குவநிலையை ஆன்மீகம் என்றும் கொள்ள வேண்டும்.

ஒரு வீட்டின் அஸ்திவாரம் முக்கியமா, சுவர்கள் முக்கியமா, கூரை முக்கியமா, சுவர்கள் மீது பூசப்படும் வர்ணங்கள் முக்கியமா கதவுகளும் ஜன்னல்களும் பூட்டும் முக்கியமா என்று பேசிக் கொண்டிருப்பதில் பலன் இல்லை.

மனிதன் பேசுவதற்கும் எழுதுவதற்கும் படிப்பதற்கும் சிந்திப்பதற்கும் முன்பாக அவன் உயிர்வாழ வேண்டும். அதற்காக அவன் சாப்பிட வேண்டும் உடை உடுத்த வேண்டும் ஒரு வீட்டில் ஒரு இடத்தில் தங்க வேண்டும். எனவே மனித வாழ்க்கையில் உலகியல் வாழ்க்கை அடிப்படையாக அமைகிறது.

மேலும் உணவு, உடை, வீடு முதலிய அடிப்படைத் தேவைகளுடன் கல்வி, விளையாட்டுப் பயிற்சி பொழுது போக்கு வசதிகளும் இப்போது அத்தியாவசியத் தேவைகளாகி விட்டன,

இன்றும் ஆன்மீக வளர்ச்சிக்கான அதாவது அறிவு சிந்தனை வளர்ச்சிக்கான தேவைகளும் கூட லௌகீகத் தேவைகளாகி விட்டன.

எனவே உலகியல் கடமைகளை நாம் ஆற்ற வேண்டும். அதில் நமது வீட்டிற்கு நாட்டிற்கு நாட்டு மக்களுக்குத் தேவையான பொருள்களை உண்டாக்குவதிலும் அவைகளைச் சீராக விநியோகம் செய்வதிலும் நாம் முக்கியப் பங்கை ஆற்ற வேண்டும்.

நமது வீட்டின் லௌகீகக் காரியங்களில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். வீட்டைப் பராமரித்தல் நமது முக்கியமான பணிகளில் ஒன்றாகும்.

வீட்டிற்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்தல், இல்லறத்தை செவ்வனே நடத்துவது குழந்தைகளைப் பராமரிப்பது அவர்களுக்கு நல்ல கல்வியைக் கொடுப்பது வீட்டில் உள்ள பெரியவர்களை மூத்தவர்களைப் பராமரிப்பது, தாய் தந்தையர் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் குழந்தைகள் தங்கள் தாய் தந்தையருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் அனைவரும் சேர்ந்து சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் ஆகியவற்றை செவ்வனே செய்ய வேண்டும்.

வேலை செய்தல், பொருள் சேர்த்தல் படித்தல் குழந்தைகளுக்குக் கல்வி கொடுக்க ஏற்பாடு செய்தல், குழந்தைகளுக்கு உரிய வயதில் திருமணம் முடித்தல் அவர்களுக்கு நல்ல குடும்பங்கள் அமைத்துக் கொள்ள உதவுதல் வேண்டியவர்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்தல், நாட்டில், ஊரில் தொழில்களை வளர்த்தல் வாணிபத்தைப் பெருக்குதல், கல்வி நிலையங்களை அமைத்து கல்வியைப் பெருக்க உதவி செய்தல்.

நாம் குடியிருக்கும் கிராமங்கள், நகரங்கள், தெருக்கள், குடியிருப்புப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு குடிதண்ணீர், கல்வி சுகாதாரம் முதலியன கிடைக்கப் பாடுபடுதல், முதலியனவற்றில் நாம் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்ற வேண்டும்.

இவைகளை எல்லாம் லௌகீகம் என்று கூறுகிறோம். உலகியல் பணிகள் என்று கூறுகிறோம். இதையே லௌகீகம் ஆற்று என்று பாரதி கூறுகிறார்.

## 103. வருவதை மகிழ்ந்து உண்

உணவு உட்கொள்ளும் போது மகிழ்ச்சியோடு உண்ண வேண்டும் என்பது பாரதியின் வாக்கு. அவசர அவசரமாக அள்ளிப்போட்டு உண்ணக் கூடாது. கவலை கொண்டும் அழுது கொண்டும் உண்ணக் கூடாது.

அத்துடன் வருவதை மகிழ்ந்து உண் என்றும் பாரதி கூறுகிறார். எல்லா நேரங்களிலும் நாம் விரும்பும் உணவுப் பொருள்கள் எல்லாம் கிடைப்பதில்லை. அதனால் வருத்தம் கொள்ள வேண்டாம்.

கிடைக்கக்கூடிய பொருள்களை வைத்து நல்ல உணவாகத் தயாரித்து சாப்பிடலாம். நமது வீட்டில் தாய் சமையல் செய்து உணவு படைக்கிறாள்.

அதில் நாம் அது இல்லை, இது இல்லை என்று கூறி சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. கோபித்துக் கொண்டு சாப்பிடாமல் இருக்கக்கூடாது.


வருவதை வைத்து மகிழ்ச்சியோடு மற்றவர்களோடு சேர்ந்து அமர்ந்து உணவு உண்ண வேண்டும். வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவது தனி மகிழ்ச்சியைத் தரும்.

## 104. வான நூல் பயிற்சி கொள்

சரித்திரம் தேர்ச்சி கொள் என்றும் நீதி நூல் பயில் என்றும் போர்த் தொழில் பழகு என்றும ரஸத்திலே தேர்ச்சி கொள் என்றும் ராஜஸம் பயில் என்றும் லாவகம் பயிற்சி செய் என்று உலோக நூல் கற்றுணர் என்றும் கூறும் பாரதி இப்போது வான நூல் பயிற்சி கொள் என்று கூறுகிறார்.

கல்விக்கும் உடற்பயிற்சிக்கும் உள்ளப்பயிற்சிக்கும் அறிவியல் பயிற்சிக்கும் பாரதி அதிகமான முக்கியத்துவம் கொடுப்பதைக் காணலாம்.

வான நூல் என்பது சூரியன், சந்திரன், செவ்வாய், புதன் வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது, முதலிய கிரகங்கள் அவைகளின் துணை கிரகங்கள் நட்சத்திரங்கள் அவைகளின் அசைவுகள் செயல்பாடுகள் அவைகளின் விளைவுகள் ஆகியவை பற்றி ஆய்வாகும்.



இப்போது விஞ்ஞானிகள் சந்திர மண்டலத்திற்கு சென்று வந்துள்ளார்கள். செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்வதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

வான வியலுக்கு கணிதம் மிக முக்கியமான அடிப்படையாகும். கணிதத்திலும் வானவியலிலும் நமது நாட்டில் முன்பு பல சிறந்த அறிஞர்கள் இருந்திருக்கிறார்கள். பாஸ்கரன் ஆர்யபட்டன், இராமானுஜன் போன்ற புகழ்பெற்ற விஞ்ஞானிகளை பாரத நாடு உலகுக்கு அளித்திருக்கிறது. அவர்களுடைய அரிய கண்டுபிடிப்புகளை நாம் நன்கு அறிந்து பயில வேண்டும். அவைகளை உலகறிய செய்ய வேண்டும்.

*''உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்*
*ஓர்ந்தளந்த பாஸ்கரன் மாட்சியும்''*
*என்று பாரதி தனது சுயசரிதைப் பாடலில் கூறுகிறார்.*
*''வானையளப்போம் கடல் மீனை யளப்போம்*
*சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்''*

என்று தொலை நோக்குடன் கூடிய மிக அருமையான கருத்து கொண்ட பாடலைப் பாடியுள்ளார்.

பாரதியின் அந்தக் கனவு இன்று உலகில் படிப்படியாக நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

கோளங்களின் அசைவுகள் அவைகளின் செயல்பாடுகள்

ஆகியவை பற்றிய அறிவும் ஆராய்ச்சியும் நமக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

சூரிய ஒளி சந்திர ஒளி பருவங்கள், பருவ மாற்றங்கள் வானமண்டலத்தின் அசைவுகள் இயக்கங்கள், மழை காற்று ஆகியவற்றின் அசைவுகள் இயக்கங்கள் பற்றிய ஞானம் நமக்கு மிகவும் அவசியமானதாகும்.

சாகுபடி, கப்பல் ஓட்டுதல், கடலுக்குச் சென்று மீன்பிடித்தல் முதலிய தொழில் செய்தல், விமானம் ஓட்டுதல் முதலிய முக்கிய தொழில்களுக்கு வானநூல் பயிற்சியும் ஆராய்ச்சியும் மிகவும் அவசியமானதாகும். எனவே வானநூல் பயிற்சி கொள்ள பாரதி நமக்கு வழிகாட்டுகிறார்.

## 105. விதையினைத் தெரிந்திடுக

விளையும் பயிர் முளையிலே என்று கூறுவார்கள் விதை சீராக நல்ல விதையாக இருந்தால் தான் முளை நன்றாக அமையும். நல்ல விதைகளைத் தெரிந்தெடுக்க வேண்டும். நல்ல விதையினைத் தெரிந்து இட வேண்டும்.

நாம் விளைவிக்கும் பொருள்களில் நல்ல தரமானவைகளை விதைக்காகத் தனியாக எடுத்து அதைப் பக்குவப்படுத்தி வைத்துக் கொள்வது நமது கிராமங்களில் பரம்பரைப் பழக்கமாகும்.

நெல், சோளம், கம்பு, ராகி, முதலிய தானியங்கள் விளையும் போது அதில் நன்றாகத் தூற்றி மணிகளைப் பிரித்து அதை நன்கு உலர வைத்து வெயிலில் காய வைத்து விதைக்காக என்று தனியாகப் பக்குவப்படுத்தி வைப்பது என்பது பழக்கமாகும்.

வேர்க்கடலை உளுந்து, மொச்சை, துவரை, பச்சைப்பயறு முதலிய பயறு வகைகளிலும் அவரை, புடல், வெண்டை பீர்க்கை பாவை பூசணி முதலிய காய்கறிகளிலும் விதைக் கென்று தனியாக எடுத்து அதைப் பக்குவப்படுத்தி வைத்துக் கொள்வதும் பழக்கமாகும்.

இப்போது விதைப்பண்ணைகள் ஆராய்ச்சிப் பண்ணைகள் மூலம் பலவகை பொருக்கு விதைகள் வீரிய வித்துக்கள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப் படுகின்றன. இவைகளை நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். ஊர்தோறும் விதைக்கடைகள் மூலம்புதிய பல ரகங்களின் விதைகள் விநியோகிக்கப்படுகின்றன. அரசு டிப்போக்கள் மூலமும் விதைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

நமது நாட்டில் இப்போது விவசாயப் பல்கலைக்கழகங்கள், விவசாயக் கல்லூரிகள், ஆராய்ச்சி பண்ணைகள் செயல்படுகின்றன. அவற்றின் மூலம் பல ஆராய்ச்சிகள் நடைபெற்று ஏராளமான பல புதிய ரக விதைகளும் கண்டுபிடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.

தமிழகத்தில் கோயமுத்தூரில் விவசாயப் பல்கலைக்கழகம் பல ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறது. மேலும் பல மாவட்டங்களிலும் நெல், சோளம், கம்பு, ராகி, பருத்தி, வேர்க்கடலை, கரும்பு, தென்னை, மா, வாழை எண்ணெய்வித்துக்கள் பயறு வகைகள், காய்கறிகள், பூக்கள் முதலிய பல பயிர்கள் பற்றி ஆராய்ச்சிகள் செய்து புதிய ரகங்களும் விதைகளும் வந்திருக்கின்றன.

அண்மைக்காலத்தில் உயிரியல் தொழில் நுட்ப முறையிலும் பல ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன. அரசுத் துறையில் மட்டுமல்லாமல் தனியார் துறையிலும் பல ஆராய்ச்சிகள் நடைபெற்று விதை உற்பத்தி செய்யப்படுகிறது. அத்துடன் மண் ஆராய்ச்சியும் செய்யப்படுகிறது. மண் தரம் பருவம் முதலியவைகளுக்கேற்ப நல்ல விதைகளைத் தேர்ந்தெடுத்து நாம் இட வேண்டும்.

## 106. வீரியம் பெருக்க

வீரியம் என்பது வலிமை, உறுதி, திடம் என்பவைகளாகும் வீரியத்திலிருந்து வீரம், தீரம், வீராப்பு முதலிய சொற்கள் வருகின்றன.

நமது உடலில் அத்தகைய வலிமையை உறுதியை திடத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு நமது வீரியத்தைப் பெருக்கிக் கொள்ள நமக்கு நல்ல உடற் பயிற்சியும் உள்ளப் பயிற்சியும் வேண்டும். அதை நாம் தொடர்ச்சியாகக் செய்ய வேண்டும்.

எதையும் நாம் பயிற்சி மூலம் தான் சாதிக்க முடியும். அதை இளமையிலிருந்தே பழகிக் கொள்ள வேண்டும். அப்பொது தான் நம்மிடையில் அது வலுவடையும்.

வீரியம் பெருக்கு என்பதில் தனிமனித வீரியம் மட்டுமல்ல. நமது நாட்டின் வீரியத்தையும் வல்லமையையும் பெருக்க வேண்டும். உலக அளவில் நமது நாடு அத்தகைய தோற்றத்தையும் ஏற்றத்தையும் பெற வேண்டும். அதற்கான முயற்சிகளை அதிகரிக்க வேண்டும்.

வீரியத்தைப் பெருக்குவதில் இப்போது எலலாம் ஆடு, மாடு, கோழி முதலிய கால்நடைகளிலும் தாவர இனங்களிலும் பயிரினங்களிலும் பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு மரபியல் முறையிலும் உயிரியல் தொழில் நுட்ப முறையிலும் புதிய வீரிய இனங்கள் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டு பழக்கத்திற்கு வந்திருக்கின்றன. அதில் மேலும் அபிவிருத்தி காண வேண்டும்.

## 107. வெடிப்புறப் பேசு

நாம் பேசும் போது சுத்தமாகவும், தெளிவாகவும் நன்கு உச்சரித்தும் பேச வேண்டும் வெடிப்பாகப் பேச வேண்டும். நன்கு பேசுவதற்கு நன்றாகக் குரல் அமைய வேண்டும், அதற்கு இளமையிலிருந்தே நல்ல பயிற்சி எடுத்தால் பெருமளவில் குரல் நன்றாக அமையும்.

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்று பாரதி கூறுகிறார். நாம் நமது உள்ளத்தில் உறுதி கொண்டிருக்க வேண்டும். எந்த விதமான அச்சமும் தயக்கமும் இருக்கக் கூடாது. நாம் பேசும் போது பேசும்

பொருளைப் பற்றித் தெளிவாகத் தெரிச்து கொண்டு பேச வேண்டும். நமக்குப் போதுமான விஷய ஞானம் இருந்தால் தான் பேச்சிலும் தெளிவு இருக்கும்.

நாம் பேசுவது என்பது வீட்டிலும் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் மட்டுமல்ல. ஊர் மக்களிடம் பேச வேண்டும். கூட்டங்களில் பேசு வேண்டும் மேடைகளில் பேச வேண்டும். நடிகர்கள் நாடகங்களில் சினிமாவில் வசனங்கள் பேச வேண்டும். ஆசிரியர்கள் வகுப்புகளில் பேச வேண்டும். வழக்கறிஞர்கள் நீதி மன்றங்களில் வாதாடும் போது பேச வேண்டும்.

சட்ட மன்றங்களில் பாராளுமன்றத்தில் அதன் உறுப்பினர்களாக உள்ளவர்கள் பேச வேண்டும் குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி குறிப்பிட்ட நேரத்திற்குள் பேச வேண்டும். கருத்தரங்குகளில் பங்கு கொள்பவர்கள் குறிப்பிட்ட பிரச்சினைகள் பற்றி குறிப்பிட்ட தலைப்புகளில் பேச வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் குழந்தைகள் எதிர்காலத் தலைவர்கள், நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள் வழக்கறிஞர்கள், பேச்சாளர்களாவர், இவ்வாறு நாம் பேச வேண்டிய இடங்களில் தெளிவாகவும் உறுதியாகவும் வெடிப்புறப் பேசப் பழக வேண்டும்.

பாரதி காலத்தில் நாடு அடிமைப்பட்டு கிடந்தது. அப்போது விடுதலைப் போராட்டத்தில் மக்களிடம் செய்திகளை கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு மேடைப் பேச்சுக்கள், பொதுக் கூட்டங்கள் முக்கியமான சாதனமாக இருந்தது. மக்களிடம் ஆவேசமாகப் பேசி உணர்ச்சி ஊட்ட வேண்டியிருந்தது. அதற்காகப் பல பேச்சாளர்களும் தயாராக வேண்டியதாயிற்று. அதற்கெல்லாம் பாரதியின் வாக்கு நல்ல வழிகாட்டியாக இருந்தது.

இப்போது மக்களாட்சி குடியரசு மலர்ந்துள்ள காலம், எனவே நாட்டு விவகாரங்களில் உலக விவகாரங்களில் மக்களுடைய பங்கு அதிகம் மக்ளுடைய பங்குக்கு அதிக முக்கியத்துவமும் வாய்ப்புகளும் தேவைகளும் அதிகரித்து வருகின்றன.

மக்களுடைய பங்கு இணைந்தால் தான் திட்டங்கள் சரிவர நிறைவேறும். சட்டங்கள் சீராக அமுலாகும். அந்தத் திசையில் மக்களும் நாளுக்கு நாள் அதிகமாக விழிப்புணர்வு பெற்று பக்குவமடைந்து வருகிறார்கள்.

மக்களிடையில் கருத்துப் பரிமாற்றமும் பொது விவாதங்களும் கலந்துரையாடல்களும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. வானொலிகளிலும் தொலைக்கட்சிகளிலும் அதிகமான அளவில் இளம் வயதினரும் பொது மக்களும் அதிகமாகப் பங்கு கொள்கிறார்கள். இதற்குக் கருத்துக் தெளிவும் வாக்குத் தெளிவும் மிகவும் அவசியமாகும்.

மக்களாட்சி முறையில் அரசியல் கட்சிகள் பொது மக்களின் அமைப்புகள் சங்கங்கள் முதலியவற்றின் பங்கும் பணிகளும் அதிகரிக்கின்றன. பஞ்சாயத்து அமைப்புகளிலிருந்து பாராளுமன்றம் வரையிலும் அடிக்கடி தேர்தல்களும் நடைபெறுகின்றன.

மக்களிடையில் கருத்துப் பரிமாற்றங்கள் அதிகரிக்கின்றன. மக்களிடம் நேரில் சந்தித்து உரையாடுவது அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளின் உறுப்பினர்களுக்கும் ஒரு முக்கியமான வழி முறையாகும். தனிப் பேச்சாளர்களும் பயிற்சி பெற வேண்டும். அதற்கான தனிப்பயிற்சியும் கொடுக்கப்பட வேண்டும். பேச்சுக்கலையை நாம் வளர்க்க வேண்டும். எனவே பாரதியின் ''வெடிப்புறப் பேசு'' என்னும் வாசகம் இப்போது அதிகமான அளவில் முக்கியத்துவம் பெறுகிறது.

## 108. வேதம் புதுமை செய்

பாரதியின் புதிய ஆத்திசூடி வாக்குகளில் ''வேதம் புதுமை செய்'' என்பது மிக முக்கியமான வாக்குகளில் ஒன்றாகும். இது அவருடைய தத்துவ ஞானத்தின் உலகக் கண்ணோட்டத்தின் அடி ஆழத்தையும் திசை வழியையும் காட்டுகிறது.

வேதங்களைப் பற்றி பாரதி தனது பாடல்களிலும் குறிப்பிடுகிறார். அத்துடன் அவருடைய பகவத்கீதை மொழி பெயர்ப்புக்கு எழுதியுள்ள முன்னுரையிலும் வேதங்களைப் பற்றிய

சில முக்கியமான செய்திகளைக் கூறுகிறார். அத்துடன் பழைய வேதங்ளைப் பற்றி நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டியதும் மிக அவசியமாகும்.

வேதங்கள் நான்கும் நான்மறை எனப் பெயர் பெற்று இந்திய நாகரிகத்தின் தொடக்கமாக பண்பாட்டின் தொடக்கமாக வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. வேதங்களைப் பற்றி இந்திய நாட்டிலும் உலகின் பல நாடுகளிலும் உள்ள அறிஞர்கள் பலரும் ஆராய்ச்சி செய்து கொண்டு வருகிறார்கள்.

வேதங்கள் இந்து மதத்தின் வேர். அவை தனியாக வேத பாஷையில் உள்ளன. வேதங்கள் பிரமாண்டமான நூல் அவைகளில் உள்ள கருத்துக்கள் பலவும் சாதாரண மக்களுக்கும் மிகவும் பயன்படுபவை. வேதங்களை இன்னும் அதிகமாக ஆராய்ச்சி செய்ய வேண்டும். ''வேதங்களை கோத்து வைத்தான் – அந்த வேதங்கள் மனிதர்தம் மொழியில் இல்லை'' என்று பாரதி கண்ணன் பாட்டுகளில் குறிப்பிடுகிறார்.

வேதங்களைப் பற்றி பாரதி மிக உயர்ந்த கருத்துக்களைக் கொண்டிருந்தார் என்பது அவருடைய பல பாடல்களிலிருந்த தெரிய வருகிறது.

*''ஒன்று பரம் பொருள் நாமதன் மக்கள்*
*உலகின் பக் கேணியென்றே – மிக*
*நன்று பல்வேதம் வரைந்த கை பாரத*
*நாயகி தன் திருக்கை''*

என்று பாரதி கூறுகிறார்.

இன்னும் பாரதத்தாயைக் குறிப்பிட்டு ''நாவினில் வேதமுடையாள்'' என்று ''வேதங்கள் பாடுவம் காணீர்'' என்று பாடுகிறார். அரசியலிலும் சரி, பிற இயல்களிலும் சரி தர்மமே வெற்றி பெறும் என வேதம் கூறுவதாக எடுத்துக்காட்டி '' ...... புவி மிசைத் தருமமே அரசியலதனிலும் பிற இயலனைத்திலும் வெற்றி தரும் என வேதம் சொன்னதை மற்றும் பேண முற்பட்டு நின்றார், பாரத மக்கள் .... '' என்று பாரதி பாடுகிறார்.

''வேதவானில் விளங்கி அறம் செய்மின் சாதல் நேரினும் சத்தியம் பூணுமின் தீதகற்றுமின்'' என்று திசையெலாம் மோத நித்தம் இடித்து முழங்கியே'' என்று கண்ணனை வேண்டிய பாரதி பாடுகிறார்.

இவ்வாறு பல பாடல்களில் வேதங்களின் மேன்மைகளைப் பற்றி கூறுகிறார். அதே சமயத்தில் சில போலிச்சுவடிகளும் பொய்மை நூல்களும் புகுந்துள்ளன என்றும் கூறுகிறார். அவைகளை ஒதுக்கிவிட்டு வேதங்களைப் புதுப்பிக்க வேண்டும் என்று கூறுகிறார்.

சூடாமணி நிகண்டில் ''வேதத்தின் பெயர் ஆதிநூல் என்று எழுதாக் கேள்வியென்று, சுருதி என்று வேதநூல் பொருளின பெயர் ஞானபாகை கரும்பாகை, அருத்தபாகை என்றும் வேத மார்க்கத்தின் பெயர் வைதீகம்'' என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது.

வேதம் என்னும் சொல்லுக்கு நேரடியான பொருள் ஞானம் அறிவு என்பதாகும். வேதங்கள் ஒரே நபரால் ஒரே சமயத்தில் மொத்தமாக எழுதப்பட்டது அல்ல, பல பேர் பல காலத்திலும் எழுதிய வாய் வழியில் கூறிய பல பாக்களைத் திரட்டி சேர்க்கப்பட்டதே வேத நூலாகும். இவை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக அவ்வப்போது பல அறிஞர்களால் எழுதப்பட்டவை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இதில் மிகவும் ஆதியாகவுள்ள ஆரம்பப் பாக்கள், கல்வி, அறிவு இல்லாத காலத்தில் கால் நடைகளை ஓட்டிக் கொண்டு மேய்ச்சல் நிலங்களிலும் நதி ஓரங்களிலும் சுற்றித் திரிந்து கொண்டிருந்த மக்களால் வாய் மொழியாகப் பாடப்பட்டு அவை வழி வழியாக வந்து பின்னர் எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்டதாகும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அதனால் வேதம் ''ஸ்ருதி'' என்று பொருளாகும். அதையே நிகண்டு ஆசிரியர் எழுதாக்கேள்வி என்றும் சுருதி என்று வேதத்தின் பெயரைக் குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம். இந்த சுருதிகளை மந்திரங்கள் என்றும் பின்னால் எழுதப்பட்டவைகளை பிரமாணங்கள் என்றும் இரு பாகங்களாகக் கூறுகிறார்கள்.

நான்மறைகளில் ஆதி மறை ரிக் வேதம். இது சுமார் பத்தாயிரத்து ஐநூற்று ஐம்பத்திரண்டு (10552) சுலோகங்களைக் கொண்ட பெரிய நூலாகும். இது இன்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்று கூறப்படுகிறது. வேதம் கூறுவது முழு முதல் ஞானம் என்று தெய்வீக ஞானம் என்றும் வேத பண்டிதர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ரிக் வேதத்தில் உள்ள பல பாடல்களும் சாதாரண மனிதர்களின் அன்றாட விருப்பங்களை ஆசைகளை, அதாவது பசுக்களும் ஆடு, மாடுகளும் வேண்டும் என்றும், உணவு வேண்டும் மழை வேண்டும் மற்றும் பாதுகாப்பு வெற்றி உடல் வலிமை, ஆரோக்கியம், குழந்தை குட்டி வேண்டும் என்றும் வேண்டுதல்களையே குறிப்பிடுபவைகளாக உள்ளன. இந்த வேண்டுதல்கள் எல்லாம் பல தெய்வங்களை நோக்கிக் கேட்பதாகவும் அமைந்துள்ளன. அத்துடன் மனிதனுக்கு அவசியமான மலைகள், மருந்துச் செடிகள், மரங்கள், காடுகள், ஆயுதங்கள் முதலியவைகளைப் பாராட்டிப் பாடுவதாகவும் வழிபடுவதாகவும் அமைந்துள்ளன. நோய்களிலிருந்தும் பல கேடுகளிலிருந்தும் தங்களைக் காப்பாற்றும் தெய்வங்களைப் பற்றியதாகவும் உள்ளன.

பின்னர், வேதக்கருத்துக்களில் இருந்து காலத்திற் கேற்ற வளர்ச்சியும் பல மாற்றங்களும் ஏற்பட்டு உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் மற்றும் பல்வேறு சாத்திரங்களும் அறநூல்களும் பொருள் நூல்களும் தோன்றி மக்களிடம் இடம் பெற்றிருக்கின்றன. அவைகளை வரலாற்றுக் கருவூலங்களாகப் பாதுகாத்து நமது அறிவுச் செல்வத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அதே சமயத்தில் காலத்தால் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும் மாற்றங்களையும் கொண்டு புதிய கருத்துக்களும் அறிவுச் செல்வங்களும் தோன்றிப் பெருகியுள்ளன. அன்னிய ஆட்சிக் காலத்தில் மங்கிப் போயிருந்த நமது நாட்டுச் செல்வங்களை எல்லாம் தூசி துடைத்து புதுப்பிக்க வேண்டும். புதிய

கருத்துக்களையும் சேர்க்க வேண்டும். மனு நீதியிலிருந்து பல நீதிநூல்கள் தோன்றி இன்று நாடு விடுதலை பெற்று அரசியல் சட்டம் நமது வாழ்க்கையின் பகுதியாக வளர்ந்து வந்திருக்கிறது. நமது அரசியல் சட்டமும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் பல திருத்தங்களைக் கண்டிருக்கிறது. மேலும் பல திருத்தங்கள் வரலாம். அரசியல் சாசனம் முழுவதையுமே கூட திருத்தி அமைக்க வேண்டியதும், செழுமைப்படுத்த வேண்யதும் ஏற்படலாம்.

எனவே ''வேதம் புதுமை செய்'' என்னும் பாரதியின் கருத்தை வழிகாட்டியாகக் கொண்டு அறிவுச் செல்வத்தின் புதிய சிகரங்களுக்கு எட்ட வேண்டும்.

## 109. வையத்தலைமை கொள்

உலகத்தின் தலைமைக்கு பாரதம் வரவேண்டும் என்பது பாரதியின் விருப்பமாகும்.

*''உன்னைக் கோடிமுறை தொழுதேன் – இனி*
*வையத் தலைமை எனக்கருள்வாய்''*

என்றும்

*''என்றன் பாட்டுத் திறத்தாலே – இவ்வையத்தைப்*
*பாலித்திட வேண்டும்''*

என்றும் பாரதி பாடுகிறார்.

அடிமை வாழ்வகன்று, இந்நாட்டார் விடுதலை அடைந்து செல்வம், குடிமையில் உயர்வு, கல்வி, ஞானம் கூடியோங்கி படிமிசை தலைமை எய்தும்படி பாரதி நம்மை வேண்டுகிறார். பாரில் உள்ள பல நாட்டினருக்கும் பாரத நாடு புது நெறி காட்ட வேண்டும் என்று பாரதி விரும்பினார்.

உலகில் பல நாடுகளும் பல துறைகளிலும் முன்னணிக்கு வந்துள்ளன. ஒரு காலத்தில் பாரத நாடு செல்வத்திலும் செழிப்பிலும் சிறந்து விளங்கியது. அதனால் பல நாட்டாரும் இந்நாட்டின் மீது படையெடுத்தார்கள். காட்டுமிராண்டித்தனமாக பல கொள்ளைகளை நடத்தினார்கள். அவர்களில் பலர் இங்கேயே தங்கி இந்த நாட்டு மக்களுடன் சேர்ந்து விட்டார்கள்.

கடைசியாக ஆங்கிலேயர்கள், தங்கள் ஆயுத பலத்தாலும் அரசியல் சூழ்ச்சியாலும் இந்த நாட்டை ஆக்கிரமித்து பெருங் கொள்ளையடித்தார்கள். அதனால் நமது நாட்டு மக்கள் ஏழ்மையிலும் வறுமையிலும் அறியாமையிலும் கல்லாமையிலும் தள்ளப்பட்டார்கள்.

ஆயினும் அத்தனை துன்ப துயரங்களையும் தாங்கி நின்று சக்தி மிக்க ஆன்மீக பலத்துடன் நின்று நாடு விடுதலை அடைந்தது. விடுதலைக்குப் பின்னர் பாரத நாடு பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுடிக்கிறது. அம் முன்னேற்றத்தை முழுமைப்படுத்த வேண்டும். மேலும் முன் எடுத்துச் செல்ல வேண்டும்.

மக்கள் தொகையில் பாரதம் உலகில் இரண்டாவது பெரிய நாடாக இருக்கிறது. மனித வளத்தில் அறிவுச் செல்வத்தில் மனித ஆற்றலில் பாரதம் இன்று முதலிடம் பெற்றிருக்கிறது. நமது அறிவுச் செல்வர்கள் டாக்டர்கள், இன்ஜினியர்கள், விஞ்ஞானிகள் மற்றும் பல நிபுணர்களும் இன்று பல நாடுகளுக்கும் சென்று தங்கள் திறனை நிலை நாட்டியுள்ளார்கள்.

பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு என்று பாரதத்தின் தனிச்சிறப்புகளை எல்லாம் குறிப்பிட்டு பாரதி பாடியுள்ளார். பாரதத்தின் அத்தனை சிறப்புகளும் இணைந்தால் உலகத்தலைமைக்கு வருவதில் சந்தேகமில்லை.

உலகில் வறுமையும், ஏழ்மையும் அறியாமையும் கல்லாமையும், ஏற்ற தாழ்வுகளும் நீங்கி படைச் செருக்குகள் ஒழிந்து உலகில் முழுமையான அமைதி ஏற்பட்டு அறம் நிலவும் படி பாரில் உள்ள பல நாட்டினருக்கும் பாரத நாடு புது நெறியைக் கொண்டு வரும் என்று பாரதி கனவு கண்டார்.

பாரதியின் கனவை நிறைவேற்ற நாம் முற்பட வேண்டும்.

## 110. வெளவுதல் நீக்கு

வெளவுதல் என்றால் கைப்பற்றுதல், கவ்வுதல் அபகரித்தல் என்று பொருள்படுகிறது. நமக்கு சம்பந்தமில்லாதவற்றை

மற்றவர்களுக்குச் சொந்தமானவற்றை திருட்டுத்தனமாகவோ வன்முறைகளிலோ சூழ்ச்சிகளினாலோ அல்லது வேறு எந்த நேர்மையற்ற வழியிலோ கைப்பற்றுதல் தவறானதாகும். அத்தகைய தவறான போக்குகளை நம்மிடையே வரவிடக் கூடாது. அத்தகைய உணர்வுகளுக்கும் இடம் கொடுக்காமல் அவற்றை நீக்க வேண்டும்.

எப்போதுமே மற்றவர்களிடமிருந்து எடுப்பதைக் காட்டிலும் கொடுப்பதே மேலாகும். எனவே நம்மிடம் நல்ல பழக்க வழக்கங்கள் ஏற்படுவதற்கு வெளவுதல் நீக்குவது நல்லது என்று பாரதி எடுத்துக் காட்டுகிறார்.

❖ ❖ ❖

பாரதியின் புதிய ஆத்திசூடி ஒரு நல்ல இலக்கியமாகும். நல்ல அறிவுரைகளும் ஆணைகளும் நிரம்பியதாகும். நாட்டின் தேவைகளை வலியுறுத்திக் கூறுவதாகும். நமது அறிவுத்துறை வளர்ச்சியின் முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதாகும். பாரதியின் இந்தக் கருத்துக்கள் நமது நாட்டு மக்களிடத்தில் பரவ வேண்டும். குறிப்பாக நமது குழந்தைகளிடத்தில் இளம் சந்ததியினர் இடத்தில் ஆழமாக வேர்விட்டுப் படர வேண்டும். பாரதி வேதத்தைப் புதுமை செய் என்று கூறி நமக்கு முன் புதிய வேதத்தையும் முன் வைத்திருக்கிறார். அதைப் பலமுறை படித்துப் பயன்பெற வேண்டும். பாரதியின் கவிதைகளைப் புதிய வேதமாக நாம் படிக்க வேண்டும். நமது நாட்டு மக்களிடையில் பரப்ப வேண்டும்.

♦ ♦ ♦

# நூலாசிரியரைப் பற்றி...

நூலாசிரியர் அ.சீனிவாசன், இன்றைய விருதுநகர் மாவட்டம் திருவில்லிப்புத்தூர் வட்டம் மகாராஜபுரம் கிராமத்தில் 1925 ஆம் ஆண்டில் பிறந்தார்.

அவர் சாத்தூர், வத்ராப், விருதுநகர் ஆகிய ஊர்களில் பள்ளிப் படிப்பையும், மதுரையில் கல்லூரிப் படிப்பும் முடித்து, இரண்டாம் உலகப்போர் காலத்தில் இந்திய விமானப்படையில் செய்தித் தொடர்புப் பொறியளராகப் பயிற்சி பெற்று பணியாற்றியவர்.

அவர் சிறு வயதிலேயே தேசிய இயக்கம், சுயமரியாதை இயக்கம், பொதுவுடமை இயக்கங்களில் தனது சொந்த மாவட்டத்தில் தொடர்பு கொண்டு அரசியல் மற்றும் பொதுவாழ்வில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

1947ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்தியப் பொதுவுடமை இயக்கத்திலும், தொழிலாளர் – விவசாயிகள் இயக்கங்களிலும் தன்னை முழுநேரமும் ஈடுபடுத்திக் கொண்டவர். இராஜபாளையம், தளவாய்புரம், திருவில்லிபுத்தூர், வத்ராப், சிவகாசி, சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை ஆகிய நகரங்களிலும் சென்னையில் துறைமுகம், ஆவடி டாங்கி தொழிற்சாலை, கல்பாக்கம் அணுமின் நிலையம் முதலிய இடங்களிலும் தொழிற்சங்கத் தலைவராகப் பணியாற்றி தொழிலாளர் இயக்க அனுபவம் கொண்டவர்.

அவர் இராஜபாளையம் நகரசபை உறுப்பினராகவும், சென்னை கப்பல் கூடத் தொழிலாளர் நலவாரிய உறுப்பினராகவும் பணியாற்றி அனுபவம் பெற்றவர்.

அவர் ஜனசக்தி வார இதழ், நாளிதழ்களிலும், மார்க்சீய ஒளி என்னும் தத்துவ மாத இதழ் ஆகிய இதழ்களில் தலைமை ஆசிரியராக முறையே பன்னிரண்டு ஆண்டுகளும் இருபது ஆண்டுகளும் பணியாற்றி அனுபவம் பெற்றவர்.

காரல்மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு, மார்க்சீய–லெனினிய தத்துவ ஞானத்தின் அடிப்படைகள் முதலிய பதினைந்து நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்துள்ளார். ''மார்க்சீயப் பொருளாதாரத் தத்துவம், ஜீவாவின் தமிழ்ப்பணிகள், கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி'' முதலிய சில மூல நூல்களையும் எழுதியுள்ளார்.

அவருடைய எழுத்துப் பணிகளுக்காக சோவியத் நாடு – நேரு விருதும், பத்திரிகை ஆசிரியர் பணிக்காக சர்வதேச கவுரவப் பட்டயமும் பெற்றுள்ளார்.

அவர் சோவியத்யூனியன், பல்கேரியா, செக்கோஸ்லோவேகியா முதலிய நாடுகளில் விரிவான சுற்றுப் பயணம் செய்துள்ளார்.

1984, 1991 ம் ஆண்டுகளில் சிவகாசி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு மிகவும் குறைந்த வாக்குகளில் வெற்றி வாய்ப்பை இழந்தவர்.

அவர் தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகள் அறிந்தவர். ஆங்கில மொழிகளில் சிறந்த பயிற்சி பெற்றவர்.

தற்போது கம்பன், வள்ளுவர், இளங்கோ, பாரதி, திவ்யபிரபந்தம் தொடர்பான இலக்கிய நூல்கள் பலவும் தத்துவஞானம் பொருளியல் தொடர்பான நூல்களும் எழுதி வருகிறார்.

❍ ❍ ❍